# கோயிற் களஞ்சியம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

### தொகுதி இரண்டு

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

தஞ்சாவூர்

856

இணையப் பல்கலைக்கழகம்
பே.எண்: 856
நாள்: 17/5/02
நூலகம்

# கோயிற் களஞ்சியம்

## வட ஆர்க்காடு மாவட்டம்

### தொகுதி இரண்டு

சிறப்பாசிரியர்

கோ. மு. முத்துசாமி பிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு)

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81-7090-181-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 142-3

திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாசி - அக்டோபர் 1991

துறை : களஞ்சிய மையம்

நூல் : **கோயிற் களஞ்சியம்**
**வட ஆர்க்காடு மாவட்டம் - தொகுதி இரண்டு**

சிறப்பாசிரியர் : **கோ.மு. முத்துசாமி பிள்ளை**

பதிப்பு : முதற் பதிப்பு - 1991

விலை : உரூ. 80-00

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்,
தஞ்சாவூர் - 613 005.

# பதிப்புரை

கோயிற் களஞ்சியம் - வட ஆர்க்காடு மாவட்ட முதல் தொகுதியில் 145 கோயில்கள் பற்றிய விவரங்கள் விளக்கம் பெற்றுள்ளன.

முதல் தொகுதியைத் தொடர்ந்து கோயிற் களஞ்சியம் - வட ஆர்க்காடு மாவட்டத்தின் இரண்டாம் தொகுதியாக இது வெளியிடப் பெறுகிறது.

இத்தொகுதியில் கோயில்கள் பற்றிய விவரங்கள் விளக்கம் பெறுகின்றன.

கற்றறி சான்றோர், பெற்று மகிழ்க.

இயக்குநர்,
பதிப்புத் துறை.

## பொருளடக்கம்


| | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 01 | தருமராசர் கோயில் | 1 |
| 02 | பரமேசுவரர் கோயில் | 2 |
| 03 | வரதராசப் பெருமாள் கோயில் | 3 |
| 04 | தாலபுரீசுவரர் கிருபாநாதீசுவரர் கோயில் | 5 |
| 05 | சிவன் கோயில் | 13 |
| 06 | அரங்கநாதர் கோயில் | 13 |
| 07 | திருக்கரபுரீசுவரர் கோயில் | 14 |
| 08 | பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் | 16 |
| 09 | கோதண்டராமர் வீர ஆஞ்சநேயர் கோயில் | 18 |
| 10 | சீனிவாசப் பெருமாள் கோயில் | 19 |
| 11 | வேதபுரீசுவரர் கோயில் | 20 |
| 12 | அரங்கநாத சுவாமி கோயில் | 21 |
| 13 | மணிகண்டேசுவரர் கோயில் | 22 |
| 14 | அருணாசலேசுவரர் கோயில் | 36 |
| 15 | ஆதி அருணாசலேசுவரர் கோயில் | 71 |
| 16 | கன்னிகா பரமேசுவரி கோயில் | 73 |
| 17 | பச்சையம்மன் கோயில் | 75 |
| 18 | வடவீதி சுப்பிரமணியர் கோயில் | 76 |
| 19 | திருவண்ணாமலைச் சுற்றுக் கோயில்கள் | 77 |

| | | |
|---|---|---|
| 20 | வேதபுரீசுவரர் கோயில் | 79 |
| 21 | வில்வநாதீசுவரர் கோயில் | 89 |
| 22 | பிந்து மாதவராயசுவாமி கோயில் | 94 |
| 23 | பெரிய நாயகி உடனுறை கரைகண்டேசுவரர் கோயில் | 97 |
| 24 | மல்லிகார்ச்சுனர் கோயில் | 100 |
| 25 | கனக கிரீசுவரர் கோயில் | 101 |
| 26 | பிரகதாம்பாள் (பெரிய நாயகி) கோயில் | 104 |
| 27 | அபயாம்பிகை தாரகேசுவரர் கோயில் | 124 |
| 28 | சுரகரேசுவரர் திருக்கோயில் | 126 |
| 29 | பொன்னியம்மன் கோயில் | 127 |
| 30 | பிரசன்ன வெங்கட்ரமணப் பெருமாள் கோயில் சென்னியம்மன் கோயில் | 127 |
| 31 | இராமச்சந்திரப் பெருமாள் கோயில் | 129 |
| 32 | கங்கையம்மன் கோயில் | 131 |
| 33 | பலக்கிருதீசுவரர் கோயில் | 131 |
| 34 | உத்தர ரங்கநாதர் கோயில் | 133 |
| 35 | இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் | 140 |
| 36 | காளத்தீசர் கோயில் | 141 |
| 37 | மயூரநாதர் கோயில் | 142 |
| 38 | திருவந்தீசுவரர் கோயில் | 144 |
| 39 | கன்னிகேசுவரர் கோயில் | 145 |
| 40 | அமிர்தேசுவரர் கோயில் | 146 |

| | | |
|---|---|---|
| 41 | சென்றாயப் பெருமாள் கோயில் | 147 |
| 42 | பரத்வாசீசுவரர் கோயில் | 148 |
| 43 | அகத்தீசுவரர் கோயிலும் ஆதிமூலப்பெருமாள் கோயிலும் | 149 |
| 44 | அகத்தீசுவரர் கோயில் | 150 |
| 45 | கரியமாணிக்கப்பெருமாள் கோயில் | 151 |
| 46 | கரை கண்டேசுவரர் கோயில் | 152 |
| 47 | அகத்தீசுவரர் கோயில் | 153 |
| 48 | சென்ன கேசவப் பெருமாள் கோயில் | 153 |
| 49 | பெருங்காஞ்சி அகத்தீசுவரர் கோயில் | 154 |
| 50 | சார்ந்தாரைக் காத்த ஈசுவரர் கோயில் | 156 |
| 51 | கனக சபாபதீசுவரர் கோயில் | 157 |
| 52 | காசி விசுவநாதர் கோயில் | 158 |
| 53 | அனந்த பத்மநாபர் கோயில் | 159 |
| 54 | மகாதேவ சுவாமி கோயில் | 160 |
| 55 | சோமநாதீசுவரர் கோயில் | 161 |
| 56 | இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில் | 162 |
| 57 | தடாகபுரீசுவரர் கோயில் | 163 |
| 58 | அங்கநாதீசுவரர் கோயில் | 165 |
| 59 | பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் | 167 |
| 60 | ஆதிமூலப் பெருமாள் கோயில் | 168 |
| 61 | படையாத்தம்மன் கோயில் | 169 |

| | | |
|---|---|---|
| 62 | புரந்தரபுரீசுவரர் கோயில் | 170 |
| 63 | பச்சையம்மன் கோயில் | 172 |
| 64 | இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில் | 173 |
| 65 | சுயம்பு நாதீசுவரர் கோயில் | 174 |
| 66 | பால வரதராசர் கோயில் | 176 |
| 67 | சோமநாதீசுவரர் கோயில் | 177 |
| 68 | சோழீசுவரர் கோயில் | 178 |
| 69 | கல்யாண வெங்கடேசப் பெருமாள் கோயில் | 180 |
| 70 | ஆதி கேசவப் பெருமாள் கோயில் | 181 |
| 71 | பிரசன்ன வரதராசப் பெருமாள் கோயில் | 182 |
| 72 | கோதண்ட இராமசாமி கோயில் | 183 |
| 73 | சலகண்டேசுவரர், அரங்கநாதசுவாமி கோயில்கள் | 183 |
| 74 | பொற்கொடியம்மன் கோயில் | 185 |
| 75 | அம்மச்சார் கோயில் | 186 |
| 76 | கரிவரதராசப்பெருமாள் கோயில் | 186 |
| 77 | வளர்புரீசுவரர் கோயில் | 187 |
| 78 | பிரம்மபுரீசுவரர் கோயில் | 188 |
| 79 | திருமாலீசுவரர் கோயில் | 190 |
| 80 | முருகன் கோயில் | 192 |
| 81 | சுந்தரராசப் பெருமாள் கோயில் | 194 |
| 82 | திருநாகேசுவரர் கோயில் | 196 |

| | | |
|---|---|---|
| 83 | ஆட்கொண்டீசுவரர் கோயில் | 198 |
| 84 | வீரநாராயணப் பெருமாள் கோயில் | 199 |
| 85 | அதிதீசுவரர் கோயில் | 200 |
| 86 | அழகுப் பெருமாள் கோயில் | 202 |
| 87 | பொன்னியம்மன் கோயில் | 204 |
| 88 | ஏகாம்பர நாதர் கோயில் | 205 |
| 89 | சீனிவாசப் பெருமாள் கோயில் | 206 |
| 90 | சுந்தர விநாயகர் கோயில் | 207 |
| 91 | வசவேசுவரர் கோயில் | 208 |
| 92 | வீரபத்திரர் கோயில் | 209 |
| 93 | வேணுகோபாலசுவாமி கோயில் | 210 |
| 94 | பக்தவத்சல ஈசுவரர் கோயில் | 211 |
| 95 | கயிலாச நாதர் கோயில் | 212 |
| 96 | மார்க்கபந்தீசுவரர் கோயில் என வழங்கும் வழித்துணை நாதர் கோயில் | 213 |
| 97 | ஆவுடைய நாதீசுவரர் கோயில் | 228 |
| 98 | பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் | 229 |
| 99 | இலட்சுமி நாராயணசுவாமி கோயில் | 231 |
| 100 | கயிலாச நாதர் கோயில் | 232 |
| 101 | எல்லையம்மன் கோயில் | 233 |
| 102 | புத்திர காமேசுவரர் கோயில் | 235 |
| 103 | இராமநாதசுவாமி கோயில் | 236 |

| | | |
|---|---|---|
| 104 | காசி விசுவநாதர் கோயில் | 236 |
| 105 | பச்சையம்மன் கோயில் | 237 |
| 106 | பரசுராமேசுவரர் கோயில் | 238 |
| 107 | அகத்தீசுவரர் கோயில் | 240 |
| 108 | மனோன்மணியம்மன் கோயில் | 242 |
| 109 | தருமராசர் திரௌபதையம்மன் கோயில் | 243 |
| 110 | கனக துர்க்கையம்மன் கோயில் | 244 |
| 111 | சித்தி புத்தி சுந்தரவிநாயகர் கோயில் | 245 |
| 112 | சிவசுப்பிரமணியசுவாமி கோயில் | 246 |
| 113 | சோலாபுரி அம்மன் கோயில் | 247 |
| 114 | மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் | 248 |
| 115 | சலகண்டேசுவரர் கோயில் | 250 |
| 116 | வேம்புலியம்மன் கோயில் | 256 |

# திருப்பத்தூர் நகர்

# தருமராசர் கோயில்

இக்கோயில் திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 8 கிலோமீட்டர்த் தொலைவில், திருப்பத்தூர் நகரின் மையப்பகுதியில் பேருந்து நிலையத்துக்கருகில், பலரும் வழிபட்டுச் செல்லும் வகையில் 37 மீட்டர் நீளமும் 27 மீட்டர் அகலமும் கொண்ட 999 சதுரமீட்டர்ப் பரப்பளவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

தற்போது திருக்கோயில் அமைந்துள்ள இடம் 300 ஆண்டுகளுக்கு முன்னர் செடி, கொடிகள் நிறைந்த காடாக இருந்தது. அக்காலத்தில் ஆர்க்காடு அருகிலுள்ள வளவனூரைச் சேர்ந்த வரதப்ப முதலியார் என்னும் பெரியவர் குடும்பத்துடன் திருப்பத்தூருக்குக் குடிவந்தார். அவர் தமது குலதெய்வமாகத் திரௌபதியம்மனையே வழிபட்டு வந்தார். ஒருநாள் அவர் தற்செயலாகத் தம் வேலையை முன்னிட்டுக் காட்டின் வழியே சென்றபோது மண்ணில் புதைந்திருந்த ஒரு சிலையினைக் கண்டெடுத்தார். அதனைத் தம் குலதெய்வத்தின் நினைவாகத் தருமராசர் திரௌபதி மற்றும் அருச்சுனன் ஆகியோர் திருவுருவங்களோடு பூசை செய்து வந்தார். இக்கோயில் பின்னர்ப் பெரியோர் பலராலும் வழிபடப்பெற்றுத் தற்போது பலரும் வந்து வழிபடும் தருமராசர் கோயில் என்னும் பெயரில் விளங்கிவருகிறது.

இக்கோயிலின் உட்பகுதியில் இடப்புறம் விநாயகர் சந்நிதி ஐந்துமீட்டர் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. அடுத்து உள்ளே பாண்டுரங்கர் பஜனைக் கோயில் 9 சதுரமீட்டர் பரப்பில் உள்ளது. கருவறையில் மூலவர் தருமராசரும் இடப்புறத்தில் விநாயகரும் முன்புறம் திரௌபதியும் உள்ளனர்.

இங்குள்ள கிணற்றுநீர் தீர்த்தமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மூலவர் சந்நிதிக்கும் விநாயகர் சந்நிதிக்கும் விமானங்கள் நன்னிலையில் உள்ளன. இக்கோயிலில் 22 மீட்டர் நீளமும் 20 மீட்டர் அகலமும் கொண்ட பிராகாரம் அமைந்துள்ளது. இக்கோயிலின் முன்மண்டபமும் திருமணமண்டபமும் நன்கு பராமரிக்கப்படுகின்றன.

இக்கோயிலில் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் பூசை சிறந்த முறையில் நிகழ்த்தப்பெறுகிறது. நவராத்திரித்திருவிழா 10 நாள்கள்

நடைபெறுகிறது. 10-ஆவது நாள் வீதியுலா நடைபெறுகிறது. மார்கழி 30 நாள்களும் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. தைமாதம் முதல் நாளன்று திருவீதியுலாவும் புரட்டாசி மாதம் பாண்டுரங்கர் பஜனைக்கோயிலில் பந்து சேர்வை விழாவும் நடைபெறுகின்றன.

அறங்காவலர்கள் தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அலுவலர் செயலாற்றி வருகிறார். இக்கோயிலுக்கு 1.09 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலுக்கு மனைவாடகை, கடைவாடகை, திருமணக்கட்டணம் ஆகியவை மூலம் வருமானம் கிடைத்துவருகிறது. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 30,000 (முப்பதாயிரம்) உருபாயாகும்.

## திருப்பத்தூர்

# பரமேசுவரர் கோயில்

இக்கோயில் திருப்பத்தூர் வட்டம் திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கிழக்கே 3 மீட்டர்த் தொலைவில் இருக்கின்றது.

இங்குச் சோமநாதர், இராமநாதர், காசிலிங்க மூர்த்தி ஆகியோர்களுக்குத் தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன. இக்கோயிலில் நாள்பூசை பெயரளவில் செய்யப்படுகிறது. சிவராத்திரியில் மட்டும் சிறப்பாகப் பூசை செய்யப்படுகிறது.

இக்கோயிலுக்கு மனைவாடகை மாதம் 60 உருபாய் கிடைத்து வருகிறது. உதவித்தொகை 114.62 உருபாய் அரசு அளித்துவருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1661 உருபாயாகும்.

புட்பம் வழங்குவதற்காக விடப்பட்ட 22.93 ஏக்கர் நிலம் தனிப்பட்டவர்களின் பெயரில் பட்டா மாற்றப் பெற்றதால் இந்நிலச் சொத்திலிருந்து இக்கோயிலுக்கு வருமானம் யாதும் கிடைப்பதில்லை.

இக்கோயிலைச் சுற்றிலும் முசுலிம் இனத்தவர்கள் வசிக்கிறார்கள். நில அளவை 704 எண் நிலத்தில் 19,384 சதுர அடிப்பரப்பும் 760/1 எண் நிலத்தில் 40,695 சதுர அடி நந்தவனப் பரப்பும் 755 எண் நிலத்தில் 17,512 சதுர அடி புளியந்தோப்புப் பரப்பும் முசுலிம் இனத்தவர்களில் 82 பேர்கள் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். இந்நிலங்களிலிருந்து கோயிலுக்கு வருமானம் இல்லை. முசுலிம் இனத்தவர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தால் மதக்கலவரம் ஏற்பட்டுவிடுமோ என்ற நிலையில் செயலற்ற

நிலைமை உள்ளது. இக்கோயில் மிக நலிந்த நிலையில் உள்ளது.

இக்கோயிலின் மையப்பகுதியிலுள்ள வடக்குச்சுவர்க் கல்வெட்டு, விசயநகரமன்னர் வீரதேவராயர் மகன் வீர விசய பூபதிராயர் கல்வெட்டு நிகரிலிச் சோழ மண்டலத்தின் உயில் நாடு மாதவ - சதுர்வேதிமங்கலம் என்கிற திருப்பத்தூர் பிரம்மேசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் கூறுகிறது (ஆண்டு சகம் 1331).[1]

இதே சுவரில் பொறிக்கப்பட்டுள்ள பவ 1256-ஆம் ஆண்டு சகம் ஆண்டு ஓய்சால மன்னர் வீரவல்லாள தேவர் (1291-1342) கல்வெட்டு துண்டித்தவாறு காணப்படுகிறது.[2]

இதே சுவரில் பொறிக்கப்பட்டுள்ள ஓய்சால மன்னர் வீரராமநாதனின் மைந்தரும் சோமேசுவரரின் பேரனுமாகிய ஓய்சால மன்னர் விசுவநாததேவர் (கி.பி. 1233-54) மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு மேலே குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து பிரம்மேசுவரமுடைய நாயனார் கோயிலுக்குச் சொந்தமான தேவதான கிராமங்கள் வரியில்லாதவையாக மாற்றப்பட்டன என்பதைக் குறிப்பிடுகிறது.

---

(1. 248/1909; 2. 249/1909)

## திருப்பத்தூர்

# வரதராசப் பெருமாள் கோயில்

இக்கோயில் திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு கிலோமீட்டர்த் தொலைவில் 52 மீட்டர் நீளமும் 45 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது.

இக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் வரதராசப்பெருமாள் சந்நிதியை நோக்கியவாறு விமானத்தோடு கூடிய கருடாழ்வார் சந்நிதி இருப்பதைக் காண்கிறோம். வெளிப்பிரகாரத்தின் வடக்கில் இலட்சுமிநாராயணர் சந்நிதி உள்ளது. இங்கு ஆஞ்சநேயர் திருவுருவமும் உள்ளது.

உட்பிரகாரத்தில் கருடாழ்வார் சந்நிதியை அடுத்து உட்பகுதியில் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், கூரத்தாழ்வார் ஆகியோர் திருவுருவங்களைக் காண்கிறோம்.

அடுத்து வரதராசப்பெருமாள் சீதேவி, பூதேவி ஆகிய உபயநாச்சிமார்களோடு கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கின்றார். வரதராசப்பெருமாளை நோக்கி மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் அமர்ந்துள்ளார்கள். வடமேற்குப்புறத்தில் வேணுகோபாலர் சந்நிதி உள்ளது.

பெருந்தேவியாருக்குத் தனிச் சந்நிதியுள்ளது. இங்குத் தென்புறத்தில் இராமாநுசர் திருவுருவம் வடக்கு நோக்கியவாறுள்ளது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு ஒன்றுள்ளது. இக்கோயிலின் கோபுரம் அடித்தளத்துடன் மட்டும் உள்ளது. வரதராசப்பெருமாள், பெருந்தேவியார், இலட்சுமி நாராயணர், கருடாழ்வார் ஆகியோர்களின் சந்நிதி விமானங்கள் நன்னிலையில் உள்ளன.

ஆழ்வார்கள் திருவுருவங்களுள்ள வரதராசப்பெருமாள் சந்நிதி முன்மண்டபமும் இராமாநுசர் திருவுருவமுள்ள தாயார் சந்நிதி மண்டபமும் குறிப்பிடத்தக்கவை. பெருந்தேவியார் சந்நிதிக்கு வெளியே அழகிய 24 கால் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் மேற்குப் பகுதியில் தரையை நோக்கியவாறு கல்லில் தாமரை மலர் செதுக்கப்பட்டுள்ளது. இத்தாமரை மலரைச்சுற்றி அட்டதிக்குப் பாலகர்களின் திருவுருவங்கள் அழகிய வடிவில் உள்ளன. இதன் அடியிலுள்ள கல்தூண்கள் நான்கிலும் பல்வேறு உருவங்கள் அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருமாலின் அவதாரங்கள் சித்திரித்துக் காட்டப்பெற்றுள்ளன. வடபுறத்திலுள்ள இருதூண்களில் வீரர் இருவர் தம் தேவியருடன் வேணுகோபாலனை வணங்கிய வண்ணம் உள்ளனர். தாயார் சந்நிதி மண்டபத்தில் சுரங்கப்பாதை ஒன்றுள்ளது.

தாயார் சந்நிதி மண்டபத்தின் நான்கு புறச்சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இக்கோயிலின் மையத்திலுள்ள சுவரில் பொறிக்கப்பட்டுள்ள சகம் 1338 துர்முகி ஆண்டு விசயநகர மன்னர் வீரப்பிரதாப தேவராய மகாராயர் கல்வெட்டு முள்வாய் இராச்சியத்தின் பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் குறிப்பிட்டு இப்பகுதிகளின் மன்றாடிகள் வனத்தில் ஆடுகளும் பசுக்களும் மேய்வதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் எனக் கூறுகிறது. தகாடு நாடு, எயில் நாடு, கலிங்கராய்பற்று, பாரூர்ப்பற்று, குடிநீர்ப்பற்று, தென்சீர்மங்கலம்பற்று ஆகியவையும் மற்றும் நான்கு பற்றுகளும் இப்பிரிவுகளாகக் குறிக்கப்படுகின்றன.[1]

இக்கோயிலின் கொடிமரத்தைச் சுற்றிலுமுள்ள மேடையில் தனித்தனியாகவுள்ள கற்களில், ஆண்டு விவரம் காணப்படாதவாறுள்ள ஸ்ரீராச ராசதேவர் என்கிற சோழ மன்னன் இராசராசகேசரிவர்மன் கல்வெட்டு வரலாற்று முன்னுரையைக் கொண்டுள்ளது. இஃது இராசேந்திர சிங்க வளநாட்டிலுள்ள பிரமதேயமாகிய வீர நாராயண சதுர்வேதி மங்கலத்தைக் குறிப்பிடுகிறது.[2]

இக்கோயிலின் முன்புறமுள்ள தூணில் பிரபவ ஆண்டு சிங்கய தன்னயக்கார் இளவல் வல்லாளதேவர் என்கிற மாதப்பு தன்னயக்கார் மாதவச் சதுர்வேதிமங்கலத்திலுள்ள ஆனைக்காத்த பெருமாள் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் கூறுகிறது.[3]

வைகானச ஆகமமுறையில், ஒரு காலப்பூசை மட்டும் நடைபெறுகிறது. சனிக்கிழமைகளில் திருமஞ்சனமும் திருவோணம் தோறும் அருச்சனையும் நிகழ்த்தப் பெறுகின்றன.

சித்திரை மாதத்தில் தமிழாண்டுப்பிறப்பு, சித்திரைப் பௌர்ணமி. வைகாசியில் 10 நாள்கள் பிரமோற்சவம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், புரட்டாசிச் சனிக் கிழமைகள், ஐப்பசித் தீபாவளி, கார்த்திகைத் தீபம், மார்கழி, வைகுண்ட ஏகாதசி, தை சங்கராந்தி ஆகியவை முக்கியமான திருவிழாக்களாகும். இவை அனைத்தையும் உபயதாரர்கள் நடத்துகிறார்கள்.

இக்கோயிலுக்கு அரசுமான்யமாக ஆண்டுதோறும் கிடைக்கப்பெறும் தொகை வரதராசபெருமாள் கோயிலுக்கு 210 உருபாய், இலட்சுமி நாராயணர் கோயிலுக்கு 48 உருபாய், ஆஞ்சநேயர் கோயிலுக்கு 35 உருபாய் ஆகும்.

1966-ஆம் ஆண்டில் அரசு மானியமாக 3,000 உருபாய் அளிக்கப்பட்டதைக் கொண்டு சில திருப்பணிகள்செய்யப்பெற்று வருகின்றன.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடம் உள்ளது.

---

(1. 251/1909; 2. 252/1909; 3. 253/1909)

## திருப்பனங்காடு

# தாலபுரீசுவரர் கிருபாநாதீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள திருப்பனங்காட்டூரில் 19 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. காஞ்சிபுரத்திற்குத் தெற்கே 5 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள ஐயன்குளத்தை அடைந்து அங்கிருந்து ஆர்க்காடு

செல்லும்பெருவழியில் 5 கிலோமீட்டர் சென்று பின் வடக்கே 1கிலோமீட்டர் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இவ்வூர் வண்பாக்கம் என்னும் ஊரை அடுத்துப் பனைமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட பனங்காட்டூர் ஆகையினால் வண்பார்த்தான் பனங்காட்டூர் என்னும் பெயரைக் கொண்டிருந்தது. தற்போது இத்தலம், திருப்பனங்காடு என்னும் பெயரில் விளங்கிவருகிறது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் தாலபுரீசுவரர் என்னும் பெயரில் வழிபடப்பெறுகிறார். பனைமரமாகிய தாலமரத்தைத் தலமரமாகக் கொண்டவர் தாலபுரீசுவரர்.

இக்கோயிலின் இறைவர்க்குப் படைக்க வேறு எப்பொருளும் கிடைக்காமை காரணமாகக் கண்ணுவமுனிவர் தமது கையில் கிடைத்த பனம்பழத்தைப் படைக்கச் சிவபெருமான் அவர் முன்தோன்றி, அவருக்கு அருள்புரிந்தார். இதன் அடிப்படையில் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் பனங்காட்டீசுவரர் எனப் போற்றப் பெற்றார் எனவும் கூறுகின்றனர்.

இக்கோயில் பழமைவாய்ந்தது எனவும் இங்கு அகத்தியமுனிவரும் புலத்திய முனிவரும் வழிபாடாற்றினார்கள் எனவும் மரபுவழிச் செய்தி கூறுகிறது. அகத்தியர் தென்னாடு வந்தபோது பனங்காட்டில் ஆசிரமம் அமைத்துப் பூசை செய்துவந்தார். அவ்வாறு அவர் பூசை செய்து வந்த சிவபெருமானுக்கு அங்குக் கோயில் அமைக்க விரும்பினார். அப்போது அங்கு மறைந்து கிடந்த பார்வதலிங்கத்தை எடுத்து அதை உரியமுறையில் நிறுவி, அங்குச் சிவ வழிபாட்டுக்கு வழிவகுத்தார். பின்னர்ப் புலத்திய முனிவர் இமயமலையிலிருந்து கொண்டு வந்த கிரியாலிங்கத்தை இங்கு நிறுவிச் சிவ வழிபாட்டுக்கு வழிவகுத்தார். அகத்திய முனிவர் வகுத்த வழிபாட்டிற்குரிய சிவலிங்கம் சுயம்புலிங்கம் ஆகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கச்சி அநேகதங்காவதத்தைப் பணிந்து அருகிலுள்ள பதிகளை வணங்கிச் சிலநாள்கள் தங்கி வண்பார்த்தான் பனங்காட்டூர் சென்று அங்குள்ள இறைவனை இறைஞ்சிப் பதிகம் பாடியருளினார் என்பதைப் பெரியபுராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் தெரிவிக்கிறது. (பாடல் 194). இவ்வாறு இக்கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபாடாற்றி ஒரு பதிகம் பாடியுள்ளதால் அவர் காலத்திற்கு முன்னரே இக்கோயில் இருந்திருக்க வேண்டுமென்று கொள்ளலாம். இவரது காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கமுமாகும். பின்னர் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கோயிலின் கிழக்கு வாயில் கோபுரத்தின் வழியாகக் கோயிலுள் சென்று அடுத்துள்ள நுழைவாயிலைக் கடந்து செல்வோம் எனில், கோயிலின் வெளிப்பிரகாரத்தை அடையலாம். இக்கோயிலின் தென்மேற்குக் கோடியில், கணபதி கிழக்கு நோக்கியவாறுள்ளார். இங்கிருந்து மேற்கு வெளிப்பிரகாரத்தின் வழியாக வடக்கே செல்லுமிடத்தில் மேற்குப்பிரகாரத்தின் வடமேற்குக்கோடியில் கிழக்கு நோக்கியவாறுள்ள சுப்பிரமணியர் சந்நிதியை அடைகிறோம். அதன்பின்னர்



திருப்பனங்காடு
தாலபுரீசுவரர் கோயில்

வடக்குப் பிரகாரத்தின் வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று கிழக்குப்பிரகாரத்தின் தெற்குப் பகுதியை அடைகிறோம். அங்கு பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை உள்ளன. நந்திதேவருக்கு எதிரில் தாலபுரீசுவரர் சந்நிதி உள்ளது. உள்பிரகாரத்தில் வலம்வரும்போது கருவறைச் சுவர்மாடங்களில் தெற்கில் விநாயகர் தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. வடக்கில் தனித்துச் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

கருவறையில் தாலபுரீசுவரர் ஒரு மீட்டர் உயரமுள்ள சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். அங்கிருந்து வெளிப்பிரகாரத்தை அடைந்து சற்று வடக்கே செல்வோமெனில், தாலபுரீசுவரர் சந்நிதிக்கு நேரொத்தவாறு வடக்கிலுள்ள கிருபாநாதீசுவரர் சந்நிதிக்கு எதிரிலுள்ள பலிபீடம், கொடிமரம் நந்திதேவர் திருவுருவம் ஆகியவற்றைக் காண்கிறோம். அங்கிருந்து கிருபாநாதீசுவரர் சந்நிதி உள்பிரகாரத்தில் வலம் வருவோமெனில், தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி; மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களைக் காண்கிறோம். சண்டேசுவரர் சந்நிதியும் வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. கருவறையில் கிருபாநாதீசுவரர் 1 மீட்டர் உயரமுள்ள சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியுள்ளார். கிழக்குப் பிரகாரத்தில் பலிபீடம், கொடிமரம் நந்தி தேவர் சந்நிதி ஆகியவற்றிற்குச் சற்று வடக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. தெற்கிலுள்ள கோயிலில் அகத்தியர் வழிபாடாற்றினார். வடக்கிலுள்ள கோயிலில் புலத்தியர் வழிபட்டார்.

நவக்கிரகங்கள் சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கில் தாலபுரீசுவரர் தேவியாகக் கொண்டாடப்பெறும் அமுதவல்லியம்மை சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இங்கு அமுதவல்லி 1 1/2 மீட்டர் உயரத்துடன் நின்ற நிலையில் அருள்பாலிக்கிறார். இச்சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கில் கிருபாநாதீசுவரர் தேவியாக வணங்கப்பெறும் கிருபாநாயகி சந்நிதியும் தெற்கு நோக்கியுள்ளது. இங்குக் கிருபாநாயகியின் திருவுருவம் 1 1/2 மீட்டர் உயரம் கொண்டுள்ளது. விநாயகர், சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, சோமாசுகந்தர், நடராசர் ஆகியோர் உற்சவத்திருமேனிகள் மிக அழகியவை. நடராசர் திருமேனி 1 மீட்டர் உயரம் கொண்டது. மற்றத் திருமேனிகள் 1/2 மீட்டர் உயரமுடையவை.

இக்கோயிலின் தீர்த்தம் சடாகங்கை தீர்த்தமாகும். சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூருக்கு வந்தபோது சிவபெருமான் முதியவர் வடிவில் தோன்றி இவருக்கு உணவு அளிக்க முற்பட்டபோது சுந்தரமூர்த்தி நாயனார் தண்ணீர் இங்கு இல்லாதபோது யான் எவ்வாறு உணவு உண்பேன் என வினவியபோது அம்முதியவர் தமது அடியினால் மண்ணைச் சிறிது அகற்றவும் அதிலிருந்து தூயநீர் ஊறிற்றெனவும் அப்போது சுந்தரமூர்த்தி நாயனார் "நீர் யார்" என்று வினவ அவர் தம்மூர் "பனங்காடு" எனக் கூறி மறைந்தார் எனவும் கூறுவர். இந்நீரூற்று தற்போது சுந்தரர் தீர்த்தம் என்னும் பெயரிலும் ஊற்றங்குழி என்னும் பெயரிலும் வழங்கிவருகிறது.

அகத்தியர் பூசைசெய்த காலத்தில் இறைவன் திருமுடியிலிருந்து கங்கை வெளிப்பட்டு, வடகிழக்கிலிருந்த பள்ளத்தில் தங்கியதைக் கண்ட அகத்தியர் அத்தீர்த்தத்திற்கு சடாகங்கை எனப் பெயரிட்டு அங்கு கங்காதேவியின் திருவுருவத்தை நிறுவினார். இங்கு 1928-ஆம் ஆண்டில் குடமுழுக்கு செய்விக்கப் பட்டபோது இங்குள்ள திருக்குளத்திற்குத் திருப்பணி செய்யப்பட்டது.

இக்கோயிலுக்கு மூன்றுநிலை கோபுரம் உள்ளது. வெளிப்பிரகாரம் கிழக்கில் அகன்ற பரப்புடையது. அமுதவல்லி சந்நிதியின் முன்புறத்திலும் கிருபாநாயகி சந்நிதி முன்புறத்திலும் மண்டபங்கள் உள்ளன. திருவிழாக் காலங்களில் இங்கு மக்கள் பெருந்திரளாகக் கூடுகின்றனர்.

இக்கோயிலின் அமைப்பு கலைச் சிறப்புடையதாக விளங்குகிறது. மூலவர் சந்நிதிகள் கசப்பிரஷ்ட வடிவில் அமைந்துள்ளன. அம்மன் சந்நிதிகள் இரண்டும் நீள்சதுர வடிவில் உள்ளன. தூண்களில் விநாயகர், சுப்பிரமணியர் முதலியோர் சிற்பங்கள் அழகிய முறையில் பொறிக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தில் உயிருள்ள பனைமரங்களை வெட்டுபவர்கள் தண்டனைக்கும் தோஷத்திற்கும் உள்ளாவார்கள் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயிலில் இருகாலப்பூசை ஆதிசைவ குருக்கள் செய்துவருகிறார். ஆவணி மாதத்தில் விநாயக சதுர்த்தி, புரட்டாசி மாதத்தில் நவராத்திரி, ஐப்பசி மாதத்தில் கந்தர்சஷ்டி, கார்த்திகையில் தீபம், சோமவாரங்கள், மார்கழியில் திருவாதிரை, மாசி மாதத்தில் பிரமோற்சவம் ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

இக்கோயிலுக்கு 1.11 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. இக்கோயிலில் இடபம், சிங்கம், யானை, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, நந்திதேவர், குதிரை, அன்னம், பூதம், மயில், பல்லக்கு, பெருச்சாளி ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 21, 890 /- உரூபாயாகும்.

இத்தலத்தின் சிறப்பைச் சுந்தரர் திருப்பதிகம் எடுத்துக்கூறுகிறது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைச் சேக்கிழார், "செல்வமல்கு திருப்பனங்காட்டூரிற் செம்பொற் செழுஞ்சுடரை" என்றும் உமாபதிசிவம் "பனங்காட்டூர் மேவும் பனங்காட்டூர் நாதர், வனங்காட்டும் அமுதவல்லி மன்னா" எனவும் போற்றியுள்ளார்கள்.

"பூத்தவிசின் ஆர்த்தான் பகைத்தவனிந்திரன், புகழ் வன்பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே" என்று இராமலிங்க அடிகள் இத்தலத்தின் பெருமையைப் போற்றியுள்ளார்.

இக்கோயிலின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட உடையார் சோழமன்னன் ஸ்ரீராசாதிராச தேவர் என்கிற இராசகேசரிவர்மன் 28-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இராசாதிராசன்[1] 1 (அல்லர் எனில் 2) நிலக்கொடை வழங்கியதைப் பதிவு செய்துள்ளது.

இக்கோயிலின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட சோழமன்னன் உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர் 1 (கி.பி. 1011-53) என்கிற பரகேசரிவர்மன் 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில விற்பனை பற்றிக் கூறுகிறது.[2]

இதே சுவரில் பொறிக்கப்பட்ட சோழமன்னன் சக்கரவர்த்தி ஸ்ரீகுலோத்துங்கச் சோழதேவர்1 என்கிற இராசகேசரிவர்மன் 42-ஆம்[3] ஆண்டுக் கல்வெட்டு விளக்கு எரிக்க வழங்கப்பட்ட நன்கொடையைக் குறிக்கிறது. இக்கோயில், சயங்கொண்ட சோழ மண்டலத்தின் உட்பிரிவாகிய காலியூர்க் கோட்டத்தின் கழுமல நாட்டிலுள்ள திருப்பனங்காட்டு உடையவர் கோயில் எனக் குறிக்கப்பட்டுள்ளது. நன்கொடை வழங்கியவர் சோழமண்டலத்தின் உட்பிரிவாகிய கீழ் வேங்கை நாட்டில் வாழ்ந்தவர்.

இதேசுவரில் சகம்1310 விபவ ஆண்டில் விசய நகரமன்னன் வீரஅரியண்ண உடையார் மகன் விருப்பண்ண[4] உடையார் (விருப்பாட்சர் 1) கல்வெட்டு நிலக்கொடை பற்றிக் கூறுகிறது.

இக்கோயிலின் கிழக்குச் சுவரில், திருப்பனங்காடு அமைந்துள்ள மாவட்டத்தில் வழங்கிவந்த அளவுகோலின் நீளம் கொடுக்கப்பட்டுள்ளது.[5] இதன் தொடக்கத்திலும் முடிவிலும் பனைமர வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலிலுள்ள கிருபாநாதீசுவரர் சந்நதியின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முடிவுபெறாமல் உள்ளது. இது விசயநகர மன்னர் ஒருவர் பட்டம் பெற்றதைக் குறிக்கிறது. இம்மன்னர் பெயர் காணப்படவில்லை. கற்கள் கொடுத்தவர்களுக்கு[6] நன்கொடை அளித்ததை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இதே சுவரில், விசய நகரமன்னர் வீரஅரியண்ண உடையார் (ஹரிஹர 11) மகன் விசயநகர மன்னர் விருப்பண்ண உடையார் (விருப்பாட்சர்1) கல்வெட்டு சகம் 1313 பிரமோதூத-பிரசோத்பத்தி ஆண்டுப் பஞ்சத்தைப் பற்றிக் கூறுகிறது.[7]

இக்கோயிலின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள விசயநகர மன்னர் கண்டகட்டாரி சாளுவ வாணியவேட்டை கண்டருளிய நாசநாயகர்

உடையார்புதல்வர் கிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டு (சகம் 1432 பிரமோதூத) எட்டப்ப நாயக்கர் புதல்வர் திருமலை நாயக்கரைக் குறிக்கிறது.[8]

தாலபுரீசுவரர் கோயிலின் முன்மண்டபத்து மேற்குச் சுவரிலும் தெற்குச்சுவரிலும் பொறிக்கப்பட்ட அரியண்ண உடையார் (உறிஉற 11) புதல்வர் விருப்பண்ண உடையார் (விருபாட்சர் 1 ) சகம் 1303 துந்துபி ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயில் ஜயங்கொண்ட சோழமண்டலத்து கலியூர்க் கோட்டத்தின் கழுமலநாட்டின் உட்பிரிவாகிய பிரமதேசம் பற்றிய திருப்பனங்காட்டில் ஆளுடையார் திருப்பனங்காடுடைய நாயனார் கோயில் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது வாசவன் திருவீதியையும் ஆடருங்கழல் பெருமாள் தொண்டை மானார் மனையையும் குறிக்கிறது. குளத்தின் ஒரு மதகு அருகில் உடைப்பு ஏற்பட்டதையும் அதன் காரணமாக ஊரார் சூழவரி எனப்படும் வரியைச் செலுத்த இயலாதவராக இருந்தார்கள் என்பதையும் குறிப்பிடுகிறது.[9]

இச்சுவர்களிலுள்ள கல்வெட்டொன்று இக்கோயில் அதிகாரிகளுக்கும் நெசவாளர்களுக்கும்[10] இடையே செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது.

இக்கோயில் மண்டபத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, தட்சிணாமூர்த்தி, மகாவிட்டுணு, பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள்[11] நிலைநாட்டப்பட்டதைக் குறிக்கிறது. ஆனால் மற்ற விவரங்கள் குறிக்கப்படவில்லை.

இக்கோயிலில் கிருபாநாதீசுவரர் சந்நிதியின் முன்புறமுள்ள மண்டபத்தில், திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ குலோத்துங்கசோழன் 10-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, சயங்கொண்ட சோழமண்டலத்தின் பிரிவாகிய கலியூர்க் கோட்டத்து உட்பிரிவாகிய கழுமலநாட்டின் திருப்பனங்காடுடையவர் கோயிலில் விளக்கு வைக்க 32 ஆடுகள் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.[12] [இம்மன்னர் இராசராசன் (கி.பி. 1216-48) ஆக இருக்கலாம்].

இதே சுவரில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு "உயிருடன் உள்ள பனை மரத்தை வெட்டுகிறவர்கள் மன்னர் வகுத்த ஆணையின் கீழ்த்[13] தண்டனை விதிக்கப்படுவதற்கு உட்படுத்தப்பட வேண்டும்" என்று கூறுகிறது.

இதே சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சம்புவராயர் நன்மைக்காகத் திருக்கண்ணப்ப நாயனார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்[14] என உரிமை கொண்டாடிய வேடர் சிலர் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே மண்டபத்தின் கிழக்கிலும் வடக்கிலுமுள்ள பீடத்தில் விசயநகரமன்னர் வீர பொக்கண்ண உடையார் (புக்கர் 1) மகன் கம்பண்ண உடையார் (2) 1291 சகம் சௌம்ய ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, மன்னன் ஆணைக்கேற்ப

விளக்குகளை நன்கு கவனித்துவர மூவர் நியமனம் செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[15]

இது போன்றதொரு ஏற்பாடு அடைப்பட்டு இலக்கப்பாருக்கும் ஆணைக்குண்டி விட்டப்பாருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட விசயநகர மன்னர் வீர பொக்கண்ண உடையார் மகன் கம்பண்ண உடையார் ஆணைக்கேற்பச் சகம் 1293 சாதாரண ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[16]

இதே சுவரில் சகம் 1289 கீழக ஆண்டில் (இரண்டாம் கம்பண்ணாவாகிய) விசயநகர மன்னர் வீரகுமார கம்பண்ண உடையார் காலத்துக் கல்வெட்டு போதாயன சூத்திர பாரத்வாச கோத்திர விசய சிம்மதேவர் இக்கோயிலின் மேலாளராக நியமனம் செய்யப்பட்டதைக் கூறுகிறது.[17]

இதே சுவரில், அரியண்ண உடையார் (ஹரி ஹர 2 ) புதல்வரான விசயநகர மன்னர் விருப்பண்ண உடையார் (விருப்பாட்சர் 2 ) சகம் 1303 துந்துபி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, கிராம ஏரியில் ஏற்பட்ட உடைப்புகளை அடைப்பதற்கான செலவுகளை ஏற்க அவர்களிடம் நிதிகள் இல்லாத காரணத்திற்காக நெடுங்காலம் பயிரிடப்படாதிருந்த நிலங்களை விற்பனை செய்ததாகக் கூறுகிறது.[18]

இதே சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மன்னர் நன்மைக்காக விசயநகர மன்னர் அச்சுத தேவ மகராயர் சகம் 1460 விளம்பி ஆண்டில் திருப்பனங்காடுடைய நாயனார் ஆன்புடைய நாயனாருக்கு நிலக்கொடை வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[19]

இதே சுவரில் விசய நகர மன்னர் வீரப்பிரதாப அச்சுத தேவமகாராயர் சகம் 1403 கர ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு போகயதேவ மகாராச மன்னரின் நன்மைக்காகத் திருமலைத் தேவர் அனுமதியோடு மன்னர் 50 பொன் மதிப்புடைய பொன் வழங்கினர் என்பதைக் குறிக்கிறது.[20]

இக்கோயிலின் முதற்பிரகாரத்தின் மேற்குச் சுவரின் உட்பக்கம் விசயநகர மன்னர் அரியண்ண உடையார் (ஹரி ஹர 2 ) புதல்வர் தேவராய உடையார் (1) காலத்துச் சேதமடைந்த சகம் 1320 ஈசுவர ஆண்டுக் கல்வெட்டு ஒரு வாய்க் காலையும் சூரிய தேவ மகாராச மகன் மகாமண்டலேசுவர வேங்கி திருபுவன சோமதேவரையும் குறிப்பிடுகிறது.[21]

---

(1. 233/1906; 2. 234/1906; 3. 235/1906; 4. 236/1906; 5. 237/1906; 6. 238 /1906; 7. 239/1906; 8. 240/1906; 9. 241/1906; 10. 242/1906; 11. 243/1906; 12. 244/1906; 13. 245/1906; 14. 246/1906; 15. 247/1906 16. 248/1906; 17. 249/1906; 18. 250/1906; 19. 251/1906; 20. 252/ 1906; 21. 253/1906.)

## திருப்பணமூர்

## சிவன் கோயில்

காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 18 கிலோமீட்டர்த் தொலைவில் காஞ்சிபுரத்திலிருந்து ஐயங்கார் குளம் வழியாக வேலூர் செல்லும் வழியில் கிழக்கு நோக்கியவாறு 12 செண்ட் நிலப்பரப்பில் இக்கோயில் உள்ளது.

இக்கோயிலில் மூலவர் இராமநாதீசுவரர் ஆவார்.

இக்கோயிலுக்கு 14 செண்ட் நன்செய் நிலம் இருந்தது என்பது தெரியவருகிறது. அந்நிலம் யாரிடம் உள்ளது என்பது தெரியவில்லை. இக்கோயிலில் மூர்த்தங்கள் காணப்படவில்லை. இது மிகவும் பாழடைந்துள்ளது.

## திருப்பாற்கடல்

## அரங்கநாதர் கோயில்

இக்கோயில் திருப்பாற்கடலிலுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு அருகில் 33 செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

திருப்பாற்கடல் வெங்கடேசப் பெருமாள் கோயிலில் திருவாராதனம் செய்து வந்த கிருஷ்ண பட்டாச்சாரியார் கனவில் பெருமாள் தோன்றினார். இக்கோயிலின் அருகில் மூங்கில் புதரில் 'அரங்கநாதராக ஆத்தி மரத்தில் நான் இருக்கிறேன். நாளை காலை நான் வெளியே வர ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான வேலையை நாளை காலையில் ஏற்பாடு செய்க எனத் தெரிவித்தார். அவ்வறிவுப்புக்கேற்ப, அப்பட்டாச்சாரியார் அங்கிருந்த இருளர் இருவரைக் கொண்டு அவ்விடத்திலிருந்த புதரை அப்புறப்படுத்தினார். அப்போது அங்கிருந்த ஆத்தி மரத்தின் கீழ் 4 மீட்டர் நீளமுள்ள அரங்கநாதர் திருவுருவம் காணப்பட்டது. அத்திருவுருவம் நிலைப்படுத்தப் பெற்றது. அரங்கநாதர் கோயிலும் எழுப்பப்பெற்றது.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. இங்கு வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இக்கோயிலுக்கு 2. 74 ஏக்கர் நன்செய் நிலமும் 2. 74 ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் திருப்பாற்கடல் நிருவாகத்துடன் இணைந்துள்ளது.

அரங்கநாதப்பெருமாள் கோயிலின் மேற்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலுமுள்ள விசயநகர தேவராய மகாராயர் யானை வேட்டை கண்டார் சகம் 1364 துர்மதி ஆண்டுக் கல்வெட்டு, மகமலேசுவர கந்தக்கட்டாரிச் சாளுவ திப்பய்ய தேவ மகாராயர் கல்வெட்டு கோயிலுக்காகச் சில வரிகளைத் தள்ளுபடி செய்ததைக் குறிக்கிறது.*

(* 703/1904)

## திருப்பாற்கடல் (திருக்கரபுரம்)

# திருக்கரபுரீசுவரர் கோயில்

சென்னை-பெங்களூர் (மேற்கத்திய) நெடுஞ்சாலையில் 98-ஆவது கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள காவேரிப்பாக்கத்தில் இறங்கித் தென்புறமாகச் செல்லும் திருப்பாற்கடல் சாலையில் 1 1/2 கிலோமீட்டர்த் தொலைவு சென்றால் திருப்பாற் கடல் என்னும் ஊரின் தென்பகுதியில் ஊர் நடுவில் உள்ள இக்கோயிலை அடையலாம்.

இக்கோயில் கட்டட அமைப்பு கீழ்மேற்கில் 30 மீட்டரும் தென்வடலில் 45 மீட்டரும் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. கருவறை 4 மீட்டர் பக்கமுள்ள சதுரமாகும். இதனோடு இணைந்த உள்மண்டபம் 3 மீட்டர் முன்னோக்கி நீண்டுள்ளது.

கோயிலின் மூன்று நிலைக் கோபுர வாயிலைக் கடந்து வெளிப்பிரகாரத்தில் வலம் வந்து பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் கடந்து கோயிலின் உள்வாயிலை அடைகிறோம். வாயிலின் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் பாலமுருகன் திருவுருவமும் கிழக்கு நோக்கியுள்ளன. கருவறைக் கோட்டங்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் திருமாலும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் உள்ளனர். கோமுகிக்கருகில் வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

வடக்குப் பிரகாரத்தில் பாலகுஜாம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் வடமேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் மயில் மீது அமர்ந்த ஆறுமுகர் சந்நிதியும் உள்ளன. கருவறையில் கரபுரீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், வள்ளிதெய்வயானை சமேத முருகன், எல்லைமாரியம்மன், அத்திரதேவர், திரிசூலம் ஆகிய உற்சவத் திருமேனிகள் உள்ளன.

மடைப்பள்ளி வெளிப்பிரகாரத்தின் தென்கிழக்குக் கோடியிலும் திருக்குளம் வடகிழக்குக் கோடியிலும் உள்ளன. இடி தாக்கப்பட்டதால் கோயிலின்கோபுரம் சாய்ந்த நிலையிலுள்ளது.

மூலவர் விமானத்தின் சுதைச்சிற்பங்களுள் நடுப்புறம் முருகன் வள்ளிதெய்வயானையுடன் மயில் வாகன பீதமர்ந்த சிறிய சிற்பம் பொலிவுடன் திகழ்கிறது. அதன் கீழே கரபுரீசுவரர் சுதைச் சிற்பம் உள்ளது.

பார்த்திவேந்திராதிவர்மன் கல்வெட்டு (கி.பி. 957-970) சுந்தர சோழன் என்னும் இரண்டாம் பராந்தகச் சோழனின் படைத்தலைவனாம் பார்த்திவேந்திராதிவர்மன் தொண்டை நாட்டைச் சிற்றரசன் போல் ஆண்டு வந்தபோது அவன் ஆட்சிக்குட்பட்டு ஆட்சிபீடம் அமர்ந்த 3-ஆம் ஆண்டு 39-ஆம் நாளில் ஏற்பட்ட கல்வெட்டு கருவறை வடக்குச் சுற்றுச்சுவரில் உள்ளது. கிரந்த எழுத்தில் 17 வரிகள் காணப்படுகின்றன. அவனி நாராயண சதுர்வேதிமங்கலம் - இன்றைய காவேரிப் பாக்கம் ஊர்ச்சபையிடம் அருச்சகர் முறையிட்ட செய்தி. திருக்கோயிலுக்கு 1400 குழி நிலம் உரிமையாக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது. நில வருவாயில் நாட்பூசைக்கு இருநாழி அரிசி திருவமுதுக்கும் 3 வேளைகள் ஒரு விளக்கு எரிக்கவும் நிபந்தமிட்டதைக் குறிக்கிறது.

இக்கோயில் குருக்கள் நடைமுறைஅறங்காவலராக ஒரு வேளைப் பூசை செய்துவருகிறார். மாலையில் தீபமிடுதல் நடைபெறுகிறது. இக்கோயிலில் விழாக்கள் நடைபெற்று 60 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. முற்றிலும் திருப்பணி நடைபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கு 2 ஏக்கர் தரிசு நிலங்களும் சிறு தோப்பும் உள்ளன. இவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் கோயில் பூசை வழிபாட்டிற்குப் போதுமானதாக இல்லை.

கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது. வெளிச்சுற்றில் பிறர் ஆக்கிரமிப்பு காரணமாக வலம் வரமுடியாத நிலை உள்ளது. மூலவர் விமானம் இடி விழுந்ததால், இறங்கிவிட்டநிலையில் இடப்புறம் சற்றே சாய்வாக உள்ளது.

## திருப்பாற்கடல்

# பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்

இக்கோயில் வடஆற்காடு மாவட்டம், வாலாசாவட்டத்தில் காவேரிப்பாக்கம் என்னும் ஊரையடுத்துள்ள திருப்பாற்கடல் கிராமத்தில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இந்த ஊருக்குத் தெற்கே 1 கிலோமீட்டர்த் தொலைவில் பாலாறு ஓடுகிறது. இக்கோயில் அமைந்த இடத்தைச் சுற்றி முன்பு தோப்பும் துரவும் இருந்தனவாம்.

இத்திருக்கோயில் தொடக்கத்தில் சிவன் கோயிலாக இருந்தது. முன்பொரு காலத்தில் 107 தலங்களில் வழிபாடாற்றிய பின்னர்ப் புண்டரீகமாமுனிவர் இத்தலத்திற்கு வந்து இங்குள்ள புனிதப் புட்கரணியில் நீராடி திருமால் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளார் எனக் கருதிக் கோயிலுக்கு வந்தார். உள்ளே சென்ற பின்னரே இது சிவன் கோயில் என்பது அவருக்குத் தெரியவந்தது. இங்கு வழிபாடாற்றுவது பொருத்தம் அற்றது என்று முடிவு செய்து அருகிலுள்ள கடிகாசலம் என்கிற சோழசிம்மபுரத்திற்குச் (சோழிங்கபுரம்) சென்று நரசிங்கப் பெருமாளை வழிபடலாம் எனப் புறப்பட்டார். அப்போது பதினாறாண்டு நிரம்பிய இளைஞன் ஒருவன் அம் மாமுனிவரைத் தொடர்ந்து வந்தான். அன்னவன் அவரை நோக்கி ஐயன்மீர் இந்தத் தலத்தில் திருமால் வீற்றிருக்கிறார். நீங்கள் திரும்பி வந்து பாருங்கள் என எடுத்துச் சொல்லியும் அவர் திரும்பி வரமறுத்தார். இதற்குள் ஊர் மக்கள் திரண்டனர். அம்மக்களை அவன் அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றான் அப்போது கோயிலில் திருமால் காட்சியளித்தார். பெருமாள் கோயிலாக அவர்கள் கண்டதை அம்முனிவரிடம் எடுத்துரைத்து அம்முனிவரை மீண்டும் அழைத்தார்கள். இவ்வேண்டுகோளுக்கு அம்முனிவர் இசைந்து, ஊர் மக்களுடன் கோயிலுக்குச் சென்றார். அனைவருக்கும் முன்னர்அந்த இளைஞன் சென்று கோயிலிலிருந்த சிவலிங்க ஆவுடையார் மீது ஏறிநின்று திருமாலாகக் காட்சியளித்தான். அதற்குப் பின்னர் இக்கோயில் மிகுந்த சிறப்பெய்தியது. கீழே ஆவுடையாராகவும் நடுப்பகுதி திருமாலாகவும் அம் மாமுனிவருக்குக் காட்சி அளித்ததால், அன்று முதல் (திருமால் பிரசன்னமாகிய காரணத்தினால்) இக்கோயில் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் என்னும் பெயரில் விளங்கிவருகிறது.

இக்கோயிலுக்கு நுழைவாயில் கிழக்கிலுள்ளது. நுழைவாயிலின் உட்புறம் தெற்கில் ஆஞ்சநேயர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இச்சந்நிதிக்கு நேரொத்தவாறு வடபுறத்தில் வேதாந்ததேசிகர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. அடுத்துச் சற்று

மேற்கில் பலிபீடம், கொடிமரம், கருடாழ்வார் சந்நிதி ஆகியவை உள்ளன. பிரகாரத்தின் தென்மேற்கில் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கின்றது. தாயார் திருவுருவம் ஒரு மீட்டர் உயரமுள்ளது. இதற்கு நேரொத்தவாறு வடமேற்குக் கோடியில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. வடக்கில் சண்முகர் சந்நிதியும் அச்சந்நிதியை அடுத்துக் கிழக்கில் திருக்கச்சி நம்பி சந்நிதியும் உள்ளன.

கருவறையில் வெங்கடேசப் பெருமாள் ஒரு மீட்டர் உயரத்தில் உள்ளார்.

இக்கோயிலில் ஒரே பிரகாரம் உள்ளது. இக்கோயிலில் 12 கல்தூண்கள் உள்ளன.

இக்கோயிலின் இடிந்த மண்டபத்தின் அருகில் கிடக்கும் ஒரு கல்லில் காணப்படும் சோழ மன்னன் வீரராசேந்திரன் கல்வெட்டு துண்டாகவுள்ளது.[1]

இக்கோயிலின் கிழக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு,[2] இசையனார் வேங்கடாசாரியர் தானிகர் என்பதைக் குறிக்கிறது.[2]

இக்கோயிலின் வெளிமண்டபத்தூணிலுள்ள கல்வெட்டு வீரப்பன் என்பவனின் பக்தியைக் குறிப்பிடுகிறது.[3]

வேளாளர் தெருவில் உள்ள விசயநகர கிருஷ்ணதேவராயர் சகம் 143(3) தாது ஆண்டு மகரம் வெள்ளிக்கிழமை நாள் கல்வெட்டு, திருப்பாற்கடல் கிராமம், காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் திருமஞ்சனம், விளக்கு ஏற்றுதல் ஆகியவற்றிற்கு மன்னரால் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[4]

இக்கோயிலில் இரு காலப்பூசை நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசி, மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இக்கோயிலுக்கு 1.03 ஏக்கர்ப் புன்செய் நிலமும் 1.31 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 6,836 உருபாயாகும்.

---

(1. 233/1955-56; 2. 234/1955-56; 3. 235/1955-56; 4. 236/1955-56.)

## திருமலை சமுத்திரம்

# கோதண்டராமர் வீர ஆஞ்சநேயர் கோயில்

ஆரணி நகர் இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகில் நாற்புறங்களிலும் மதிற்சுவர்களுடன் 24. 39 மீட்டர் நீளமும் 12. 19 மீட்டர் அகலமும் கொண்ட 297 சதுரமீட்டர்ப் பரப்பில் இக்கோயில் இருக்கின்றது. இக்கோயிலின் மதிற்சுவருக்கு வடக்குப்பக்கத்தில் கோயில் நந்தவனம் 1 ஏக்கர்ப் பரப்பளவில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலின் மூலமூர்த்தியான கோதண்டராமர், சீதாப்பிராட்டியார், இலக்குவனர், வீர ஆஞ்சநேயர் ஆகியோருடன் வீற்றிருக்கிறார். இக்கோயில் துர்கா பிரசாத் என்ற ஞானியால் கட்டப்பட்டது என்பதாகச் சொல்லப்படுகிறது.

இக்கோயில் இராசகோபுரம் மேற்கு நோக்கி உள்ளது. மகாமண்டபத்தில் கருடாழ்வார் கோதண்டராமரை நோக்கி வீற்றிருக்கிறார். மகாமண்டபத்திலிருந்து உள்மண்டபத்திற்கு நுழையும் வாயிற்படிக்குப் பக்கத்தில் இருமருங்கும் துவார பாலகர்கள் உள்ளனர். மகாமண்டபத்தின் தெற்குப் பகுதியில் ஒரு பஜனை மண்டபம் உள்ளது. இது பழைய திருக்கோயிலின் பூசை அறையிலிருந்து வந்துள்ளது. உள்மண்டபத்தில் விலை மதிப்பற்ற தங்கம் வெள்ளி நகைகள் இரும்புப் பெட்டியில் இரட்டைச் சாவிப் பொறுப்பில் உள்ளன. உள்மண்டபத்தை அடுத்து மூலத்தானத்தில் கோதண்டராமர், சீதாப்பிராட்டியார், இலக்குவனர் ஆகியோர் வீர ஆஞ்சநேயருடன் வீற்றிருந்து அருள்புரிகின்றனர்.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் தெற்குப் பகுதியில் கோயில் திருக்கிணறு அமைந்துள்ளது. பூசைக்குரிய தீர்த்தம் இக்கிணற்றிலிருந்து எடுக்கப்படுகிறது.

இக்கோயிலுக்கு மேற்குப்புறத்தில் இராசகோபுரம் 65 மீட்டர் உயரம் உள்ளது.

மூலத்தானக் கோதண்டராமர், வீர ஆஞ்சநேயர் ஆகியோர் சந்நிதிகளின் மீது அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய விமானங்கள் உள்ளன.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் வாகனமண்டபம் உள்ளது. பக்கத்தில் மடைப்பள்ளி, யாகசாலை ஆகியவை அமைந்துள்ளன.

இக்கோயிலில் காலை, மாலை ஆகிய இருவேளைகளில் இருகாலப்பூசை வைகானச ஆகமமுறையில் பட்டாச்சாரியரால் நடத்தப்படுகிறது. இராமநவமி உற்சவம், தனுர்மாதப்பூசை, கருடசேவை, கிருஷ்ண ஜெயந்தி, புனர்வசு

திருநட்சத்திரம் போன்ற பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

இக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிருவாக அலுவலரின் பொறுப்பில் இருந்துவருகிறது. இக்கோயிலுக்கு ஐந்து வீடுகளும் ஏழு கடைகளும் 8 மனைப்பகுதிகளும் 5. 05 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்களும் உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் 30,000 உருபாயாகும்.

## திருமலை சமுத்திரம்

## சீனிவாசப்பெருமாள் கோயில்

இக்கோயில் ஆரணி சாலை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 9 கிலோமீட்டர்த் தொலைவில் 2 1/2 ஏக்கர்ப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு மதில்களுடன் இருக்கிறது.

இக்கிராமத்திலுள்ள ஏரி, சமுத்திரம் போன்று பெரிய அளவு நீர்ப் பரப்பினைக் கொண்டுள்ளதால், இவ்வூர்த் திருமலை சமுத்திரம் என்னும் பெயரில் இருந்துவருகிறது.

கோயிலின் மூர்த்தங்கள் கிழக்கு நோக்கியவாறு அமைந்திருக்கின்றன. கோயிலுள் இடமிருந்து வலம் வருவோமெனில், கோயில் மூலவர் சந்நிதிக்கு எதிரில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றைக் காணலாம். இவற்றை அடுத்துக் கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியவாறு இருக்கின்றது. சீனிவாசப்பெருமாள் சந்நிதியின் வாயிலில் துவாரபாலகர்கள் நின்ற கோலத்தில் காணப்பெறுகிறார்கள். சீனிவாசப்பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோர்களுடன் கிழக்கு நோக்கிச் சேவை சாதிக்கிறார். ஆஞ்சநேயர் திருவுருவமும் கிழக்கு நோக்கிய நிலையில் உள்ளது. சீனிவாசப் பெருமாள் சந்நிதிக்கு வலப்புறத்தில் அலர்மேல் மங்கைத் தாயார் சந்நிதி இருக்கின்றது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம் 20 மீட்டர் உயரத்துடன் ஐந்து நிலைகளையும் ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. பெருமாள் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் விமானங்கள் நன்னிலையில் உள்ளன. கோபுரத்தில் சுதைச் சிற்பங்கள் இருக்கின்றன.

வைகானச ஆகமமுறையில் ஒரு காலப்பூசை நடைபெற்றுவருகிறது. புரட்டாசி

மாதத்தில் 10 நாள்கள் பிரமோற்சவமும் வைகாசி விசாகத்தில் கருடசேவையும் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆவணி மாதத்தில் கிருஷ்ண ஜெயந்தியின்போது உரியடி உற்சவம் நடைபெறுகிறது. இக்கோயிலில் திருமணங்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் கீழ் இக்கோயில் இயங்கி வருகிறது. இக்கோயிலுக்கு 1.32 ஏக்கர் நன்செய் நிலமும் 11.54 ஏக்கர் மனை இடங்களும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,300 உருபாயாகும்.

அன்னம், சிங்கம், அனுமன், நாகம், கருடன், யானை, குதிரை ஆகியவற்றின் வாகனங்கள் உள்ளன. சூரிய பிரபையும் தேரும் இங்குள்ளன.

## திருமலை சமுத்திரம்

# வேதபுரீசுவரர் கோயில்

இக்கோயில் ஆரணி சாலை இருப்புப்பாதை நிலையத்திற்கு 9 கிலோமீட்டர்த் தொலைவில், 7 செண்ட் நிலப்பரப்பில் கிழக்குநோக்கியவாறு அமைந்திருக்கின்றது.

இவ்வூரில் அமைந்துள்ள ஏரி, காண்பதற்குச் சமுத்திரம் போன்று காட்சி அளித்து வருவதால், இவ்வூருக்குத் திருமலை சமுத்திரம் என்னும் பெயர் வழங்கிவருகிறது. இப்பகுதியில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி சுயம்பு லிங்கமாக இருந்தார். இறைவன் வேதபுரீசுவரர் என்னும் பெயரிலும், அம்பாள் பாலகுஜாம்பாள் என்னும் பெயரிலும் விளங்குகின்றனர்.

ஆரணி வட்டத்தை ஆண்டு வந்த ஜாகீர்தார்கள் காலத்தில் கன்னட சைனீகர் சமுதாயத்தினரால் இக்கோயில் நிறுவப்பட்டது.

இத்தலத்தில் மந்தாரை மரம் தலவிருட்சம் எனக் கூறப்படுகிறது.

கோயிலின் மதிலுக்கும் கட்டடப் பகுதிக்கும் இடையே ஏழு மீட்டர் அகலமுடைய பிரகாரம் அமைந்துள்ளது. விநாயகர், வள்ளி, தெய்வயானையுடன் முருகப்பெருமான், சுவாமி அம்பாள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

இங்குத் தீர்த்தக்கிணறு உள்ளது.- சுவாமி, அம்பாள் ஆகியோர் சந்நிதிகளுக்கு விமானங்கள் உள்ளன.

நாள்தோறும் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. ஆனித்திருமஞ்சனம்

கார்த்திகை தீபம், ஆருத்திரா, பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி ஆகியவை கொண்டாடப்பெருகின்றன. பௌர்ணமிதோறும் அம்பிகைக்கு லலிதா சகஸ்ரநாம அருச்சனை நடைபெற்றுவருகிறது. இங்குத் திருமணங்கள் பல நடைபெற்று வருகின்றன.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவருகிறது. இக்கோயிலுக்கு 3.72 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது.

தமிழ் இணையப் பல்கலைக்கழக நூலகம்
வ.எண்: 856
நாள்: 17.5.12

## திருமால்பாடி

# அரங்கநாதசுவாமி கோயில்

போளூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 31 கிலோமீட்டர்த் தொலைவிலிருந்து வந்தவாசி வட்டம் அருந்தோடு கிராமத்தை அடுத்துள்ள திருமால் பாடியில் சிறிய குன்றின் மீது அரங்கநாதர் கோயில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

திருமால் இங்குப் பள்ளி கொண்டிருப்பதால், இவ்வூருக்குத் திருமால்பாடி என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கோயிலின் தெற்கு நோக்கிய நுழைவாயிலை அடுத்துப் பலிபீடமும் ஆஞ்சநேயர் சந்நிதியும் கருடாழ்வார் சந்நிதியும் உள்ளன. கருவறையின் வாயிலில் துவார பாலகர்திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ளார். இடப்புறத்தில் தாயார் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இவ்வாறு ஆண்டாள் சந்நிதியும் உள்ளது.

தெற்கு நோக்கியவாறு ஐந்து நிலைகளைக் கொண்ட கோபுரம் இருக்கின்றது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை வைகானச ஆகமமுறையில் நடைபெறுகிறது. சித்திரைப் பௌர்ணமி, கிருஷ்ண செயந்தி, வைகுண்ட ஏகாதசி, பொங்கல், பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர் மூவரிடம் உள்ளது. இக்கோயிலுக்கு 6.97 ஏக்கர் நன்செய் நிலமும் 17.75 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

இக்கோயிலில் கருடர், ஆஞ்சநேயர், குதிரை வாகனம் ஆகிய வாகனங்கள் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3,500 உருபாயாகும்.

## திருமாற்பேறு

# மணிகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் அரக்கோணம் - செங்கற்பட்டு இருப்புப்பாதை வழியில் அரக்கோணத்திலிருந்து 6 கிலோமீட்டர் மேற்கிலுள்ள திருமாற்பூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர் தென்கிழக்கிலுள்ள திருமாற்பேறு என்னும் பெயரில் விளங்கும் ஊரின் மையத்தில் ஓர் ஏக்கர் 20 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

திருமால் இங்குச் சிவபெருமானை வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனாக அப்பெருமானிடமிருந்து நற்பேறு பெற்றதால் இத்தலத்திற்குத் திருமாற்பேறு என்னும் பெயர் சூட்டப்பெற்றது.

முன்பு ஒரு காலத்தில் ததீசி முனிவருக்கும் மன்னன் சுபனுக்கும் இடையே ஒரு வாக்குவாதம் நிகழ்ந்தது. இது முற்றி இறுதியில் ஒருவரை மற்றவர் தாக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்தது. சுபமன்னனைக் காப்பாற்றத் திருமால் தம் சக்கராயுதத்தைத் ததீசி முனிவர் மீது எறிந்தார். ததீசி உடல் வச்சிர யாக்கையாக இருந்ததால், அத்தகைய யாக்கையில் பட்ட திருமாலின் சக்கரம் சுடர் மழுங்கிற்று. சுடர் மழுங்கிய அச்சக்கரத்தைத் தொடர்ந்து பயன்படுத்த விரும்பாத திருமால், ஆற்றல் மிக்க சக்கரத்தைப் பெற நாட்டங் கொண்டார். சிவபெருமான் சலந்தரனைக் கொல்லப் பயன்படுத்திய சக்கரத்தைச் சிவபெருமானிடம் பெறுதற்காகச் சிவபெருமானுக்கு இங்கு ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு வழிபாடாற்ற முற்பட்டார். திருமாலின் அன்பினை உலகிற்குக் காட்டுவதற்காக ஆயிரம் மலர்களுள் இறுதியாக அமைந்த மலர் மறையுமாறு சிவபெருமான்செய்தனர். எவ்வாறாயினும் இவ்வழிபாட்டை நிறைவுசெய்வேன் என்று எண்ணி யாதொரு தயக்கமின்றித் தம்முடைய திருவிழிகளில் ஒன்றைத் தம்கையால் பறித்து அதனைத் தாமரை மலராகக் கொண்டு அருச்சனை புரிந்து வழிபாட்டை நிறைவாக்கினார். இதற்குகந்த சிவபெருமான் 'இழந்த நும் கண்ணுக்கு ஒத்ததும் பதும (தாமரை) மலரைப் போன்றதுமான கண்ணை இப்போது நுமக்குத் தந்தோம். இனி நுமக்கு இதன்காரணமாகப் பதுமாட்சன் என்னும் பெயர் விளங்குக"



மணிகண்டீசுவரர் ஆலயம்
திருமால்பூர் (திருமால் பேறு)

என அருளித் தமது சக்கராயுதத்தையும் அவருக்கு அளித்தார். அச்சக்கராயுதத்தைப் பெற்றுக் கொண்ட திருமால் இருவரங்களைச் சிவபெருமானிடம் கோரினார்.

அவற்றில் ஒன்று எவரொருவர் இக்கோயிலில் வழிபாடு ஆற்றுகிறாரோ அவருக்கு இம்மை மறுமைப் பயன்கள் அனைத்தையும் சிவபெருமான் அளிக்கவேண்டும் என்பதாகும். மற்றது அத்தலம் அன்று முதல் தம்மை நினைவுகூரும் வகையில், "திருமாற்பேறு" என்னும் பெயரில் விளங்கவேண்டும் என்பதாகும். இவ்விரு வரங்களையும் சிவபெருமான் மனமுவந்து அருளினார்.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வ மரமாகும். இம்மரம் வடக்கு வெளிப்பிரகாரத்தில் வடகிழக்கில் இருக்கின்றது.

இக்கோயிலின் கோபுர வாயிலில் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில் பலிபீடத்தையும் கொடிமரத்தையும் காணலாம். கொடிமரத்தை அடுத்து 1 மீட்டர் உயரமுள்ள நந்திதேவர் திருவுருவம் உயர்ந்த மேடைமீது மேற்கு நோக்கி இருக்கின்றது. நந்திதேவர் சந்நிதிக்குச் சற்று மேற்கில், இரண்டாம் வாயிலைக் கடந்து உட்பிரகாரத்தை அடையலாம். உட்பிரகாரத்தின் மேற்கில் முதலில் சோமாசுகந்தர் உற்சவத் திருமேனியைக் காண்கிறோம். இச்சந்நிதியை அடுத்து விநாயகர் சந்நிதி, சிதம்பரேசுவரர் சந்நிதி, இவற்றை யடுத்துச் சுப்பிரமணியர் சந்நிதி ஆகியவை அனைத்தும் கிழக்கு நோக்கியுள்ளன.

கருவறைக் கோட்டத்தில் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. துர்க்கை திருவுருவத்திற்குச் சற்று எதிரில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு முகமாக உள்ளது உட்பிரகாரவாயிலில் கருவறையிலுள்ள சண்டேசுவரர் சந்நிதிக்கு நேரெதிரில் திருமால் தம்முடைய பின் கைகள் இரண்டினுள் ஒன்றில் சங்கும், மற்றொன்றில் சக்கரமும் ஏந்தி முன்னிரு கைகளையும் தம் மார்பு வரையில் உயர்த்திக் கூப்பி மணிகண்டேசுவரரை வணங்கிக் கொண்டு நிற்கும் கோலத்தில் உள்ளார். அந்நிலையில், மணிகண்டேசுவரருக்கு அவர் அருச்சனை புரியத் தம்முடைய உள்ளங்கையில் தாமரை மலரை ஏந்தியுள்ளார். திருமால் திருவுருவத்திற்கு முன் சிறிய வடிவிலான நந்திதேவரின் திருவுருவம் மணிகண்டேசுவரரை நோக்கியவாறுள்ளது.

கருவறையில் மணிகண்டேசுவரர் சுயம்புலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். இவருக்கு வளை (கவசம்) சாத்தப் பெற்றுத் திருமுழுக்கு நடைபெறுகிறது. இக்கோயிலின் வடகிழக்கு முனையில் அஞ்சனாட்சி அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதிக்கு எதிரில் தெற்கில் சிம்மத்தின் உருவம் உள்ளது.

இக்கோயிலுக்கு வெளியே சக்கரத் தீர்த்தம் உள்ளது. முற்காலத்தில் இதில் நீர் நிறைந்திருந்தது. இங்கு வழிபட வந்தவர்கள் இதில் நீராடி நலம் பெற்று வந்தனர்

ஆனால், இப்போது இதில் நீர் இல்லை.

வடக்கு வெளிப்பிரகாரத்தில் தலவிருட்சத்திற்கு மேற்கில் தீர்த்தக்கிணறு ஒன்று இருக்கின்றது.

இக்கோயிலின் கிழக்குப் பகுதியில் கோபுரம் நன்னிலைமையில் இருக்கின்றது. இக்கோபுரத்தின் உயரம் 21 மீட்டராகும்.

இக்கோயிலின் கொடிமரத்தையடுத்து வெளிமண்டபமும் சுவாமி சந்நிதி முன் உள்மண்டபமும் உள்ளன. தெற்கு வெளிப் பிரகாரத்தில் தென்கிழக்குக் கோடியில் மடைப்பள்ளியும் மடைப்பள்ளிக்கு மேற்கில் அலங்கார மண்டபமும் உள்ளன. அம்மன் சந்நிதியின் முன் சிறுவெளிமண்டபமும் சிறுஉள்மண்டபமும் உள்ளன.

சிவபெருமானை வணங்கும் திருமால் வணங்கப்பெறும் சிவபெருமான் ஆகிய இவ்விருவரையும் ஒரே சமயத்தில் நினைவுகூரும் முறையில் திருமாலுக்கு "மால் வணங்கீசர்" என்னும் பெயர் அழகிய முறையில் அமைந்துள்ளது. அம்மையின் மற்றப்பெயர் கருணைநாயகி என்பதாகும். நந்திதேவர் நிற்கும் நிலையில் உள்ளார்.

இக்கோயிலைப் பற்றி கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களும் திருநாவுக்கரசர் நான்கு பதிகங்களும் அருளியுள்ளார்கள். இத்தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்தர் அருளிய பாடலில் "மன்னி மாலோடு சோமன் பணி செய்யும்" என்று பாடியுள்ளதால், சந்திரனும் சிவபெருமானை இங்கு வழிபட்டான் எனக் கொள்ளலாம். இங்குள்ள இறைவனை வணங்கினால் பாவம் கெடும்; வினை நீங்கும் என்னும் கருத்தினைத் திருஞானசம்பந்தர் 'மால் பேற்று அடிகளைப் பரவிடக் கெடும் பாவமே' எனவும் "மால் பேற்று அடிகளைப் பரவுவார் வினை மாறுமே" என்றும் தெரிவித்துள்ளார். இத்தலத்து இறைவரின் திருவடிகள் தொண்டர்களால் போற்றப்படும் தன்மையின என்றும், அன்பு செலுத்தினால் குருடர்களுக்குக் கோல் போல் முன்வந்து அவை வழிகாட்டுவன என்றும் திருநாவுக்கரசு நாயனார் தாம் அருளிய பதிகங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்விருவரும் அருளிய பதிகங்கள் இக்கோயிலின் வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன. சைவ சமயத்தின் சிறப்பை இக்கோயில் எடுத்துக்காட்டி வருகிறது. கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த சிவஞானமுனிவர் தாம் இயற்றிய காஞ்சிப்புராணத்தில் இக்கோயிலில் திருமால் வழிபட்டதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இக்கோயிலில் நான்கு காலப்பூசை நடைபெற்றுவருகிறது. நவராத்திரி கந்தர் சஷ்டி, ஆகிய விழாக்களும் பிரமோற்சவமும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலின் பொன்னாலாகிய உருத்திராட்ச மாலையும் அம்பாள் பொன் காசுமாலையும் அரிய நகைகளாகும். இக்கோயிலுக்கு 6.35 ஏக்கர் நன்செய் நிலமும்

21. 95 ஏக்கர் புன்செய் நிலமும் 10. 15 ஏக்கர் தோட்டமும் உள்ளன.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 17,000 உருபாயாகும்.

இக்கோயிலின் மையச்சந்நிதியின் தெற்குச் சுவரிலுள்ள ஸ்ரீமும்மடிச் சோழதேவர் என்கிற சோழமன்னர் இராசகேசரிவர்மன் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பொன் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. (இங்குக் குறிப்பிடப்பெற்ற மன்னர் முதலாம் இராசராசன் (கி.பி. 987-1013) இவர் தமது மூன்றாம் ஆட்சியாண்டாகிய கி. பி. 988-இல் மும்முடிச்சோழன் என்னும் பட்டப்பெயர் பெற்றார்).[1]

இதே சுவரிலுள்ள வீரபாண்டியன் தலையை வீழ்த்திய பார்த்திப வேந்திரவர்மன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நந்திவர்ம காடு பட்டிகள் மகள் விசயவை மகாதேவியாரால் இரண்டு[2] விளக்குகள் வைக்கப்பட நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

அதே சுவரிலுள்ள பார்த்திபவேந்திரவர்மன் மூன்றாம் ஆண்டுக் (தமிழிலும் கிரந்தத்திலும்) கல்வெட்டு பரமண்டலாதித்தியன் என்கிற விராடமன்னன் அனையமரன்[3] கோயில் கட்டியதையும் தாழ்வாரத்தை உள்ளடக்கிக் கட்டியதையும் கூறுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிமன்னர்(கி.பி. 903-1013) 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மதுராந்தக சோழன் மகனாகிய[4] மதுராந்தகன் கண்டராதித்தன் அளித்த நன்கொடையைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசன் 1 காலத்துக் கல்வெட்டு[5] விளக்கு வைக்கப்படுவதற்காக நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்தக் கல்வெட்டின் ஆண்டு அறியமுடியவில்லை.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் குலோத்துங்கச் சோழதேவர் 27-ஆம்[6] ஆண்டுக் கல்வெட்டு நிலக்கொடை ஒன்று வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழதேவர் 1 என்கிற இராசகேசரிவர்மன் 46-ஆம் ஆண்டு தாமக் கோட்டத்து வளநாட்டிலுள்ள திருமாற்பேறுடையார் கோயிலில்[7] 10 விளக்குகள் வைக்கப் பணக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி விக்கிரமசோழதேவர் (கி.பி. 1118-35) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில விற்பனை செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இஃது ஆளுடையார், திருமாற்பேறுடையார்,

உத்தம சோழீசுவரம் உடையார், அவிமுக்தீசுவரமுடையார் கோயில்களைக் குறிப்பிடுகிறது.[8]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரராசேந்திர சோழதேவர் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[9] விளக்கு வைப்பதற்காக 32 செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழதேவர் (1) என்கிற சோழமன்னர் இராசகேசரிவர்மன் 38-ஆவது ஆண்டுக் கல்வெட்டு[10] விளக்கு வைப்பதற்காக 30 பசுக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதிராசதேவர் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இரண்டு விளக்குகள் வைப்பதற்காகவும் நகைகளுக்காகவும்[11] 64 பசுக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர்[12] திரிபுவனச் சக்கரவர்த்தி 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டு முடிவடையாமல் உள்ளது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் திரிபுவன வீரதேவர் (குலோத்துங்கன் 3) கல்வெட்டு சேதிராயன் என்பவரால் நிறுவப்பட்ட உத்தம[13] சோழீசுவரமுடையார் திருவுருவத்திற்கு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச் சாலையில் கலம் அறுத்த சோழமன்னர் இராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு வைப்பதற்காக 90 செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.[14]

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச் சாலையில் கலம் அறுத்த சோழமன்னர் இராசகேசரிவர்மன்[15] (கி.பி.985-1013) காலத்துக் கல்வெட்டு மிகவும் சேதமடைந்துள்ளது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்த நிலையில் உள்ளது. இஃது இறைவனுக்கு ஒவ்வொரு மாதமும் 108 குடங்களில் நீராட்ட மதுராந்தகன் மகன் (கண்டராதித்தராகிய) மதுராந்தக கண்டராதித்தனால்[16] (கி.பி.970-85) உதவி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச் சாலையில் கலம் அறுத்த சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பிரிதிவி[17] மகாதேவி சதுர்வேதி மங்கலம் சபையார் செய்த உடன்படிக்கையைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச்சாலை கலமறுத்த சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பழுகூர் மக்கள் மனையூர்க் கோட்டத்தின் உட்பிரிவாகிய பழுகூர் நாட்டில் ஆண்டுதோறும் 225 காடிகள் அல்லது 60 கழஞ்சு நிலங்கள் அளிக்க உடன்படிக்கை செய்து கொண்டதையும் மதுராந்தகன் கண்டராதித்தர் தம் நான்காம் ஆட்சி ஆண்டில் கம்பண்டசாலைப் பொறுப்பிலிருந்தவர்களுக்குத் தண்டம் விதித்ததையும் கூறுகிறது.[18]

இதே சுவரிலுள்ள மும்முடிச் சோழதேவர் (கி.பி.985-1013) என்கிற சோழ மன்னர் இராசகேசரிவர்மன் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திருமாற்பேறு அக்னீசுவரர் கோயில் நிலங்கள் கையாடப்பட்டுக் கோயில் படைப்பு இரண்டு நாழி அரிசியாகக் குறைக்கப்பட்டதால், இதைப்பற்றி[19] விசாரணை செய்ய ஐவர் அடங்கிய குழு நியமனம் செய்யப்பட்டதைக் கூறுகிறது.

இதே சுவரிலுள்ள "காந்தலூர்ச் சாலைக் கலம் அறுத்த" சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி. 985-1013) 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஆதிசுந்தரதேவ தேவியர் என்கிற உமாபட்டராக்கியர் திருவுருவத்தை நிலைநாட்டியதைக் குறிப்பிட்டு அதற்கு ஒரு நிலம் (500 குழிகள்) அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.[20]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு மதுராந்தகத் கண்டராதித்தன் ஒரு விளக்கு வைக்கக் கொடை அளித்ததைக் குறிக்கிறது.[21]

இதே சந்நிதி வடக்குச் சுவரிலுள்ள சோழமன்னர் கோநேரின்மை கொண்டான் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சிற்றியாறூர்க் கிராமம் திருமாற்பேறு கோயிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. கோயில் சொத்தினைக் கிராமச்சபை கையாடல் செய்ததாகவும் இதைக் கோயில் அதிகாரிகள், மன்னர் காஞ்சிபுரத்திலிருந்தபோது அவனிடம் முறையிட்டதாகவும் மன்னர் இரு தரப்பினரையும் விசாரணை செய்து பின்னர்ச் சபைக்குத் தண்டம் விதித்ததாகவும் சொத்தினை மீட்டுக்கொடுத்ததாகவும் கூறுகிறது.[22]

இதே சுவரிலுள்ள சக்கரவர்த்தி கோநேரின்மைகொண்டான் என்கிற சோழ மன்னர் இராசகேசரிவர்மன் 41-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள தாமர்நாட்டு நித்த விநோதநல்லூர் கிராமத்தார் ஒரு நிலம் விற்பனை செய்ததைக் குறிக்கிறது.[23]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் (காந்தலூர்ச் சாலை கலமறுத்த) இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மணவில் கோட்டத்து மணவில் நாட்டிலுள்ள மணவில் கிராமத்தார்கள் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது.[24]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் சக்கரவர்த்தி ஸ்ரீகுலோத்துங்கச் சோழமன்னர் என்கிற இராசராசகேசரிவர்மன் 1 20-ஆம் ஆண்டுக்

கல்வெட்டு, சேதமடைந்துள்ளது.[25]

இதே சுவரில் சக்கரவர்த்தி ஸ்ரீராசேந்திர சோழதேவர் என்கிற சோழமன்னர் இராசகேசரிவர்மன் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நிலம் விற்பனை செய்யப்பட்டதைக் குறிக்கிறது. இதனடியில் இம்மன்னன் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் உள்ளது.[26]

இதே சந்நிதியின் வடக்கு, மேற்கு, தெற்குச் சுவர்களில் ஸ்ரீராசேந்திர சோழன் என்கிற சோழமன்னன் பரகேசரிவர்மன் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு புதுப்பாக்கம் சபை செய்த நில விற்பனையைக் குறிக்கிறது.[27]

இதே சந்நிதி வடக்கு, மேற்கு, தெற்குச் சுவர்களிலுள்ள உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்1 (கி.பி.1012-43) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு நில விற்பனையைக் குறிப்பிடுகிறது.[28]

இதே சுவரில் ஸ்ரீராசேந்திரசோழதேவர் 1 என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சோழநாட்டுவாசி ஒருவர் நான்கு கழங்கி "சிதாரி" வழங்கப் பணம் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இது ஜயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள தாமர்க் கோட்டப்பகுதியிலுள்ள வல்ல நாட்டிலுள்ள பரகுலாந்தக சதுர்வேதிமங்கலம் என்கிற புன்னையைக் குறிக்கிறது.[29]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டு மதுராந்தகக் கண்டராதித்தன் ஒரு விளக்கு எரிக்க நன்கொடை வழங்கியதை குறிக்கிறது.[30]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு[31] (கி. பி. 1000) பொன் (15 1/2 கழஞ்சு) நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னன் இராசகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில விற்பனையைக் குறிக்கிறது. இது மதுராந்தகக் கண்டராதித்தன் (முதலாம் இராசராசனாகிய) மும்முடி சோழமன்னன்[32] அதிதியாகிய பஞ்சவன்மாதேவியார் என்கிற சோழமாதேவியையும் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு எரிக்க மதுராந்தகன் கண்டராதித்தன் பொன் (பதினைந்து கழஞ்சு) அளித்ததைக் குறிக்கிறது. தெருக்கூர்[33] குடிகள் ஓர் உழக்கு நெய் வழங்கவேண்டும் 1/8 பொன் தண்டமாகும்.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) கல்வெட்டாகும். இதற்கு மேல் உள்ள மற்றொரு சோழமன்னர் கல்வெட்டுச் சேதம் அடைந்துள்ளது.34

இக்கோயிலின் முதற்பிரகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு உடையார் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர் என்கிற சோழமன்னர் இராசகேசரிவர்மனின் 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு விளக்கு வைக்க நன்கொடை அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[35]

இக்கோயிலின் முதற்பிரகாரத்தின் மேற்குச்சுவரிலும் வடக்குச்சுவரிலுமுள்ள கல்வெட்டு, உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர் என்கிற (I கி.பி.1012-43) சோழமன்னர் பரகேசரிவர்மன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேலூர் நாட்டிலுள்ள சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்கிற கூரம் சபையினரால் நிலம் விற்பனை செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[36]

இதே பிரகாரத்தின் மேற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் மதுரைக்கொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன் 1 கி.பி.905-47) முப்பத்தேழாம் ஆண்டுக் கல்வெட்டு நில விற்பனையைக் குறிக்கிறது.[37]

இதே பிரகாரத்தின் தெற்கு, மேற்கு, வடக்குச் சுவர்களிலுள்ள உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர் (கி.பி.1012-43) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இதன் தேதி காணப்படவில்லை.[38]

இந்தக் கிராமத்திலுள்ள அழிந்துவிட்ட கோயிலின் மையச்சந்நிதியின் கிழக்குச் சுவரில் நுழைவாயிலிலுள்ள மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன் 1) 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு எரிக்க நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[39]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் மதுரைகொண்ட பரகேசரிவர்மன் கல்வெட்டு (பராந்தகன் 1)[40] விளக்கு எரிக்க இளவரசர் பராந்தகன் அளித்த நன்கொடையைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னன் மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன்1) 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[41]

இதே சுவரிலுள்ள மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன் 1) கல்வெட்டு ஒன்று தாமர் கோட்டத்து வல்லநாட்டுக் கோவிந்தப்பாடியிலுள்ள நின்றருளின பெருமாள் கோயிலுக்கு உம்பலநாட்டுக் காணாட்டுப் பல்லவன் மாதேவியார்[42] என்கிற சோழஅரசி அமுதம்பெற்றாள் அளித்த நன்கொடையைக் குறிக்கிறது.

இதே சந்நிதித் தெற்குச் சுவரிலுள்ள பார்த்திபவேந்திரவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு வைதும்ப நாதித்த பிரமாதிராசன் என்கிற நாராயண கிரமாவிட்டன் அளித்த நன்கொடையைக் குறிக்கிறது.[43]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (இராசராசன் 1) 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது.[44]

(கிரந்தத்திலும் தமிழிலும்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (முடிவுபெறாமல் உள்ளது). கோனாட்டுக் கொடும்பாளூர் வீரசோழ இளங்கோ வேலர் புதல்வர் மதுராந்தகம் அச்சப்பிடாரன் பிராமணருக்கு உணவளிக்கப் பொன் நன்கொடையாக வழங்கியதைக் குறிக்கிறது.[45]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் மதுரை கொண்ட இராசகேசரிவர்மன் (கண்டராதித்த சோழனாக இருக்கலாம்) 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு வைக்க நன்கொடை அளித்ததைக் கூறுகிறது. இதில் குறிக்கப்பெற்றவர்கள் பராந்தகன் காலத்தவர் அல்லர்.[46]

இதே சுவரிலுள்ள மதுரைகொண்ட இராசகேசரிவர்மன் (கண்டராதித்தனா?) 17-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு விளக்கு வைப்பதற்காக 96 செம்மறி ஆடுகள் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடப்பெற்றவர்கள் முதல் பராந்தகன் காலத்திற்குரியவர் அல்லர் என்பது தோன்றுகிறது.[47]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன்1) 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சூரிய கிரணத்தின்போது அளிக்கப்பட்ட நன்கொடையைக் குறிப்பிடுகிறது.[48]

இதே சுவரிலுள்ள மதுரையையும் ஈழத்தையும் கொண்ட சோழமன்னர் பரகேசரிவர்மன் நாற்பதாம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. (பராந்தகன் தமது முப்பத்தேழாம் ஆண்டில் ( கி. பி. 942-ஆம் ஆண்டில் ) ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்றான்).[49]

இதே சுவரிலுள்ள மதுரைகொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன் 1) முப்பத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டு பொன் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[50]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கிரந்தத்திலும் தமிழிலும்) விளக்காக நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[51]

இதே சுவரிலுள்ள மதுரையையும் ஈழத்தையும் கொண்ட சோழமன்னன் பராந்தகவர்மன் (பராந்தகன் 1) 41-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு வைக்க மலைய நாட்டு நகரமாகிய கொடுங்கோளூரிலுள்ள நெடியாடளி பூவன்மாறன் செம்மறி ஆடுகளை நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[52]

இதே சுவரிலுள்ள (மதுரை கொண்ட பரகேசரிவர்மன் (பராந்தகன் 1) 37-ஆம்

ஆண்டுக் கல்வெட்டு சோழ அரசி புவனமாதேவியார் விளக்கு வைக்க நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது. வளநாட்டு தாமர்கோட்டத்தின் ஒரு பிரிவாகிய கோவிந்தவாடி நின்றருளின பெருமாள்கோயில் எனக் குறிக்கப்படுகிறது.[53]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவரத்தி ஸ்ரீராசராசசோழன் (ஆண்டு விவரம் குறிக்கப்படவில்லை) முடிவுடையாத கல்வெட்டு விளக்கு எரிக்க நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[54]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது.[55]

இதே சுவரிலுள்ள உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர் 1 (கி.பி.1012-43) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு முடிவடையாமலுள்ளது.[56]

இதே சுவரில் சோழமன்னர் மதுரை பரதேசரிவர்மன் (பராந்தகன்1) கல்வெட்டு உள்ளது. (கி.பி.905-47) ஆண்டு தெரியவில்லை.[57]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் மதுரை கொண்ட பரகேசரிவர்மன் 12-ஆம் ஆண்டுக் ,கல்வெட்டு கோயில் கோவிந்தப்பாடி பெருமானடிகள் கோயில் எனக் குறிக்கப்படுகிறது. வழிபாட்டுக்காக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.[58]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. வழிபாட்டுக்காக நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.[59]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு மணவாளப்பெருமாள் திருவுருவத்தை நிறுவியதையும் இதற்கு வழிபாட்டுக்காக அறக்கட்டளை ஏற்படுத்தியதையும் குறிக்கிறது.[60]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985 -1013) 152-ஆம் நாள் கல்வெட்டு நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இது வைணவ 108 திவ்விய தேசங்களைக் குறிக்கிறது. இது, பாலாற்று வெள்ளம் காரணமாகச் சிற்றாரூர் நிலங்களை வண்டல் மண்கொண்டதாகவும் இதனால் 1000 குழி நிலம் இராசராச விசாகம் என்பவரால் சீர்திருத்தம் செய்யப்பட்டன எனவும் அவை பூசைக்காகக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன என்பதையும் குறிப்பிடுகிறது.[61]

(தமிழ் உரைநடைச் செய்யுள்) இதே சந்நிதியில் மேற்குச்சுவரிலுள்ள பார்த்திபேந்திரன் 12-ஆம் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இஃது அனையாமன் பரமாண்டலாதித்தன் இக்கோயிலில் ஒரு மண்டபம் கட்டியதைக் குறிக்கிறது.[62]

(கிரந்தத்திலும் தமிழிலும்) இதே சுவரிலுள்ள பார்த்திபவேந்திரவர்மன் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு வீராடமன்னன் அனயாமன்[63] (ஆண்டு தெரியவில்லை) விளக்கு வைக்க நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசகேசரிவர்மன் கல்வெட்டு[64] (ஆண்டு தெரியவில்லை ) விளக்கு வைக்க நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டின் தொடக்கம் தெரியவில்லை. நம்மாழ்வாரின் பிரபந்தமாகிய திருவாய்மொழி பாராயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதை இது குறிக்கின்றது.[65]

இதே சந்நிதியின் வடக்குச் சுவரிலுள்ள வீரபாண்டியன் முடிகொண்ட பார்த்திபேந்திரன் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு விளக்கு வைப்பதற்காக வானராச அழகமையன் 96 செம்மறி ஆடுகள் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[66]

இதே சுவரிலுள்ள பார்த்திப வேந்திரன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பிராமணர்களுக்கு உணவளிக்க நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. கோயில் மணவில் கோட்டத்தில் உட்பிரிவாகிய மேலப்பழுசூர்நாட்டு சிற்றியாற்றூரிலுள்ள கோவிந்தபாடி எனக் குறிக்கப்பட்டதைக் கூறுகிறது.[67]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் ராஜகேசரிவர்மன் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது.[68] இது விளக்கு வைப்பதற்காக 96 செம்மறி ஆடுகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் ஸ்ரீராசேந்திர சோழதேவர் என்கிற இராசகேசரிவர்மன் (கி.பி.1018-53) 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கோவிந்தபாடி உய்யகொண்டாழ்வார் கோயிலுக்கு நிலம் விற்பனை செய்ததைக் குறிக்கிறது.[69]

இதே சுவரிலுள்ள கல்வெட்டு தொடக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.[70]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு முடிவடையாமல் உள்ளது.[71]

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச் சாலையில் கலமறுத்த இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு மூவேந்தபிடலூர் வேளார் என்கிற கயிலாக்குடையான் அருநிலை ஸ்ரீகிருஷ்ணன் (பொன்) நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது. கோவிந்தப்பாடி ஆழ்வாரைத் துதிக்கும் வகையில் நன்கொடை அளித்தவர் தந்தை இயற்றிய திருப்பதிகம் திருவிழாவின்போது பாடப்படவேண்டும் என்பது விதிக்கப்பட்டது.[72]

இதே சுவரிலுள்ள உடையார் ஸ்ரீராசாதிராசதேவர் என்கிற சோழமன்னர்

இராசகேசரிமன்னன் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பணம் கடன் கொடுத்ததைக் குறிக்கிறது.[73]

இதே சுவரிலுள்ள காந்தலூர்ச் சாலைக் கலம் அறுத்து சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சோழநாட்டு வாசி ஒருவர் தொண்டைநாட்டுத் திருமால்பாடியில் நிறுவிய அனுமாதேவர் திருவுருவத்திற்கு விளக்கு வைப்பதற்காக 96 செம்மறி ஆடுகள் நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது. (அனுமார் வழிபாடு 10-ஆம் நூற்றாண்டில் நிலவி இருந்தது என்பதைக் காட்டும் இக்கல்வெட்டு சிறப்புடையது என வெங்கையா குறிப்பிடுகிறார்.)[74]

இதே சுவரிலுள்ள மற்றுமொரு கல்வெட்டு பொன் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[75]

இதே சுவரிலுள்ள ஸ்ரீராசேந்திர சோழதேவர் என்கிற பரகேசரிவர்மன் 1 (கி.பி. 1012-43) பொன் நன்கொடையாக வழங்கியதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இதன் அருகே இராசராசன் 1-ஆம் காலத்துக் கல்வெட்டின் துண்டுப்பகுதியும் இங்குக் காணப்படுகிறது.[76]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் கல்வெட்டு (ஆண்டு தெரியவில்லை) விளக்குவைக்க சோழ அரசி 120 செம்மறி ஆடுகளை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[77]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் கல்வெட்டு (ஆண்டு தெரியவில்லை) விளக்கு வைக்க 96 செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.[78]

இதே சந்நிதியின் மேற்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலும் உள்ள சோழமன்னர் இராசராசத்தேவன் என்கிற இராசராசகேசரிவர்மன்[79] (கி.பி.985-1013) கல்வெட்டு நிலம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இச்சுவர்களிலும் உள்ள மதுரையையும் ஈழத்தையும் கொண்ட சோழமன்னர் பரகேசரிவர்மன்[80] (பராந்தகன் 1) 33-ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில விற்பனையைக் குறிப்பிடுகிறது.

இச்சந்நிதியின் வடக்கு, மேற்கு, தெற்குச் சுவர்களில் உள்ள ஸ்ரீராசராசதேவர் என்கிற சோழமன்னர் இராசராசகேசரிவர்மன் (கி.பி.985-1013) 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பாண்டியநாட்டுவாசி[81] ஒருவர் பொன் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இச்சுவர்களிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கு வைப்பதற்காகத் தொண்ணூற்று ஆறு செம்மறி ஆடுகள்

வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.[82]

இச்சுவர்களிலும் சோழமன்னர் பரகேசரிவர்மன் 9-ஆம்[83] ஆண்டுக் கல்வெட்டு பொன் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

---

1. 265/1906; 2. 266/1906; 3. 267/1906; 4. 268/1906; 5. 269/1906; • 6. 270/1906; 7. 271/1906; 8. 272/1906; 9. 273/1906; 10. 274/1906; 11. 275/1906; 12. 276/1906; 13. 277/1906; 14. 278/1906; 15. 279/1906; 16. 280/1906; 17. 281/1906; 18. 282/1906; 19. 283/1906; 20. 284/1906; 21. 285/1906; 22. 286/1906; 23. 287/1906; 24. 288/1906; 25. 289/1906; 26. 290/1906; 27. 291/1906; 28. 291 a /1906; 29. 292/1906; 30. 292 a /1906; 31. 293/1906; 32. 294/1906; 33. 295/1906; 34. 295 a /1906; 35. 296/1906; 36. 297/1906; 37. 298/1906; 38 299/1906; 39. 300/1906; 40. 301/1906; 41. 302/1906; 42. 303/1906; 43. 304/1906; 44. 305/1906; 45. 306/1906; 46 307/1906; 47. 308/1906; 48. 309/1907; 49. 310/1906; 50. 311/1906; 51. 312/1906; 52. 313/1906; 53. 314/1906; 54. 315/1906; 55. 316/1906; 56. 317/1906; 57. 318/1906; 58. 319/1906; 59. 320/1906; 60. 321/1906; 61. 322/1906. 62. 323/1906; 63. 324/1906; 64. 325/1906; 65. 326/1906; 66. 327/1906; 67. 328/1906; 68. 329/1906; 69. 330/1906; 70. 331/1906; 71. 332/1906; 72. 333/1906; 73. 334/1906; 74. 335/1906; 75. 336/1906; 76. 337/1906; 77. 338/1906; 78. 339/1906; 79. 340/1906; 80. 341/1906; 81. 342/1906; 82. 343/1906; 83. 344/1906.

## திருவண்ணாமலை

# அருணாசலேசுவரர் கோயில்

திருவண்ணாமலை நகர், விழுப்புரம்-காட்பாடி இருப்புப்பாதை வழியில் விழுப்புரத்திலிருந்து 67.2 கிலோமீட்டர்த் தொலைவிலும் காட்பாடியிலிருந்து 94 கிலோ மீட்டர்த் தொலைவிலும் உள்ளது. இது தவிர இவ்வூருக்குச் சென்னை, பெங்களூர், சிதம்பரம், சேலம், பாண்டிச்சேரி, வேலூர், காஞ்சிபுரம். திருச்சிராப்பள்ளி, கடலூர் முதலான முக்கியமான நகரங்களிலிருந்து நேரான பேருந்து வழிகளும் உள்ளன. அருணாசலேசுவரர் கோயில், திருவண்ணாமலை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மேற்கே ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் 24 ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

உலகின் மிகச்சிறந்த புனிதமும் புகழும் பெற்றுள்ள சிவத்தலங்கள் சிலவற்றுள் ஒன்றென மதிக்கப்பெறும் தலமாக இது விளங்குகிறது. அண்ணாமலை என்பதோடு திரு என்னும் அடைமொழி சேர்ந்து திருவண்ணாமலை என்னும் திருப்பெயர் உருவாகியுள்ளது. அண்ணாமலை என்பது அண்ணா நாட்டு அண்ணாத்தூரைச் சேர்ந்த மலை என்பதைக் குறிக்கிறது. இம்மலையின் பெயரே காலப்போக்கில் ஊரின் பெயராக மாறிவிட்டது. முன்பு இது தொண்டை நாட்டோடு சேர்ந்திருந்தபோது செங்குன்றக் கோட்டத்துள் அடங்கிய அண்ணாநாட்டு அண்ணாத்தூர் என்னும் பெயரே இவ்வூர்க்கு வழங்கி வந்தது. அண்ணாத்தூரை அடுத்துள்ள ஏரி அண்ணாத்து ஏரி என அழைக்கப்பட்டது.

தொன்மைக்காலத்தில் இம்மலை நாட்டுச் சாசனங்களில் அண்ணாநாடு எனவும் மலைக்குத் திருவண்ணாத்து மலை எனவும் பெயர்கள் வழங்கி வந்தமை தெரியவருகிறது. திருவண்ணாத்து என்பது திருமாலாலும் பிரமதேவராலும் அணுக முடியாதபடி உயர்ந்துள்ளதைக் குறிக்கிறது.

இத்தலத்திற்கு அருணகிரி, அருணாசலம், அனற்கிரி, கௌரிநகரம், ஞானநகர், சிவலோகம், சுத்தநகரம், சோணத்திரி, சோணாசலம், திருவருணை, முத்திபுரி முதலிய பெயர்கள் வழங்கிவருகின்றன. இப்பெயர்கள், அருணாசலம் என்னும் பெயரின் விரிவாக வழங்கிவருகின்றன. அருண அசலம் என்னும் சொற்கள் சேர்ந்து அருணாசலம் என்னும் தொடராக அமைந்துள்ளது. பந்தமற்றது, செம்மையானது, ஒளியை உண்டாக்குவது என்னும் பொருள்களை அருண என்னும் சொல் தருகிறது. அருணன் என்பது சூரியனுக்குரிய பெயர்களில் ஒன்றாகும் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. அசலம் என்பது மலையைக் குறிக்கிறது. சோணாசலம் சோணத்திரி, சுத்த நகரம் என்னும் பெயர்களும் ஏறத்தாழ இப்பொருளையே



அருணாசலேசுவரர் கோயில், திருவண்ணாமலை

கொண்டுள்ளன. அம்பிகை தவம்புரிந்து இடப்பாகம் பெற்றதால் இது கௌரி நகரம் எனவும் வழங்கிவந்தது.

மக்கள் அடையத்தக்க பேறுகளில் தலையாயது முத்திப்பேறு. உள்ளத்து ஒருமை உணர்வுடன் நினைத்த அளவில் முத்தி அளிக்கும் பெருமை உடையது திருவண்ணாமலை.

"சத்திக் கொருபாகம் தான்கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை - எத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வார் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை"

என்னும் திருப்பாடல் இத்தலத்தின் பெருமையை விளக்கும்.

படைத்தற் கடவுளாகிய பிரமதேவரும் காத்தற் கடவுளாகிய திருமாலும் தாம் தாமே பெரியவரென்று அகங்காரங் கொண்டு தம்முட் பிணக்குற்றபோது முழு முதற் பொருளாகிய சிவபெருமான் அவர்கள் முன், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதிப் பிழம்பாகத் தோன்றித் தமது அடியையேனும் முடியையேனும் கண்டு வந்தவரே பெரியவராவார் எனத் திருவாய் மலர்ந்தருளலும் திருமகள் கணவர் வராக வடிவங்கொண்டு ஆழ்ந்து ஆழ்ந்து குடைந்து சென்றும் "பாதாளம் ஏழினும் கீழ்ச் சொற்கழிவு பாதமலர்" காண இயலாது சோர்ந்து திரும்பினார். அன்னத்தின் உருத்தாங்கி ஆகாயத்தே உயர உயரப் பறந்தும் "வேதப் பொருள் முடிவாம் போதார் புனைமுடியை" நண்ணுதற்கியலா நான்முகன் தயங்கி நிற்கையில், ஆங்குற்ற தாழம்பூ ஒன்றினைக் கண்டு அதன்பால் தனது செயற்பாட்டை விளம்பினன்.

கங்கை நீர்மல்கும் தூவெண்கலைமதி பொலியச்சூடிய பெருமான் சடையினின்றும் நழுவிய தான் நாற்பது ஆயிரம் தேவ ஆண்டுகளாகக் கீழ் நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் "பிறையணி முடியைக் காண்டல், பிரமனே! எவர்க்கும் ஆகாது" எனவும் தாழம்பூ கூறக்கேட்ட பிரமதேவர் முதற்பெரும் கடவுளின் முடியைக்காணும் முயற்சிவிடுத்துத் தமக்காகப் பொய்யுரையொன்று புகலவேண்டித் தாழை மலரை இணங்கச்செய்து சிவனிடம் சென்று தாம் சோதி மணிமுடியைக் கண்டதாக உரை செய்தபோது, முற்றுணர்ந்த சிவபெருமான் பொய்யுரை செய்த பிரமதேவருக்குப் பூவுலகினில் கோயில் அமைதல் ஒழிக என்றும் பொய்யுரை பகர்ந்த தாழம்பூ தமக்குப் பூசனைக்கு ஆகாதொழிக என்றும் ஆணையிட்டார். பிரமதேவரும் திருமாலும் தங்கள் அகங்கார இருள் அகலப்பெற்றவராய்த் தன்னிகர் இல்லாத் தனிப்பெருஞ் சோதியரைப் (சிவபெருமானை) பரவிப் பணிய அவர்களின் வழிபாட்டுக்கு இரங்கிய வள்ளற்பெருமானார், சிவலிங்கத் திருவுருக் கொண்டு அமர்ந்தனர் என்ப. இவ்வரலாறே இலிங்கோற்பவத்தின் தோற்றமாகும். இதுவே கிருத யுகத்தில் அக்கினி மலையாகவும் திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும் துவாபர யுகத்தில் பொன்மலையாகவும் கலியுகத்தில் கல் மலையாகவும் மாறிற்று என்பர். மலைகளை நான்கு வகையாகப் பிரித்துப்பேசும் "ஜியாலஜி" என்னும் நில

நூல், இம்மலையை 'நெருப்பினால் வந்த குன்று' எனக் குறிப்பிடுகிறது.

## வழிபாடாற்றி உய்ந்தவர்கள்

**திருமாலும் பிரமதேவரும்:** திருமாலும் பிரமதேவரும் சிவபெருமான் அடிமுடி தேடித் தோல்வியுற்ற பின்னர், சோதியாய்த் தோன்றிய சிவபெருமானிடம் அருள்பெற்றனர்.

## இடப்பாகம் பெற்றமை

காஞ்சியில் தழுவக் குழைந்த இறைவனை வழிபட்ட தேவியார் திருவண்ணாமலை போந்து, கௌதமருடைய ஆசிரமத்தில் தங்கி, ஊசி முனையில் ஒரு காற்பெருவிரலை ஊன்றிக் கடுந்தவம் நோற்று வந்தார். அருணாசலத்தில் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளை வழிபட அம்பிகை பொன்மயமான கோயிலுக்குச் சென்றாள். பிரமதீர்த்தத்தில் மூழ்கித் திருநீறு தரித்துக் கைகளைச் சிரமேல் குவித்துத்தெண்டனிட்டு, கௌதமர் கூறியபடி உள்ளே சுவாமியைக் கண்ணாரக் கண்டு வழிபாடியற்றினார்; பின் பரவசமாய்ப்பாடி, ஆடி, ஆனந்தக் கண்ணீர்ப் பெருகிட வலம் வந்தார்.

அம்பிகை, கார்த்திகை நாளில் ஆகம விதிப்படி திருவிழா நடத்தினார். அவ்வமயம் மலைமீது ஒரு சோதி வடிவில் தோன்றி எம்பெருமான் காட்சியளித்தார். அக்கினி மலையை அக்கினி திசையில் தொழுது, தெற்குத்திசையையும் நிருதி மூலையையும் தாண்டி மேற்றிசை சென்றார். அத்தருணம் சுவாமியின் தரிசனம் பெற்று, அருணாசலேசுவரரது நடனபாதத்தை வணங்கி வழிபட்டார். ஈசான்ய திசையில் பரமசிவன் இடப வாகனத்தில் தோன்றி, 'இடப்பாகத்தில் இருப்பாயாக' என்று கையால் அணைத்துக்கொண்ட போது பூமாரி பொழிந்தது. அப்போது சுவாமியினுடைய அம்சம் வலப்பக்கத்திலும் அம்மனுடைய அம்சம் இடப்பக்கத்திலுமாக இரண்டு தேகமும் ஒரு தேகமாய் அமைந்தது.

## சூரியன்

சிவசொரூபமாய் விளங்கும் சிவமலை திருவண்ணாமலையாகும். ஒரு காலத்தில் சூரியன் அகந்தையால், 'இஃது ஒரு மலைதானே' என்று நினைத்தான். ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட ஒற்றைச் சக்கரத்தேரை இம்மலையுச்சியில் செலுத்தியபோது மலை வெடித்து வெப்பத்தைக் கக்கியது. அதனால் தேரும் பரிகளும் எரிந்து வீழச் சூரியனும் மதிகெட்டு மயங்கி வீழ்ந்தான்; அவன் ஆணவமும் வீழ்ந்தது. பின் பரமனின் திருவருளைப்பெற இம்மலையை வலம் வந்து பூமாரி பொழிந்து வழிபட்டுப் பேறுபெற்றான்.

## சந்திரன்

தவத்தில் சிறந்த தக்கனுக்கு அசுவினி முதலிய இருபத்தேழு பெண்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் சந்திரனுக்கு மணம் முடித்துத் தந்தான் தக்கன். ஆனால் சந்திரனோ, உரோகிணி மீது மட்டுமே அதிக விருப்பம் வைத்து, மற்றவர்களை நேசிக்காமல் வாழ்க்கை நடத்தினான். மற்ற பெண்களின் மனக்கவலையை அறிந்த தக்கன், எல்லையிலாக் கோபம் கொண்டான். "சந்திரனே நீ உன் மனைவியர் எல்லாரிடத்திலும் சரிநிகரான விருப்பைக் காட்டவில்லை. ஒருத்தி மீது மட்டும் விருப்பம் கொண்டிருக்கிறாய். அதனால் உன் உடல் குன்றிப் போவதாக" எனச் சாபமிட்டான். சாபத்தை ஏற்ற சந்திரன் அதனைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு இத்தலம் வந்து சாபம் நீங்கப்பெற்றான்; பெறற்கரிய பேறும் பெற்றான்.

## அட்டவசுக்கள்

ஒரு சமயம் பிரமனது சபையில் அட்ட வசுக்களும் வந்து தற்பெருமை பேசிக் கொண்டனர். அவர்களுக்குப் பாடம்புகட்ட நினைத்த பிரமன், 'நீங்கள் தவமெல்லாம் இழந்து விடுவீர்களாக' எனச் சாபம் இட்டான். இச்சாபம் நீங்க, அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் அட்டவசுக்கள் கங்கைக் கரையில் அமர்ந்தும் பின் திருவண்ணாமலையின் எட்டுத் திக்குகளிலும் திக்குக்கு ஒருவராக அமர்ந்தும் அருமையான தவம் செய்தனர். அப்போது அக்கினி மலை வடிவிலுள்ள சிவபெருமான், எட்டுத் திக்குகளிலும் எட்டுத் திருமுகங்களைக் காட்டி அட்ட வசுக்களுக்கும் காட்சி கொடுத்தருளினார்.

## வச்சிராங்கத பாண்டியன்

இவன் மலைமகளை மகளாகப் பெற்றெடுத்த மலயத்துவசப் பாண்டியன் மரபில், தேவேந்திரனே நரேந்திரனாகப் பிறந்தவன்; முத்தமிழை முறையோடு வளர்த்த மதுரையம்பதியை ஆண்டவன்; இந்திரனைத் தன் வளைகொண்டு வென்ற வெற்றிச் செய்தியை ஐராவதத்தின் முகத்தில் எழுதி வைத்த சிறப்புடையவன். ஒருநாள் இப்பாண்டியன் குதிரை மீதமர்ந்து வேட்டையாடி வந்தபொழுது, ஒரு புனுகுப்பூனையைத் துரத்த நேரிட்டது. அப்பூனையும் திருவண்ணாமலையை வலம் வந்து வீழ்ந்து இறந்தது. பாண்டியன் ஏறி வந்த குதிரையும் உடனே இறந்தது. இரண்டும் இரு வித்தியாதரர்களாகப் புனித தேகம் பெற்றன

கலாதரன், காந்திசாலி என்னும் வித்தியாதரர்களே, துருவாச முனிவரின் சாபத்தால் புனுகுப்பூனையும் குதிரையுமாகப் பிறந்ததையும் அருணாசலத்தை வலம்வந்த நன்மை காரணமாகச் சாப நீக்கம் எய்தியதையும் அவர்கள் கூறத் தெரிந்துகொண்டான் பாண்டியன்.

பின் தன் அரசுரிமையை மகன் இரத்தினாங்கதனிடம் ஒப்படைத்துவிட்டு,

தன்காலினால் நடந்து மலை வலம் வந்து அருணாசலேசுவரருக்கு வழிபாடாற்றித் திருப்பணிகள் பல புரிந்து மேலான பேறுபெற்றான்.

## வல்லாள மகாராசன்

வல்லாளன் என்னும் நல்லாளன் ஓய்சால மரபைச் சார்ந்தவன். அருணகிரிநாதர் தோன்றுவதற்கு நூறு ஆண்டுகட்கு முன்னர் (பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில்) வாழ்ந்தவன்; எஞ்ஞான்றும் சிவபெருமானை நெஞ்சில் இருத்தி, திருவண்ணாமலை நாட்டை அறம் வழுவாமல் மல்லம்மை, செல்லம்மை என்னும் இரு பட்டத்தரசிகளுடன் ஆண்டு வந்த பெருவீரன். இவ்வரசனுடைய பிள்ளையில்லாப் பெருங்குறையைப் போக்கி, அவனது அளவில்லா அன்பை உலகுணரச் செய்யத் திருவுளம்கொண்ட இறைவன், தவத்தலைவர் வேடம்பூண்டு, தமது கணங்களை எல்லா விலைமாதர் வீடுகளிலும் இருத்தி மீண்ட அவர், "இன்றிரவு ஒரு மாதை எமக்குக் கிட்டுமாறு செய்வாயாக" என மன்னரிடம் வேண்டுகிறார். அரசன் எல்லாவிடங்களிலும் தேடியும் கணிகையர் ஒருத்திகூடக் கிடைக்கவில்லை. கடவுள் சோதனையை அறியாத மன்னன் கவலையே உருவாய் வருந்தினான். தன்னை நாடி வந்த அடியார் விருப்பை ஈடேற்றி வைப்பது அன்றோ மன்னர் கடமை என்பதை அவன் நன்குணர்ந்தான்.

இந்நிலையில் இளைய பத்தினியாம் செல்லம்மா தேவி அரசனது அனுமதியோடு, அடியார் தங்கியிருந்த அறை நோக்கிச் சென்றாள். அங்கே பூ மஞ்சத்தில் அறிதுயிலில் ஆழ்ந்து இருந்தார் அடியார். தேவி தன் இரு தளிர்க்கரங்களாலும் மெய்யடியார் மெய்தீண்டியவுடன் அடியார் பனிச்சென்று பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையாய் அவளின் தளிர்க்கரங்களில் தவழ்ந்தார்; பின் காட்சியளித்தார்.

'நாமே உமக்குப் பிள்ளையாய்த் தோன்றியிருக்கிறோம். உமக்குப் பின் புத்திரன் செய்யவேண்டிய கிரியைகளையும் நாமே செய்து வருவோம்' எனப் பெருமான் அருள்புரிந்தார். இறைவர்தம் அருள் வாக்கிற்கிணங்க, ஆண்டுதோறும் அண்ணாமலைப்பெருமான் மாசி மகத்தில் பள்ளிகொண்டாப் பட்டுக்கு எழுந்தருளி, வல்லாள மகாராசனுக்கு உத்தரகிரியை நடத்தும் உற்சவம் இன்றும் நடைபெற்றுவருகிறது.

## பிரதத்தன்

பிரதத்தன் என்னும் காசிராசன், தன் தென்னிந்தியச் சுற்றுப் பயணத்தின்போது இத்தலம் வந்தான். சுவாமியை வழிபட்டபோது, அங்கு இருந்த கணிகையர்குலப் பெண்ணொருத்தியைக் கண்ணுற்றுத் தகாத நினைப்பில் தோய்ந்தான். அக்கணமே அவன்முகம் குரங்குமுகமாகியது. பின்பு மன்னன் தன் இழிநிலையை நினைந்து, நினைப்பை மாற்றிக் கொண்டு பல திருப்பணிகளைச் செய்து இப்பெருமானுக்குப் பூசைசெய்து நற்பேறு எய்தினான்.

### புளகாதிபன்

புளகாதிபன் என்னும் அசுரன் புனுகுப் பூனையாக வந்து அருணகிரியின் மீது உலவிய சிறப்பால், பெரும்பலம் பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். இஃது அறிந்த பெருமான், 'உனது உயிரைவிட்டு விடுவாயாக', என்று கூறினார். "இனிப் புனுகுப் பூனைகளின் புனுகை நம் திருமேனியில் ஏற்றுக்கொண்டு, 'புனுகணி இறைவர்', என்னும் பெயரோடு விளங்குவோம்" என அருளினார். அசுரனும் இறந்துவிட்டான். இது முதல் தேவர்களும் மனிதர்களும் இப்பெருமானின் சிரசில் புனுகுக் காப்பு சாத்தி வருவது வழக்கமாய் உள்ளதை அறிந்துகொள்ளலாம்.

## வரலாற்றில் இடம்பெற்ற திருவண்ணாமலை அடியார்கள்

### அருணகிரிநாதர்

திருவண்ணாமலைத் திருத்தலத்தில் கோயில் கொண்ட அருணாசலேசுவரரை நினைந்து வழிபட்டுவந்த முத்தம்மை என்னும் மங்கை நல்லாள் மணிவயிற்றிலிருந்து முருகப்பெருமானின் பெருங் கருணைத்திறத்தால் அருணகிரிநாதர் தோன்றினார். முத்தம்மையும் அண்ணாமலையில் பிறந்த குழந்தைக்கு அருணகிரி என்னும் பெயர் சூட்டினார்.

இவரது காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியாகும்; இன்றைக்கு ஏறத்தாழ 475 ஆண்டுகளுக்குமுன் பிரபுட தேவராயன் என்னும் அரசன் ஆட்சிபுரிந்த காலம். இவர் வாழ்ந்த காலத்தின் புலவர்களாக விளங்கியோர் வில்லிபுத்தூர் ஆழ்வார், இரட்டையர், காளமேகப் புலவர் முதலானோர்.

இவர் கலியுக வரதனாகிய முருகப்பெருமானிடம் பேரன்புகொண்டு அவரைப் போற்றிப் புகழ்பாடிய பெருந்தகையாளர். இவரது திருப்புகழ் அனைத்தும் முருகன் மீது பாடப்பெற்றவை. பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்கள், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி முதலியனவும் சீர்வகுப்பு, கடைக்கணியல் வகுப்பு, வேல்வகுப்பு, மயில்வகுப்பு, சேவகன்வகுப்பு உள்ளிட்ட திருவகுப்புகளையும் மயில் விருத்தம், வேல் விருத்தம் ஆகிய விருத்தங்களையும் இவர் இயற்றினார்.

### கோபுரத்து இளையனார் காட்சி

ஐந்து வயதான அருணகிரி ஆரம்பப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் அவர் மனம் படிப்பில் செல்லவில்லை. ஏழு வயதில் அன்புத்தாயின் அரவணைப்பு அகன்றிட, 'ஆதி' என்னும் அக்காளிடம் வளர்ந்து வந்தார். அருணகிரிநாதர் அவல நிலைக்காளாகி வல்லாள கோபுரத்தின் மீதேறி நின்றவர், 'முருகா என்னை ஏற்றுக்கொள்' எனக் கூறிக் கூசாமல் குதித்துவிட்டார். பக்குவமுற்ற பருவம் அடைந்த அவருக்குப் பரமனாரும் குமரனாகவே வந்து தடுத்தாட்கொண்ட நிலையில், கோபுரத்து இளையனாராகக் காட்சி அளித்தார் திருக்கோபுரத்தின் வடபால் எழுந்தருளித் திருமுருகன் காட்சி தந்தமையை, அடல் அருணைத்

திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு அருகில் சென்று கண்டு கொண்டேன்' என்று தாம் அருளிய கந்தரலங்காரத்தில் அவர் தெரிவிக்கிறார்.

குருவாய் வந்த குமரனும் இவரை உய்விக்கத் திருவுளம் கொண்டு தமது திருக்கரத்தால் திருநீறிட்டு, அருட்கண்களால் அழகுற நோக்கி, திருவடிகளைச் சிரசின் மீது சூட்டி, செபமாலை தந்து சடாட்சரம் ஓதி, 'சும்மா இரு; சொல்லற' என்னும் மௌன உபதேசத்தை அருளி ஆட்கொண்டார்.

ஒருநாள் முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான் அருணகிரிநாதருக்கு முன் தோன்றி, 'நம் பாதமலர்பாடு நீ,' என்ன, "அடியேனும் எப்படிப் பாட?" என்ற அளவில், "முத்தைத்தரு பத்தித்திருநகை அத்திக்கிறைச்சக்தி சரவணபவ" எனப் பாடென்று சொல்லி அருளினார். முருகனருள்பெற்ற அருணகிரியார் திருவாய் மலர்ந்திட, முதிரும் சுவைகொண்ட மதுர மிகு செய்யுட்கனிகள் உதிர்ந்தன.

பிறகு அவர் திருவண்ணாமலையிலிருந்து புறப்பட்டு, வயலூர் மேவிய வள்ளலைக் கண்ணுற்று, விராலி மலையை வியந்து போற்றி, பழனியில் பரவசப்பட்டு, மதுரை கொடுங்குன்றம், குன்றக்குடி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருவேற்காடு, காஞ்சிபுரம், திருத்தணிகை, வள்ளிமலை, காளத்தி, சைலம், சென்னை, காசி முதலிய எண்ணிலாத் தலங்களைப் பாடி, திருமுருகன் திருப்புகழ் உலகெலாம் நின்று நிலவச்செய்தார்.

## வில்லியாருடன் வாது

வில்லிபுத்தூரார் நடுநாட்டுச் சனியூரில் பிறந்து, வடமொழியிலும் தென்மொழியிலும் புலமைமிகப்பெற்று, வரபதியாட்கொண்டான் என்னும் அரசனின் அரசவைக் கவிஞராய் இலங்கி, மகாபாரதத்தை மதுரத் தமிழில் பாடிய பெருமைக்குரியவர். அதனால் மகிழ்வுற்ற அரசன், பிற பரிசுப் பொருள்களோடு துறடு ஒன்றும் பரிசாகக் கொடுத்திருந்தான். அதனைக் கொண்டு அவர் தம்மிடம் தோற்ற போலிப் புலவர்களின் செவிகளை அறுத்து வந்தார். அந்நாளில் அருணகிரியாரின் அருமைத் திருப்புகழ்அவர்தம் செவிகளில் வீழ்ந்தது. பொறுப்பாரா பொல்லா வில்லியார்? பிரபுட மன்னர் நடுவராக வீற்றிருக்க அரசவையில் வில்லியார்- அருணகிரியார் வாதப்போர் நிகழ்ந்தது. முதலில் வில்லியார் அழகர் அந்தாதி பாட, அருணகிரியார் பொருள் உரைத்துவிட்டார். அடுத்து அருணகிரியார் 'கந்தர் அந்தாதி' பாடிட வில்லியார் விரைந்து பொருள் உரைத்து வருதலைக் கண்ட அருணகிரியார் கந்தப்பெருமானை நினைந்து பாடினார். அருணகிரியார் பாடிய பாடலின் பொருள் விளங்காது விழித்த வில்லியார், தோல்வியை ஒப்புக்கொண்டார். தோற்ற வில்லிபுத்தூராழ்வார் தமது காதை அறுக்குமாறு அருணகிரிநாதரிடம் வேண்டினார். ஆனால், இதற்கு அருணகிரிநாதர் உடன்படாமல், "எளியவர் திறமையை ஆய்ந்துபார்த்து அவர்களைத் தண்டித்தல் வேண்டாம்" என்றார். இவ்வாறு கருணை காட்டியதற்காக அருணகிரிநாதர் "கருணைக்கு அருணகிரி" எனப் போற்றப்பெற்றார்.

## கம்பத்து இளையனார் காட்சி

அருணகிரிநாதர் காலத்தில் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் பிரபுடதேவமகாராசன். அவன் அவையில் சம்பந்தாண்டான் என்னும் சாக்தன் இருந்தான். அவன் அருணகிரிநாதர் மீது வெறுப்புக் கொண்டிருந்தான். அதனால் அவன், அரசனை மகிழ்விக்கக் காளியைத் தாம் வரவழைப்பதாகவும் அருணகிரிநாதர் முருகனை வரவழைக்க வேண்டுமெனவும் கூறினான். இதற்கு அருணகிரிநாதர் உடன்பட்டார். முதலில் சாக்தன் காளியை வரவழைக்க முயன்றான். ஆனால் காளியோ தோன்றவில்லை. எனினும், அவன் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல், முருகனை வரவழைக்குமாறு அருணகிரிநாதரிடம் கூறினான். அருணகிரிநாதரும் இதற்கு உடன்பட்டு, "முருகா நீமட்டும் வந்தால் போதாது. காளி முதலியோரும் வரவேண்டும்" என்னும் வேண்டுகோளுடன் "அதலசேடனாராட" எனத் தொடங்கும் திருப்புகழைப் பாடினார். அப்போதே அவ்வாறே காளி முதலியோருடன் முருகப்பெருமான் யாவரும் வியக்கக் காட்சியளித்தார். அருணை முனிவருடைய அன்புக்குக் கட்டுப்பட்டு, இவ்வண்ணம் தம் அழகுத் திருக்கோலத்தைக் காட்டிய இடமே கம்பத்து இளையனார் கோயிலாகும்.

## கிளி உருவக்காட்சி

முருகப்பெருமான் கோடி சூரிய பிரகாசத்துடன் தந்த திருக்காட்சியால் அரசனின் கண்ணொளி மழுங்கிவிட்டது. தோல்வியுற்ற சம்பந்தாண்டான் அரசனை வஞ்சகமாகத் தூண்டி, அருணகிரிநாதரைப் பாரிசாத மலர் கொண்டுவந்து தமக்குக் கண்ணொளி தருமாறு வேண்டச் செய்தான். அதற்கு அவர் உடன்பட்டவராய்த் தமது உடலைக் கோபுரத்தின் மேனிலையில் தக்க ஓரிடத்தில் மறைத்துவிட்டு, கிளி உருவில் விண்ணகம் போந்து பாரிசாத மலர் பறிந்து வந்தார். ஆனால் அதற்குள் சம்பந்தாண்டானின் சூழ்ச்சியினால் அவர் உடல் கொளுத்தப்பட்டுவிட்டது. இவ்விடத்தை நினைவுகூரும்வகையில் அண்ணாமலையில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டு, அருணகிரிநாதர் உருவமும் பொறித்து வைக்கப்பட்டுள்ளது என்பர் ஆன்றோர்.

நடந்த செயலை ஞானக்கண் கொண்டறிந்த அருணகிரியார், கிளி உருவாகவே கோயில் கோபுரத்தின் மீது வந்தமர்ந்தார். (இக்கோபுரமே 'கிளிக்கோபுரம்' என்று இன்றும் வழங்கப்படுகிறது. கோபுரத்தின் மீது ஒரு கிளியுருவம் பொருத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்). கிளியின் மூக்கில் பாடுபட்டுப் பறித்துவந்த பாரிசாத மலரின் நறுமணம் எங்கும் கமழ்வதை அரசனும் அவ்வூர் மக்களும் அறிந்து அவருடலைக்கொளுத்திய மடமைக்காகப் பெரிதும் வருந்தி, பின் அவரைப் போற்றிட அருணகிரி நாதர், கிளி உருவத்திலிருந்தே உலகுக்குக் கந்தரனுபூதியை வழங்கினார்.

"கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன, எந்தை அருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ" என்ற தாயுமானவர் வாக்கிற்கேற்ப, நாமும் அவர் திருப்புகழ் பாடிப் போற்றிப் பெருவாழ்வு பெற்று இன்புறுவோமாக!

திருவண்ணாமலைத் திருத்தலத்திற்கு அருணகிரியார் 87 பாடல்களால் புகழ்மாலை சூட்டியுள்ளார். அவற்றுள், 'அருணை' என்னும் பெயரில் 58 பாடல்களும் 'அருணைக்கோபுரம்' என்னும் பெயரில் 13 பாடல்களும் 'அருணைத் திருவீதி என்னும் பெயரில் 8 பாடல்களும் அருணைக் கோபுர வடக்கு' என்னும் பெயரில் 2 பாடல்களும் வேறு 6 பாடல்களும் அடங்கும்.

## விருபாட்சிதேவர்

விருபாட்சிதேவர் மல்லிகார்ச்சுனத்தில் தோன்றிய வீர சைவ மரபினர், திருவண்ணாமலையின் குகையொன்றில் தவமியற்றி வீடு பேறு எய்தினார். இக்குகை திருவண்ணாமலை விருபாட்சிக் குகை என்னும் பெயரில் இன்றும் இருந்துவருகிறது. இதன் மேற்புறத்தில் கந்தாசிரமம் உள்ளது.

## குகை நமச்சிவாயர்

குகை நமச்சிவாய மூர்த்தி சித்தராக விளங்கினார். இவர் கன்னட நாட்டு வீரசைவர்; மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவத்தலயாத்திரை மேற்கொண்டு திருவண்ணாமலைக்கு வந்து தவமியற்றிச் சிதம்பரம் கோயிலில் திருப்பணி செய்யும் பொருட்டு, தம்மிடம் விரைவில் பக்குவம் பெற்ற சீடர் 'குரு நமச்சிவாயர்' என்பவரைப் பட்டம் பெறத்தக்கவராய் விளங்க வைத்து, அன்னாரைச் சிதம்பரத்திற்கு அனுப்பினார். குகை நமச்சிவாயர் திருவண்ணாமலையில் சித்தியடைந்த குகைக்கு வடபுறம் முலைப்பால் தீர்த்தமும் மேற்புறம் அருவிக்கரையில் பாததீர்த்தமும் உள்ளன. தம் குருவாக்கைத் தாங்கிச்சென்ற குரு நமச்சிவாயர் சிதம்பரம் நடராசப்பெருமானின் அருளுக்கு ஆளாகி, அங்குப் பல திருப்பணிகள் புரிந்து அற்புதச் சாதனைகள் பல புரிந்தார்.

## ஈசானிய ஞானதேசிகர்

ஈசானிய ஞானதேசிகர் வட ஆர்க்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூரில் 250 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாளர் குலத்தில் உதித்த நீலகண்ட தேசிகருக்கு அருந்தவ மகனாகத் தோன்றியவர். இவர் ஓதாதுணர்ந்த உத்தமராய்ப் பல தலங்களில் வழிபாடாற்றிப் பின்னர்த் திருவண்ணாமலையை அடுத்துள்ள வேட்டவலத்தருகில் ஒரு மலைக் குகையில் சிலகாலம் தவம் இயற்றிப் பின்னர்த் திருவண்ணாமலையை அடைந்தார். தமக்கு அண்ணாமலையார் அருளியவாறு 'ஈசானிய' திசைக்குச் சென்று ஈசானிய தீர்த்தத்தின் தென்கரையில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து தவமியற்றினார். இவர் ஞானக்கட்டளை, அண்ணாமலையார் தோத்திரப்பாமாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய பிரபந்தங்களை இயற்றிப் புலவர் பெருமக்களுக்கிடையிலும் பேரருளாளரிடையிலும் ஒளிவிளக்கெனத் திகழ்ந்து கி. பி. 1829-ஆம் ஆண்டில் வீடு பேறெய்தினார்.

## சேஷாத்திரி சுவாமிகள்

காஞ்சிபுரத்தில் அந்தணர் மரபில் தோன்றிக் கல்வி கேள்விகளில் வல்லுநராய்

விளங்கினார் சேஷாத்திரி சுவாமிகள். இவர் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக்கரையிலுள்ள தீர்த்தீசுவரர் சந்நிதியில் கௌடத்துறவி அவதூதி பாலாஜி சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுத் துறவறம் பூண்டு திருவண்ணாமலையை அடைந்தார். பிளேக் நோய்க் காலத்தில் அவர் திருவண்ணாமலைக்கு வந்தார் என்பதற்காக இவருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவரது ஆனந்த நிலையை முன்னிட்டு அவர் விடுவிக்கப்பெற்றார். அண்ணாமலையில் இவர் தங்கித் தவம்புரிந்து வீடுபேறெய்திய இடம் சேஷாத்திரிசுவாமி ஆசிரமம் என மிளிர்கிறது.

## ஸ்ரீரமணமகரிஷி

ஸ்ரீரமணமகரிஷி பாண்டிய நாட்டில் திருச்சுழியல் என்னும் திருத்தலத்தில் வழக்கறிஞர் சுந்தரம் ஐயருக்கும் அழகம்மையாருக்கும் அருந்தவ மகனாய்த் தோன்றியவர். தமது பதினேழாவது வயதில் இல்லத்தில், ஒரு சீட்டை எழுதி வைத்துவிட்டுத் திருவண்ணாமலையை அடைந்து துறவுபூண்டார். இங்குப் பல ஆண்டுகள் தவமியற்றினார். தம் தாயார் அழகம்மை 19-5-1922 ஆம் நாளில் இறைவன் திருவடி நிழலை அடைய, அவ்விடத்தில் இவர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். இது தற்போது 'மாத்ரு பூத்' என்னும் பெயரில் அபிடேக ஆராதனை செய்யப்பெற்று வருகிறது. இவர் காலோத்தரம், விவேகசூடாமணி உபதேச மொழிகள், ரமணகீதை முதலிய அரிய நூல்களை இயற்றியுள்ளார். இவர்தம் ஆசிரமத்திற்குப் பல நாட்டவர்களும் வந்திருந்து இவருடைய பொன்மொழிகளால் ஆறுதல் பெற்றுச் சென்றார்கள். இவர் 14-4-1956-ஆம் ஆண்டில் சோதியில் கலந்தார். இவர் முதலில் திருவண்ணாமலைக் கோயிலினுள் ஆயிரக்கால் மண்டபத்துப் பாதாள இலிங்கேசுவரர் சந்நிதியில் பல காலம் நோன்பு நோற்றுப் பூசித்துவந்தார். இக்கோயில் 3-11-1968-ஆம் ஆண்டு குடமுழுக்குப் பெற்றது.

## ஜடினி சண்முக யோகினியார்

பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஜடினி சண்முக யோகினியர் பாண்டிநாட்டுச் சிவகிரியில் தொண்டை மண்டலச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றிச் சண்பகம் என்னும் பெயரில் துறவறம் பூண்டார். தம் இருபத்து நான்காம் ஆண்டில் அண்ணாமலையாரால் ஆட்கொள்ளப்பெற்றார். அண்ணாமலையில் ஐம்பது ஆண்டுகள் தவம் இயற்றிப் பேறு பெற்றார்.

## பத்திராசல சுவாமிகள்

பத்திராசல சுவாமிகள் இங்குத் தவம் இயற்றி முத்தி அடைந்தார். இவர்தம் சமாதி திருவண்ணாமலை சேஷாத்திரி மடாலயம் அருகிலுள்ளது.

## ஈசுவர சுவாமிகள்

சோழவளநாட்டின் திருக்கோயிலூருக்கு அடுத்த இறைவாச நல்லூரில் அருணாசல தீட்சிதர், சதி பாலாம்பிகை ஆகியோருக்கு அருமை மகனாகத்

தோன்றியவர். இவர் திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்று துறவறம் பூண்டு அண்ணாமலையை எய்தினார். இவர் வடமொழி தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் வல்லுநர். 'மகாதேவா', "மகாதேவா" என இடைவிடாது தியானம் செய்துவந்தார். பிச்சையேற்று அண்ணாமலையார் கோயில் முன்மண்டபத்தில் தங்கிக் கிரிவலம் செய்துவந்தார். இவரது சமாதி இங்குள்ள ஈசானிய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது.

## நடேச ஞானதேசிகர்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துறையூருக்கு அண்மையில் மூன்று கிலோமீட்டர்த் தொலைவில் முசிறி செல்லும் சாலைப்பிரிவிலுள்ள மதுராபுரி என்னும் சிற்றூரில் சீலமிகு சபாபதி உடையாருக்கும் அவர்தம் துணைவியார் விசாலாட்சி அம்மையாருக்கும் 28-9-1898-ஆம் ஆண்டில் தோன்றிய திருமகனார் திரு நடேச ஞானதேசிகர் ஆவர். இவர் தமது 17-ஆவது வயதில் (கி. பி. 1916-ஆம் ஆண்டில்) திருவண்ணாமலையை எய்தினார். அப்போது திருவண்ணாமலை ஈசானிய மடத்திற்கு ஞானவள்ளலாக விளங்கியவர் ஏழாம் குருமூர்த்தியாகிய ஸ்ரீமகாதேவ ஞானதேசிக சுவாமிகள். இவர்கள் நடேசனாரின் பக்குவ நிலைமையை உணர்ந்து அவரைத் தம் சீடராக ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் ஒரு நாள் அம்மடத்திற்கு வந்திருந்த கேரள நாட்டுச் சமரச சன்மார்க்க ஞானி ஸ்ரீ நாராயண குரு, நடேசனாருக்கு ஆசி வழங்கினார். பின்னர் ஸ்ரீ மத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் மடத்தில் ஏழாவது பீடாதிபதியாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, அவர் நடேசனாரைத் திருவண்ணாமலை ஈசானிய மடத்திற்குத் தலைவராக்கினார். அது முதல் இருபத்தாறு ஆண்டுகள் (1921-1947) அங்கு நடேச ஞானதேசிகர் மடாதிபதி ஆக இருந்து அரும்பணிகள் பல ஆற்றினார். பின்னர் இத்தலைமைப் பதவியைத் தாமாகவே துறந்து, பல தலங்களுக்கும் சென்று இறுதியில் 1949-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம், கைகளத்தூருக்கு அண்மையிலுள்ள காரியனூருக்குச் சென்று அங்கு ஓர் ஆசிரமம் அமைத்து அமைதியாக இருந்து பலருக்கும் நல்லுபதேசம் வழங்கிவரும் நாளில் (23-2-1960) இயற்கை எய்தினார்.

## தவயோகி ஸ்ரீராம்சுரத் குமார் சுவாமிகள்

திருவண்ணாமலையில் தேர்முட்டிச் சந்நிதித் தெருவில் வாழ்ந்து வந்தவர் தவயோகி ஸ்ரீராம்சுரத் குமார் சுவாமிகள். இவர் காசிக்கு அருகில் 1-12-1918-ஆம் ஆண்டில் பிறந்து கன்னடத்தேசத்துக் காஞ்சகாடு ஆனந்தாசிரமம் சுவாமி இராமதாசரிடம் உபதேசம் பெற்றுப் புதுச்சேரியில் அரவிந்தரைத் தரிசித்து ஸ்ரீரமணரிடம் ஈடுபாடுகொண்டு, திருவண்ணாமலையைத் தேடி வந்து 1959-ஆம் ஆண்டு முதலாக இங்கு நிலைத்துவிட்டார்.

## பொன்னுசாமி அடிகள்

சைவசித்தாந்தப் பரிசு பெற்ற வித்துவான் பொன்னுசாமி அடிகள், தூய

வெண்மை ஆடை அணிந்து, தூய துறவியாய் வாழ்ந்து காய், கறி, பழம் ஆகியவற்றை ஒரு வேளையே உண்டு, தம் வாழ்நாள் முழுவதும் சைவ சமயத்தைப் பரப்பி (27.1.91) ஞாயிற்றுக் கிழமை பிரதோடநாளில், காஞ்சிபுரம் சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமத்தில் சமாதி நிலை அடைந்தார்.

## அருணாசலேசுவரர் கோயில்

அருணாசலேசுவரர் கோயிலின் தலவிருட்சம் மகிழமரம். இத்தலவிருட்சம் மூன்றாம் பிராகாரத்தின் தெற்குப் பகுதியில் உள்ளது. இதற்கு மேடை அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குக்கோபுர வாயிலின் உள்ளே சென்றதும் இடப்புறம் கோபுரக் கணபதியைக் காணலாம். அடுத்து ஐந்தாம் பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் திருமங்கை விநாயகரையும் மேற்குப்பிராகாரத்தில் கொத்தள விநாயகரையும் காணலாம். நான்காம் பிராகாரத்திற்கு உள்ளே செல்லும் வழியில் பாதாளலிங்கேசுவரர், வயிரவர், கம்பத்து இளையனார், கணபதி ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. இதற்கு மேற்கில் சர்வ சித்திவிநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. சித்தி விநாயகருக்கு வடக்கிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் தென்மேற்குக் கோடியில் அம்மன், பாதாளலிங்கர், நந்திதேவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. வரசித்தி விநாயகருக்கு மேற்கில் விறன்மிண்டர், கலியாணசுந்தரர், கணபதி ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. அடுத்து வல்லாள மகாராச 'கோபுரத்தினுள் வடபகுதியில் கோபுரத்து இளையனார், அருணகிரிநாதர் உற்சவர் அருணகிரிநாதர், கணபதி ஆகியோரையும் தென்புறம் கூத்தப்பிள்ளையாரையும் காணலாம்.

கோபுரத்தைக் கடந்து உள்ளே நான்காம் பிராகாரத்தில் நுழைந்தவுடன் தெற்குப்பகுதியில் மேற்கு நோக்கியவாறு காலவயிரவர் உள்ளார். காலவயிரவருக்கு நேர்மேற்கில் நளேசுவரரும் அடுத்துத் தெற்கில் கணபதியும் வித்தியாதரேசுவரரும் உள்ளனர். இருவருக்கும் தெற்கில் பிரமலிங்கம் தனிச்சந்நிதியில் உள்ளது. இப்பிராகாரத்தின் தென்மேற்கில் விநாயகர் வடமேற்கில் சுப்பிரமணியர் ஆகியோர் உள்ளனர். பிராகாரத்தை முறையே வலம் வந்து கிளிக் கோபுரத்தை அடையுமுன் கோபுரத்தின் வடபுறம் பிச்சை இளையனார், சுப்பிரமணியர், வயிரவர் ஆகியோரையும் தென்புறம் யானை திறை கொண்ட விநாயகர் சந்நிதியையும் காணலாம்.

மூன்றாம் பிராகாரத்தின் தென்பகுதியில் மகிழமரத்தடியில் தட்சிணாமூர்த்தி, சலகண்டேசுவரர், நந்திதேவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. மூன்றாம் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் பீமேசுவரர், கணபதி ஆகியோர் திருவுருவங்கள் இருக்கின்றன. இப்பிராகாரத்தின் தென்மேற்குப்பகுதியின் நடுவில் அருணகிரி யோகீசுவரரும் கணபதியும் உள்ளனர். அடுத்து இப்பிராகாரத்தின் வடமேற்குப்பகுதியில் அம்மன் சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்குச் செல்லுமுன் வடபுறம் நவக்கிரகங்களும் சித்திரரும் புத்திரரும் ஒருங்கே அமர்ந்துள்ள சந்நிதியும் உள்ளது. அம்மன் சந்நிதி வாயிலின்முன் தென்புறம் விசயவிநாயகர், பாலாலய அம்மன் ஆகியோரும் வடபுறம் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோரும் கிழக்கு

நோக்கியவாறுள்ளனர். சந்நிதி வாயிலின் இருபுறமும் துவார சக்திகள் உள்ளனர். அம்மன் கருவறைக்கு மேற்குப்பகுதியில் பராசக்தியம்மன், விநாயகர்; சோழலிங்கம், சேரலிங்கம், பரிவார தேவதைகள், சோமேசுவரர் ஆகியோரும் வடகிழக்குப் பகுதியில் வள்ளியும் தெய்வயானையும் சுப்பிரமணியரும் அடிமுடி அறியொணாக் கடவுளும் உள்ளனர்.

அம்மன் சந்நிதி மகாமண்டபத்தில் வடபுறம் காலாந்தகர், வீணாதரர், வீரபத்திரர், ஆதிலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி ஆகியோரும் கிழக்குப்பகுதியில் தனலட்சுமி, தானியலட்சுமி ஆகியோரும் தென்பகுதியில் விசயலட்சுமி, ஐஸ்வரியலட்சுமி, வீரலட்சுமி, உருத்திர துர்க்கை, மகாசக்தி, சரசுவதி ஆகியோரும் உள்ளனர். அம்மன் கருவறைமுன் தென்புறம் சித்திவிநாயகரும் வடபுறம் கார்த்திகேயரும் உள்ளனர். உண்ணாமுலை அம்மன் கருவறையில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். அம்மன் கருவறைக்கு வடபுறம் சண்டேசுவரி சந்நிதி உள்ளது. அம்மன் கோயிலுக்கு வெளியில் மூன்றாம் பிராகாரத்தின் வடக்குப்பகுதியில் காளத்தீசுவரர், அம்மன் சந்நிதியை நோக்கியவாறுள்ளார்.

இப்பிராகார வடகிழக்குக்கோடியில் சிதம்பரலிங்கமும் அதற்குத் தெற்கில் சம்புலிங்கமும் அதனெதிரில் பிடாரி, சப்தமாதர் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. சம்புலிங்கம் சந்நிதிக்குத் தெற்கில் ஏகாம்பரர் சந்நிதி உள்ளது. அடுத்து இரண்டாம் பிராகாரத்திற்குச் செல்லும் முன் தென்புறம் கணபதி, சம்பந்தவிநாயகர் ஆகியோர் சந்நிதிகளையும் வடபுறம் உண்டி சுப்பிரமணியர், பழனியாண்டவர் ஆகியோர் சந்நிதிகளையும் காணலாம். வாயிலின் இருபுறமும் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன.

இரண்டாம் பிராகாரத்தின் கிழக்குப்பகுதியில் அதிகார நந்தீசுவரரும் அடுத்துத் தெற்குப் பிராகாரத்தில் முறையே சனகேசுவரர், சனந்தனேசுவரர், நால்வர், சனாதனேசுவரர், சனத்குமாரேசுவரர், கௌசிகேசுவரர், குத்ஸரிஷீசுவரர், வால்மீகேசுவரர், வாமரிஷீசுவரர், அக்கினி இலிங்கம், நாரதேசுவரர், காசிலிங்கம், நந்திதேவர், அறுபத்துமூவர், தொகையடியார்கள், இயமலிங்கம், காசிலிங்கம், தும்புரேசுவரர், கணபதி, சப்தமாதர், சாஸ்தா, கௌதமமுனிவர், காசிலிங்கம், துருவாசர் ஆகியோர் திருவுருவங்களும் மேற்குப் பிராகாரத்தில் விநாயகர், தலவிநாயகர், விநாயகர் நிருதிலிங்கம் (முகலிங்கம்) , சண்டேசுவரர். சோமாசுகந்தர் (உற்சவர்), பெரிய உற்சவ அம்மன், அர்த்தநாரீசுவரர்(உற்சவர்), உற்சவ அம்மன், விநாயகர்(உற்சவர்) அடுத்து உருக்குமணி, வேணுகோபாலர், சத்தியபாமா, எதிரில் ஆஞ்சநேயர், வருணலிங்கம், நந்திதேவர், வியாசலிங்கேசுவரர், அம்மன், விக்கிரபாண்டீசுவரர், எதிரில் நந்திதேவர், கஜலட்சுமி, வள்ளியம்மை, சண்முகர், தெய்வயானை, சகஸ்ரலிங்கம், சதலிங்கம், சியாமளா அம்மன், ஜேஷ்டாதேவி ஆகியோர் திருவுருவங்களும் வடக்குப் பிராகாரத்தில் வாயுலிங்கம், அன்னபூரணி, வள்ளியம்மை ஆறுமுகர், தெய்வயானை ஆகியோரின் உற்சவர்திருவுருவங்களும், நடராசர்(உற்சவர்), பிட்சாடனர்(உற்சவர்), சிறிய சந்திரசேகரர், குபேரலிங்கம், அறுபத்துமூவர் (உற்சவர்), விநாயகர், பக்தானுக்கிரக சோமாசுகந்தர், அம்பிகை, பராசக்தி, பிடாரி, தண்டாயுதபாணி2, அத்திரதேவர் ஆகியோர்

உற்சவத்திருமேனிகளும் பக்தானுக்கிரக சோமாசுகந்தர், மூலவர், விசுவாமித்திரேசுவரர், பதஞ்சலீசுவரர், வியாக்கிரபாதேசுவரர், நூற்றெட்டுச் சிவலிங்கங்கள், அகத்தீசுவரர், ஜுரகரேசுவரர், காலசம்மாரர், வயிரவர் ஆகியோர் திருவுருவங்களும் வடகிழக்கில் உற்சவச் செல்வராகன், உற்சவநடராசர், சிவகாமியம்மை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன.

கருவறைக்கு முன் நந்தி, பலிபீடம், இரதவிளக்கு ஆகியவை உள்ளன. நந்திக்குச் சற்று வடகிழக்கில் சூரியன் உள்ளார். கருவறையின் முன் தென்புறம் வல்லபை கணபதியும் வடபுறம் புருஷா நாச்சியார் அம்மனும் உள்ளார்கள். கருவறைக்கோட்டத்தின் தென்புறத்தில் தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கிறார். கருவறைக்கு வடபுறம் சண்டேசுவரர் தெற்கு முகமாக வீற்றிருக்கிறார். கருவறையில் அண்ணாமலைநாதர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

இராசகோபுரத்தின் உட்புறம் கம்பத்திளையனார் சந்நிதியின் தென்புறமாக நாற்புறமும் திருமாளிகைப்பத்தி மண்டபத்துடன் அமைந்திருப்பது 'சிவகங்கை' என்னும் புண்ணிய தீர்த்தமாகும். காலவயிரவர் சந்நிதிக்கு அருகில் 'பிரம்ம தீர்த்தம்' என்னும் புண்ணியத் தடாகம்(குளம்) ஒன்றுள்ளது. மேற்கண்ட இரு குளங்களுக்கும் படிகள் உள்ளன. மேற்கண்ட இரு குளங்களிலும் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்திருக்கும். மலை அடிவாரத்தின் முதல் பாகத்தில் முலைப்பால் தீர்த்தம் (குளம்), அருள்பால் தீர்த்தம் (குளம்) ஆகிய தீர்த்தங்கள் உள்ளன. கார்த்திகை தீபப் பெருவிழாவின்போது மலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு வழியிலுள்ள இத்தீர்த்தங்கள் இரண்டும் தண்ணீர் வேட்கையினைத் தீர்க்கும் வகையில் உதவியாக உள்ளன. மலையைச் சுற்றிச் சக்கரத்தீர்த்தம், அக்கினித்தீர்த்தம், பாண்டவர்தீர்த்தம், பாலித்தீர்த்தம், சிம்மத்தீர்த்தம், இயமத்தீர்த்தம், சோணநதி, தோப்புக்கருகிலுள்ள தீர்த்தம், உண்ணாமுலைதீர்த்தம், வருணத்தீர்த்தம், அசுவனித்தீர்த்தம் போன்ற முந்நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட தீர்த்தங்கள் இங்கு உள்ளன. துர்க்கையம்மன் ஆலயத்தினுள் கட்கத்தீர்த்தம் உள்ளது.

ஆறாம் பிராகாரம் எனக் கூறப்படும் வெளிப்பிராகாரத்திலுள்ள திருமதில் மிக உயரமாகவும் கனமாகவும் உறுதியாகவும் கருங்கல்லினால் கட்டப்பெற்றுள்ளது. வடக்கு மதிற்சுவர் 477 மீட்டர்அளவும் தெற்கு மதிற்சுவர் 443 மீட்டர் அளவும் கொண்டமைந்துள்ளன. இப்பிராகாரம் கிழக்கு மேற்கில் 210 மீட்டர் அகலம் உள்ளது. திருமதில்களின் மத்தியில் நான்கு பக்கங்களிலும் நான்கு உயரமான கோபுரங்கள் வானோங்கி விளங்குகின்றன. கீழ்த்திசையிலுள்ள பெரிய கோபுரம் இராசகோபுரம். இது 11 நிலைகளுடனும் 13 கலசங்களுடனும் 65 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் அடிநிலை 40 மீட்டர் நீளமும் 29 1/2 மீட்டர் அகலமும் கொண்டதாகும். கிருட்டினதேவராயர் தாம் புரிந்த போர்களில் அடைந்த வெற்றிகளின் நினைவாக கி. பி. 1516-ஆம் ஆண்டில் இக்கோபுரத்தைக் கட்டத் தொடங்கினார். அதன் பின்னர்த் தஞ்சாவூர் மன்னர் சேவப்ப நாயக்கர் இக்கோபுரத்தைக் கட்டி முடித்தார். இதற்கு இடப்புறம் கோபுரத்து இளையனார் சந்நிதி உள்ளது. தெற்குத் திசையிலுள்ள பெரிய கோபுரத்தைத் திருமஞ்சனக் கோபுரம் என்றும் மேற்குத் திசையிலுள்ள பெரிய கோபுரத்தைப் பேய்க்கோபுரம்

என்றும் வடக்குத் திசையிலுள்ள கோபுரத்தை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் குறிப்பிடுவர். இவற்றைத்தவிர வல்லாள மகராசக் கோபுரம், கிளிக்கோபுரம், வடக்குக் கட்டைக்கோபுரம், தெற்குக் கட்டைக் கோபுரம், மேற்குக் கட்டைக் கோபுரம் ஆகிய 9 கோபுரங்கள் உள்ளன.

கம்பத்திளையனார், சிவகங்கை விநாயகர், பாதாளலிங்கேசுவரர், வயிரவர், யானை திறை கொண்ட விநாயகர், பிச்சை இளையனார், பிரம்மலிங்கர், சம்பந்த விநாயகர், பெரியவிநாயகர், வேணுகோபாலசுவாமி, நடராசர், பழனியாண்டவர், அருணாசலேசுவரர், உண்ணாமுலையம்மன், காளத்தீசுவரர், ஏகாம்பரேசுவரர் ஆகியோர் சந்நிதிகளுக்கு விமானங்கள் உள்ளன. பள்ளியறையும் இங்கு உள்ளது.

இராசகோபுரத்தையடுத்து வடபுறத்தில் ஆயிரக்கால் மண்டபம் தெற்கு நோக்கிய அமைப்பில் உள்ளது. (தாம் அடைந்த வெற்றியின் நினைவாகக் கிருட்டிண தேவராயர் 1516-ஆம் ஆண்டில் இதைக் கட்டத் தொடங்கினார். அதன் பின்னர்த் தஞ்சாவூர் மன்னர் சேவப்ப நாயக்கர் இம்மண்டபத்தைக் கட்டி முடித்தார்.) ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கில் கம்பத்திளையனார் கோயிலுக்கு மேற்கில் ஞானபால மண்டபம் உள்ளது. இதற்கு மேற்கில் உருத்திராட்ச மண்டபமும் பெரிய நந்தி மண்டபமும் உள்ளன. சிவகங்கைத் தீர்த்தக்கரையின் எதிரில் தீர்த்தவாரி மண்டபமும் ஐந்தாம் பிராகாரத்தில் வல்லாள மகாராசா கோபுரத்தைக் கடந்தவுடன் வடபுறம் நூற்றுக்கால் மண்டபமும் (புரவிமண்டபம்) வல்லாள மகாராசா கோபுரத்துக்கு மேற்கில் சிறிய நந்தி மண்டபமும் பிரமதீர்த்தத்துக்கு வடக்கில் தீர்த்தவாரிமண்டபமும் இப்பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் அமாவாசை மண்டபமும் வடமேற்குக் கோடியில் திருமண மண்டபமும் உள்ளன. இத்திருமண மண்டபத்தின் உட்புறம் தொங்கும் விளக்குகளும் சுவர்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன. கார்த்திகை மாதப் பெருவிழாவின்போது இத்திருமண மண்டபத்தில் தான் பஞ்சமூர்த்திகளுக்கு அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை செய்யப்படுகிறது.

இப்பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியில் மகளிர் புராணக் காலட்சேப மண்டபம் உள்ளது. மூன்றாம் பிராகாரத்தில் கிளிக்கோபுரத்திற்கு மேற்கில் காட்சி மண்டபமும் தென்கிழக்கில் பன்னீர் மண்டபமும் பன்னீர் மண்டபத்திற்கு மேற்கில் தியானமண்டபமும் அதற்கு மேற்கில் மையத்தில் நாற்கால் மண்டபமும் வடக்குப்பகுதியில் அம்மன் சந்நிதிக்கு எதிரில் வெள்ளி வாகனமண்டபமும் வெள்ளிவாகன மண்டபத்திற்கு அருகில் அம்மன் சந்நிதி முகப்புமண்டபமும் மகாமண்டபமும் உள்மண்டபமும் உள்ளன. கருவறையின் முன் மகாமண்டபம், உள்மண்டபம் ஆகியவை உள்ளன.

இக்கோயிலிலுள்ள தெய்வத்திருவுருவங்கள் பலவற்றில் கலைநுட்பங்களைக் காணலாம். நான்காம் பிராகாரத்தில் இணையற்ற வீராவேசத்துடன் இருக்கும் காலவயிரவர் தோற்றம் சிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பிராகாரத்தின் மேற்குப்பகுதியில் உள்ள வேணுகோபாலர் திருவுருவம் அவர்தம் இருபுறமும் உருக்குமணி, சத்தியபாமை ஆகிய இருவர் இருக்கும் நிலையில், இவர் தம் இரு

கைகளிலும் குழலேந்தி நிற்பது அழகுற வடிக்கப்பட்டுள்ளது.

பாதாளலிங்கேசுவரர் சந்நிதி, அந்த இடம் பாதாளம் என்பதைக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. இங்கு நந்திதேவர் பள்ளமான நிலமட்டத்தில் நிமிர்ந்து ஆழ்ந்து நோக்கும் முறையில் உள்ளார்.

மார்க்கண்டேயர் வரலாற்றை ஒரு சிற்பம் காட்டுகிறது. மார்க்கண்டேயர் சிவலிங்கத்திற்குப் பூசை செய்கிறார். எதிரில் இயமன் ஓர் எருமைக்கடாவின் மீது அமர்ந்து இருக்கின்றான். அந்நிலையில் அவன் தன் வலக்கையிலிருந்து பாசத்தை வீசுகிறான். அப்போது சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு வந்து இயமனை உதைக்கிறார். இந்த உதையை இயமன் தாங்கியபோது அவ்வெருமை சிறிது வாய் திறந்து கத்துவது போன்று அச் சிற்பம் அமைந்துள்ளது.

அருணகிரிநாதர் கிளி உருவத்தில் இக்கோயிலின் கோபுரத்தில் அமர்ந்ததைக் காட்டும் வகையில் இக்கோயில் கிளிக்கோபுரத்தின் மீது ஒரு கிளியின் உருவம் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. அம்மன் சந்நிதியிலுள்ள கற்றூண்களில் அட்டலட்சுமிகள், உருத்திர துர்க்கை, மகாசக்தி, மகாசரசுவதி, சித்திவிநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணாதரர், வீரபத்திரர் ஆகியோர் சிற்பங்கள் கண்கொள்ளாக் கலைத்திறனுடன் காணப்பெறுகின்றன. பொதுவாக இக்கோயிலில் அனைத்துக் கற்றூண்களிலும் கலைத்திறன் பொருந்திய சிற்பங்கள் உள்ளன.

மாணிக்கவாசகப் பெருமான் இத்தலத்தினைச் சிறப்பித்து அருளிச் செய்த திருவெம்பாவைப் பாசுரங்கள் இருபதும் வெண்ணிறச் சலவைக்கற்களில் உலோக எழுத்துகளில் உறுதியான முறையில் பொறிக்கப்பெற்று உண்ணாமுலையம்மன் கோயில் பராசக்தி அம்பிகை சந்நிதியின் வடபுறத்தில் பதிக்கப்பெற்றுள்ளன.

கம்பத்திளையனார் சந்நிதி முன்மண்டபத்தில், கந்தப்பெருமான் காட்சி தரும் சிறப்புத் தலங்களான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி, (குன்றுதோறாடல்), பழமுதிர்சோலை ஆகிய தலங்களின் காட்சிகளையும் கோபுரத்திளையனார், கம்பத்திளையனார் ஆகிய மூர்த்திகளின் வரலாற்றுக் காட்சிகளையும் கந்தர் அனுபூதிப் பாடல்களையும் பெரிய உருவில் காண்போர் உள்ளம் கவரும் வண்ணம் தீட்டியுள்ளனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் சோழப் பேரரசர்கள், பாண்டியர்கள் ஒய்சாலர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோர் காலத்தில் கட்டப்பட்ட வானளாவிய கோபுரங்கள், கல்மண்டபங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியனவாக இருக்கின்றன.

அருணாசலேசுவரர் கோயிலிலுள்ள கீழ்க்காணும் கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

(தமிழ்) அருணாசலேசுவரர் மையக் கோயிலின் தெற்குச்சுவரிலுள்ள

வீரபாண்டியன் தலைகொண்ட சோழமன்னர் பரகேசரி மன்னன் கல்வெட்டு, இங்கு ஒரு விளக்கு வைப்பதற்காக 96 செம்மறியாடுகள் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[1] (இம்மன்னர் இரண்டாம் பராந்தகன் உத்தம சோழராக இருக்கலாம்).

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரி மன்னர் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க அரசி கிழான் அடிகள் பொன் நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது.[2]

(தமிழ்) இதே சுவரிலுள்ள வீரபாண்டியன் தலைகொண்ட சோழமன்னன் பரகேசரிவர்மன் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[3] ஒரு விளக்கு வைப்பதற்காக 90 ஆடுகள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னன் பரகேசரிமன்னன் கல்வெட்டு,[4] விளக்கு வைப்பதற்காக 90 ஆடுகள் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள பரகேசரிமன்னன் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைப்பதற்காக 90 ஆடுகள் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[5]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னன் பரகேசரிவர்மன் கல்வெட்டு சேதமடைந்துவிட்டது. இதன் ஆண்டும் தெரியவில்லை.[6]

(தமிழ்) இதே சுவரிலுள்ள இராட்டிரகூட மன்னன் (கிருட்டிணன் 3) கல்வெட்டு, இருபது பசுக்கள் அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் (முதல் பராந்தகன்) 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைப்பதற்காகப் பணக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது.[8]

(தமிழ்) இதே கோயிலின் முதற்பிராகாரத்தின் தெற்குச்சுவரிலுள்ள உடையார் இராசேந்திர சோழதேவர் என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் (1012-43) 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மன்னனின் பணியாளர் ஒருவரால் வழிபாட்டுக்காக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[9]

(தமிழ்) இதே சுவரிலுள்ள உடையார் இராசேந்திர சோழதேவர் -1 (1012-43) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இராசேந்திர சோழனின் வரலாற்று முன்னுரையுடன் தொடங்கி ஒரு நிலத்தின் விற்பனையைக் குறிக்கிறது.[10]

இதே சுவரின் மீது உடையார் இராசேந்திர சோழன் -1 (1012-43) என்கிற சோழமன்னர் பரகேசரிவர்மன் 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஒரு நிலம்

நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[11]

(தமிழ்ப்பாடல்) இதே பிராகாரத்தின் மேற்குச் சுவரிலுள்ள பல்லவமன்னர் காமல்ல சகலபுவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு, மன்னன் நகைகளை நன்கொடையாக அளித்ததையும் அவர் மகன் கட்டடங்கள் அமைத்ததையும் குறிப்பிடுகிறது.[12]

(தமிழ்) இதே பிராகாரத்தின் மேற்குச் சுவரிலுள்ள பாண்டிய மன்னர் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவர் கல்வெட்டு, 54 பசுக்களை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[13]

(தமிழ்) இதே பிராகாரத்தின் மேற்குச் சுவரிலுள்ள பாண்டிய மன்னர் கோனேரின்மைகொண்டான் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவன் 16_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வாரணாசி மாளவ சக்கரவர்த்தி என்கிற சீரங்கநாதர் 32 பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது[14] (சீரங்கநாதர் யாதவராய மரபில் தோன்றியவராய் இருக்கலாம்).

(தமிழ்) இதே பிராகாரத்திலுள்ள விசயநகரமன்னர் அரியப்ப உடையார் (ஹரிஹரர் 2 ) புதல்வர் வீரவிருப்பண்ண உடையார் (2) (விருபாட்சா I) சகம் 1311_ஆம் ஆண்டு (சுக்கில) கல்வெட்டு, நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[15]

(தமிழிலும் கிரந்தத்திலும்) இதே பிராகாரத்தின் மேற்குச்சுவரிலுள்ள பாண்டிய மன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவர் என்கிற மாறவர்மன் 20_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பராக்கிரம பாண்டியன் 73 பசுக்களையும் 25 கன்றுகளையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[16]

(தமிழ்) இதே பிராகாரத்தின் வடக்குச் சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதிராசன் (3) (1216_48) 16_ஆம் ஆண்டு (1232 மே 22 சனிக்கிழமை) திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவன் நிறுவிய திருவுருவத்திற்கு நிலம் நன்கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது. (இந்தக் கல்வெட்டு, பரஞ்சோதி முனிவர் மாணவரும் சைவ சித்தாந்த சாத்திரங்களில் முதன்மைச் சாத்திரமாகிய சிவஞானபோதத்தின் ஆசிரியருமாகிய மெய்கண்டார் காலத்தை அறிந்துகொள்ள ஆதாரமாக உள்ளது. இது தமிழ் வரலாற்றிற்கு மிக முக்கியமான ஆதாரமாக உள்ளது).[17]

(தமிழ்) இதே சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழதேவர் 26_ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கோயில் தெருவிலுள்ள வீட்டு மனைகளின் விற்பனை பற்றிய விதிகளைக் குறிக்கிறது.[18]

(தமிழ்) அருணாசலேசுவரர் கோயில் முதல் பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள பல்லவ மன்னர் சகலபுவனச்சக்கரவர்த்தி

கோப்பெருஞ்சிங்கதேவர்(மூன்றாம் இராசாதிராசன் காலத்தியவர்) 36-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விசயகண்ட கோபாலதேவர் தம்பியும் மதுசூதன தேவர் மகனுமாகிய காக்குநாயகதேவர் 32 பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[19]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) (1216-48) 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, அரசி சாதுப்பெருமாள் பாத்திரங்களையும் நகைகளையும் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[20]

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டு[21] இவ்வரசி வெள்ளிப்பாத்திரங்களை நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் அழகிய சீயன் சகலபுவனச் சக்கரவர்த்தி கோப்பெருங்சிங்கதேவர்[22] 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நிலம் நன்கொடை அளித்ததைக் கூறுகிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, பொன்பரப்பின[23] பெருமாள் நன்மைக்காக வானகோவராயன் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னன் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, (1248 பிப்ரவரி 7) 32[24] பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் இராசாதி ராசதேவர் என்கிற இராசகேசரிவர்மன் கல்வெட்டு, பொன் நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது. (இராசராசன் 1018-54) இவர் ஒருவரே 32 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்துள்ளார்.[25]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, புறக்கணிக்கப்பட்ட[26] ஒரு நிலத்தைப் பலர் ஒன்று கூடிச் சீர்திருத்தியதைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (13-11-1233) யாதவராயன் அலுவலருடைய[27] புதல்வி 120 செம்மறி ஆடுகளை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இளவரசர் பிருதி கங்கரின்[29] பணியிலிருந்து விலகுவதில்லை என உறுதிமொழி அளித்த்தைக் குறிக்கிறது.

(தமிழிலும் கிரந்தத்திலும்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்

சக்கரவர்த்தி இராசேந்திர சோழதேவர் 24-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கிளியூர் ராச கம்பீரசேதியராயன் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[30]

(தமிழிலும் கிரந்தத்திலும்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசேந்திர சோழதேவர் -3 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (1250-51) தம் உறவினர் கம்பய்யாவின் நலனுக்காகச் சிம்மன தண்டநாதர் நிலக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[31]

(தமிழ்) இதே சுவரிலுள்ள ஒய்சால மன்னர் பிரதாப சக்கரவர்த்தி வீர வல்லாள தேவர் -3 சகம் 126 விக்கிரம ஆண்டுக் கல்வெட்டு, வள்ளப்ப தனனாயக்கர் நிலம் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[32]

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மன்னர் நிலம் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[33]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர்-3 (ஆண்டு ஐயத்திற்குரியது) கல்வெட்டு, 32 பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[34]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் (3) 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 32 பசுக்களும் ஒருகாளையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[35]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 3 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இலக்குமதேவரின் அரசி உமை ஆழ்வார் நிலம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[36]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவன் (3) 30-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கோப்பெருஞ்சிங்கனின் அலுவலர் சோழகன் என்பவரின் தம்பி வேணாவுடையான் 50 பசுக்களை நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[37]

இதே சுவரிலுள்ள பல்லவ மன்னர் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கன் 2-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மூன்று விளக்குகள் வைக்க நீலகங்கராயன் 96 பசுக்களையும் மூன்று காளைகளையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[38]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் -3 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திக்கணை பெருமாள் நிலம் நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது.[39]

(தமிழ்ப்பாடல்) இதே சுவரிலுள்ள கல்வெட்டு[40] மகதைப்பெருமாள் என்கிற வானாதிவாகரன் பொன்பரப்பினானைப் புகழ்கிறது.

இதே சுவரிலுள்ள பல்லவ மன்னர் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவன் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, அரசி சாதுப்பெருமாள் பொன் கரண்டியும்[41] பொன் கலமும் நன்கொடை அளித்ததைப் பதிவு செய்துள்ளது.

இதே சுவரிலுள்ள ஓய்சால மன்னர் பிரதாப வல்லாள தேவர் 3சகம் 1262 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, (கிரந்தத்திலும்[42] தமிழிலும்) வள்ளபாதன் நாயக்கர் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, (தமிழ்) முடிவுபெறாமல் உள்ளது. விளக்கு[43] வைக்க இலக்குமதேவர் அரசி உமைஆழ்வார் நன்கொடை அளித்ததைக் கூறுகிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கட்டி அரசர்அரசி' 32[44] பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் அழகிய சீயன் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[45] (தமிழ்) கோப்பெருஞ் சிங்கதேவர் பிறப்பித்த ஓர் ஆணையைக் குறிப்பிடுகிறது.

இதே சுவரிலுள்ள பல்லவமன்னன் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (தமிழ்), கோப்பெருஞ் சிங்கதேவர் ஒரு கழுத்தணி[46] காசுமாலை ஒன்றை நன்கொடையாக அளித்ததைப் பதிவு செய்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு (ஆண்டு தெரியவில்லை) சேதிராயன் என்கிற கூத்தாடுவான் விளக்கு[47] வைக்க 48 பசுக்களையும் இரண்டு காளைகளையும் அளித்ததைப் பதிவு செய்கிறது.

இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் -3 18-ஆம் ஆண்டுக்[48] கல்வெட்டு, பணம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே சுவரிலுள்ள மதுரை, இலங்கை, கருவூர் ஆகியவற்றை வென்று பாண்டியன் முடிகொண்ட சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர்-3 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மன்னருக்கும் முதல் அமைச்சராகிய சேதிராயருக்கும் தலைவர்கள் பலர் இணைந்து நடப்பதாகவும் மன்னர் நன்மைக்கும் சேதுராயர் நன்மைக்கும் மாறாக நடக்கமாட்டோம் என்பதற்கும் அவர்கள் தந்த

வாக்குறுதியைப் பதிவு செய்கிறது.[49]

இக்கோயிலிலுள்ள சுப்பிரமணியர் சந்நிதியின் தெற்குச்சுவரில் கோப்பெருஞ்சிங்கதேவர் 27-ஆம் ஆண்டுக்[50] கல்வெட்டு, (தமிழ்) நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் அழகிய சீயர் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலில் நிறுவப்பட்ட திருவுருவத்திற்கு நீலகங்கரரயர் தேவியார் அரசி நங்கை ஆழ்வார் நிலம் நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது.[51]

(தமிழ்) இக்கோயிலின் ஏகாம்பரநாதர் சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள பல்லவ மன்னன் சகலபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[52] விளக்குகள் வைக்கப் பசுக்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 4-ஆம் ஆண்டுக்[53] கல்வெட்டு, இராசராச கார்கடமாராயன் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள பல்லவமன்னர் சகலலோகப் புவனச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவர் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைப்பதற்காக 32 பசுக்களையும்[54] ஒரு காளையையும் வணிகர் ஒருவர் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சந்நிதியின் மேற்குச்சுவரிலுள்ள (1331-ஆம் ஆண்டுக்கும் 1332-ஆம் ஆண்டுக்கும் இடையே ஆட்சிபுரிந்த) சோழமன்னர் திரிபுவன வீரசோழ தேவர் 7-ஆம் ஆண்டு (சித்திரபானு)[55] கல்வெட்டு, ஓர் அரசி நிலம் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே சந்நிதியின் தெற்குச்சுவரிலும் மேற்குச்சுவரிலுமுள்ள விசயநகரமன்னர் வீரசதாசிவதேவ மகாராயர் சகம்[56] 1470 கீலக ஆண்டுக் கல்வெட்டு, நிலக்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சந்நிதியின் இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்கசோழதேவர் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 16 பசுக்கள் அரை விளக்கு எரிக்க நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[57]

(தமிழ்) அருணாசலேசுவரர் கோயிலிலுள்ள சிதம்பரேசுவரர் சந்நிதியின் தெற்குச் சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசாதிராசதேவர் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நாகன் கயிலாயன் என்பவன் தாம் ஒரு புலியைச் சுட்டபோது குறி தப்பிச் சோழன் என்பவன் மீது பாய்ந்ததால் அவன்

இறந்ததாகவும் அதன் விளைவாக விளைந்த பாவத்தைப்போக்க 1 1/2 விளக்கு வைக்கத் தாம் 52[58] பசுக்களையும் ஒரு காளையையும் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 2-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[59] பொன்னும் நிலமும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[60] 32 பசுக்களும் ஒரு காளையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

(தமிழ்) இதே சந்நிதியின் மேற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி வீரராசேந்திர சோழதேவர் கல்வெட்டு, (ஆண்டு தெரியவில்லை) விளக்கு வைப்பதற்காக நன்கொடை வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. (வீரராசேந்திரன் என்னும் பட்டப்பெயர் கி. பி. 1063 முதல் 1070 ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்த மன்னரையும் மூன்றாம் குலோத்துங்கனையும்[61] குறிக்கும். இது மூன்றாம் குலோத்துங்கனைக் குறிப்பதாகக் கொள்ளலாம்).

(தமிழ்) இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசாதிராசதேவர் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[62] 3 பசுக்களும் ஒரு காளையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே கோயிலிலுள்ள கிளிக்கோபுரத்தின் வடக்குவாயில் பல்லவமன்னன் கோப்பெருஞ்சிங்கத் தேவரின் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 32 பசுக்களையும் ஒரு காளையையும்[63] ஒரு விளக்கு வைப்பதற்காக நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[64] வீரசேகர காடவராயர் நகை நன்கொடையாக அளித்ததைத் தெரிவிக்கிறது.

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் குலோத்துங்க சோழர் (3) 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, அரக்கலூர் வானக்கோவராயர் என்கிற பொன் பரப்பினான் மூன்று விளக்கு[65] வைக்க 96 பசுக்களும் 3 காளைகளும் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ் உரைநடையும் பாடலும்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் குலோத்துங்க தேவர் 21-ஆம்[66] ஆண்டுக் கல்வெட்டு, அவரால் நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க

தேவர்-3 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்குவைப்பதற்காக இராசகம்பீர சேதுராயரின் அலுவலரால் நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[67]

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு குலோத்துங்க சோழ மலைய குலராயன் நகைகளை நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[68] (கல்வெட்டின் கடைசியில் குறிக்கப் பெற்றுள்ளர் சேதிராயராக இருக்க வேண்டும்).

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க தேவர் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கங்கநாட்டிலுள்ள தகடூர் (தருமபுரி) அதியமான் என்கிற இராசதேவனால் மலையனூர் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[69]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 18-ஆம்[70] ஆண்டுக் கல்வெட்டு நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர்-3 (1178-1216) -மதுரை, இலங்கை ஆகியவற்றை வென்று பாண்டியன் முடிகொண்ட திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் (1178-1216) 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கரிகால சோழ அடையூர் நாடாழ்வான்[71] என்கிற மலையன் நரசிம்மவர்மன் நிலக்கொடை அளித்ததைக் குறிக்கிறது.

இதே இடத்திலுள்ள குலோத்துங்க சோழதேவர்-3 28-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கரிகாலசோழ[72] அடையூர் நாடாழ்வான் என்கிற வினைவென்றான் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே இடத்திலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர்-3 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[73] நீகங்கர் கரிய பெருமாள் இரண்டு கிராமங்களை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 64 பசுக்களும்[74] இரண்டு காளைகளும் இரண்டு விளக்குகள் எரிக்க அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, தகடூர் தலைவர் ஒருவரால்[75] 32 பசுக்களும் ஒரு காளையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே இடத்திலுள்ள கல்வெட்டு, கோபுரம் அமைச்சர் பாஸ்கரரால் கட்டப்பட்டதைக் குறிக்கிறது (இவர் வைதிக நிகண்டு இயற்றியவரா என்பதற்கு

ஆதாரம் இல்லை).[76]

(தமிழ்ப்பாடல்) அருணாசலேசுவரர் கோயில் கிளிக்கோபுர வாயிலின் வலப்புறத்திலுள்ள கல்வெட்டு, மகதன்வாணர்பிரான் என்பவரைக் குறிக்கிறது.[77]

(கிரந்தம்) இதே இடத்திலுள்ள கல்வெட்டு, பாணர்தலைவர் ஒருவர் கோயிலுக்கு முலாம் பூசியதைக் குறிக்கிறது.[78]

(தமிழ்)[79] இதே இடத்திலுள்ள கல்வெட்டு, வரிகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே கோபுரத்தில் வாயிலின் இடப்பக்கம். உள்ள கல்வெட்டு, சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன்-3 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும். இது பிருதிவிகங்கன் வன்னியமாதேவன் என்னும்பெயர் கொண்ட பங்கல நாட்டுத்தலைவர் ஒருவர் நிலம் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[80]

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி, குலோத்துங்க தேவர் 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வணிகச் சபையினர் பணம் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[81]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சேதிரன் வானராயன் நிலக் கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[82]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இரண்டு பசுக்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[83]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மூன்று ஆண்டுத் திருவிழாக்களின்போது ஒவ்வொருவரும் ஒரு கொடி வழங்குவதாக வணிகர் சிலர் முடிவு கூறியதை எடுத்துக் கூறுகிறது.[84]

இதே இடத்திலுள்ள திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசதேவர் 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 32 பசுக்களும் ஒரு காளையும் அளித்ததையும் எதிரிலிசோழ சம்புவராயன் நிலம் அளித்ததையும் குறிப்பிடுகிறது.[85]

இதே சுவரிலுள்ள சோழமன்னர் வீரராசேந்திர சோழதேவர் 2-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, குளத்திற்குப் பழுது பார்த்ததைக் குறிப்பிடுகின்றது.[86]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி

குலோத்துங்க தேவர் 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விக்கிரமசோழ சம்புவராயரால் 32 பசுக்களும் ஒரு காளையும் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.[87]

(தமிழ்) இதே இடத்திலுள்ள கல்வெட்டு, மகதைப்பெருமாள் என்கிற பொன் பரப்பினானைப் புகழ்கிறது.[88]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க தேவர் 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஒரு விளக்கு வைக்கப்படுவதற்காக 32 பசுக்களும் ஒருகாளையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[89]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதை குறிக்கிறது.[90]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 35-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மையக்கோயிலுக்கு முலாம் பூசப்பட்டதையும் அரக்கலூர்வானகோவராயன் என்கிற இராசராசதேவன் பொன் பரப்பினன் மூன்று கிராமங்களை நன்கொடையாக அளித்ததையும் குறிக்கிறது.[91] இந்நாள் ஞாயிறு 2 ஜூன் கி.பி. 1213-ஆம் ஆண்டு தேதிக்கு ஒத்திருக்கிறது.

இதே இடத்திலுள்ள மதுரை, இலங்கை ஆகியவற்றை வென்று பாண்டியர் முடிகொண்ட சோழமன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க மன்னன் குலோத்துங்க சோழதேவன்-3 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சோழேந்திர சிம்ம பிருதிவி கங்கன் நிலக் கொடை வழங்கியதைக் குறிக்கிறது.[92]

இதே இடத்திலுள்ள சோழமன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 27-ஆம் ஆண்டு கல்வெட்டு, எந்த எந்தச் செயல்களுக்காகச் சில வரிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.[93]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் 24-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கோயிலுக்கு இருவர் செய்த நன்மைகளை முன்னிட்டு அவர்களுக்குச் சில நிலங்களைக் கோயில் அதிகாரிகள் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[94]

இதே இடத்திலுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசராசசோழன் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, கால்பங்கு விளக்கு வைக்க 24 செம்மறி ஆடுகள் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[95]

(தமிழ்) அருணாசலேசுவரர் கோயிலின் வல்லாள கோபுரத்தில் வடக்குவாயில் விசயநகர விசயேந்திர அரியண்ண உடையார் (ஹரிஹரர் 2) சகம் 1299 பிங்கல ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. இது வீர வல்லாள வாயில் காவலரின்

பராமரிப்புக்காக நெல்லும் பணமும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[96]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சேதமடைந்த விசயநகர கிருஷ்ணதேவராயர் மகாராயர் 1433 பிரமோதூத ஆண்டுக் கல்வெட்டு, நிலக்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[97]

இதே இடத்திலுள்ள விசயநகர மன்னர் வீரதேவராயர் (1) மகன் சகம் 1340 விளம்பி ஆண்டுக் கல்வெட்டு, இடங்கை சாதியும் வலங்கை சாதியும் ஒரே சலுகைகளைப் பெற வேண்டுமென்று மன்னர் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது.[98]

இதே இடத்திலுள்ள அரியப்ப உடையார் மகன் (ஹரிஹரர் 2) மகன் விசயநகரமன்னர் வீரவிருப்பண்ண உடையார் சகம் 1310 விபவ ஆண்டுக் கல்வெட்டு, கோயில் வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[99]

(தமிழ்) இதே இடத்திலுள்ள வீரப்பிரதாப தேவராய மகாராயர் (ஆண்டு தெரியவில்லை) கல்வெட்டு உடைந்துள்ளது.[100]

இதே இடத்திலுள்ள விசயநகர மன்னர் சதாசிவ மகாராயர் சகம் 1489 பிரபவ ஆண்டுக் கல்வெட்டு, அச்சுதப்ப நாயக்கர் பிறப்பித்த ஆணைக்கேற்பக் கோயிலுக்குச் சொந்தமான கிராமங்களில் சில நிலங்களுக்குரிய தீர்வைகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிக்கிறது.[101]

(தமிழிலும் கிரந்தத்திலும்) இதே இடத்திலுள்ள வீரதேவராய மகாராயர்(1) மகன் விசயநகர மன்னர் வீரவிசயபூபதிராயர் சகம் 1335 விசய ஆண்டுக் கல்வெட்டு விளக்கு வைக்க அமைச்சர் சவுண்டப்ப உடையார் மகன் அன்னதான உடையார் 32 பசுக்களும் ஒரு காளையும் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[102]

(தமிழ்) இதே கோபுரத்தின் இடப்புறத்து வாயிலிலுள்ள விசயநகரமன்னர் தேவராய மகாராயர் 2 சகம் 1350 பிங்கல ஆண்டுக் கல்வெட்டு, நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[103]

(தமிழ்)இதே இடத்திலுள்ள (தேவராயர் 2 மகன்) விசயநகர மன்னர் வீரமல்லிகார்ச்சுனராயர் சகம் ஸ்ரீமுக ஆண்டுக் கல்வெட்டு, நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[104]

இதே இடத்திலுள்ள பாண்டியமன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி வல்லபதேவர் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[105]

இதே கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் மேற்குச்சுவரின் வலப்புறத்து வாயிலின் அரிஅர உடையார்-2 மகன் விசயநகரமன்னர் விருப்பாட்சி உடையார்

(கிருட்டினதேவராயர் ஆட்சியில் ... ) (விருப்பாட்சர்_2) சகம் 1310 விபவ ஆண்டுக் கல்வெட்டு, இம்மன்னரின் உறவினர் (கம்பண்ண உடையார்_2 மகனும் முதலாம் புக்காவின் பேரனுமாகிய) ஐம்மண உடையார், தம் தந்தையார் இறந்ததை முன்னிட்டு அவர் பெயரில் வேதம் ஓதுவதற்கு ஐந்துபேர்களுக்கு நிலம் ஒப்படை செய்ததைக் குறிக்கிறது.[106]

இதே கோயிலின் மூன்றாம் பிராகாரத்தின் மேற்குச்சுவரிலுள்ள கோபுரத்தின் வலப்புறத்து வாயிலில் வீரபுக்கண்ண உடையார் (1) மகனான இரண்டாம் கம்பண்ண உடையாரின் மகன் ஐம்மண உடையார் சகம் 1296 ஆனந்த ஆண்டுக் கல்வெட்டு, அதே கொடையைக் குறிப்பிடுகிறது.[107]

இதே கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் முன்புறமுள்ள கல்வெட்டு, விசயநகரமன்னர் கிருட்டின தேவராயர் சகம் ஆண்டு 1438 தாது ஆண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு இம்மன்னன், உதயகிரி, இரவுத்தராய மகாபாத்திர அட்டங்கி, வினுகொண்ட, பெல்லம்கொண்ட, கொண்டவீடு முதலியவற்றில் வெற்றி அடைந்ததையும் ஓரிசாவின் பிரதாப ருத்திரர் மகன் வீரபத்திரய்யா, குமார ஹம்மீரபத்திரர் மகன் நரசிம்ம தேவர், ரெய்ச்சூர் மல்லுகான் முதலியோர்களைப் பிடித்து அவர்களுக்கு மன்னிப்பு அளித்ததைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இதன் நினைவாக அவர் தரணிக்கோட்டையில் அமரேசுவரர் கோயில் மண்டபத்தையும் அதற்கு அருகிலுள்ள குளத்தையும் ஏழு தளங்களையுடைய கோபுரத்தையும் அமைத்தார் என்பதாகக் கூறுகிறது.[108]

சகம் 1668 அட்சய ஆண்டில் மைசூர் சமத்தான முதல் அமைச்சர், அருணாசலேசுவரருக்கு ஒரு கலம் (14 1/2 பாரங்கள்) நிறையுடையது அளிக்கப்பட்டதைக் கற்பூர விளக்குக்குரிய சில செப்புப் பாத்திரங்களில் வரையப்பெற்றது குறிப்பிடுகிறது.

கிருட்டின்தேவராயர் ஆட்சியில் 'அறம் வழுவாத மொதலியனும்' 56 நாடுகளில் வாழ்ந்த சிலரும் சேர்ந்து ஏழாயிரம் கொண்ட தம்பிரானுக்கு ஒரு மடம் அமைத்ததையும் தவிர அம்மன் சந்நிதி விமானம் அமைத்ததையும் தம்பிரானின் பராமரிப்புக்காக மேலப்பழையூர் கிராமத்தை அளித்ததையும் திருமணங்களில் அறுபணம், அரிசி, துணி ஆகியவற்றை அளித்ததையும் பேரய நாடு, மடம் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இக்கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தையும் அதனருகிலுள்ள தீர்த்தக் குளத்தையும் விசயநகர மன்னர் கிருட்டின தேவராயர் அமைத்தார் எனக் கல்வெட்டு கூறுகிறது.

திருவண்ணாமலையின் தன்னிகரற்ற தனிச்சிறப்புக்குக் காரணம் அருணாசலப் பெருமான் அருள்புரிந்து வருவதேயாகும். அண்டமே ஊர்; அண்டத்தின் சுவர்களே கோயில் மதில்கள்; அண்டத்தின் வெளிப்பரப்பே கோயிற் பரப்பு; திருவண்ணாமலைத் தலமே கோயிற் கருவறை; மலையே கோயிற் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகும். அருளே உருவாய் அமர்ந்த அண்ணாமலைப் பெருமான், காலம்

தவறாது உரிய நேரத்தில் கோயிலுட் சென்று தம்மைத் தரிசித்தல் அரிது என்பதற்காகவே திருவண்ணாமலையைச் சுற்றிலுமுள்ள பெரும்பகுதி மக்கள் அவரவர் இருந்த இடத்திலிருந்தே வணங்கி உய்ந்திட மாமலையாய்த் திகழ்கிறார். பிற மலைகள் யாவும் உடற்பிணி போக்கும் மூலிகைகளைத் தாம் தரும். ஆனால், திருவண்ணாமலையோ நினைப்போர் தம் பிறவிப் பிணியையே தீர்த்திடும் மாமருந்துமலை ஆகும். மற்றமலைகள் வீடு கட்ட மரங்களைத் தாம் தரும்; இத்திருவண்ணாமலையோ தன்னை நினைப்பவர்களுக்குப் பேரின்ப வீட்டையே நல்கும்.

சிவவழிபாட்டைப் பன்னெடுங்காலமாக இக்கோயில் நிலைநாட்டிவருகிறது. அருணகிரிப் பெருமான் உருவமாகவே விளங்கிக் கருணை பாலித்து வரும் இத்தெய்வத் திருமலை உச்சியில், கார்த்திகை மாதம் கார்த்திகை நாளில் அருட்சோதி தரிசனம் காட்டப்பெறுகிறது. பெரிய செப்புக் கொப்பரை ஒன்றில் நெய், துணி, கற்பூரம் ஆகியவற்றைக் கொண்டு மலை உச்சியில் தீபம் ஏற்றப்பெறும் சிறப்பு வாய்ந்த கார்த்திகைத் தீப உற்சவம் இந்தியாவில் நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த திருவிழாக்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்விழாவின் தொன்மையைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் மலை மீது விளக்கேற்றி வழிபடும் இவ்வழக்கம், பன்னெடுங்காலமாக நம்நாட்டில் நடந்து வருவதை, 'குன்றத்து உச்சிச்சுடர்' என்று சீவகசிந்தாமணியும் 'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலை நாள் விளக்கு' என கார் நாற்பதும் 'மதி நிறைந்து அறுமீன் சேரும்அகல் இருள் நடுநாள் மறுகு விளக்கு உறுத்து மாலை தூக்கிய, பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய விழவு என்று அகநானூறும் அழகுபடக் கூறுகின்றன. மேலும் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனாரும் 'வேலி நோக்கிய விளக்கு நிலையும்' (தொல், பொருள் புறத்திணை இயல் 35) என்று குறிப்பிடுகிறார். அதற்கு மெச்சு புகழ் நச்சினார்க்கினியர், "கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு" என்று உரை வகுப்பதைக் காணலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், . . . 'தொல் கார்த்திகை நாள் தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு' . . . என்றருளிக் கார்த்திகை விழாவின் மேன்மையோடு பெண்டிர்க்கே உரிய அதன் பெற்றிமையையும் தொன்மையையும் எடுத்துக்காட்டுவதை உணரலாம்.

கோயில்களில் விளக்கு வைத்தலின் சிறப்பை இக்கோயில் எடுத்துக்காட்டியுள்ளதால், இவ்வகையில் விளக்குகள் வைப்பதற்கு இங்குப் பல திருப்பணிகள் மேற்கொள்ளப் பல அறக்கொடைகளும் நன்கொடைகளும் வழங்கப்பட்டுள்ளன. பிற கோயில்களில் விளக்கு வைப்பதற்காகப் பலர் பல நன்கொடைகள் அளித்துள்ளார்கள் என்பதை அந்த அந்தக் கோயில்களின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயிலில் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. விடியற்காலைப் பூசை காலை 5 1/2 மணிக்கும் கால சந்திப்பூசை காலை 8 மணிக்கும் உச்சிக்காலப்பூசை

பகல் 11 1/2 மணிக்கும் மாலைநேரப்பூசை மாலை 6 மணிக்கும் இரண்டாம் காலப்பூசை இரவு 7 1/2 மணிக்கும் அர்த்தசாமப்பூசை இரவு 9 மணிக்கும் நிகழ்த்தப்பெறுகின்றன.

நாள்தோறும் காலை 5 1/2 மணி முதல் பகல் 12 1/2 மணி வரையிலும் மாலை 3 1/2 மணி முதல் இரவு 9 1/2 மணி வரையிலும் வழிபாடு நடத்தப்படுகிறது. விழாக் காலங்கள் மற்றும் சிறப்பு நாள்களில் பூசை நேரங்கள் மாறுபடும். காமிக ஆகம முறையில் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் பஞ்சபருவ உற்சவங்களாகிய ஒவ்வொரு மாதப்பிறப்பு, சுக்கிரவாரம், அமாவாசை, பௌர்ணமி, வளர்பிறைச் சதுர்த்தி, சோமவாரம், கிருத்திகை, பிரதோடம், சுக்கில சஷ்டி ஆகிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| சித்திரை மாதம் | - வசந்த உற்சவம் 10 நாள்கள் நடைபெறும். |
| ஆனி மாதம் | - தட்சணாயன புண்ணிய கால பிரம்மோற்சவம் 10 நாள்கள் நடைபெறும். |
| ஆடி மாதம் | - ஆடிப்பூர உற்சவம், கடைசி நாள் தீ மிதி விழா - 10 நாள்கள் நடைபெறும். |
| புரட்டாசி மாதம் | - நவராத்திரி உற்சவம் 9 நாள்கள் நடைபெறும். |
| ஐப்பசி மாதம் | - கந்தர் சஷ்டி உற்சவம் 9 நாள்கள் நடைபெறும். |
| கார்த்திகை மாதம் | - பிரம்மோற்சவம் - தீபத்திருவிழா - 10 நாள்கள் நடைபெறும். 10-ஆம் நாள் மாலையில் தீப தரிசனக்காட்சி. |
| மார்கழி மாதம் | - மாணிக்கவாசகர் உற்சவம் - 10 நாள்கள் நடைபெறும். |
| தை மாதம் | - உத்திராயண புண்ணிய கால உற்சவம் 10 நாள்கள் நடைபெறும். தை மாதம் 2-ஆம் தேதி திருவூடல் உற்சவம். |
| பங்குனி மாதம் | - பங்குனி உத்திரம் (ஆறு நாள்கள் நடைபெறும்). |

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாளில் அருணகிரியார் விழா கொண்டாடப்பெறுகிறது.

இத்திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த திருவிழா கார்த்திகைத் தீபப் பெருவிழாவாகும். சிவபெருமான் சோதிப் பிழம்பாக இருந்தார் என்பதைக் குறிக்கும் வகையில் ஆண்டு தோறும் கார்த்திகைத் தீபப்பெருவிழா பத்து நாள்கள் நடைபெறும். பத்தாம் நாள் தீப தரிசன நாளன்று

உதயகாலத்தில் பரணி தீபமும் பிரதோட காலத்தில் அர்த்தநாரீசுவரர் மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுப்பதும் அவ்வேளையில் மலையின் உச்சியில் சோதி சொரூபம் காட்டலும் அதே சமயத்தில் கோயிலுள் பஞ்ச மூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

உமாதேவியார் விளையாட்டாகச் சிவபெருமானின் கண்களைத் தம் கையால் மூடிவிட உலகம் எங்கும் இருளாயிற்று. சீவராசிகள் இருளில் துன்பம் அடைந்தன. அந்தப் பாவத்தைத் தீர்க்க வேண்டி உமாதேவியார் காஞ்சி மாநகரில் மணலை இலிங்கமாக அமைத்துப் பூசை செய்து வரும் நாளில், சிவபெருமான் தோன்றித் திருவண்ணாமலை சென்று தவமியற்றித் தமது இடப்பாகம் பெறுமாறு அருளிச் செய்தார். சிவபெருமான் கட்டளைப்படி பார்வதி தேவியார் திருவண்ணாமலைக்கு வந்து பவளக்குன்று மலையில் பர்ண சாலை அமைத்துக் கௌதம முனிவரின் உதவியால் தவம் செய்தார். அத்தவத்தை மகிடாசுரன் என்பவன் கெடுத்து வந்தான். உமாதேவியார் துர்க்கையாக உருவெடுத்து அவனை வதம் செய்து, கார்த்திகை மாதம் பௌர்ணமி கூடிய கிருத்திகை பிரதோட காலத்தில் மலை மீது சோதி சொரூபத் தரிசனம் கண்டு சிவபெருமானின் இடப்பாகம் பெற்று அமர்ந்தார். அதனைக் குறிக்கும் வகையில் கார்த்திகை தீபத்தன்று மாலை சரியாக 6 மணிக்கு அர்த்தநாரீசுவர மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சிறப்பு உற்சவங்களாக வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடி வரலட்சுமி நோன்பு, அம்மன் நிறையணி, ஆவணி விநாயகர் சதுர்த்தி, ஐப்பசி அன்னாபிடேகம், மார்கழி வைகுண்ட ஏகாதசி, ஆருத்ரா தரிசனம் ஆகியவை கொண்டாடப் பெறுகின்றன.

1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைச் சட்டவிதிகளின் படி நிருவாகம் செய்யப்பட்டுவருகிறது. 7-3-86-ஆம் நாள் முதல், உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலர் பணியாற்றி வருகிறார். இக்கோயிலில் மொத்தம் 110 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். உதவி ஆணையர் செயல் அலுவலர், கோயிலில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோருக்குச் சம்பளம், படிகள் யாவும் கோயில் வருமானத்திலிருந்து கொடுக்கப்படுகின்றன.

இக்கோயிலின் துணைக் கோயில்களாக அடி அண்ணாமலையிலுள்ள ஆதி அருணாசலேசுவரர் கோயில் திருவண்ணாமலையிலுள்ள துர்க்கையின் கோயில் ஆகியவை உள்ளன. இக்கோயிலின் குழுக்கோயிலாகத் திருவண்ணாமலை வட்டம் சோமாசிபாடி பாலசுப்பிரமணியர் கோயில் உள்ளது.

இக்கோயிலுக்குச் சொந்தமாகப் பல கிராமங்களில் 90 ஏக்கர் நன்செய் நிலமும் 272.76 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. இந்நிலங்கள், மற்றும் பலவகை இனங்கள் ஆகியவற்றின் பொது ஏலத்திலிருந்து 3 இலட்சம் உருபாயும் அருச்சனை, அபிடேகங்கள், உண்டியல், கட்டடங்கள், மனைப்பகுதிகள் ஆகியவற்றின் மூலம் 22 இலட்சம் உருபாயும் (மொத்தம் ஏறத்தாழ 25 இலட்சம் உருபாய்) வருமானமாகக் கிடைக்கிறது.

நிலவரி, பஞ்சாயத்து வரி, ஆலயப்பணியாளர் சம்பளம், திருவிழா, நாள்பூசை, ஆகியவற்றிற்கு இந்த வருமானத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது. இக்கோயிலின் நேரடிப் பார்வையில் சொந்த சாகுபடி, சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் செய்யப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் "அன்பு இல்லம்" நடத்தப்படுகிறது. இதில் ஆதரவற்ற 50 ஆண் குழந்தைகள் உள்ளனர். இக்குழந்தைகளுக்கு உணவு, உடை, தங்கும் இடம் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இச்செலவுகள் யாவும் கோயில் நிதியிலிருந்து செய்யப்படுகிறது. இக்கோயிலுக்கு வழிபட வருவோர் தங்குவதற்குக் குடில்கள் நான்கும் ஓய்வு விடுதிகள் இரண்டும் தங்கும் அறைகள் இருபத்து மூன்றும் குறைந்த வாடகைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருமணமண்டபம் ஒன்றும் உள்ளது.

இக்கோயிலில் முக்கியமான ஆபரணங்களாக இரத்தின கிரீடம், தனியம்மன் இரத்தின கிரீடம், தங்க நாகாபரணம், வைர நெற்றிப்பட்டம் இரண்டு, சோமாசுகந்த மூர்த்தி வைர அஸ்தம், அண்ணாமலையார் மூலத்தான வைர நெற்றிப்பட்டம், உற்சவ விநாயகர் தங்கக் கவசம், கம்பத்திளையனார் தங்கக் கவசம், ஆகியவை (1987 ஆம் ஆண்டுக் கோயிலின் தல விளக்கத்தின்படி) உள்ளன.

வெள்ளி இரதம், சுவாமி தேர், பெரிய வெள்ளி இடபம், பெரிய வெள்ளி இந்திர விமானம், சிறிய வெள்ளி இந்திர விமானம், வெள்ளிக் கற்பகவிருட்சம், வெள்ளிக் காமதேனு, கட்டம், அம்மன்தேர், மர இடப வாகனம், சுவாமி, அம்மன் சந்நிதிகளில் இரத விளக்குகள் ஆகிய வாகனங்கள் உள்ளன.

### திரு அண்ணாமலையார் கோயிலைப் புகழும் நூல்கள்

1. தேவாரம்
2. திருவாசகம்
3. பதினோராந்திருமுறை
4. பெரியபுராணம்
5. கந்தபுராணம்
6. திருப்புகழ்
7. சோண சைல மாலை
8. திருவருணைக் கலம்பகம்
9. அருணாசலபுராணம்
10. அருணாசல மகாத்மிய வசனம்
11. திருவருணை அந்தாதி
12. அருணகிரி அந்தாதி
13. அண்ணாமலை வெண்பா
14. அண்ணாமலைச் சதகம்
15. சாரப் பிரபந்தம்
16. கார்த்திகைத் தீப வெண்பா
17. சோணாசல வெண்பா

18. சோணாசலச் சதகம்
19. திருவருணைக் கலி வெண்பா
20. திருவண்ணாமலைத் திருவருட் பதிகம்
21. அருணாசலீசர் பதிகம்
22. அருணாசலேசுவரர் பதிகம் - 2
23. உண்ணாமுலையம்மன் சதகம்
24. அருணாசலேசர் நவகாரிகை மாலை
25. உண்ணாமுலையம்மன் வருகைப் பதிகம்
26. அருணாசலச் சதகம்
27. அருணாசல அட்சர மாலை
28. அண்ணாமலையார் வண்ணம்
29. திருவண்ணாமலைப் பதிகங்கள்
30. அண்ணாமலைப் பஞ்சரத்னம்
31. திருவருணைத் தனிவெண்பா
32. அட்சரப் பாமாலை
33. ஸ்ரீ அருணாசலேசுவரர் உயிர்வருக்கம் படைத்தற் பாமாலை
34. அருணாசல அட்சர மணி மாலை
35. அருணாசல நவமணி மாலை
36. அருணாசலப்பதிகம்
37. அருணாசல அஷ்டகம்
38. அருணாசலப் பஞ்சரத்னம்

---

இவ்வாறு அடிமுடி தேடிய திருமால், பிரமதேவர் யாவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாம் வசிக்கும் உலகத்தைப் போன்ற பல அண்டங்கள் நாம் வாழும் உலகத்திலுள்ள உயிர்த் தொகுதிகளைப் போன்ற கணக்கிடுதற்கரிய உயிர்த் தொகுதிகளுடன் இயங்குகின்றன என்பதாக நூல்கள் கூறுகின்றன. ஆன்ம வர்க்கங்களில் சிறந்த தவங்கள் புரிந்து நற்பதமெய்தியவர்களை, அந்த அண்டங்களுக்குப் படைத்தல் தொழிலோ காத்தல் தொழிலோ புரியுமாறு முழுமுதற்கடவுள் நியமிப்பார். இவர்கள் பிரம விட்டுணு என்னும் பெயருடன் இருப்பர். இவர்கள் காரியேசுவரர் அல்லது அனுபக்கம் எனப்படுவர். இவ்வகையில் பிரமவிட்டுணுக்கள் பல்வேறு காலத்தில் இருந்திருக்கின்றனர் எனக் கொள்ளவேண்டும். இவ்வுண்மையை "நூறு கோடி பிரமர்கள் நொங்கினார், ஆறு கோடி நாராயண ரங்ஙனே, ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர், ஈறிலாதவ னீசனொருவனே" என்று அப்பர் கூறுவதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய அதிகாரங்களை ஒரு கற்ப காலத்தில் இருந்த பிரமதேவரும் திருமாலும் தங்களது உண்மை நிலையை அறிந்து கொள்ளாமல் படைத்தல், காத்தல் தொழில்களுக்குத் தாங்களே பரமகாரணர் எனத் தருக்கி மயங்கி, தங்களுக்குள்ளே தாம் தாமே தலைவர் என்பதாகக் கருதி ஒருவரோடு ஒருவர் விரோதங் கொண்டனர். பின்னர், இவ்விருவருக்கும் போர் நிகழ்ந்தது. இதன் விளைவாக அவர்கள் சிவசோதியின் அடிமுடிதேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் ஆன்ம வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாதலால், இவர்களுக்கு இச் சமயம் அகந்தை மேலிட்டது என்பதை நன்குணர்ந்து கொண்டால் அடிமுடி தேடிய வரலாற்றின் அடிப்படைத் தத்துவத்தை அறிந்து கொள்ள இயலும்.

திருவடி தேடிய திருமாலிலும் வேறுபட்டவர் இவ்வரலாற்றில் சிவபெருமானின்றும் வேறுபடாத் திருமால். இத்திருமால் சிவபெருமானுக்குத் தேவியாகப் போற்றப்படுவதை அநேக சாத்திரங்களில் காணலாம். திருமாலை "மாதாய மாலவனை மாயவனை" எனத் திருமழிசை ஆழ்வார்

குறிப்பிடுகிறார். "அரியலால் தேவியில்லை" என்பதாகக் குறிப்பிடுகிறார் அப்பர். மேலும் "ஒருவருக்குப்பெயர் அரன், மற்றொருவருக்குப் பெயர் நாராயணன்; ஒருவருக்கு வாகனம் இடபம், மற்றொருவருக்கு வாகனம் கருடன்; ஒருவரைப் பொறுத்தவரையில் பிரமாணம் வேதம்; மற்றொருவரை பொறுத்தமட்டில் பிரமாணம் ஆகமம். ஒருவர் வசிக்குமிடம் கயிலாயம், மற்றொருவரது இடம் கடல்; ஒருவரது தொழில் அழித்தல், மற்றொருவரது தொழில் பாதுகாத்தல்; ஒருவர் கையில் இருப்பது சூலம், மற்றொருவரது கையில் இருப்பது சக்கரம்; ஒருவரது உருவம் எரிபோன்று செம்மைநிறம், மற்றொருவரது உருவம் கடல் போன்று கருமை நிறம். ஆனால் இருவரது சரீரமும் ஒன்றே (ஒன்று)" என்பதான கருத்தை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாம் திருவந்தாதியிலுள்ள பொய்கையாழ்வாரது பாடல் ஒன்று எடுத்துரைக்கிறது: அப்பாடல் வேற்றுமை உணர்ச்சியை அகற்றிவிடும்; ஒற்றுமையை வலியுறுத்தும். அப்பாடல்,

"அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ஊர்தி
உரைநூல் மறைஉறையும் கோயில் வரைநீர்
கருமம் அழிப்புஅளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி ஒன்று"

என்பதாகும். சிவபெருமான், திருமால் ஆகிய இருவர் உருவங்களும் ஓருருவமாக இணைந்தன. அந்தரூபமே அரிஅர ரூபம். இதைப்பற்றி

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால் சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்(கு)
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

என்று நாலாயிரத் திவ்வியப் பிரபந்த மூன்றாம் திருவந்தாதியிலுள்ள பேயாழ்வாரது பாடல் குறிப்பிடுகிறது.

(1அ 469/1902; 2. 470/1902; 3. 471/1902; 4. 472/1902; 5. 473/1902; 6. 474/1902; 7. 475/1902; 8. 476/1902; 9. 477/1902; 10. 478/1902; 11. 479/1902; 12. 480/1902; 13. 481/1902; 14. 482/1902; 15. 483/1902; 16. 484/1902; 17. 485/1902; 18. 486/1902; 19. 487/1902; 20. 488/1902; 21. 488(*b*) /1902; 22. 489/1902; 23. 490/1902; 24. 491/1902; 25. 492/1902; 26. 493/1902; 27. 494/1902; 28. 495/1902; 29. 496/1902; 30. 497/1902; 31. 498/1902; 32. 499/1902; 33. 500/1902; 34. 501/1902; 35. 502/1902; 36. 503/1902; 37. 504/1902; 38. 505/1902; 39. 506/1902; 40. 507/1902; 41. 508/1902; 42. 509/1902; 43. 510/1902; 44. 511/1902; 45. 512/1902; 46. 513/1902; 47. 514/1902; 48. 515/1902 49. 516/1902; 50. 517/1902; 51. 518/1902; 52. 519/1902; 53. 520/1902; 54. 521/1902; 55. 522/1902; 56. 523/1902; 57. 524/1902; 58. 525/1902; 59. 526/1902; 60. 527/1902; 61. 528/1902; 62. 529/1902; 63. 530/1902; 64. 531/1902; 65. 532/1902; 66. 533/1902; 67. 534/1902; 68. 535/1902; 69. 536/1902; 70. 537/1902; 71. 538/1902; 72. 539(அ)/1902; 73. 539(ஆ)/1902; 74. 540/1902; 75. 541/1902; 76. 542/1902; 77. 543/1902; 78. 544/1902; 79. 545/1902; 80. 546/1902; 81. 547/1902; 82. 548/1902; 83. 549/1902; 84. 550/1902; 85. 551/1902; 86. 552/1902; 87. 553/1902; 88. 554/1902; 89. 555/1902; 90. 556/1902; 91. 557/1902; 92. 558/1902; 93. 559/1902; 94. 560/1902; 95. 561/1902; 96. 562/1902; 97. 563/1902; 98. 564/1902; 99. 565/1902; 100. 566/1902; 101. 567/1902; 102. 568/1902; 103. 569/1902; 104. 570/1902; 105. 571/1902 106. 572/1902; 107. 573/1902 108. 574/1902)

## திரு அடி அண்ணாமலை

# ஆதி அருணாசலேசுவரர் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலைக் கோயிலுக்கு நேராக மலையின் பின்புறம் அடி அண்ணாமலை ஊரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு மூன்று ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இஃது அருணகிரிநாதரின் திருப்புகழ் பெற்ற தலம் ஆகும். இதற்கு அருகில் மாணிக்கவாசகர் திருக்கோயில் அமைந்துள்ளது.

அண்ணாமலை என்ற ஊர் தோன்றுவதற்கு முன்பே இக்கோயில் தோன்றியதால் இஃது ஆதியருணாசலம் எனப் பெயர் பெற்றது. இப்போது அப்பெயர் அடிஅண்ணாமலை என வழங்கிவருகிறது.

கிழக்கு நோக்கியவாறுள்ள வாயிலின் உட்பகுதியில் பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை உள்ளன. மேலும் ஒரு நந்திதேவர் திருவுருவம் கிழக்குப் பிராகாரத்திலும் மற்றொரு திருவுருவம் கோயிலின் உட்பிராகாரத்தில் மூலவர் ஆதி அண்ணாமலையாரை நோக்கியவாறும் உள்ளன.

உட்பிராகாரத்தில் கிழக்கிலிருந்து வலம் வரும்போது அறுபத்து மூவர் ஓவியத் திருவுருவங்கள் வடக்கு நோக்கியவாறுள்ளன. வெளிப்பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் அடுத்து ஒரு சிறு அமைப்பில் விநாயகர், சோமாசுகந்தர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், பழனிஆண்டவர், அத்திரதேவர் ஆகியோர் திருமேனிகளும் உள்ளன. அடுத்து வள்ளிதெய்வயானையுடன் ஆறுமுகர் சந்நிதியும் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் அபித குஜாம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அம்பிகைகோயில் வாயிலின் இருபுறமும் துவார பாலிகைகள் திருவுருவங்கள் காணப்படுகின்றன. அம்பிகை சந்நிதிக்குக் கிழக்கில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இப்பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியில் நவக்கிரகங்களும் அவற்றின் எதிரில் சூரியன் திருவுருவமும் உள்ளன.

கருவறையின் முன் அர்த்தமண்டபத்தில் நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகியோர் திருமேனிகள் உள்ளன. கருவறையில் ஆதி அருணாசலேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறைக் கோட்டச்சுவர் மாடங்களில் முறையே விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் உள்ளனர். மேற்குப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு சனீசுவரர், சப்தமாதர், அண்ணாமலையார், ஐயனார், நவக்கோள்கள் ஆகியோர் சந்நிதிகளும் சில உடைந்த சிற்பங்களும் உள்ளன.



ஆதி அருணாசலேசுவரர் ஆலயம், திருவண்ணாமலை

தீர்த்தக்கிணறு வெளிப்பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியிலுள்ளது.

கோபுரம் ஐந்து நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்டமைந்துள்ளது. சுவாமி சந்நிதி மீதும் அம்பிகை சந்நிதி மீதும் மூன்று நிலைகளைப் பெற்றுள்ள விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறுமுகர் சந்நிதி மீது இருநிலை விமானம் அமைந்துள்ளது.

நகரத்தார் எனப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், திருப்பணி செய்து இக்கோயிலை அழகுபடுத்தியுள்ளனர். வடக்குப் புறத்தில் கயிலாய மலையை இராவணேசுவரன் தூக்குவது போன்ற சிற்பமும் மதில்களில் சரசுவதி, இலக்குமி, இடபதேவர் சிற்பங்களும் காணப்படுகின்றன. அறுபத்து மூவர் திருவுருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. விதானங்களில் பூக்கள், விலங்குகள் போன்றவையும் செதுக்கப்பட்டுள்ளன.

குருக்கள் பூசை செய்துவருகின்றார். பங்குனி மாதம் காமதகனம், சித்திரை மாதம் பார்வதி கல்யாணம், வைகாசி மாதம் காமனை எழுப்புதல் ஆகிய விழாக்களும் மார்கழித் திருவெம்பாவை விழா, தைமாதம் ஊடல் உற்சவம், மாசி மகம் ஆகிய விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருவண்ணாமலைக் கோயிலின் துணைக் கோயிலாக இது விளங்குகின்றது. இக்கோயில் திருவண்ணாமலை இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அலுவலரின் நிருவாகப் பொறுப்பில் உள்ளது.

## திருவண்ணாமலை நகர்

# கன்னிகாபரமேசுவரி கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டம் திருவண்ணாமலை நகரிலுள்ள அருணாசலேசுவரர் கோயிலுக்குத் தெற்கே கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கன்னிகாபரமேசுவரி வைசிய குலத்தில் தோன்றிய மங்கை. இவளை மன்னன் ஒருவன் திருமணம் செய்ய விரும்பியபோது இவள் உடன்படாமல் தான் வளர்த்த யாக குண்டத்தில் கன்னியாகப் புகுந்ததால், இவ்வம்மையாருக்குக் கோயில் எழுப்பியதாக மரபுவழிச் செய்தி கூறுகிறது.

மன்னன் விட்டுணுவர்த்தனன் முற்பிறப்பில் அம்பிகையை வழிபட்டு வந்தான். அவன் ஸ்ரீசக்கர வழிபாட்டில் மிகவும் ஈடுபட்டுப் பேறுபெற்றான் எனக் கோயில்

வரலாறு கூறுகிறது.

இக்கோயிலின் நுழைவாயில் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில் உட்புறத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. இக்கோயிலின் மகா மண்டபத்தின் இடப்புறத்தில் ஜனார்த்தனப் பெருமாள் இராமமந்திர ஸ்தூபியும் வலப்புறம் நவக்கிரக சந்நிதியும் உள்ளன.

கருவறையில் கன்னிகாபரமேசுவரி 36 மீட்டர் நீளமும் 13 மீட்டர் அகலமும் கொண்ட தூய்மையானதும் அழகானதுமாகிய கட்டடப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். இக்கோயிலில் பெருமாள், சீதேவி, பூதேவி தாயார் ஆகியோர் தம் உற்சவத் திருவுருவங்கள் உள்ளன. புகழ்பெற்ற இரவிவர்மா வண்ணம் தீட்டிய இராமர் முடிசூட்டும் படமும் கிருட்டினர் திருவுருவப் படங்களும் கோதண்டராமர், ஆண்டாள், இலட்சுமி, கஜலட்சுமி ஆகியோர் படங்களும் உள்ளன.

கன்னிகாபரமேசுவரியின் படத்தில் இவ்வீசுவரியின் மூன்று திருவுருவங்கள் உள்ளன. இடப்புறத்தில் இருகைகளுடன் இளவயதில் கன்னிகாபரமேசுவரியின் திருவுருவம் உள்ளது. வலப்புறத்தில் இருகைகளையும் கூப்பியவண்ணம் வேள்வித்தீயில் கன்னிகாபரமேசுவரி மூழ்கும் நிலையில் காணப்படுகிறது. மையத்தில் தீயிலிருந்து சாந்தமாக எழுந்த கன்னிகாபரமேசுவரியின் தெய்வத்தோற்றம் உள்ளது. இத்திருவுருவம் கிரீடம் தாங்கி நான்கு கைகளுள் முன் இடக்கையில் கலசமும் முன் வலக்கையில் அபய முத்திரையும் பின் இடக்கையில் பாசமும் பின் வலக்கையில் தாமரை மலரும் கொண்டு நிற்கும் நிலையில் உள்ளது. இத்திருவுருவத்தின் மீது சாத்தப்பட்டுள்ள மாலை, சேலையின் முகப்பு ஆகியவற்றில் வாசவி, கன்னிகாபரமேசுவரி மீது தெலுங்கில் இயற்றப்பெற்ற சுலோகங்கள் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

மகாமண்டபத் தூண்களில் இடப்புறம் கணபதி திருவுருவமும் வலப்புறம் தூணில் தண்டாயுதபாணி திருவுருவமும் மிக அழகியமுறையில் செதுக்கப்பட்டுள்ளன. உள்மண்டப வாசற்படியின் மேல் கஜலட்சுமி கற்சிற்பம் பிரபையுடன் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. துவார பாலிகைகள் இருபுறமும் 2 மீட்டர் உயரம் கொண்ட பீடத்துடன் மிக எடுப்பாகக் காட்சியளிக்கின்றனர். மகாமண்டபத்தின் வலப்புறம் நவக்கிரக சந்நிதிக்கு முன்பாக வைகுண்டவாயில் அமைக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் மீது தளம் முழுவதும் கல்லால் கட்டப்பட்டுள்ளது. இம்மகாமண்டபம் 16 கல்தூண்களுடன் அமைந்துள்ளது. ஸ்ரீசக்கரம், யாளி, கொடிகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் மேற்கூரைப்பகுதியில் ஸ்ரீசக்கரமேரு பிரஸ்தாரம் ஒரு கல்லில் வடிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் தெலுங்கு பிராமணர்கள் இருகாலப்பூசை செய்கிறார்கள். நவராத்திரி உற்சவம், விஜயதசமி புறப்பாடு, சித்திரையில் கன்னிகாபரமேசுவரி

தோற்றத்திருவிழா இராமநவமி திருக்கல்யாணத் திருவிழா, கருடசேவைத்திருவிழா, கோகுலாஷ்டமி, வைகுண்ட ஏகாதசி, ஐப்பசியில் அன்னாபிடேகம், சிவராத்திரி ஆகியவை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இங்கு இடபம், காமதேனு, கருடாழ்வார், இந்திரவிமானம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு 2.27 ஏக்கர் நன்செய் நிலமும் 10 கடைகளும் உள்ளன. இவற்றிலிருந்து பெறப்படும் வருமானமும் உண்டியல் காணிக்கைகளும் நிருவாகச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கன்னிகாபரமேசுவரி சத்திரமும் இருக்கின்றது. அய்யங்குளம் அருகில் மூன்று ஏக்கர் பரப்பளவில் நந்தவனம் ஒன்றும் உள்ளது.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அறக்கட்டளைகளின் செயல் அலுவலர் இக்கோயிலில் செயலாற்றி வருகிறார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 15,844/-2 உரூபாயாகும்.

1943-ஆம் ஆண்டில் இங்கு ஆர்ய வைசிய மகாசபையினரால் தட்சிணகாண்டம் என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலை

## பச்சையம்மன் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலையின் வடகிழக்குச் சாரலில் திருவண்ணாமலைப் பேருந்து நிலையத்திலிருந்து 1 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் கிழக்கு நோக்கியவாறு பத்து சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இடப்பாகம் பெறக் காஞ்சிபுரத்தில் பூசை செய்த தேவியைத் திருவண்ணாமலைக்கு வருமாறு சிவபெருமான் பணித்தார் என்றும் அவ்வறிவுரைக் கேற்ப வந்த இறைவி திருவண்ணாமலையின் வடகிழக்குச் சரிவிலுள்ள பவளப்பாறைக் குன்றில் தவம் மேற்கொண்டார் என்றும் அத்தவக்கோலமே பச்சையம்மன் திருக்கோயிலாகும் என்றும் கூறுவர்.

இக்கோயில் பவளப்பாறையின் மையத்திலிருக்கிறது. இதனைச் சுற்றிலும் திறந்த வெளியிடம் உள்ளது. இக்கோயிலுக்கு வெளியில் கருவறையிலுள்ள பச்சையம்மன் திருவுருவத்தை நோக்கியவாறு இடபத்தின் திருவுருவம் இருக்கின்றது.

அம்மன் கருவறை வாயிலுக்கு வலப்புறம் விநாயகர் திருவுருவம் கிழக்கு நோக்கியுள்ளது. மகாமண்டபத்தின் தென்பகுதியில் முனிவர் எழுவரில் நால்வரும் வடபகுதியில் முனிவர் மூவரும் முறையே வடக்கு, தெற்கு ஆகிய திசைகளை நோக்கியவண்ணம், சுதைவடிவங்களில் உள்ளார்கள். வாயிலை அடுத்துத் தென்பகுதியில் பழைய முனிவர் எழுவரும் இவர்களுக்குத் தென்புறம் புதிய முனிவர் எழுவரும் உள்ளனர். வாயிலையடுத்து வடக்குப்பகுதியில் குதிரை உருவங்கள் மூன்றும் யானை உருவங்கள் மூன்றும் தெற்கு நோக்கி உள்ளன. வெளிவாயிலிலிருந்து சற்று வடக்கில் குதிரை உருவமும் நாயின் உருவமும் உள்ளன. இவற்றிற்குச் சற்றுக் கிழக்கில் மதுரைவீரன் திருவுருவமும் அவனுடைய தேவியரின் திருவுருவங்கள் இரண்டும் உள்ளன.

இக்கோயில் வன்னியர்களுக்குச் சொந்தமான கோயிலாகும். இதன் பரம்பரை நிருவாகம் அவர்களிடம் உள்ளது. இங்குள்ள பச்சையம்மன் பலருக்குக் குலதெய்வமாக விளங்குகிறார். இங்கு முடிஇறக்குதல், காதுகுத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகளில் மக்கள் திரண்டு கூடி வழிபடுகின்றனர்.

## திருவண்ணாமலை நகர்

# வடவீதி சுப்பிரமணியர் கோயில்

இக்கோயில், திருவண்ணாமலலை நகரின் நடுநாயகமாக விளங்கும் அருணாசலேசுவரர் கோயிலின் வடபுறம் (தற்போதுள்ள புதியபேருந்து நிலையத்திற்கு எதிர்ப்புறம்) சின்ன கடைவீதியில் ஆறு செண்ட் நிலப்பரப்பில் உள்ளது. இக்கோயிலின் சந்நிதியையடுத்து நில அளவை 138 எண் புலத்தில் 9 செண்ட் நிலப்பரப்பில் இடும்பன் கோயிலும் நிலஅளவை 103 எண் புலத்தில் 22 ஏக்கர்ப் பரப்பளவில் அய்யனார் (இறையனார்) கோயிலும் உள்ளன.

இடும்பன் கோயில், அய்யனார் கோயில்களைச் சுற்றிலும் ஆக்கிரமிப்புகள் காணப்படுகின்றன. மண்டபங்கள் இடிந்த நிலையில் காட்சியளிக்கின்றன.

மூலவர் சுப்பிரமணியர், ஆறுமுகம் கொண்டவராகக் காட்சியளிக்கிறார்.

ஒரு காலப் பூசை இங்கு நடைபெறுகிறது. திருவண்ணாமலையார் கோயில் சஷ்டி உற்சவத்தன்று சூர சம்மாரம் இக்கோயிலின் முன்பு நடைபெறுகிறது.

இக்கோயிலுக்கு ஓர் ஏக்கர் நிலமும் நான்கு கடைகளும் உள்ளன.

இக்கோயிலுக்கு எழுதி வைக்கப்பட்ட நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. அதனை மீட்க, இக்கோயில் அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,703 உரூபாயாகும்.

## திருவண்ணாமலைச் சுற்றுக் கோயில்கள்

திருவண்ணாமலையைச் சுற்றுவதென்பதே மிகச் சிறந்த வழிபாடாகும். மாதப்பிறப்பு, கிருத்திகை, பிரதோடம், அமாவாசை ஆகிய நாள்களில் மலைவலம் வருதல் தொன்றுதொட்டு இன்றுவரை நடைபெற்றுவருகிறது. கார்த்திகை 10ஆம் நாள் உற்சவத்திலும் மக்கள் ஆயிரக்கணக்கில் இவ்வாறு வலம் வருகின்றனர். வலம் வரப்பெறும் வழி விக்கிரமபாண்டியன் வீதி என வழங்கிவருகிறது. இதனைப் பத்துப் பிரிவுகளாக்கி இவ்வழியின் தூரத்தைக் காட்டுதற்காகக் கற்களை நட்டுள்ளனர். இக்கற்களில் 2 மீனும் ஒரு செண்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மைல் கல் இதுவேயாகும்.

சிவன் சுடலையில் ஆடுவோன் என்பதற்கேற்ப இம்மலை, சுற்றிலும் சுடலையால் சூழப்பட்டுள்ளது. இதனைச் சுற்றிலும் எட்டுத் திக்குகளிலும் இந்திரன், அக்கினி, இயமன், வருணன், சூரியன், நிருதி, குபேரன், ஈசானன் ஆகியோர் பெயரால் சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் கருவறை, முகமண்டபம், தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

மலைச்சுற்றுப்பாதையில் கோபுரத்தை வணங்கியபின் திருஊடல் தெருவில் எழுந்தருளியுள்ள விநாயகரை வணங்கவேண்டும். அடுத்துள்ளது அக்கினி தீர்த்தம் ஆகும். இது பாவங்கள் பலவற்றைப் போக்கவல்லது. அதனையடுத்து ரமணாசிரமத்தைக் காணலாம். அடுத்துத் துர்க்கைக்குக் கோயில் அமைந்துள்ளது. இதனையடுத்துச் சிம்ம தீர்த்தமும் அதன் எதிரில் ஆறுமுகர் கோயிலும் பெரியமண்டபமும் உள்ளன. அடுத்து இயமலிங்கம் அமைந்துள்ளது. அதனையடுத்துத் துருவாசருக்குக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இடபதீர்த்தமும் விநாயகர் கோயிலும் கண்ணன் கோயிலும் இருப்பதைக் காணலாம். இந்த இடபதீர்த்தக் கரையில் இடபதேவர் சுதை வடிவில் இருக்கின்றார். இதனையடுத்து ஒரு பாறையில் அனுமார் உருவம் காணப்படுகிறது. அடுத்து வருணலிங்கமும் இதனையடுத்துப் பழனியாண்டவரின் சந்நிதியும் அமைந்துள்ளன.

அடுத்து அண்ணாமலையார் கோயில் அமைந்துள்ளது. இஃது ஒரு கருவறையையும் 10 மீட்டர் உயரம் உடைய வளைவாகவுள்ள கூம்பினையும்

கொண்டுள்ளது. இதற்குக் குறுக்கே மரம் எதுவுமின்றிச் செங்கல்லைப் பொருத்தமாக ஒட்டிக் கூம்புவடிவில் இக்கூரையைச் சமைத்துள்ளனர். மலைக்கு நேர் பின்புறம் அண்ணாமலையார் கோயில் உள்ளது. இதற்கு அடுத்துச் சற்றுத் தொலைவில் கண்ணப்பநாயனார் கோயில் சிறிது உள்ளே 3 மீட்டர் உயரமுள்ள குன்றின் மீது இருக்கின்றது. இதனையடுத்து வசிட்டர் கோயிலும் தனகோடிப் பிள்ளையார் கோயிலும் இருக்கின்றன. இதனருகில் வாயுலிங்கம், சூரியலிங்கம் ஆகிய இரு சிவலிங்கங்களும் உள்ளன. அடுத்து அடியண்ணாமலைக் கோயில் இருக்கின்றது. இங்கு மாணிக்கவாசருக்கு என்று ஒரு சிறுகோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கடந்தால் நிருதிலிங்கக் கோயிலையும் அடுத்துக் குபேரலிங்கக் கோயிலையும் காணலாம். அடுத்து இடுக்குப்பிள்ளையார் கோயில் என்கிற சிறுமண்டபம் உள்ளது. இது சிறு வாயில் போன்றுள்ளது. இதனுள் நுழைந்துவந்தால் இதுவரை செய்த பாவம் தீருமென்ற நம்பிக்கை நிலவுகிறது. அடுத்துக் கல்யாண மண்டபத்தைக் காணலாம். இங்கு வடகிழக்கு முனையில் நின்றுபார்த்தால் அண்ணாமலையின் ஐந்து சிகரங்கள் நன்கு தெரியும். இதனைப் "பஞ்சமுக தரிசனம்" என்பர். இங்கே ஐந்து சிவலிங்கங்களை அழகுற நிறுவியுள்ளனர். இதனையடுத்து ஈசானத்தில் பவளப்பாறைக்குன்று உள்ளது. இதன் மீது பச்சையம்மன் சந்நிதி அமைந்துள்ளது.

இறைவன் தைமாதத்திலும் கார்த்திகை விழாவின் இறுதியிலும் (ஆண்டிற்கு இருமுறை) மலையினை வலமாக வருகின்றார்.

இங்கு, பல மண்டபங்களும் எட்டுத் திசைகளில் எட்டுப் பெரிய நந்தி தேவர் திருவுருவங்களும் 16 இடங்களில் அண்ணாமலையார் திருவடிகளும் அமைந்துள்ளன.

புனுகுப் பூனையாகவும் குதிரையாகவும் இருந்துவந்த இருவர் மலைவலம் வந்து தம் சுயவுருப்பெற்று கந்தர்வ பதவியை அடைந்தனர். இவர்கள் திருவுருவங்களும் இங்கே உள்ளன.

இம்மலையை வலம் வரவேண்டுமென எண்ணிய உடனேயே பாவங்கள் கரைந்து விடுகின்றன. ஓரடி எடுத்து வைத்ததுமே அசுவமேதயாகம் செய்த பலன் கிடைக்கிறது என்பதும் ஒரு முறை வலம் வந்தால் பிறப்பின் பாவங்கள் நீங்கி மோட்சம் கிடைக்கும் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும்.

கார்த்திகை, தை ஆகிய மாதங்களில் மழைபொழிந்து மலை குளிர்ந்து அதன் மீதிருந்த சுனைகளிலிருந்து ஊற்றுப் பெருகிவரும். அது திரண்டு சோனை நதியாகிறது. பல இடங்களில் அருவிபோல நீர் விழுந்துகொண்டேயிருக்கும்.

இம்மலை, குரு வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை வலம் வந்தாலே ஞானம் கிட்டும். அதனால் இருடிகளும் முனிவர்களும் இங்கு வசிக்கிறார்கள். சுற்றிலும் இங்கே ஆசிரமங்கள் தோன்றியுள்ளன. ரமணாசிரமம், சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம், பாலக்கொத்து ஆசிரமம், காட்டுசிவா ஆசிரமம் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

கார்த்திகைத் திருவிழாவின்போது இக்குன்றின் மீது சோதி ஏற்றப்பெறும். உச்சியில் இதற்கென ஒரு செப்புக்கொப்பரை உள்ளது. அங்குத் திருவடியும் பலிபீடமும் உள்ளன. நெய், துணி ஆகியவற்றைக் கொண்டு கார்த்திகை நாளில் சரியாக 6 மணிக்கு இத்தீபம் ஏற்றப்படும். அதே நேரத்தில் எல்லாக் கிளிக்கோபுரத்திற்கும் உட்புறம் அமைந்த காட்சி மண்டபங்களில் பஞ்சமூர்த்திகள் மேற்கு முகமாக எழுந்தருளி தீபாராதனை கண்டருள்வர். 5.55 மணி அளவிற்குள் அன்றுகாலை ஏற்றப்பட்ட பரணி தீபத்துடன் அர்த்தநாரீசுவரர் புறப்பட்டு வருவார். பரணி தீபம் செப்புக்கொப்பரையில் சேர்க்கப்பட்டதும் வட்டமாகப் பந்தங்களை ஏந்தி நிற்பர். உடலை எனப்படும் கருவி வாசிக்கப்படுகிறது. அர்த்தநாரீசுவரரின் சந்திய நிர்த்தம் எனப்படும் தாண்டவம் 1 நிமிடம் நிகழும். இது பிரதோடம் போன்ற தனித்து ஆடிய நிர்த்தமோ அன்றி மலைமகள் காணச் சிவபெருமான் ஆடிய ஆனந்தக் கூத்தோ அல்லது அவற்றினின்றும் மேலாக, சக்தியைத் தன்னோடு பாதியாகக் கொண்டு மாதொருபாகனாக நின்று ஆடிய கூத்தோ ஆகும். இதன்பிறகு மலையை இறைவன் வலம் வருவார்.

## திருவத்திபுரம்

# வேதபுரீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திலிருந்து 28 கிலோமீட்டர்த் தொலைவிலும் அச்சிறுபாக்கத்திலிருந்து 28 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள திருவத்திபுரம் எனவும் செய்யாறு எனவும் வழங்கிவரும் ஊரில் சேயாற்றின் வடகரையில் தற்போது ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது.

திருவத்திபுரம் என்பது திரு + வேத + புரம் என்னும் மூன்று சொற்களால் அமைந்தது எனவும் இவ்வாறு அமைவதற்குக் காரணம் உள்ளது எனவும் சொல்லப்படுகிறது. சோமகாசுரன் வேதங்களைக் களவாடிவிட்டதால், முனிவர்கள் வேதங்களை ஓத இயலாதவர்களாகவும் வேத விதிகளுக்கு ஏற்ப வழிபாடு முதலியவை ஆற்ற இயலாதவர்களாகவும் இருந்தனர். அவர்கள் இடரைப் போக்கக் கருதிய சிவபெருமான் இவர்கள் முன் வயது முதிர்ந்தவர் வடிவில் தோன்றி அவர்களுக்கு வேதங்களைக் கற்பித்தார். ஆதலால், இத்தலத்திற்குத் திருவோத்தூர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. பின்னர் திருவோத்தூர் திருவத்திபுரம் என மருவி வழங்குவதாயிற்று. சைவத் திருமுறைகளில் இத்தலத்தின் பெயர் திருவோத்தூர் என்று குறிக்கப்பெறுகிறது. ஓத்து என்னும் சொல் வேதத்தைக் குறிக்கிறது. திருவள்ளுவர் தாம்[1] அருளிய திருக்குறளில் இப்பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஓத்து முனிவர்களுக்குக் கற்பிக்கப் பெற்ற தலம் ஓத்தூர். இத்துடன் திரு என்னும் அடைமொழிசேரத் திருவோத்தூர் என்னும் பெயர் அமைந்தது.



இராசகோபுரம், வேதபுரீசுவரர் ஆலயம்
திருவோத்தூர் (செய்யாறு)



ரிசி கோபுரம், வேதபுரீசுவரர் ஆலயம்
செய்யாறு (திருவோத்தூர்)

142_3_6



உட்கோபுரம், வேதபுரீசுவரர் கோயில்

திருவோத்தூர் (செய்யாறு)

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இக்கோயிலில் வழிபாடாற்றியுள்ளதால், அவர் காலத்திலே இக்கோயில் இருந்தது என்பது தெரிய வருகிறது. திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு எழுந்தருளியபோது அடியார் ஒருவர் அழுதுகொண்டே திருஞானசம்பந்தரை வணங்கினார். அவரது அழுகைக்குக் காரணம் வினவ, அவர், "அடியேன் இறைவனுக்காக வைத்த பனைகளெல்லாம் ஆண்பனைகளாய்க் காயாவாயின. இந்நிலையைக் கண்ட சமண சமயத்தார்கள், "நீர் வைத்த பனை காய்க்குமோ" என ஏளனம் செய்தனர்" என்றார். இதற்குச் செவிசாய்த்த திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடினார். அதன் இறுதியில் "குரும்பை ஆண்பனை குலை ஈனும் ஓத்தூர்" எனப் பாடலைப் பாடி முடித்தார். அப்போதே அப்பனைகளெல்லாம் குலைகள் தள்ளின. அடியவர்கள் அனைவரும் களித்து வியந்தனர். அங்கிருந்த அனைவரும் இறைவன் கருணையைப் போற்றினர். இக்கோயிலின் உட்பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் கல்லாலான பனைமரமும் அதனடியில் சிவலிங்கமும் திருஞானசம்பந்தர் பாடும் காட்சியும் அமைந்துள்ளன.

இக்கோயிலின் தலவிருட்சம் பனைமரமாகும். இக்கோயிலின் கிழக்கு மதிற்சுவரிலுள்ள கோபுரவாயிலைக் கடந்து வெளிப்பிராகாரத்தில் வலம் வரத் தொடங்குமுன் பலிபீடமும் கொடிமரமும் உள்ளதைக் காணலாம். இவற்றை அடுத்து நந்திதேவர் சந்நிதி இருக்கின்றது. இந்நந்தி தேவர் திருவுருவம் மிகப்பெரியது. நந்திதேவர் மூலவராகிய சிவலிங்கத்தை நோக்கியவாறு இருப்பது வழக்கம். ஆனால், இந்நந்திதேவரோ கிழக்கு நோக்கியவாறுள்ளார். தொண்டை மண்டலத்தில் தொண்டைமான் சக்கரவர்த்தி இறைவனிடம் முறையிட அவரது முறையீட்டிற்கேற்ப இறைவன் அவர் பகைவர்களைத் துரத்துமாறு நந்திதேவருக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றும் வகையில் கிழக்கு நோக்கியுள்ளார்.

தெற்கு வெளிப்பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதிக்குச் சற்றுத் தெற்கில் கிழக்கு மேற்காகவுள்ள நீளவாட்டச் சந்நிதியில் நாயன்மார்கள் திருவுருவங்களும் தனியாக நால்வர் திருவுருவங்களும் நின்ற நிலையில் உள்ளன. தெற்குப் பிராகாரத்தையும் மேற்குப் பிராகாரத்தையும் கடந்து வலம் வரும்போது நாகலிங்கத் திருவுருவம் கிழக்கு நோக்கியுள்ளதைக் காணலாம். அடுத்து வடக்கில் சுப்பிரமணியர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது.

கருவறைக் கோட்டத்துச் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

கோயிலின் கருவறையில் வேதபுரீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறைக்கு வடகிழக்கில் தேவி பாலகுஜாம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. இத்தேவியின் பெயர் இளமுலையாள் என்பதைத் திருஞான சம்பந்தர் அருளிய பதிகத்தின் இரண்டாம் பாடல் தெரிவிக்கிறது. இங்கு அம்மை நான்கு கரங்களுடன் உயரிய கிரீடம் தாங்கி நின்ற கோலத்தில் அருள்புரிகிறார். அடுத்துச் சற்றுக் கிழக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி

இருக்கின்றது.

இக்கோயிலின் தீர்த்தக்குளம், கொடிமரத்திற்கும் நந்தி திருவுருவத்திற்கும் தெற்கில் படிகளுடன் உள்ளது. இக்கோயிலுக்குச் சேயாறே முதன்மைத் தீர்த்தமாக விளங்குகிறது.

கோயிலின் கோபுரம் ஐந்து நிலைகளையும் ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது.

இக்கோயிலுக்குரிய முதன்மை மண்டபம் ஆயிரக்கால் மண்டபம். இம்மண்டபம் கிழக்கு வெளிப்பிராகாரத்தில் கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றிற்கு வடக்கில் இருக்கிறது. மேலும், மூலவர் சந்நிதியின் உள்மண்டபமும் அம்மன் சந்நிதி முன் உள்மண்டபமும் உள்ளன.

இக்கோயிலின் மூர்த்தங்களின் திருவுருவங்கள் கலைச்சிறப்புடையவை. நாக லிங்கம், உயரிய மேடைப்பகுதியில் மூன்றுநிலை வட்ட வடிவச்சுருள் அமைப்பின் மீது நாகங்களின் குடை அமைப்பின் கீழ் விளங்குகிறது. இங்குள்ள நர்த்தனகணபதி அகன்ற காதுகளுடனும் நான்கு கரங்களுடனும் நடனக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

கிழக்குப் பிராகாரத்தில் வடிக்கப்பெற்றுள்ள கலைச்சிற்பம் ஆண் பனைகள் பெண் பனைகளானதைக் காட்டும் வகையில் ஒரு சிறிய மண்டபத்தின் கீழ்ப் பாதுகாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் மையத்தில் பனைமரத்தின் சிறியதொரு வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கோபுரத்தின் வெளிப்புறப்பகுதியில் ஒவ்வொரு நிலையிலும் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் உள்ளன. கோபுர உட்புறத்தின் அடிப்பகுதியில் சிவபெருமான் உமையம்மையுடன் வீற்றிருக்கிறார். விநாயகர் முருகப்பெருமான் ஆகியோர் வீற்றிருக்கும் நிலைகளைக் காட்டும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

நாகலிங்கத்தின் அடிப்பகுதியில் பூதேவி திருவுருவம் உள்ளது. பூதேவிக்கு இருபுறமும் இரு மீன் உருவங்கள் உள்ளன. பூதேவிக்கு மேல் ஆமை வடிவம் உள்ளது. இதற்கு மேல் எட்டு யானைகளின் உருவங்கள் உள்ளன. அதன்மேல் 13 தலைகளோடுள்ள நாகத்தின் படத்தில் சிவலிங்கம் உள்ளது.

இப்பனைமரத்தின் உச்சியில் பனைமரத்தின் கிளையும் அதன் காய்களும் காட்டப்படுகின்றன. இம்மரத்திற்கு அடியில் சிவலிங்கத்தை நோக்கித் திருஞானசம்பந்தர் திருவுருவம் உள்ளது. திருஞானசம்பந்தர் ஆண் பனையைப் பெண்பனையாக்கிய காட்சியை அவரது திருவுருவமும் அருகிலுள்ள சிவலிங்கமும் காட்டுகின்றன.

இக்கோயில் அமைந்துள்ள ஊர் முன்பு சமண சமயத்தவர்களின் முதன்மை நகர்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

திருஞானசம்பந்தர் இங்கு ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய அரிய செயல் சைவ சமயத்தின் சிறப்பை நிலைநாட்டிற்று. இதன்காரணமாக இத்தலத்திற்கு வரலாற்றுச் சிறப்பும் சைவ சமயத்தின் உயர்நிலையும் இருந்து வருகின்றன. இக்கோயிலில் வழிபாடாற்றுவதில் மக்கள் பெருமகிழ்ச்சியும் உள்ளுணர்வும் எய்துகிறார்கள்.

இக்கோயிலில் நாள்தோறும் மூன்றுகாலப்பூசை குருக்கள் செய்துவருகிறார். தைமாதம் இரத சப்தமியை ஒட்டிப் பத்துநாள் பிரமோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. மாசிமகம், பங்குனி உத்திரம், ஆடிப்பூரம் ஆகிய திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன. குறிப்பிடத்தக்க வகையில் திருஞானசம்பந்தர் திருநாளும் கொண்டாடப்பெறுகிறது.

இக்கோயிலுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலமும் 6 ஏக்கர்ப் புன்செய் நிலமும் 2.50 ஏக்கர் மாந்தோப்பும் கடையும் வீடும் மனையும் உள்ளன.

இக்கோயிலில் தேர், பல்லக்கு, விமானம், கற்பகவிருட்சம், சந்திரப்பிரபை, நந்தி, இடபம், யானை, குதிரை ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்றுள்ள அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 20,413/- உருபாயாகும்.

இக்கோயிலின் முதற்பிராகாரத்தின் தெற்குச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ள சோழமன்னர் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசாதிராசதேவர் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு எரிக்க வழங்கப்பட்ட நன்கொடையைக் குறிக்கிறது.[1]

இக்கோயிலின் முதற்பிராகாரத்தின் வடக்குச் சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் என்கிற சோழமன்னர் இராசகேசரிவர்மன் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இங்கு விளக்கு எரிப்பதற்காக 16 பசுக்களை ஒருவர் அளித்ததைக் குறிப்பிடுகிறது. இவர் இவ்வாறு அளித்ததற்கான காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் வேட்டையாடச் சென்றபோது குறிதப்பி ஒருவரைச் சுட்டுவிட்டார்.[2] இந்நிகழ்ச்சி பற்றி அப்பகுதி அவையோர் இவ்வாறு செய்யுமாறு தெரிவித்தனர்.[2]

இக்கோயிலின் முதல்பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள பாண்டியமன்னர் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 64[3] பசுக்களையும் 2 காளைகளையும் நன்கொடையாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது.[3] (கி.பி 1253-ஆம் ஆண்டில் அரசேற்று ஈழம், கொங்கு, சோழமண்டலம் ஆகியவற்றை வென்றவரும் பெரும்பற்றப்புலியூரில் முடிசூடபெற்றவருமாகிய மன்னர் இவரா?).

இக்கோயிலின் முதற்பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள சோழமன்னர்

திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவர்[4] 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு எரிக்க நிலம் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

இக்கோயிலின் முதற்பிராகாரத்தின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்ட சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீவீரராசேந்திர சோழதேவர் 2-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இங்கு மூன்று விளக்குகள் எரிக்க 90 பசுக்கள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[5]

இக்கோயிலின் மேற்கூறிய அதே சுவரில் உள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதி ராசதேவர் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[6] ஒரு விளக்கு வைக்கப்படுவதற்காக 32 பசுக்களை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

மேற்கூறிய அதே சுவரில் மதுராந்தக பொத்தப்பிச்சோழன்[7] தமது 2-ஆம் ஆட்சியாண்டில் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது.

இப்பிராகாரத்தின் தெற்குச்சுவரிலுள்ள பெருஞ்சிங்கத்தேவர் 20-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு தம்மைச் சந்தாணிக சைவ ஆச்சாரியர் எனக் கூறிக்கொண்ட காஞ்சிக்குரிய ஏகாம்பரபத்தா என்கிற திருஏகம்பமுடையார்[8] கல்வெட்டு விளக்கு வைப்பதற்கு 32 பசுக்களை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இப்பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர்[9] கல்வெட்டு விளக்கு எரிக்க நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது.

இப்பிராகாரத்தின் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழதேவர் 2-ஆம்[10] ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க 90 ஆடுகள் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இந்தப் பிராகாரத்தின்[11] தெற்குச்சுவரில் கிரந்தத்திலும் வடமொழியிலும் ஒரு கல்வெட்டு உள்ளது.

இதே பிராகாரத்தின் வடக்குச்சுவரில் சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரமசோழதேவர் (1118-35) 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஓர் அரிய செய்தியைக் குறிப்பிடுகிறது. கிராமத்தையும் பயிர்களையும் பெரியவெள்ளம் அழித்தது. வரிகளைச் செலுத்த இயலாத ஊர் மக்கள் 2000 குழி நன்செய் நிலத்தை 25 காசுக்கு ஆதித்தன் உய்ய வந்தான் என்பவருக்கு விற்றார்கள். அவர் அதைக் கோயில் பூசகருக்கு அளித்தார் என்பதே அச்செய்தியாகும். அரசின் ஓர் அடிக்கு நிகரான அளவுகோல் குறிப்பிடப்படுகிறது. இது முழுநாட்டை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இது முதற்[12] குலோத்துங்கன் 10-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதாக இருக்கக்கூடும்.

இதே பிராகாரத்தின் இதே சுவரிலுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம

சோழதேவர் (1118-35) என்கிற சோழ பரகேசரிமன்னர் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, 4250 குழிப் புன்செய் நிலத்தை அதே ஊரார் 20 காசுக்கு விற்றதைக் குறிக்கிறது. இந்நிலத்தை வாங்கியவர் சோழநாட்டவர். அவர் இந்நிலத்தைத் திருவோத்தூர்த் கோயில் தெருக்களைக் கவனித்துவர வேண்டியவர்களுக்கு வரிகளின்றி அளித்தார்.[13]

இதே பிராகாரத்தின் இதே சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, எதிரிலி சோழசம்புவராயன் என்கிற செங்கேணி ஆத்திமுலலன் சம்புவராயன் ஒரு கிராமத்தை நன்கொடையாக அளித்ததைக் கூறுகிறது.[14]

இக்கோயிலின் மையத்தின் முன்புறமுள்ள மண்டபத் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர் 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[15]

இதே கோயிலின் மைய மண்டபத்தின் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் இராசராசதேவர் 20-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நந்தவனத்திற்காக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[16]

இதே கோயிலின் மைய மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள பாண்டிய மன்னர் வீரபாண்டிய தேவர் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, குலசேகர சம்புவராயர் பிறப்பித்த ஓர் ஆணையைக் குறிப்பிடுகிறது.[17]

இதே கோயிலின் மையத்தில் முன்புறமுள்ள மண்டபத்தின் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி திரிபுவன வீரநாததேவர் (குலோத்துங்கன் (3) 1178-1216) 39-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இரண்டு பொன் நகைகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[18]

இதே கோயிலின் மைய மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு ஒன்று சோழமன்னர் திரிபுவனச் சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவர் (குலோத்துங்கன் (3) 33-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இவர் மதுரை, ஈழம், கருவூர் ஆகியவற்றை கைப்பற்றியதாகவும் பாண்டியர் முடிகொண்டவர் என்பதாகவும் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு எதிரிலி சோழ சம்புவராயன் என்கிற செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[19]

இதே கோயிலின் மைய மண்டபத்தின் தெற்குச் சுவரிலுள்ள பெருங்சிங்க தேவர் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர் (3) ஆட்சியின் 17-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட முந்திய கொடையைக் குறிப்பிடுகிறது.[20]

இதே மண்டபத்தின் வடக்குச்சுவரிலுள்ள சகலலோக சக்கரவர்த்தி இராச நாராயண சம்புவராயன் 7-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[21]

இதே மண்டபத்தின் இதே சுவரிலுள்ள பாண்டியமன்னர் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியதேவன் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நாற்பது விளக்குகள் வைக்க சம்புவராயர் என்கிற வீரசம்பராயன் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.[22]

இதே மண்டபத்தின் வடக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு, குரோதன ஆண்டில் ஒரு மடத்திற்கு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இம்மடம் கேதாரிநாதர் பெயரில் அமைக்கப்பட்டதாகும்.[23]

இதே மண்டபத்தின் வடக்குச்சுவரிலுள்ள சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணனின் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நிலம் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[24]

இங்குள்ள சிதம்பரேசுவரர் கோயிலிலுள்ள சோழமன்னர் இராசராசகேசரி வர்மன் (இராசராசன்-1) 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, நிலம் அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு துண்டிக்கப்பட்டுள்ளது.[25]

இதே கோயிலின் தெற்குச்சுவரில் (காஞ்சியையும் தஞ்சையையும் கொண்ட) இராட்டிரகூட மன்னர் கன்னரதேவன் 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இது சேதமடைந்துள்ளதோடு நிறைவுபெறாத நிலையிலுமுள்ளது.[26]

இதே கோயிலின் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[27] ஒரு விளக்கு வைக்கப்பட நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது.

இதே கோயிலின் தெற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு ஆதித்த குட்டியார், தம் தலைமையன் சங்கர நாராயணர் நன்மைக்காகச் சங்கரநாராயண ஈசுவரர் கிர்கத்தின் கட்டடம் கட்டப்பட்டதையும் திருவோத்தூர் சபையினர் நந்தவனம் அளித்ததையும் குறிப்பிடுகிறது.[28]

இதே கோயிலின் தெற்குச்சுவரிலுள்ள சோழமன்னர் பரகேசரிவர்மன் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[29] இரண்டு விளக்குகள் வைக்க நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

---

1. 76/1900; 2. 77/1900; 3. 78/1900; 4. 79/1900; 5. 80/1900; 6. 81/1900; 7. 82/1900; 8. 83/1900; 9. 84/1900; 10. 85/1900; 11. 86/1900; 12. 87/1900; 13. 88/1900; 14. 89/1900; 15. 90/1900; 16. 91/1900; 17. 92/1900; 18. 93/1900; 19. 94/1900; 20. 95/1900; 21. 96/1900; 22. 97/1900; 23. 98/1900; 24. 99/1900; 25. 100/1900; 26. 101/1900; 27. 102/1900; 28. 103/1900; 29. 104/1900.

# திருவல்லம்

## வில்வநாதீசுவரர் கோயில்

இக்கோயில், வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் காட்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கிழக்கே 15 கிலோமீட்டர்த் தொலைவிலும் இராணிப்பேட்டையிலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் திருவல்லம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 3 கிலோமீட்டர்த் தொலைவிலும் தெற்கு நோக்கியவாறு உள்ளது.

இங்குத் தீக்காளி என்பவள் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதால், இத்தலத்திற்குத் தீக்காளி வல்லம் என்னும் பெயர் வழங்கிவருகிறது. வல்லம் என்னும் பெயரில் சில கோயில்கள் உள்ளதால் அவற்றிலிருந்து பிரித்தறிந்து கொள்வதற்காக இத்தலம் தீக்காளி வல்லம் என்னும் பெயரில் குறிக்கப்படுகிறது. சேக்கிழார் இதனைத் தீக்காளி வல்லம் என்றே தாம் இயற்றிய பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பழங்காலத்தில் இத்தலம் வில்வ வனமாக இருந்தது. அதில் இருந்த பாம்புப் புற்றுக்கு நாள்தோறும் பசுவொன்று பால்சுரந்து வந்தது. அவ்வாறு பால் சுரந்ததால் அப்புற்று கரைய அப்புற்றிலிருந்து சுயம்பு வடிவில் சிவலிங்கம் தோன்றிற்று. இவ்வாறு வில்வவனத்தில் தோன்றிய காரணத்தால் இச்சிவலிங்க மூர்த்தி வில்வநாதீசுவரர் என்னும் பெயரில் விளங்கிவருகின்றார்.

இங்குள்ள வில்வநாதீசுவரரைக் கௌரி, திருமால், சனக மாமுனிவர், நவக்கிரகங்கள், வல்லாள மாமன்னர் ஆகியோர் வழிபட்டார்கள். மேலும், தெய்வீகத் தன்மைவாய்ந்த நெல்லிக்கனியை ஔவையார் இத்தலத்திலே பெற்றார் என்பர். சிலர், அற்புத மாங்கனியை விநாயகப்பெருமான் சிவபெருமானிடமிருந்து இத்தலத்தில் பெற்றார் என்றும் சிவபெருமானுக்கு முருகப்பெருமான் இங்குப் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்தார் என்றும் கூறுவர்.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வமரமாகும். இக்கோயிலில் பலாமரம் ஒன்றும் உள்ளது. இம்மரத்தையே தலவிருட்சம் என்று சிலர் கூறுகின்றனர்.

தெற்குப்பகுதியில் இக்கோயிலின் முதன்மைக்கோபுரம் வழியாக நுழைந்து உள்ளே செல்வோமெனில், சிறுகோபுரம் ஒன்றைக் காணலாம். அச்சிறு கோபுரம் வழியே நுழைவோமெனில், இடப்புறம் நாகரீசுவரர் சந்நிதியைக் காணலாம். இச்சந்நிதியையடுத்துப் பிராகாரத்தின் தென்மேற்குக்கோடியில் உற்சவமூர்த்திகளின்

சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. உற்சவ மூர்த்திகளின் சந்நிதியையடுத்து மேற்கில் சகஸ்ர லிங்கமும் முருகப்பெருமான் சந்நிதியும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் அம்பாள், மீனாட்சி சுந்தரேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் காணப்படுகின்றன. வடகிழக்குப் பகுதியில் வயிரவர், சூரியன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையில் வில்வநாதீசுவரர் கிழக்கு நோக்கியவாறு சிவலிங்கவடிவில் காட்சியளிக்கிறார். வல்லாம்பிகை (தனுமத்யாம்பாள்) என்றழைக்கப்படும் அம்மன் சந்நிதி, கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. வல்லாம்பிகை நின்றகோலத்தில் அருள்புரிகின்றார். அம்மன் சந்நிதிக்குத் தெற்கில் திருமால் அமர்ந்தும் நின்றும் உள்ள கோலங்களில் காட்சியளிக்கிறார். வில்வநாதீசுவரர் சந்நிதிக்கு வலப்புறம் சலகண்டீசுவரர் எனப்பெறும் பாதாளீசுவரர் சந்நிதி உள்ளது.

நந்திகேசுவரர் இக்கோயிலில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இதற்குப் புராண வரலாறு ஒன்று கூறப்படுகிறது. இவ்வூருக்குக் கிழக்குப் பகுதியில் 5 கிலோமீட்டர்த் தொலைவில் கஞ்சனகிரி என்றொரு மலை உள்ளது. இதில் கஞ்சன் என்னும் அசுரன் வாழ்ந்ததாகவும் பூசகர் நாள்தோறும் சுவாமியின் காலைப் பூசைக்குத் திருமஞ்சனத் தீர்த்தம் எடுத்து வரும்போது அவன் அவருக்கு இடையூறு செய்து வந்ததாகவும் அதனை முன்னிட்டு இறைவர் நந்திகேசுவரரை அனுப்ப, அவர் கஞ்சன் என்னும் அவ்வசுரனை வதைத்துக் கொன்றதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு நந்திகேசுவரர் தமது கொம்பால் அவ்வசுரனைக் குத்திக் கொன்றபோது கஞ்சன் உடலிலிருந்து, குருதி வெள்ளம்போல் பீறிட்டுப் பல இடங்களில் சிந்தியது எனவும் அவ்வாறு சிந்திய இடங்களிலெல்லாம் சிவலிங்கங்கள் தோன்றினஎனவும் வரலாறு கூறுகிறது. இச்சிவலிங்கங்களிலிருந்து ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் ஜோதி தெரிகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கஞ்சன் கிரி முழுவதும் சிவலிங்க வடிவமாகப் போற்றப்படுகிறது. இம்மலையிலுள்ள அநேக கற்கள் கண்டகி நதியில் கிடைத்துள்ள பாண சிவலிங்கங்களை ஒத்துள்ளன. அம்மலையில் ஒவ்வொரு சிவராத்திரியன்றும் மிகச் சிறப்பான பூசை நடைபெறுகிறது.

இக்கோயிலின் முதன்மைக் கோபுரத்தினுள் நுழைவோமெனில், உட்புறத்தின் வலப்பகுதியில் கௌரி தீர்த்தத்தைக் காணலாம். கௌரி தீர்த்தம் தவிர, நீவா நதியும் ஒரு தீர்த்தமாக அமைந்துள்ளது.

இக்கோயிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. முதன்மைக் கோபுரம் தெற்குப் பகுதியிலும் அதனையடுத்து உட்புறம் சிறு கோபுரம் ஒன்றும் உள்ளன.

துவாரபாலகர், திருமால் ஆகியோர் திருவுருவங்கள் மிக நுட்பமான சிற்பக் கலைத்திறத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1270 ஆண்டுகளுக்கு முன் செங்கல்லால் கட்டப்பட்ட இக்கோயில் பின்னர், கருங்கற்களால் கட்டப்பட்டதாகவும் மகாமண்டபம் பாணர்கள் காலத்தில் கட்டப்பட்டது எனவும் பல மண்டபங்கள் மன்னர் பலரால் கட்டப்பட்டன எனவும்



வில்வநாதீசுவரர் ஆலய முன் தோற்றம், திருவல்லம்

கல்வெட்டுகள் கூறுகின்றன.

கோப்பரகேசரியான இரண்டாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1050_62) தம் மூன்றாம் ஆட்சி ஆண்டில் அலுவலர் ஒருவரிடமிருந்து 25 கழஞ்சுப் பொன் வாங்கித் தீட்சிதரிடம் கொடுத்தான்.[1] அதே ஆண்டில் வாணபுரத்திலுள்ள பேரவையோர் சங்கரதேவன் மகனான வைதும்ப் சோமநாதனுக்கு 1000 குழி நிலம் விற்றதையும் அவர்கள் அதைத் திருவைய ஈசுவரருக்கு உரிமையாக்கியதையும் குறிக்கிறது.[2] நான்காம் ஆட்சி ஆண்டில் முதல் இராசராசன் அலுவலர் ஈராயிரவன் பல்லவராயனால் இராசராசேசுவரர் கருவறை கட்டப்பட்டதுடன்.[2] விளக்கிற்காக 2000 குழி நிலமும் அளிக்கப்பட்டது.[3]

கோராசகேசரிவர்மனான இராசமகேந்திரன் காலத்து 2_ஆம் ஆண்டில் (கி.பி.1060) படைத்தலைவனொருவன் திருவல்லம் பேரவையிலிருந்து 800 குழி நிலம்பெற்று அதைக் கோயிலுக்குக் கொடுத்தான். அதன் விலை 64 காசு (22 கழஞ்சு 8 மஞ்சாடி).[4] முதல் குலோத்துங்கன் 23_ஆம் ஆண்டில் (கி.பி.1070_1120) கங்கத் தலைவனால் வீரசோழன் மனைவியான தன்னுடைய மகளுக்கு நன்மை உண்டாக விளக்குவைக்கப்பட்டது.[5] மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178_1216) 8_ஆம் ஆண்டில் திரிசூலக்காசு கோயிலுக்களிக்கப்பட்டது.[6] 34_ஆம் ஆண்டில் கங்க அரசியான அரிய பிள்ளையால் இரண்டு விளக்குகள் தானம் செய்யப்பட்டன.[7] கோராசகேசரிவர்மன் 1, 7_அம் அண்டுகளில் இறைவி திருவுருவம் செய்யவும் ஒரு விளக்குக்கும் ஒரு பிராமணனால் தாய்நாட்டில் தந்திரம் பேரவையினின்றும் 1700 குழி நிலம் வாங்கப்பட்டது.[8] 26_ஆம் ஆண்டில் 4_ஆம் விக்கிரமாதித்தனிடமும் 3_ஆம் ஜயசிம்மனிடமும் வெற்றி பெற்றமையும் கோயிலுக்கு விளக்குவைக்கப்பட்டமையும் தெரிய வருகின்றன. 7_ஆம் ஆண்டில் மதுராந்தக கண்டராதித்தன் கோயிலுக்கு வந்தமையும் 1000 குடங்களால் அபிடேகம் செய்ததும் வருமானத்தை ஆராய்ந்ததும் குறிக்கப்பட்டுள்ளன,[10]

கோராசராசகேசரிவர்மன் 1, 16_ஆம் ஆண்டில் 700 குழி நிலம் சங்கர தேவனுக்கு விற்றமையும் அவன் அதைத் திருவைய ஈசுவரருக்களித்தமையும் தெரிகின்றன.[11] கோராசகேசரிவர்மன் இராசராசதேவன் 20_ஆம் ஆண்டில் ஆடுகள் தானம் செய்தான்; 3_ஆம் ஆண்டில் தூய்நாட்டிலுள்ள குக்கனூர் கிராமத்தின் வருவாய்களைத் திருவல்லம் கோயிலுக்குக் கொடுத்தான்[12] மகாவலி வாணராயனது பொன்படு குட்டத்திலுள்ள சில[13] நிலங்களை ஒருவன் வாங்கி விளக்கிற்காகவும் படையலுக்காகவும் கொடுத்தான்.[14] வாணவித்தியாதரன் காலத்தில் விளக்கெரிக்க 20 கழஞ்சுப் பொன் கொடுக்கப்பட்டது.[14] விக்கிரமாதித்தன் _1 வேண்டுகோளின்படி மூன்று கிராமங்கள் (விடேல், விடுகு, விக்கிரமாதித்த சதுர்வேதி மங்கலம்) தானம் செய்யப்பட்டன.[15] வாணராயனது சகம் 810_ஆம் ஆண்டில் எட்கூரிலுள்ள ஒரு பார்ப்பனனால் காரநாட்டிலுள்ள வன்னிப்பேடு கிராமத்தாரிடம் 25 கழஞ்சுப் பொன் கொடுக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கும் வட்டி விளக்கு எரிக்கப் பயன்படுத்தப்பட்டது[16]

சோழ பூபன் மகனான வீரசம்பன் சகம் 1236_ஆம் ஆண்டில், அர்த்த மண்டபம்

ஞானமூர்த்தி என்ற பெயருடைய துறவியாலும் பிருதா அரசனாலும் கட்டப்பட்டது. மேலும் கருவறையும் கட்டப்பட்டது. (வீரசம்பன் படைத்தலைவனா? ஒரு நாயகனா? ஊகிக்க வேண்டியுள்ளது).[17] வாணவித்தியாதர ராஜன் என்கிற வாணராயன் விளக்கிற்கு நெய்யிட 21 கழஞ்சுப் பொன் வழங்கினான்.[18] விசயகண்ட கோபாலதேவன் (1250-1291) மூன்றாமாண்டில் அழகிய பல்லவன் காலத்து 3-ஆம் இராசராசன் (1210-1244)[19] நிலமணியக்காரர் 1/16 பாகவரியையும் 1/3 பாகவரியையும் தள்ளியமை தெரிகிறது. இராட்டிரகுப்த அமோகவர்ஷனன் மருமகன் காலத்துப் பொற்கொல்லன் ஒருவன் கோயிலுக்கு நிலம் தானம் செய்துள்ளான்.[20]

இத்தலத்தைப்பற்றித் திருஞானசம்பந்தர் பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார்; திருப்புகழில் அருணகிரிநாதரும் இத்தலத்தைப் பாடியுள்ளார். இவ்வாலயத்தில் நர்த்தன மண்டபத்தில் அதிகார நந்தி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் ஒருவர் தம் தகப்பனாரது எலும்பைக் காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் செலுத்த கால்நடையாகச் சென்றபோது திருவல்லத்தில் நீவா நதியில் குளித்து, எலும்பிற்கு நதித்தீர்த்த அபிடேகம் செய்தவுடன் அது மல்லிகை மலராக மாறியதாகவும் அம்மலரை அவர் காசிக்கு எடுத்துச்சென்றதும் அஃது எலும்பாக மாறியதாகவும் அதைக் கண்ணுற்று வியப்பெய்திய அவர் அதை மீண்டும் திருவல்லத்திற்குக் கொண்டு வந்தவுடன் அது மலராக மாறியதாகவும் கூறப்படும் நிகழ்ச்சியேயாகும். இதன்பேரில் திருவல்லத்திற்கு மதிப்பு இருப்பதை உணர்ந்து நதியில், நர்த்தன மண்டபத்தில் அதிகார நந்தி திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து இதற்குத் தென்கயிலாயம் என்று பெயர் சூட்டியதாகக் கல்வெட்டு கூறுகிறது.

கஞ்சராசுரன் வரலாற்றுக்கு ஆதாரமாக ரிஷி கோபுரத்து உள்மண்டபத்தின் வடமேற்குத் தூணில் ஒரு சிற்பம் காணப்படுகிறது. இக்கோபுரம் பல ஆண்டுகளாகச் சீரழிந்திருந்தது. அதைச் சீர்படுத்தக் காரணமாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சித்தர் சிவானந்த மௌனகுரு சுவாமிகளும் ஊர்ப் பொதுமக்களும் ஆவார்கள்.

இக்கோயிலில் நான்கு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் நவராத்திரி, சிவராத்திரி, தெப்போற்சவம், ஆனித் திருமஞ்சனம், தைப்பூசம், மாசிமகம் ஆகிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலில் இந்துசமய அறநிலையத்துறையின் நிருவாக அலுவலர் செயலாற்றிவருகிறார். இக்கோயிலுக்கு 3.24 ஏக்கர் நிலமுள்ளது. அதன் மூலம் ஆண்டுக்கு 5,118 உரூபாய் வருமானம் கிடைக்கிறது.

இக்கோயிலில் இரண்டு பழைய தேர்களும் பல்லக்கும் பத்து வாகனங்களும் உள்ளன.

---

(1. 75-1889; 2. 92-1889; 3. 299-1897; 4. 5-1890; 5. 300-1897; 6. 301-1897; 7. 303-1897; 8. 8அ-1890; 9. 9-1890; 10. 10-1890; 11. 11-1890; 12. 14,15-1890; 13. 12-1890; 14. 298-1897; 15. 1அ-1890; 16. 1இ-1890).

# துத்திப்பட்டு
# பிந்து மாதவராய சுவாமி கோயில்

இக்கோயில் ஆம்பூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மூன்று கிலோமீட்டர்த் தொலைவில் வாணியம்பாடி வட்டம் துத்திப்பட்டுக் கிராமத்தில் 2 ஏக்கர் நிலப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

முன்பு இப்பகுதியில் தவம் இயற்றிவந்த முனிவர்களுக்குப் பிரதூர்த்தன் என்னும் தேவன் தொல்லை தந்து வந்ததாகவும் அத்தொல்லையைப் பொறுக்காத முனிவர்கள் அத்தேவன் புலியாகுமாறு சாபமிட்டனர் எனவும் புலி வடிவிலும் அத்தேவன் முனிவர்களுக்கு இடர்விளைவித்து வந்தான் எனவும் இதைப்பற்றி முனிவர்கள் தேவேந்திரனிடம் முறையிடத் தேவேந்திரன் தனது வச்சிராயுதத்தால் அப்புலியைக் கொன்றான் எனவும் தேவேந்திரன் வச்சிராயுதம் பட்டுப் பிரதூர்த்தன் இறந்த இடத்திற்குப் பிரதூர்த்தப்பட்டு என்னும் பெயர் வழங்கிவருகிறது எனவும் சொல்லப்படுகிறது. பின்னர்ப் பிரதூர்த்தப்பட்டு என்னும் பெயர் துத்திப்பட்டு எனத் திரிபெய்திற்று என்பர்.

புலி வடிவிலிருந்த பிரதூர்த்தன், தேவேந்திரன் வச்சிராயுதம் தாக்கியதன் விளைவாக இறந்தபோது திருமாலிடம் சரண் அடைந்தான். அவன் மீது இரக்கம் கொண்ட திருமால் அவனுக்கு வீடுபேறு அளித்தார். இதுமட்டுமின்றித் தாம், பிரதூர்த்தன் வீடுபேறடைந்த இடத்தில் தேஜோ விமானத்தின் கீழ்ப் பிந்துமாதவராய சுவாமி என்னும் பெயரில் விளங்குவதாகவும் அவர் பெயரில் ஒரு நகரை அமைக்குமாறும் தேவேந்திரனுக்கு அறிவுரை வழங்கினார். இவ்வகையில் தேவேந்திரன் அமைத்த நகரம் தேவநாதபுரம் என்னும் பெயரில் தோன்றிற்று. இங்குக் கோயில் அமைக்கப்பட்ட இவ்வரலாறு பாஸ்கர க்ஷேத்திர மகான்மியம் என்பதற்குரிய சான்று பிரம்மாண்ட புராணத்தில் 91, 92 இயல்களில் இடம் பெற்றுள்ளது.

இந்நகர் சிதைவுற்று நெடுங்காலத்திற்குப் பின்னர்த் திரும்ப அமைக்கப்பட்டதாகவும் அதன்பின்னர் இங்கிருந்த கோயிலுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மரபுவழிச் செய்தி கூறுகிறது.

கிழக்குக் கோபுர வாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், முதலில் பலிபீடத்தையும் அதனையடுத்துக் கொடிமரத்தையும் காணலாம். அடுத்துக் கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது.



பிந்து மாதவப் பெருமாள் கோயில், துத்திப்பட்டு

கோயில் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் பெருந்தேவியாகிய தாயார் சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்கு நேரொத்தவாறு பிராகாரத்தின் வடமேற்குக் கோடியில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. பிந்துமாதவராயசுவாமி கருவறையின் தென்பகுதியில் ஆழ்வார்கள் சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்கு எதிரில் வடபகுதியிலும் ஆழ்வார்களின் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையில் பிந்துமாதவராயசுவாமி நின்ற நிலையில் 1 1/2 மீட்டர் உயரத்தில் பின் இரு கைகளில் சங்கு, சக்கரம் ஆகியவற்றை ஏந்தியவாறுள்ளார். முன்னிரு கைகளில் ஒன்றில் கதை கொண்டும் மற்றதில் அபயம்கொண்டு வரம் தரும் நிலையிலும் அருள் பாலிக்கிறார். உரோமச முனிவரை வாழ்த்தி அவருக்கு வரம் அளிக்கும் கோலத்தில் பெருமாள் உள்ளார். பெருமாள் உலாத்திருமேனி 0.4 மீட்டர் உயரத்தில் உள்ளது. வடக்குப் பகுதியிலுள்ள ஆழ்வார் சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கில் ஆஞ்சநேயர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இங்குத் தீர்த்தக்கிணறு கிழக்குப் பிராகாரத்தில் கொடிமரத்திற்குத் தெற்கில் உள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம் 13 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. பிந்து மாதவராயசுவாமி சந்நிதி மீது தேஜோ விமானம் 5 மீட்டர் உயரத்துடன் விளங்குகிறது. இக்கோயிலில் மூலவர் கருவறைக்கு எதிரில் மகாமண்டபமும் முகமண்டபமும் உள்ளன.

இக்கோயிலில் இரு காலப்பூசை வைகானச ஆகமமுறையில் நடைபெறுகிறது. பிரமோற்சவமும் நடத்தப்பெறுகிறது. காணும் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. பிரமோற்சவத்தில் விசயதசமி நாளில் பெருமாள் நிமிசாசலக் குன்றைச் சுற்றி உலா வருகிறார். அப்போது அக்குன்றின் ஒரு குகையில் உரோமச முனிவருக்குக் காட்சியளிக்கும் விழா கொண்டாடப் பெறுகிறது. அதன் பின்னர் அன்பர்கள் வழிபட இவர் பக்கத்துக் கிராமங்களுக்கு உலா வருகிறார்.

இக்கோயிலுக்கு ஏழு ஏக்கர் நன்செய் நிலமுள்ளது. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,483/- உருபாயாகும்.

### தென்மகாதேவமங்கலம்

# பெரியநாயகி உடனுறை கரைகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் செங்கம் - போளூர்ச் சாலையில் போளூர் வட்டத்தில் தென்மகாதேவி மங்கலத்தின் நடுவில் 2 ஏக்கர்ப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. சப்த கரைகண்டேசுவரர் தலங்களில் நான்காவதாக உள்ள தலம் இதுவாகும்.

இக்கோயிலின் கிழக்கு வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், முதலில் பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் காணலாம். நந்திதேவர் சந்நிதிக்குச் சற்றுத் தெற்கில் விநாயகர் திருவுருவம் கிழக்கு நோக்கியுள்ளது. தெற்குப் பிராகாரத்தின் கீழ்ப்பகுதியில் சனீசுவரர் சந்நிதி வடக்கு நோக்கியவாறு உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. வடக்குப் பிராகாரத்தில் அம்பிகை பெரியநாயகி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இச்சந்நிதியின் முன்புறம் வடக்கில் மூன்று சிவலிங்கங்கள் உள்ளன. அம்பிகை சந்நிதிக்கு எதிரில் கிழக்குக் கோடியில் சிவலிங்கத்திற்கு மேற்கில் இடபமும் அதற்கு மேற்கில் திருவடியும் இறுதியில் உள்மண்டபத்தில் இடபமும் உள்ளன. அம்பிகை பெரியநாயகியம்மன் சந்நிதியில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

தெற்குப் பிராகாரத்திலுள்ள கொலுமண்டபத்தின் வழியாக உள்ளே செல்வோம்எனில், கருவறை முகமண்டபத்து வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்களைக் காணலாம். சந்நிதியின் உள்மண்டபத்தின் வடபுறத்தில் அர்த்தநாரீசுவரர் திருவுருவமும் அம்பிகை திருவுருவமும் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் சிவலிங்கமும் உள்ளன. இத்திருவுருவங்களுக்குச் சற்றுக் கிழக்கில் இடபங்களின் உருவங்களும் தென்பகுதியில் திருஞானசம்பந்தர் திருவுருவமும் அம்பிகை திருவுருவமும் உள்ளன. கருவறையில் கரைகண்டேசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கோட்டச் சுவர் மாடங்களின் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் இலிங்கோற்பவர், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் உள்ளனர். சற்று வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. நடராசர் சந்நிதி முன்மண்டபத்தின் வடக்கில் தெற்கு முகமாக உள்ளது.

சோமாசுகந்தர், விநாயகர், தனியம்மன், பாலசுப்பிரமணியர், விநாயகர்

(இளையவர்), சண்டேசுவரர், சந்திரசேகரர், அம்பிகை, அத்திரதேவர், சுக்கிரவார அம்மன், நடராசர், சிவகாமி, திருஞானசம்பந்தர், வீரபத்திரர், பத்திரகாளி, பாதுகாப்பிற்கான கிருட்டினன், திரௌபதை, தருமர் ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

தீர்த்தக்கிணறு வடக்குப் பிராகாரத்திலுள்ளது. சுவாமி சந்நிதிக்கும் உற்சவர் சந்நிதிக்கும் மூன்று நிலைகளைக் கொண்ட விமானங்களும் அம்மன் சந்நிதிக்கும் சுப்பிரமணியர் சந்நிதிக்கும் இரண்டு நிலைகளைக் கொண்ட விமானங்களும் உள்ளன.

சுவாமி சந்நிதிக்குத் தெற்கில் உற்சவர் மண்டபமும் முன்புறத்தில் முகமண்டபமும் இதனையடுத்து உள்மண்டபமும் உள்ளன. அம்மன் சந்நிதிக்கு முகமண்டபமும் உள்மண்டபமும் உள்ளன.

புடைப்புச் சிற்பங்களாக ஒரே கற்பலகையில் குதிரைமேல் பெண், மாடு, பெண், மிருகம் ஒன்றைக் கொத்தும் பறவை, பெண்கள் எழுவர், சிவன், திருமால், வணங்கும் பெண் ஆகிய சிற்பங்கள் உள்மண்டபச் சுவரில் உள்ளன.

குருக்கள் ஒரு காலப் பூசை செய்துவருகின்றார். கார்த்திகை விளக்கீடு, மார்கழி, திருவாதிரை, வெள்ளிக்கிழமைகள், கிருத்திகை, அன்னாபிடேகம், சிவராத்திரி ஆகிய அனைத்து விழாக்களும் நடைபெறுகின்றன. மார்கழியில் பெரிய விழா நடைபெறுகின்றது. அன்று சோமாசுகந்தர் இடபவாகனத்தில் அருகிலுள்ள மகாதேவ மலையைச் சுற்றி வலமாக வருவார். இவ்விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்கின்றனர். அம்மலையைச் சுற்றிலும் 32 கிலோமீட்டர் வரையில் இடையிடையே உள்ள ஊர்களில் மண்டகப்படி நடைபெறும். இவ்வட்டாரத்தில் இது பெரிய விழாவாகும்.

கரைகண்டீசுவரர் கோயில் மையச்சந்நிதியின் வடக்கிலும் மேற்கிலுமுள்ள விசயநகர தம்மய்யதேவ மகாராயர் திருவோணம் நட்சத்திரம் திங்கட்கிழமை கல்வெட்டுத்துண்டு, முகதாவாடை [1] இராமய்ய நாயக்கர் முகவரையும் சதிரவாசகர் பெருமாள் கோயிலையும் குறிக்கிறது.

இதே கோயிலின் மேற்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலுமுள்ள சாளுவ நரசிம்ம தேவமகாராயர் மகன் விசயநகர கண்டதேவ மகாராயர் சகம் 1443 விக்கிரம ஆண்டு மகரம் (தை மாதம்) கல்வெட்டு, கரைகண்டீசுவரமுடைய நாயனார் இறைவருக்குத் தேர் அமைப்பதற்காக 150 பணம் தனிப்பட்ட இருவர் அளித்ததற்காகத் திரிசூலபர்வத நா[2]த தேவதான கிராமத்தின் காணியாட்சி உரிமை விற்கப்பட்டதைப் பதிவு செய்கிறது.

இச்சுவர்களிலே உள்ள புக்கண்ணாவின் சகம் 1325 சுபானு ஆண்டு மிதுனம் (ஆனிமாதம்) திரியோதசி சனிக்கிழமை சுவாதி நாள் கல்வெட்டு, பல்குன்றக் கோட்டத்தின் உட்பிரிவாகிய பிங்கல நாட்டிலுள்ள மாதேவ மங்கலத்துக் கரைகண்டீசுவரம் உடைய நாயனார் கோயிலின் தேவைக்காக மன்னரின் குமாரர்

எனப்படுவோர் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[3]

கோயிலின் மகாமண்டபத்து வடக்குச்சுவரிலுள்ள விசயநகர அச்சுத தேவ மகாராயர் சகம் 1454 நந்தன ஆண்டு மகரம் (தை) மாதம் திருவோணம் சனிக்கிழமை மகரச் சங்கராந்திக் கல்வெட்டு, மன்னரின் அனுமதியோடு அடைப்பம் வையப்ப நாயக்கர் மகாதேவ மங்கலம் கிராமத்தின் காவல்குழி வரியைத் தள்ளுபடி செய்ததைப் பதிவு செய்கிறது.[4]

இதே மண்டபத்தின் தெற்குச்சுவரிலுள்ள விசயநகர நரசிங்க தேவமகாராயர் அச்சுததேவ மகாராயர் சசம் ஆண்டு 1459 ஹேவிளம்பி கும்பம் (மாசி) மாதம் சனிக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரம் கல்வெட்டு, கரைகண்டீசுவரம் உடைய நாயனார் சதிரவாசகப்பெருமாள் கோயில்களுக்குத் தலைவர் வையப்ப நாயக்கர் நலனுக்காக (ஈசுவர)புரம் திம்மனபுரம் கிராமங்களை வாசப்ப நாயக்கர் அளித்ததைக் குறிக்கிறது.[5]

இதே மண்டபத்தின் கிழக்குச்சுவரிலுள்ள விசயநகர (மேலே குறிப்பிடப்பட்ட) மன்னர் சகம் 1456 ஜெயம் ஆண்டு, துலா (ஐப்பசி) மாதம் திங்கட்கிழமை உத்திரட்டாதிக் கல்வெட்டு, இம்மண்டபத்தை அடைப்பம் ஈசுவர நாயக்கர் மகன் வசவய்யா கட்டினார் என்பதைக் குறிப்பிடுகிறது.[6]

மேலே கண்டவாறு சகம் 1458 துர்முகி மீனம் பௌர்ணமி திங்கட்கிழமை அத்த நட்சத்திரம் கல்வெட்டு, கோயில் கட்டுவதற்காக நாயகர் தானத்தார் மாலயபட்டா சோளிங்கதேவர் வீரமாணிக்கதேவர் என்போர் தேவதான நிலத்தின் ஒரு பகுதியைச் சைவாச்சாரிய க்ஷேத்திரமாகிய திருவண்ணாமலை நம்பியமார் ஒருவருக்கு நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[7]

மேலே கண்டவாறு விசயநகர கிருஷ்ணதேவ மகாராயர் சகம் 1448 சர்வதாரி ஆண்டு மகரம் (தை) மாதம் 5ஆம் நாள் வியாழக்கிழமைக் கல்வெட்டு, சிதைவுற்றுள்ளது. இஃது இக்கோயிலின் அறங்காவலர்களும் இங்குள்ள குடிமக்களும் நிலத்தை அகத்திய கோத்திரத்துத் திப்பரசருக்கு விற்பனை செய்ததைக் குறிக்கிறது. மன்னர் காலத்தில் திப்பரசரால் கூடுதலாகக் கட்டப்பட்டதையும் பழுதுபார்த்தல் செய்ததையும் சைவப்ப நாயக்கராயர்[8] அளித்த நிலத்தைக் கொண்டு திருவிழாக்கள் சிலவற்றை நடத்தியதையும் குறிக்கிறது.

இக்கோயிலின் கொடிக்கம்பத்திற்கு எதிரில் மேற்குச்சுவரிலுள்ள சாளுவ நரசிங்கதேவராயர் மகாராயர் சகம் 1414 இடபம் (வைகாசி) மாதம் கல்வெட்டுப் பகுதி, தேதியைக் குறிப்பிடுவதோடு நின்று விடுகிறது. இதனருகிலுள்ள மற்றொரு கல்வெட்டுப்பகுதி, சவரநாயக்கர் வாசவம நாயக்கருக்கும் மற்றவர்களுக்கும் ஒரு நிலம் காணியப்பற்றாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[9]

(1. 38/1933_34; 2. 39/1933_34; 3. 40/1933_34; 4. 41/1933_34; 5. 42/1933_34; 6. 43/1933_34; 7. 44/1933_34. 8. 45/1933_34; 9. 46/1933_34).

## தென் மகாதேவமங்கலம்

## மகாதேவமலை

# மல்லிகார்ச்சுனர் கோயில்

தென்மகாதேவ மங்கலத்தை ஒட்டியுள்ள இம்மலை 10 சதுர மைல் பரப்பில் அமைந்துள்ளது. இது 180 மீட்டர் உயரம் கொண்ட நெட்டான மலையாகும். இதற்கு மூன்று வழிகள் உள்ளன. அவற்றுள் தென்மகாதேவ மங்கலம் வழியே சிறந்தது. இதனைப் பர்வத மலை என்றும் சூலகிரி என்றும் குறிப்பிடுவர். இதற்கு முறையான வழி வசதியில்லை. சித்தரும் வித்தரும் கூடும் மலையாதலின் பௌர்ணமி நாளில் இம்மலையில் தங்குதல் சிறப்புடையது எனக் கருதி நூற்றுக்கணக்கான மக்கள் இங்குத் தங்கிச் செல்கிறார்கள்.

தென்மகாதேவமங்கலம் வழியில் முதலில் பச்சையம்மன் கோயிலைத் தரிசிக்க வேண்டும். இங்கு வாயிலில் வடக்கு நோக்கி ஏழு முனிவர்கள் உள்ளனர். கிழக்கு நோக்கிய சந்நிதியின் கருவறையில் சுதை வடிவில் பச்சையம்மன், பரசுராமர், முத்தாலம்மன், வேங்கையம்மன், காத்தாயி அம்மன் ஆகியோர் உள்ளனர். மூல வடிவமாகப் பச்சையம்மன், வேங்கையம்மன், முத்தாலம்மன் ஆகியோர் உள்ளனர். எதிரில் வீரமுத்து, வீராட்சசு ஆகியோர் உள்ளனர்.

இதனையடுத்துத் துர்க்கையம்மனின் சிறு சந்நிதி உள்ளது. அடுத்துப் பாதித் தொலைவில் வீரபத்திரர் சந்நிதி உள்ளது. இதனைக் கடந்தால் அண்ணாமலையார் திருவடிகளைக் காண்கிறோம். அடுத்துப் பாதி வழி மண்டபம் உள்ளது. இதனைக் கடந்து கடப்பாறைச் செங்குத்து நெட்டு உள்ளது. இங்கு மக்கள் வழுக்கி விழுந்துவிடாமல் பாதுகாப்பாகப் பிடித்துக்கொள்ளக் கடப்பாறைகள் நடப்பட்டுள்ளன. அடுத்துத் தீட்டுக்காரிமண்டபம் உள்ளது. இம்மண்டபம் வரை எல்லாப் பெண்களும் வரலாம். அதனையடுத்துப் பாதாளச் சுனை எனப்படும் சிங்க தீர்த்தம் உள்ளது. அதனையடுத்துப் பிள்ளையார் நெட்டும் பர்வதீசுவரர் கோயிலும் உள்ளன. இடையில் ஓரிடத்தில் இரும்பு ஏணிப்படிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த மலைமுகட்டில் விசாலமான ஒரு மண்டபம் உள்ளது. தெற்குப் பகுதியின் உள்ளே நுழைந்தால் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை ஆகிய கடவுளரை வழிபடலாம். அடுத்துச் க்ஷேத்திர விநாயகரையும் கருவறையில் சிவலிங்க வடிவில் மல்லிகார்ச்சுன சுவாமியும் உள்ளனர். அடுத்துக் கிழக்கு

நோக்கிய சந்நிதி வாயிலில் மரகதாம்பிகையின் துவாரபாலிகையர் உள்ளனர். சுவாமி எதிரிலும் அம்பிகை எதிரிலும் நந்தியின் திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. வடகிழக்கு முனையில் தெற்கு நோக்கியவாறு முனிவர் ஒருவர் உருவம் அமர்ந்தவடிவில் உள்ளது.

இம்மலையில் மூலிகைக்காற்று மிகுதியாக உள்ளது என்பதற்காகச் சென்னை, பெங்களூர் முதலிய வட்டாரங்களிலிருந்தும் மக்கள் பௌர்ணமியில் கூடி வழிபடுகின்றனர். மலையுச்சியில் 3 மீட்டர் உயரமுள்ள சூலம் நாட்டப்பெற்றுள்ளது.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ. எண்: 856
நாள்: 17.5.02
நூலகம்

## தேவிகாபுரம்

# கனககிரீசுவரர் கோயில்

போளூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 14.4 கிலோமீட்டர்த் தொலைவில் ஆரணி வட்டம் தேவிகாபுரம் கிராமத்தின் மலையுச்சியில் கனககிரீசுவரர் கோயிலும் மலை அடிவாரத்தில் பிரகதாம்பாள் கோயிலும் அமைந்துள்ளன.

மலை மீதுள்ள கனககிரீசுவரர் கோயிலுக்குப் பொன்மலைநாதர் கோயில் என்னும் பெயரும் வழங்கிவருகிறது. கிழக்கு நோக்கியவாறுள்ள இக்கோயிலின் பரப்பளவு மலைமீது மூன்று ஏக்கராகும். மதிற்சுவர்கள் நீங்கலாகக் கோயிலின் கட்டடம் மட்டும் கீழ்மேலாக 42 மீட்டர் நீளமும் தென்வடலாக 21 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.

ஒருவர் இம்மலையின் மீதிருந்த ஆலமரத்தின் வேர்களைத் தமது கோடரியால் வெட்டியபோது ஓர் ஒலி எழுந்தது. அடுத்துக் குருதியும் வெளிக்கிளம்பியது. இதைக் கண்ணுற்றதும் அவர் மயக்கமுற்று வீழ்ந்தார். மயக்கம் தெளிந்தபின்னர் அவர் அங்குத் தோன்றியிருந்த சுயம்புலிங்கமூர்த்தியை வழிபட்டார். பின்னர் அவ்வழியே போர்க்கோலத்தில் சென்றுகொண்டிருந்த பல்லவ மன்னர், போரில் வெற்றி கண்ட பின்னர், இக்கோயிலைக் கட்டி முடித்தார்.

இம்மலைக்கோயில் கடல் மட்டத்திலிருந்து 120 மீட்டர் உயரமுடையது. அடிவாரத்திலிருந்து மலை மீது ஏறுவதற்காக ஒழுங்கான படிகள் இருக்கின்றன. மலையின்மேல் படிக்கட்டுகளின் வடபுறம் பார்வதி தேவி இறைவனைக் கணவராக அடையவேண்டித் தவம் செய்த இடமெனக் குறிக்குமிடத்தில் ஒரு பாறையில் அம்மனுடைய அடிச்சுவடுகள் இரண்டு காணப்படுகின்றன. அம்பாள் கிழக்கு நோக்கித் தவம்புரிந்ததை இப்பாதங்கள் விளக்குகின்றன.

மலையின் மேல் வடவால விருட்சத்தின் கீழ்ச் சுயம்புமூர்த்தி கனககிரீசுவரர் தோன்றியதாக இங்குள்ள தலவரலாற்றில் கூறப்படுகிறது. எனவே தலவிருட்சம் ஆலமரம் என்பது பெறப்படும். அதனை உறுதிப்படுத்திக்கொண்டிருந்த ஆலமரம் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன், பட்டுப்போய்விட்டது. மலைப்படிக்கட்டுக்குத் தென்புறம் ஆலடி விநாயகர் இருக்கிறார்; ஆனால் ஆலமரம் தற்போது இல்லை. அவ்வாலமரமே தலவிருட்சமெனச் சொல்லப்படுகிறது.

மலைப்படிக்கட்டுக்குக் கிழக்கில் தென்புறம் 15 மீட்டர் அளவில் வீரபத்திரரின் அழகிய உன்னத வேலைப்பாடமைந்த கோயில் உள்ளது. இது வடக்கு நோக்கிய சந்நிதியாகும். மலை அடிவாரத்தின் வடபுறம் கோகிலாம்பாள் உடனுறை திருக்காமேசுவரர் கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. இக்கோயிலின் சுவாமி சந்நிதி 9 கற்களால் கட்டப்பட்டது. இது பார்ப்பவர்களின் மனத்தைக் கவர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடச்செய்யும் வகையில் அற்புதமாக அமைந்துள்ளது. இங்குத் திருக்காமேசுவரர் சிவலிங்க வடிவில் அழகாகக் காட்சியளிக்கின்றார். கோகிலாம்பாள் சந்நிதி சுவாமி சந்நிதிக்கு வடமேற்கில் அமைந்துள்ளது. இதிலுள்ள கோகிலாம்பாள் திருவுருவம் நின்ற நிலையில் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்து விளங்குகின்றது. ஆனால் 26 ஆண்டுகளாக இக்கோயில் பூசையின்றி இருக்கிறது. இவ்விரண்டு சந்நிதிகளுக்கும் விமானங்கள் கட்டப்படவில்லை.

மலை உச்சியிலுள்ள கோயிலின் வெளிப்பிராகாரத்தில் பலிபீடம், கொடிமரம் ஆகியவை உள்ளன. இவற்றை அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. உட்பிராகாரத்தின் தெற்கில் சப்தமாதர் சந்நிதி வடக்கு நோக்கியவாறுள்ளது. இதற்குச் சற்று வடக்கில் தட்சிணாமூர்த்தி சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இப்பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் இதனையடுத்து வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் இதனையடுத்து வடகிழக்குக் கோடியில் விசாலாட்சி சந்நிதி கிழக்கு நோக்கியவாறும் வடக்கு பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. கருவறைக்குள் வலப்புறத்தில் விநாயகர் சந்நிதியும் இடப்புறத்தில் பாலசுப்பிரமணியர் சந்நிதியும் இருக்கின்றன.

கருவறையில் கிழக்கு நோக்கியுள்ள இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்றில், சுயம்புமூர்த்தி, வாழைப்பூ போன்ற வடிவத்தில் அமைந்து விளங்கிக் கனககிரீசுவரர் என்னும் பெயரில் 1/2 மீட்டர் உயரத்தில் காட்சியளிக்கிறார். இதற்குச் சற்றுக் கீழ்ப்புறம் மற்றொன்றில் சிவலிங்க வடிவத்தில் காசிவிசுவநாதர் என்னும் பெயரில் இறைவன் விளங்கிவருகின்றார்.

மலையடிவாரத்தின் தென்புறம் ஒரு குளம் இருக்கின்றது. இக்குளம் தலவரலாற்றில் நவக்கிரக தீர்த்தம் எனப் பேசப்படுகின்றது. இக்குளத்தைத் தற்போது பெரியப்பன் குளம் என்று அழைக்கிறார்கள். இக்குளக்கரையின் வடபுறமிருந்த விநாயகர் கோயில் சிதைந்து காணப்படுகிறது. காணும் பொங்கல் உற்சவத்தன்று இந்த இடத்தில் சுவாமிக்கு மண்டகப்படி ஆராதனை நடைபெற்றுவருகின்றது.

மலைக்கோயிலின் கிழக்குப்பக்கம் மூன்று நிலைகளுடனும் ஐந்து கலசங்களுடனும் உள்ள கோபுரம் இருக்கிறது. இதன் உயரம் 12 மீட்டராகும். கோபுரத்திற்கு முன்புறம் 36 தூண்களைக் கொண்ட மகாமண்டபம் இருக்கிறது.

மலைக்கோயிலில் கருவறைக்கு முன்புறம் உள்மண்டபமும் அடுத்துக் கிழக்கில் தியான மண்டபமும் இதனையடுத்து நந்திதேவர் மகாமண்டபமும் இருக்கின்றன.

உள்மண்டபத் தூண்களில் அம்பாள் இறைவனைப் பூசித்த சிற்பமும் வியாக்கிரபாதர் பூசித்த சிற்பமும் 9 கன்னியர்கள் யானை போன்ற சிற்ப வடிவத்தில் காட்சியளிக்கும் நவநாரிகுஞ்சரச் சிற்பமும் யானை பூசித்த சிற்பமும் விநாயகர் சிற்பமும் தியானமண்டபத்துத் தூண்களில் யானை உரிபோர்த்த சிற்பமும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் சிற்பங்களும் பிட்சாடனர், மோகினிப் பெண்களின் திருவுருவங்களும் மற்றும் சிற்பச் சிறப்பை விளக்கும் சிற்பங்கள் பலவும் இருக்கின்றன. இடபம், யானை ஆகியவற்றின் உடல்களுக்குப் பொதுவான ஒரே தலையைக் கொண்ட இடபக்குஞ்சரம் என்னும் சிற்பமும் உள்ளது.

மகாமண்டபத்து முப்பத்தாறு தூண்களுள் 21 தூண்களில் திருமால் சங்கு சக்கரதாரியாய்க் காட்சியளிக்கின்றார். திருமால் நரசிம்ம அவதாரத்தில் இரணியனைச் சம்மாரம் செய்யும் முறையில் அமைந்துள்ள சிற்பங்கள் இங்கு மூன்று தூண்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. பிட்சாடனர் உருவத்தில் இறைவன் தாருகாவனத்து முனிபத்தினிகளிடம் சென்ற நிகழ்ச்சியை விளக்கும் சிற்பமும் முனிபத்தினிகள் பிட்சாடனரை மோகித்தபோது அவர்கள் இடையிலிருந்த ஆடைகள் நழுவி விழும் பான்மையில் அமைந்துள்ள சிற்பமும் காணப்படுகின்றன. சில தூண்களில் வேணுகோபாலர் உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது. மகாமண்டபத்துத் தென்புறமுள்ள தூண் ஒன்றில் நர்த்தனவிநாயகர் பெரிய உருவத்தில் விளங்குகின்றார். இரணியனின் மகனான பிரகலாதன் கூப்பிய கரங்களுடன் மூன்று தூண்களில் காட்சி தருகிறார். மகாமண்டபத்துத் தென்புறத் தூண் ஒன்றில் மயில் வாகனத்தில் சுப்பிரமணியர் அழகிய தோற்றத்தில் விளங்குகிறார்.

மற்றொரு தூணில் கண்ணன் கோவர்த்தனமலையைக் குடையாகக் கொண்ட வரலாற்றை விளக்கும் திருவுருவம் அமைந்துள்ளது. கையில் வில், அம்பு ஆகியவற்றை ஏந்தியவாறு கண்ணப்பர் வடிவம் உள்ளது.

இங்கு நடராசப்பெருமானின் திருவுருவம் நான்கு தூண்களில் காணப்படுகிறது. சிவகாமியம்மன் சிற்பமும் இருக்கின்றது. ஒரு தூணில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகியோர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள நான்கு தூண்களில் விநாயகர் திருவுருவங்களும் முருகன் திருவுருவங்களும் அமைந்துள்ளன.

## தேவிகாபுரம்

# பிரகதாம்பாள் (பெரியநாயகி) கோயில்

இக்கோயில், தேவிகாபுரம் கனககிரீசுவரர் மலைக் கோயிலின் அடிவாரத்தில் கனககிரீசுவரரின் தேவி பெயரில் கீழ்மேலாக 140 மீட்டர் அளவும் தென்வடலாக 75 மீட்டர் அளவும் கொண்டு 10 மீட்டர் உயரமுள்ள மதிற்சுவருடன் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இவ்வூரில் உமாதேவி தவம் இயற்றிச் சிவபெருமானால் அருள்பாலிக்கப் பெற்றதால் இவ்வூருக்குத் தேவிகாபுரம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. மக்கள் இவ்வூரினைத் தேவியம்பதி எனவும் குறிப்பதுண்டு. மலையின் கீழ் இக்கோயில் உள்ளதால் இதற்குத் தேவிகீழ்ப்புரம் என்னும் பெயரும் அமைந்துள்ளது. இவ்வூரைச் சிலர் கனககிரி எனவும் கனகாசலம் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

இக்கோயிலுக்கு அப்பால் மலைமீது கனககிரீசுவரர் கோயில் இருப்பினும் கனககிரீசுவரர் கோயிலும் பிரகதாம்பாள் கோயிலும் சேர்ந்து ஒரே கோயிலாக அமைந்துள்ளன என்பது கருத்தாகும்.

இக்கோயிலின் கோபுரத்திற்கு வெளியில் மதிற்சுவர்களைச் சுற்றிலுமுள்ள பிராகாரம் ஐந்தாவது பிராகாரமாகும். இதன் கிழக்குப்பகுதியில் நாற்கால் மண்டபமும் தேரடி மண்டபமும் உள்ளன. கோபுர வாயிலைக் கடந்து கோயிலினுள் செல்வோமெனில், நான்காம் பிராகாரத்தில் இப்பிராகாரத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள விநாயகர் சந்நிதியில் அவரை வணங்கலாம். நான்காம் பிராகாரத்தின் மையத்தில் பலிபீடமும் கொடிமரமும் இவற்றையடுத்து மேற்கு நோக்கியவாறுள்ள நந்திதேவர் சந்நிதியும் உள்ளன. மூன்றாம் பிராகாரத்தின் தெற்கில் காசிவிசுவநாதர் சந்நிதி உள்ளது. இங்குக் காசி விசுவநாதர் சிவலிங்க வடிவில் உள்ளார். இவர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். வடக்குப் பிராகாரத்தில் கச்சை கட்டிய விநாயகர் கோயில் கொண்டுள்ளார். இரண்டாம் பிராகாரத்தின் தெற்குப்பகுதியில் நால்வர் சந்நிதி வடக்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து அருகில் சுந்தரவிநாயகர் சந்நிதியும் இச்சந்நிதியை அடுத்து உற்சவமூர்த்திகள் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. கருவறை வாயிலின் இருபுறங்களிலும் சுரபத்ரா, சுபத்ரா என்னும் துவாரபாலிகைகள் இருவர் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப்பகுதியின் சபாமண்டபத்தில் நடராசர், சிவகாமி, நால்வர் ஆகியோர் திருமேனிகள் தெற்கு நோக்கியவாறு உள்ளன. அடுத்து இரண்டாம் பிராகாரத்தின் தென்



பெரியநாயகி ஆலய இராசகோபுரம், தேவிகாபுரம்



பெரியநாயகியம்மன் ஆலயத்தின் உட்புறம்
(பின்புறம்மலைக்கோயில்)
தேவிகாபுரம்



பெரியநாயகியம்மன் கோயில், தேர் போன்ற மண்டபம்
தேவிகாபுரம்



தபசு அம்மன், தேவிகாபுரம்



பைரவர் (தூண்), தேவிகாபுரம்



நரசிம்மர், தேவிகாபுரம்



சரபேசுவரர் சிற்பம், தேவிகாபுரம்

மேற்குக் கோடியில் கணபதி, திருமால், நாகலிங்கர், மகேசுவரி அம்மன், நந்திதேவர், சதாசிவமூர்த்தி, திருஞானசம்பந்தர், அமர்ந்த நிலையிலுள்ள விநாயகர், நர்த்தனவிநாயகர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

அம்மன் கருவறைக்கு வடக்கில் சண்டேசுவரி சந்நிதி உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியும் துர்க்கையம்மன் திருவுருவம் தெற்குநோக்கியவாறும் உள்ளன. தென்புறத்தில் சுவருக்கு அருகில் வரசித்தி விநாயகர் கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது. கருவறையில் பிரகதாம்பாள் என்கிற பெரியநாயகி அம்மன் நின்றநிலையில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார்.

இக்கோயிலின் திருக்குளம், நான்காம் பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியில் உள்ளது. இது சிவகங்கைத் தீர்த்தம் எனப்படும். இஃது அழகிய படிக்கட்டுகளுடனும் மூன்று பக்கங்களிலும் தளவரிசை கொண்டதாகவும் அமைந்துள்ளது. மடைப்பள்ளியில் ஒரு தீர்த்தக் கிணறும் நான்காம் பிராகாரத்திலுள்ள நந்தவனத்தில் திருமஞ்சனக் கிணறு ஒன்றும் உள்ளன.

**இக்கோயிலுக்குரிய பிற தீர்த்தங்கள்:** மலைக்கோயிலின் அடிவாரத்தில் உள்ள தீர்த்தம் நவக்கிரக தீர்த்தம் என்பதாகும். இது தற்போது பெரியப்பன் குளம் எனக் குறிக்கப்படுகிறது. தென்கிழக்கில் அக்கினி தீர்த்தம் உள்ளது. இதன் மையத்தில் நீராழி மண்டபம் உள்ளது. மக்கள் இதனைக் காட்டன் குளம் என்பர். அக்கினி தீர்த்தக் கரையில் உள்ள குன்றின் மீது முருகப்பெருமான் கோயில் உள்ளது. இம்முருகன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. வடமேற்குக் கோடியில் தேவரடியார் தீர்த்தமும் இதற்கு வடக்கில் தம்பிரான் குளமும் மேற்கில் சேயோன் குளமும் இருக்கின்றன. சேயோன் குளத்தைச் சீயன் குளம் எனவும் குறிப்பிடுகிறார்கள்.

இக்கோயிலுக்கு வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய மூன்று திசைகளிலும் வாயில்கள் உள்ளன. அவற்றுள் வடக்கு வாயிலும் தெற்கு வாயிலும் மூடப்பட்டுள்ளன. கிழக்குவாயில் ஒன்றே திறந்திருக்கிறது. இக்கோபுரவாயிலின் வழியாகவே இக்கோயிலுக்குள் செல்ல முடியும்.

அம்பாள் ஆலயத்தின் இராசகோபுரம் கிழக்குப்பகுதியில் 7 நிலைகளையும் 9 கலசங்களையும் கொண்டு 45 மீட்டர் உயரத்தோடு வானளாவிய வனப்புடன் விளங்குகிறது. மூன்றாம் பிராகாரத்தில் கிழக்குப்பக்கம் சிறிய கோபுரம் 18 மீட்டர் உயரத்தில் 5 நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்டு அழகாகக் காட்சியளிக்கிறது.

இக்கோயிலின் கோபுரவாயிலுக்கு வெளியில் ஐந்தாம் பிராகாரத்தில் நாற்கால் மண்டபம் உள்ளது. கோபுரவாயிலுக்கு வெளியில் வடகிழக்குக் கோடியில் தேரடி மண்டபம் உள்ளது. நான்காம் பிராகாரத்தின் தென்கிழக்குக் கோடியிலுள்ள

சிவகங்கைத் தீர்த்தத்திற்கு எதிரிலும் ஒரு நாற்கால் மண்டபம் உள்ளது.

நான்காம் பிராகாரத்தின் நந்திதேவர் சந்நிதிக்கு மேற்கில் மகாமண்டபம் உள்ளது. இம்மகாமண்டபத்தினுள் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. மூன்றாம் பிராகாரத்தின் வடக்குக்கோடியில் நவராத்திரி மண்டபம் உள்ளது. நடராசர், சிவகாமி, நால்வர் ஆகியோர் திருமேனிகள் உள்ள மண்டபம் சபாமண்டபமாகும். ஊருக்கு மேற்கில் பத்மாவதி மண்டபம் இருக்கின்றது.

பெரியநாயகி அம்மன் சபாமண்டபத்தில், மூன்று தூண்களில் விநாயகர் திருவுருவங்களும் சுப்பிரமணியர் திருவுருவங்களும் 2 தூண்களில் நரசிம்ம அவதார வரலாற்றை விளக்கும் இரணிய சம்மாரச் சிற்பங்களும் அம்பாள் பூசை செய்த சிற்பங்களும் ஒரு தூணில் ஆஞ்சநேயர் திருவுருவமும் மற்றொரு தூணில் தட்சிணாமூர்த்தி திருவுருவமும் வேறொரு தூணில் சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றை விளக்கும் சிற்பங்களும் நவராத்திரி மண்டபத்தில் திருஞானசம்பந்தர், குடத்திலிட்ட எலும்பைப் பெண்ணாக்கிய சிற்பமும் மற்றொரு தூணில் திருமால் சங்கு சக்கர கோதண்டபாணியாய்க் காட்சியளிக்கும் சிற்பமும் அமைந்துள்ளன. பிறிதொரு தூணில் சிவபெருமான் யானையின் மீதும் இடபவாகனத்தின் மீதும் அமர்ந்து விளங்கும் திருவுருவங்களும் ஒரு தூணில் பார்வதிதேவியின் திருவுருவம் பெரிய வடிவிலும் காணப்படுகின்றன.

நடராசப்பெருமான் நடனமாடிய தோற்றத்தில் ஒரு சிற்பம் உள்ளது. வேறு தூண்களில் நான்கு இடங்களில் திருமால் காட்சிதருகிறார். ஒரு தூணில் கருடாழ்வார் கூப்பிய கரத்துடன் விளங்குகின்றார். மகாமண்டபத்தில் அம்பாள் இறைவனைப் பூசைசெய்யும் சிற்பமும் மூன்று தூண்களில் இரணிய சம்மார நரசிம்மமூர்த்தியின் திருவுருவங்களும் மற்றொரு தூணில் காளிகாதேவியுடன் நடராசப்பெருமான் நடனமாடிய வரலாற்றுச் சிற்பமும் மற்றொரு தூணில் மார்க்கண்டேயருக்காகக் காலனைக் கடிந்த வரலாற்றுச் சிற்பமும் சிவபெருமான் யானைத் தோல் போர்த்த சிற்பமும் மூன்று தூண்களில் சிவபெருமான் இடபவாகனத்தில் காட்சிதரும் சிற்பங்களும் உள்ளன. ஒரு தூணில் வயிரவரின் சிற்பமிருக்கிறது. இரண்டு தூண்களில் அன்ன வாகனத்தின் மீது நான்முகன் தேவியாருடன் காட்சி தருகின்றார். மற்றும் பல தூண்களில் திருமால் சிற்பங்கள் காணப்படுகின்றன. அருச்சுனன் தவநிலையில் சிவபெருமானுடன் போர்புரியும் சிற்பங்கள் இருக்கின்றன.

பிட்சாடனர் வடிவத்தில் தோற்றமளிக்கும் சிற்பங்களும் மோகினிப்பெண்கள் மையலுற்று நிற்கின்ற சிற்பங்களும் மூன்று தூண்களில் இருக்கின்றன. இரண்டு தூண்களில் சூரசம்மார விளக்கத்தைக் குறிக்கும் சிற்பங்களிருக்கின்றன.

இங்குள்ள திருமண மண்டபத்துக்கு முன்புறமுள்ள தூணொன்றில் மனுநீதிச் சோழன் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன. கன்றை இழந்த தாய்ப் பசுவானது தனக்கு நேர்ந்த ஆற்றொணாத்துயரத்தை மன்னனுக்கு அறிவித்தற் பொருட்டு ஆராய்ச்சி மணியைத் தாவி அடிக்கின்ற பான்மையில் அமைந்துள்ளது.

விவரத்தைக் கேள்வியுற்ற மன்னன் அதனைத் தாங்கொணாது தன் இருகாதுகளையும் பொத்தி மனம் கவன்று பசுக்கன்றைத் தேர்க்காலில் மாய்த்துவிட்ட தன் மகனான வீதிவிடங்கன் மீது தானே தேரூர்ந்து அவன் உயிரை மாய்க்கும் பான்மையில் அமைந்துள்ள அரிய சிற்பத்திறன் காணத் தக்கதாகும்.

இக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள 56 கல்வெட்டுகளுள் ஒன்று கிரந்தத்திலும் மற்றொன்று மராத்தியிலும் மற்றவை தமிழிலும் உள்ளன.

தேவிகாபுரம், தொண்டைநாட்டின் தென்மேற்கெல்லையில் விளங்கி வந்தது என்பது, காஞ்சிப்புராணத்தில் சிவஞானமுனிவர் தொண்டை நாட்டின் எல்லையாகத் தெற்கே மாமல்லபுரம், தென்மேற்கே தேவிகாபுரம், மேற்கே விரிஞ்சிபுரம், வடக்கே நாகலாபுரம் என்ற இத்தலங்களைச் சிறப்பித்துக் கூறியுள்ளதிலிருந்து தெரிய வருகிறது.

இங்குள்ள கல்வெட்டுகள் 480 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சிபுரிந்த விசயநகர மன்னர்களின் காலத்திய கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகள் அனைத்தும் அக்காலத்திய நாட்டின் வளப்பங்களையும் சமுதாய மக்களின் நல்வாழ்வு மேம்பாட்டையும் தொழில் துறைநலன் உள்ளிட்ட வரிகளையும் தவறாது செலுத்தி இக்கோயிலுக்கு உதவும் வகையில் ஆற்றவேண்டிய கடமைகளையும் வரையறுத்துக் கூறியுள்ளன.

விசயநகர மன்னர்கள் ஆட்சியில் நாடு பல சீர்மைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதும் ஒவ்வொரு சீர்மையிலும் படைவீடுகள் சில இருந்தன என்பதும் தேவிகாபுரத்துப் பகுதிகளின் படைவீடு தேவிகாபுரத்தில் இருந்தது என்பதும் இப்படை வீட்டில் வாழ்ந்து வந்த திருமலைநாயக்கர் போன்றவர்கள் தேவிகாபுரம் கோயிலின் நன்மைக்காக நடவடிக்கை பல மேற்கொண்டார்கள் என்பதும் கல்வெட்டுச் செய்திகளிலிருந்து தெரிய வருகின்றன. மன்னருக்கு அருகிலிருந்து அவருக்குத் தேவைப்படுவனவற்றிற்கு ஏற்பாடு செய்பவர் அடைப்பம் என்னும் பதவி தாங்கினார். நாள்தோறும் மன்னர் புரிய வேண்டிய கடமைகளை அவ்வப்போது எடுத்துக் கூறுபவர் அட்டவணை எனப்பட்டார். இத்தகைய செய்திகளையும் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

(தமிழ்) பிரகதாம்பாள் கோயில் மையச்சந்நிதியின் மேற்குச் சுவரிலும் தெற்குச் சுவரிலுமுள்ள சகம் 1399 ஹேவிளம்பி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, தேவிகாபுரம் திருமலை உடையநாயனார் கோயிலுக்குக் கொண்டப்பள்ளி இராயப்ப உடையார் நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[1]

இந்தக் கோயிலின் முதற்பிராகாரத்தின் தெற்குச் சுவரிலுள்ள விசயநகரமன்னர் கிருட்டினதேவராயர், கி. பி. 1519-ஆம் ஆண்டு, சனவரி 21-ஆம் நாளுக்கு நேரொத்த சகம் 1442 பகுதானிய மகரம் (மாசி மாதம்) அத்த நட்சத்திரம் கூடிய வெள்ளிக்கிழமைக்குரிய கல்வெட்டு, விசயநகரமன்னர் சாளுவ மரபு பட்டங்களைக் கொண்டுள்ளார் என்பதைக் குறிக்கிறது. இது செயங்கொண்ட

சோழமண்டலத்தின் பழகுன்றக் கோட்டப்பகுதிக்குச் சேர்ந்ததும் மேல்குன்றநாட்டின் உட்பிரிவாகிய முருகமங்கலப்பற்றிலுள்ள இராசகம்பீர மலைக்கு அருகிலுள்ள செய்யாற்றின் தென்கரையில் தேவிகாபுரம் உள்ளது என்பதைக் குறிப்பிட்டு, இங்குள்ள மருதராசர் படைவீட்டில் வசித்து வந்தவரும் கன்னடியர்களில் ஒருவருமான திருமலை நாயக்கருக்குத் தேவிகாபுரத்துப் பிட்சாமடத்தைச் சேர்ந்தவரும் கோயில் கருவூல அலுவலருமாகிய ஈசான சிவாச்சாரியார் நிலங்கள் சிலவற்றைக் குத்தகைக்கு விட்டதைக் குறிக்கிறது.[2]

(தமிழ்) இதே சுவரில், சகம் 1441 பகுதானிய ஆண்டு கற்கடகம் (ஆடி மாதம்) செவ்வாய்க்கிழமை அசுவினி நட்சத்திரம் சித்தயோக நேரத்தில் பொறிக்கப்பட்ட விசயநகரமன்னர் கிருட்டினதேவராயர் காலத்துக் கல்வெட்டு, மருதராசர் படைவீட்டுச் சதாசிவ நாயக்கருக்குக் கோயில் நிலங்களின் உழவு உரிமையை (உழவுக்காணி ஆட்சி) அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இந்தத் தேதி சற்று ஒழுங்காக இல்லை. அசுவினி, சித்தயோகம் கூடிய நாள் கி. பி. 1519 சனவரி 7-ஆம் தேதியே என வானசாத்திர நூலாகிய "இந்தியன் எபிமரிஸ்" என்னும் நூலை இயற்றிய சுவாமிக் கண்ணு பிள்ளை கூறியுள்ளார்.[3]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சகம் 1429 இரக்தாட்சி ஆண்டு மீனம் (பங்குனி) வெள்ளிக்கிழமை உத்திர நட்சத்திரத்திற்குரிய (விசயநகர நாட்டைக் கைப்பற்றியவராகிய) நரசிங்கராய தேவர் மகன் சாளுவமன்னர் இம்மடி ராய தேவ மகாராயர் கல்வெட்டு, இது போன்றதொரு உரிமையைப் பிட்சாமடத்தைச் சேர்ந்தவரும் கோயில் குருக்களும் அறங்காவலரும் ஆகிய விசுவேசுவர சிவாச்சாரியரும் மற்றவர்களும் சேர்ந்து தேவிகாபுரத்துவாசி ஒருவருக்கு அளித்ததைக் குறிக்கிறது.[4] (இரக்தாட்சி ஆண்டு சகம் 1427-ஆம் ஆண்டுக்கு ஒத்து வருகிறது. இவ்வகையில் சரியான நாள் 1505 ஆண்டு பிப்பிரவரி 28-ஆம் நாளாகும்).

(தமிழ்) இதே சுவரிலுள்ள 1500-ஆம் ஆண்டு சூலை மாதம் 3-ஆம் தேதிக்கு நேரொத்தவாறுள்ள சகம் 1422 ரௌத்திரி ஆண்டு கற்கடகம் (ஆடி மாதம்) 7ஆம் நாள், வெள்ளிக்கிழமை அத்தம் நட்சத்திரம் நாளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, செம்பியமங்கலம் தேவதானம் கிராமத்திலுள்ள நிலம், தேவிகாபுரத்திலுள்ள ஒரு வீடு, கோயிலில் பாடுவோர் இருவருக்கு உணவு முதலியவை நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்கொடை, துளுவ மரபைத் தோற்றுவித்த, 1503-ஆம் ஆண்டில் சிறந்த, நரச நாயக்கர் நன்மைக்காக, எட்டப்ப நாயக்கரின் மக்களாகிய திருமலை நாயக்கர், ஈசுவர நாயக்கர் ஆகியோர்களால் அளிக்கப்பட்டது.[5]

(தமிழ்) இதே சுவரிலுள்ள நரசநாயக்க உடையார் மகனான விசயநகர மன்னர் அச்சுததேவமகாராயர், சகம் 1455 விக்கிருதி, சிம்மன் (ஆவணி மாதம்) 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை உத்திரம் நட்சத்திரத்திற்குரிய கல்வெட்டு, இம்மன்னரின் விருதுப்பெயர்களை ஒரு பெரிய பட்டியல் குறிப்பிடுகிறது. இது, மருதராசர், படைவீட்டுத் திருமலை நாயக்கர் மகன் காளத்திகர நாயக்கர்,

இக்கோயிலில் மேற்பார்வை முதலியவற்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையும் பிட்சாமடத்து ஈசான சிவாச்சாரியார், அறங்காவலர்கள், தேவிகாபுரத்துத் திருமலை உடையநாயனார் கோயில் கைக்கோளமுதலிகளிடமிருந்து பெறப்பட்ட முருகமங்கலம் நிலங்களின் அனுபோக உரிமையும் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.[6]

(தமிழ்) இதே பிராகாரத்தின் மேற்குச் சுவரிலுள்ள சகம் 1425 ருத்தோத்காரி ஆண்டுக் கல்வெட்டு, (நாட்டைக் கைப்பற்றிய ) சிவலோகம் சென்ற மன்னர் (சுவாமி) நரச நாயக்கர் நன்மைக்காகக் கயிலாச கிராமத்திலுள்ள சில நிலங்களும் வீடு ஒன்றும் சமரபுங்கவ தீட்சிதருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[7]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் கிருட்டினதேவராயர் சகம் 1441 பகுதானிய ஆண்டு, கற்கடகம் (ஆடி) மாதம் 13-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அசுவனி நட்சத்திரம் சித்தயோகம் நாளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, மன்னர் நன்மைக்காகவும் திருமலை நாயக்கர் நன்மைக்காகவும் மருதராசர் படைவீட்டில் குடியிருக்கும் கன்னடிய நாயக்கர் மரபினராகிய மல்லப்ப நாயக்கர் மகன் ஹரிஹர நாயக்கர், தேவிகாபுரம் தேவத்தானத்திற்குத் திருமலை உடையாரால் நாயனாருக்கு 33 1/2 பணம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[8]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சகம் 1418 துர்மதி ஆண்டுக் கல்வெட்டு, திருவிழாக்களின்போது வழிபாடு முதலியவற்றிற்காக முருகமங்கலத்திலுள்ள நிலம் திருமலை நாயக்கராலும் ஈசுவர நாயக்கராலும் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[9]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சுபகிருது ஆண்டுக் கல்வெட்டு, அடைப்பம் மல்லப்ப நாயக்கர் நலத்தை முன்னிட்டு இதே கோயிலில் திருவாதிரை விழா நடத்துவதற்காக நயினப்ப நாயக்கர் நெய் வழங்க ஏற்பாடு செய்ததைக் குறிப்பிடுகிறது.[10]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் 1520-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாளுக்கு நேரொத்தவாறுள்ள சகம் 1443 விக்கிரமாண்டு கார்த்திகை ஏகாதசி, திங்கட்கிழமைக்குரிய கல்வெட்டு, தலைவர் (சுவாமி) திருமலை நாயக்கர் நலத்திற்காக இக் கோயிலில் திருக்கார்த்திகை விழாவின்போது விளக்குகளுக்கு நெய் வழங்க சதாசிவ நாயக்கர் ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.[11]

(தமிழ்) இதே பிராகாரத்தின் வடக்குச் சுவரிலுள்ள விசயநகரமன்னர் கிருட்டின தேவ மகாராயர் சகம் 1449 விருஷ ஆண்டுக் கல்வெட்டு, இத்திருவிழாவுக்காக மருதராசர் படைவீட்டுக் கன்னடியத் தலைவர் தேவப்ப உடையார் மகள் நெய் நன்கொடையாக அளித்ததைக் குறிப்பிடுகிறது.[12]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசய நகர மன்னர் மகாமண்டலேசுவரம் கிருட்டின தேவ மகாராயர் சகம் 1447 சர்வஜித் ஆண்டுக் கல்வெட்டு, மருதராசர் படைவீட்டு மல்லப்ப நாயக்கர் மகனான நமச்சிவாய நாயக்கர் நலனுக்காக இடையாத் துறை மணியகாரர் சீரங்க நாயக்கர் விளக்குகளுக்காக நன்கொடையாக நெய்

அளித்ததைக் கூறுகிறது.[13]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சாளுவப் பட்டப் பெயர் தாங்கியுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் சகம் 1454-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, காளத்தீசுவர நாயக்கர் நன்மைக்காக ஒவ்வொரு தறிக்கும் 1 1/2 பணம் வீதத்தில் ஓர் ஆண்டுக்குப் பட்டாடை நூலாயவரி கோயிலுக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[14]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகரமன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவமகாராயர் சகம் 1446 சித்திரபானு ஆண்டு, தை மாதம் உத்திர நட்சத்திரம் சனிக்கிழமை (1523 மார்ச்சு 28-ஆம் நாள்) கல்வெட்டு, ஆற்றுவான்பாடி தேவதானத்திலுள்ள பண்டிதராகிய வடமலையாருக்குச் சொறப்பூண்டி கிராமத்தினுள் நிலமும் வீடும் தேவிகாபுரத்துப்பிட்சா மடத்து விசுவேசுவர சிவாச்சாரியர், கைக்கோள முதலியார்கள் கோயிலின் மற்ற அறங்காவலர் ஆகியோர்களால் அமைக்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு, இக்கோயிலின் குமுதப்படியில் பொறிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வடமலையார் என்பவர் மச்சபுராணமும் நீடூர்த் தலபுராணமும் இயற்றிய தமிழ்ப் புலவராக இருக்கலாம்.[15] விசுவேசுவரர் சாக்த விற்பன்னராகவும் வீரசைவராகவும் இருக்கக்கூடும்.

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசய நகர மன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் சகம் 1444 விக்கிரம ஆண்டு கும்பம் (மாசி) மாதம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை உத்திரம் (1521-ஆம் ஆண்டு பிப்பிரவரி 22-ஆம் நாள் ) கல்வெட்டு, மன்னரிடமிருந்து சொறப்பூண்டி கிராமத்தைக் கோயிலுக்காகப் பெற்றுக் கொடுத்த அட்டவணை வெங்கப்பாவுக்கு நிலமும் இரண்டு வீடுகளும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[16]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசய நகர மன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் சகம் 1452 சர்வதாரி ஆண்டு கார்த்திகை உத்திரம் சனிக்கிழமை (1529-ஆம் ஆண்டு மார்ச்சு 29-ஆம் நாள்) கல்வெட்டு, கோயிலுக்கு ஆண்டுதோறும். 15 பணமும் 20 கலம் நெல்லும் அளிக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்காகக் காமாட்சி ராவுத்தன் தாங்கல் தேவதானக் கிராமத்தை உழுது பயிரிடுவதற்கான உரிமையை (உழவுக்காணியை) அம்பலத்தாடி என்பவருக்குக் கோயில் அறங்காவலர்கள் அளித்ததைக் கூறுகிறது.[17]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசய நகரமன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் சகம் 1444 விக்கிரம ஆண்டு கும்பம் (மாசிமாதம்) சனிக்கிழமை புனர்பூசம் (1521-ஆம் ஆண்டு) பிப்பிரவரி 16-ஆம் நாள் ) கல்வெட்டு, இக்கோயிலுக்கு திருநாமக்காணிக்கையாக, உவத்தூர் கிராமத்தை (அதன் சிற்றூர் தரைப்பாடி உட்பட), அம்மையப்ப நயினார் அளித்ததைக் கூறுகிறது. இதைப் பெற்றுக்கொண்ட பிட்சா மடத்து ஈசான சிவாச்சாரியாரும் இக்கோயிலின் மற்ற அறங்காவலர்களும் சேர்ந்து இவ்வாறு நன்கொடை அளித்தவருக்குக் கிராமத்தைக் குத்தகையின் பேரில் விட்டு அவருக்கு ஒரு வீடும் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[18]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப கிருட்டின தேவ மகாராயர் சகம் 1453 விரோதி ஆண்டு சித்திரை நட்சத்திரக் கல்வெட்டு, பங்கல நாட்டிலுள்ள கங்கபுரம் கன்னடிய நாயக்கர் ஒருவருக்குத் தேவராயன்பட்டடையின் நிரந்தரக் குத்தகை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[19]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் கிருட்டின தேவ மகாராயர் சகம் 1450 சர்வதாரி ஆனி மாதம் உத்திர நட்சத்திரம் திங்கட்கிழமை (1526 ஜூன் மாதம் 22-ஆம் நாள்)[20] கல்வெட்டு, விளக்கு எரிக்க நெய் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[20]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் கிருட்டின தேவராய மகாராயர் 1443 சகம் விக்கிரம ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைக்க மருதராசர் படைவீட்டுப் பெண்மணி நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[21]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் கிருட்டின தேவ மகாராயர் சகம் 1431 சுக்கில ஆண்டு மகரம் (மாசி) மாதம் (கன்னியாக-புரட்டாசியாக இருக்க வேண்டும்) சனிக்கிழமை திருவோண நட்சத்திரம் (1509 ஆண்டு செப்டம்பர் 23-ஆம் நாள்) கல்வெட்டு, எட்டப்ப நாயக்கர் மகன் திருமலை நாயக்கரும் மற்றவர்களும் சேர்ந்து கயிலாயத்திற்கு அருகிலிருந்த சிங்கய ராவுத்தன் தாங்கல் சிற்றூரைக் காணியாட்சி நன்கொடையாகத் திருப்பணி வாசுவன உடையாருக்கு அளித்ததைக் கூறுகிறது. (நன்கொடை பெற்றவர் கோயில் பணிகளின் பொறுப்பு ஏற்றவராக இருக்கவேண்டும்.[22])

(தமிழ்) இதே கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் தெற்குச் சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப நரச நாயக்கரின் மகன் அச்சுத தேவ மகாராயர் சகம் 1452 விக்கிருதி ஆண்டு மகரம் (தை) மாதம் திங்கள்கிழமை, பூச நட்சத்திரம் (1531 சனவரி 30-ஆம் நாள்) கல்வெட்டு, திருமலை உடையார் திருநாமக்காணி கிராமமாகிய வட கயிலாயத்தில் மருதராசர் படைவீட்டுச் சதாசிவ நாயக்கரின் மகனான திருமலை நாயக்கர் கட்டிய, உடையவர் சதாசிவமூர்த்தி கோயிலுக்குச் சுவரப்பூண்டி நிலத்தைத் தேவிகாபுரம் கோயில் அறங்காவலர்கள் அளித்ததைக் குறிப்பிடுகிறது. மடப்பட்டியம் காளத்திகர நாயக்கர் பிட்சாமடத்து ஈசான சிவாச்சாரியர் இருவரும் அறங்காவலர்களோடு குறிப்பிடப்படுகிறார்கள்.[23]

இதே சுவரிலுள்ள விசய நகர மன்னர் வீரப்பிரதாப நரச நாயக்கர் மகனான அச்சுத தேவ மகாராயர் சகம் 1454 விக்கிருதி பங்குனி 11-ஆம் நாள் திங்கட்கிழமை (1531-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள்) கல்வெட்டு, அக்காலத்தில் படைவீட்டிற்குச் சீர்மையில் ஆட்சிபுரிந்து வந்த திருக்காளட்டீசுவரரின் அனுமதியின் பேரில் சேத்துப்பட்டு ஆடு மேய்ப்பவர்களின் குடும்பங்கள் கோயிலில் பணிபுரிய அவர்களுக்குத்[24] திருவிளக்குக் குடியுரிமையைக் கொண்டநாயக்கர் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[24]

(தமிழ்) இதே சுவரிலுள்ள கல்வெட்டு, மன்னர் அச்சுத தேவ மகாராயர்

நன்மைக்காக இக்கோயிலில் விளக்கு வைப்பதற்காக நெய் வழங்க மல்லப்ப நாயக்கரும் சேவப்ப நாயக்கரும் இடையர் சிலரை நியமனம் செய்ததைக் குறிக்கிறது.[26]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப அச்சுத தேவ மகாராயர் சகம் 1452 விக்கிருதி ஆண்டு சிம்மம் (ஆவணி; இது மகரம்..தை மாதமாக இருக்க வேண்டும் ) (1531 சனவரி 13-ஆம் நாள்) சுவாமி இம்முடி திருமலை நாயக்கர், கஸ்தூரி நாயக்கர் ஆகியோர் நன்மைக்காக, வசந்த மண்டபத்தில் வழிபாடாற்ற மாமனம்பாக்கம் குடிமக்களால் நிலம் நன்கொடை அளிக்கப் பட்டதைக் கூறுகிறது.[27]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகரமன்னர் சதாசிவராயர் சகம் 1471 சௌமிய ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இதில் இம்மன்னர் சாளுவப் பட்டங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இஃது இக் கோயிலுக்கு விளக்கு வைக்க நெய் வழங்குவது பற்றிக் கூறிப்பிடுவதாகத் தெரிகிறது.[28]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் அச்சுத தேவமகாராயர் சகம் 1457-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஆடு மேய்ப்பவர் சிலர் நெய் நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.[29]

இந்தப் பிராகாரத்தின் மேற்குச் சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப அச்சுத தேவ மகாராயர் சகம் 1455 ஹேவிளம்பி ஆண்டுக் கல்வெட்டு, விளக்குகளுக்கு நெய் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[30]

(தமிழ்) இதே சுவரிலுள்ள கல்வெட்டு, சுபகிருது மாசி மாதம் 17-ஆம் நாளில் தம் தலைவர் நலனுக்காக அடைப்பம் மல்லப்ப நாயக்கரின் முகவரான நயினப்ப நாயக்கரால் விளக்குகளுக்கு நெய் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[31]

(தமிழ்) இதே பிராகாரத்தின் தெற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு, சேதமடைந்துள்ளது. இது விசயநகர மன்னர் வீரப்பிரதாப அச்சுததேவ மகாராயர் சகம் 1458 மன்மத ஆண்டு மீனம் (பங்குனி மாதம் ) வெள்ளிக்கிழமை திருவோணம் (1536, மார்ச்சு 17-ஆம் நாள்) விவரத்தைக் கொண்டுள்ளது.[32]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் வீரப்பிரதாப அச்சுத தேவ மகாராயர் சகம் 1464 சுபகிருது ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலில் உத்திரத் திருநாள் கொண்டாடச் செவ்வப்ப நாயக்கர் நலனுக்காக அடைப்பம் மல்லப்ப நாயக்கர் முகவர் நயினப்ப நாயக்கர் பணம் நன்கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.[33]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் அச்சுத தேவ மகாராயர் சகம் 1436 கன்னி (புரட்டாசி திங்கட்கிழமை) கல்வெட்டு, இக்கோயிலில் ஒரு திருவிழா நடத்தச் செம்பிமங்கலம் குடிமக்கள் சிலர் பணம் நன்கொடையாக அளித்ததைக்

குறிக்கிறது.[34]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகரமன்னர் அச்சுத மகாராயர் சகம் 1454 விரோதி ஆண்டுக் கல்வெட்டு, விளக்கு வைப்பதற்காக நெய் நன்கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[35]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் அச்சுததேவ மகாராயர் சகம் 1454 நந்தன ஆண்டுக் கல்வெட்டு, சேத்துப்பட்டுக் கொண்டப்ப நாயக்கர் கண்ணூரிலுள்ள நிலத்தை உழவுக்காணி நிலமாக அளித்து ஆண்டுதோறும் கோயிலுக்கு 10 பணம் அளிக்க ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.[36]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகர மன்னர் சதாசிவ தேவ மகாராயர் சகம் 1470 சௌம்ய ஆண்டு ரிஷபம் (வைகாசி) மாதம் பௌர்ணமி திங்கட்கிழமை கல்வெட்டு, காணியாட்சியாகக் கோயில் நிலம் ஒன்று தனிப்பட்டவர் ஒருவருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[37]

(தமிழ்) இதே சுவரிலுள்ள திருமலைதேவர் மகாராயர் மகன் விசயநகர மன்னர் வேங்கட தேவ மகாராயர் சகம் 1552 சுக்கில ஆண்டு தைமாதம் 21-ஆம் நாள் திங்கட்கிழமை பூசம் கல்வெட்டு, கிருட்டினப்ப நாயக்கர் மகன் நயினப்ப நாயக்கர் ஒரு குளத்தை வெட்டி அதனருகில் கிணறுகளைத் தோண்டி அவற்றைக் கொண்டு ஒரு நிலத்தை மேம்படுத்திப் பயிரிடக்கூடியவாறு அதனைச் சீர்செய்து அதனைக் கோயிலுக்கு அளித்ததைக் குறிக்கிறது. இவர் யார் என்பது அறிய முடியவில்லை.[38]

(தமிழ்) இக்கோயிலின் நடராசர் சந்நிதியின் கிழக்குச் சுவரிலுள்ள விசயநகரமன்னர் கிருட்டின தேவ மகாராயர் சகம் 1436 ஸ்ரீமுக ஆண்டு கற்கடகம் (ஆடி) மாதம் 10, வெள்ளிக்கிழமை உத்திரம் (1513-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் நாள்) கல்வெட்டு, செம்பிய மங்கலம் கிராமம் உழவுக்காணியாட்சி நிலமாக மருதராசர் படைவீட்டு மல்லப்ப நாயக்கர் மகன் நமச்சிவாய நாயக்கருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. அவர் முதல் ஆண்டு 10 பணமும் 10 கலம் நெல்லும் கொடுக்கவேண்டும். ஆனால் 5-ஆவது ஆண்டில் 50 பணமும் 50 கல நெல்லும் அளிக்க வேண்டும். அறங்காவலர்களுள் பிட்சா மடத்து விசுவேசுவராச்சாரியாரும் ஒருவராவார்.[39]

இதே சுவரிலுள்ள சேதமடைந்த கல்வெட்டு, சகம் 1437 விபவ ஆண்டு (பவ சரியான ஆண்டு சனிக்கிழமை விசாக நட்சத்திரம்) இது கோயில் நிலத்தைப் பிராமணர் ஒருவருக்குக் கோயில் மேலாளர் விசுவேசுவர சிவாச்சாரியாரும் திருமலை நாயக்கரும் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[40]

(தமிழ்) இக்கோயிலின் மடைப்பள்ளியின் மேற்குச் சுவரிலுள்ள விசயநகர மன்னர் சதாசிவ மகாராயர் சகம் 1468 பிரபவ ஆண்டு விருச்சிகம் (கார்த்திகை மாதம்) வெள்ளிக்கிழமை திருவோண நட்சத்திரம் கல்வெட்டு, கிருட்டினப்ப

நாயக்கர் நன்மைக்காகச் சூரப்ப நாயக்கர், கோயிலுக்கு நெய் நன்கொடை அளித்ததைக் குறிக்கிறது.[41]

(தமிழ்) இதே சுவரிலுள்ள விசயநகரமன்னர் அச்சுத தேவ மகாராயர் சகம் 1453 விக்கிருதி ஆண்டுக் கல்வெட்டு சேதமடைந்த நிலையில் உள்ளது.[42]

(கிரந்தம்) இக்கோயிலின் இரண்டாவது கோபுரம் வலப்புறமுள்ள வாயிலில் விசுவேசுவரய்யாவைப் புகழும் வடமொழிச் சுலோகம் உள்ளது. (புனித மலையிலுள்ள இறைவராகிய) கனககிரீசுவரின் முதன்மை அன்பர் என இது புகழ்கிறது.[43]

(தமிழ்) இதே இடத்திலுள்ள விசயநகர மன்னர்அச்சுத தேவ மகாராயர் சகம் 1451 விரோதி ஆண்டுக் கல்வெட்டு, அடைப்பம் பணியாளர்களுள் ஒருவரான மல்லப்ப நாயக்கர் அளித்த ஒரு நன்கொடையைக் குறிக்கிறது.[44]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சாளுவ மன்னர் இம்மடி நரசிம்ம தம்மய்ய தேவ மகாராயர் சகம் 1426 இரக்தாட்சி ஆண்டு கன்னி (புரட்டாசி ) புதன்கிழமை (1504-ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ஆம் நாள்) கல்வெட்டு, நரச நாயக்கரின் முகவரான திருமலை நாயக்கரால், இக்கோயிலில் இறைவனையும் தேவியையும் வழிபட்டு வந்த தனிப்பட்டவர் ஒருவருக்கு நிலமும் பணமும் வீடும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு, நன்கொடை அளித்தவர் தந்தை எட்டப்ப நாயக்கர் என்று கூறுகிறது.[45]

(தமிழ்) இதே சுவரிலுள்ள சாளுவ மன்னர் சாளுவ நரசிம்மராய மகாராயர் புதல்வர் இம்மடி நரசிம்மராய மகாராயர் சகம் 1426 ரக்தாட்சி கும்பம்(மாசி) மாதம் 14-ஆம் நாள் திருவோணம் சிவராத்திரி (1505-ஆம் ஆண்டு பிப்பிரவரி 2-ஆம் நாள்) கல்வெட்டு, மூறாங்கமங்கலப்பற்றிலுள்ள பாலக்குன்றக் கோட்டத்து உட்பிரிவாகிய கச்சூர்நாட்டுச் செய்யாற்றுக்குத் தெற்கிலுள்ள சோமாசிபுரம் என்கிற மணல்பாக்கம் கிராமத்தை நன்கொடையாகச் சமரபுங்கவ தீட்சிதர் இறைவனுடைய கோயிலுக்கும் இறைவியுடைய கோயிலுக்கும் வழிபாட்டுக்காக அளித்ததைக் குறிப்பிடுகிறது. இந்தக் கிராமம் அக்னி ஹோத்திரத்திற்காக (புனித நெருப்பை வளர்ப்பதற்காக) அவருக்குத் திருமலை நாயக்கரால் அளிக்கப்பட்டதாகும்.[46]

(தமிழ்) இதே சுவரிலுள்ள கலியுகம் 4990 சகம் 1811 விரோதி ஆண்டு (கி. பி. 1889 நவம்பர் 27) கல்வெட்டு, அபிநவபூர்ணபிரியர் சீனிவாசராவ் சாலை ஆரணி ஜாகீர்தார், புனித முறையில் இந்நாளில் கனககிரீசுவரருக்கு அட்டபந்தன கும்பாபிடேகம் நடத்தியதைக் குறிப்பிடுகிறது.[47]

(மராத்தி) இதே கோபுரத்தின் நுழைவாயில் இடப்புறம் மகராச சாகிப் சரபோசி மகன் தஞ்சாவூர் மராத்திய மன்னர் துளசராச சாகிப் (1763-87) பால்குண திங்கட்கிழமைக் கல்வெட்டு, பீடத்தில் அசைவுடன் இருந்த தேவி திருவுருவத்தை நிலைப்படுத்தியதைக் குறிக்கிறது.[48]

(தமிழ்) இதே இடத்திலுள்ள விசயநகர மன்னர் சீரங்க தேவ மகாராயர் (சீரங்கா 2) சகம் 1499 ஈசுவர ஆண்டுக் கும்பம் (மாசி) மாதம் 28-ஆம் நாள் (27 என இருக்க வேண்டும்) ஞாயிற்றுக்கிழமை துவிதிகை, அத்த நட்சத்திரம் (1578-ஆம் ஆண்டு பிப்பிரவரி 22-ஆம் நாள்) கல்வெட்டு, வேலூர் அகத்தியப்ப நாயக்கர் நலனுக்காகக் கோயிலுக்கு ஒரு நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[49]

(கிரந்தம்) இதே இடத்தில் கோளகி மடத்தின் தலைவர் ஈசான சிவயோகிந்திரர் சிவன் ஆணையை ஏற்றார் (இறந்தார்) என்பதைக் குறிப்பிடுகிறது.[50]

(தமிழ்) இதே இடத்திலுள்ள சகம் 1401 விளம்பி ஆண்டு மிதுனம் (ஆனி) மாதம் 7-ஆம் நாள் திங்கட்கிழமை உத்திரட்டாதி சுபயோக கரணக் கல்வெட்டு, ஈசுவர நாயக்கர் நலனுக்காகத் திருமலை நாயனார் பெரிய நாச்சியார் கோயில்களில் பணிபுரியப் பெண்களை எட்டப்ப நாயக்கர் நியமனம் செய்ததைக் குறிப்பிடுகிறது.[51]

(தமிழ்) இதே இடத்தில் சாளுவ மன்னர் நரசிங்கராய உடையார் (நாட்டைக் கைப்பற்றியவர்) சகம் 1401 விளம்பி ஆண்டு மிதுனம் (ஆனி) மாதம் 7-ஆம் நாள் திங்கட்கிழமை உத்திரட்டாதி சுபயோக சுபகரண கல்வெட்டு முடிவுபெறாமல் உள்ளது. (1478 ஆம் ஆண்டு திங்கட்கிழமை ஜூன் 22-ஆம் நாளாக இருக்கலாம்).[52]

(தமிழ்) இக்கோயிலின் முதற்கோபுரத்திலுள்ள விசயநகர மன்னர் சதாசிவ மகாராயர் சகம் 1493 ஆண்டுக் கல்வெட்டு சேதம் அடைந்து முடிவு பெறாமல் உள்ளது. இது வேலூர் கிருட்டினப்ப நாயக்கர், எராபொம்ம நாயக்கர், நல்ல பொம்ம நாயக்கர் ஆகியோர் நலனுக்காக ஒரு நன்கொடை அளிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.[53]

(தமிழ்) இதே கோபுரத்திலுள்ள கல்வெட்டு, இராமய்யப்ப நாயக்கர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தபோது இலிங்கமநாயக்கர் நலனுக்காகத் தறிகளின் பேரில் வரிவிதிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[54]

(தமிழ்) (நல்ல தண்ணீர்க் குளத்தருகிலுள்ள) கணேசர் கோயிலின் கிழக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு, இக்கோயிலும் குளமும் (வைசிய நகரத்தார்களாகிய) வணிகர் ஒருவருடைய நன்கொடை என்பதைக் குறிக்கிறது.[55]

(தமிழ்) இவ்வூரின் மலைமீதுள்ள கனககிரீசுவரர் கோயில் கோபுரத்திலுள்ள கல்வெட்டு, கலியுகம் 4990 சகம் 1811 விரோதி (1889 நவம்பர் 27) 397-ஆம் எண் கல்வெட்டின் நகலாகும்.[56]

இங்குள்ள கோயில்களுக்குக் காலை, மாலை இரண்டு வேளைகளில் பூசைகள் நடைபெறுகின்றன. சிவன் கோயிலில் சிவராத்திரி விழாவும் அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவும் பங்குனி உத்திரப்பெருவிழாவும் நடைபெற்று வருகின்றன. மலைக்கோயிலில் ஐப்பசி மாதத்தில் பௌர்ணமி நாளில் அன்னாபிடேகமும் மாசி மாதத்தில் கிருட்டின பட்சத்தில் சிவராத்திரி விழாவும் நடைபெற்றுவருகின்றன.

ஐப்பசி மாதத்தில் கந்தர்சஷ்டி விழாவும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீப உற்சவமும் மார்கழி மாதத்தில் நடராசப் பெருமானின் ஆருத்திரா விழாவும் தைமாதத்தில் காணும் பொங்கலன்று வேடர்பறி உற்சவமும் நடைபெற்று வருகின்றன. ஊருக்கு மேற்கே சிறிய குன்றின் மீது கையில் வில் ஏந்திய கண்ணப்ப நாயனார் கோயிலுள்ளது. இக்கோயிலுக்குப் பூசையே கிடையாது. இக்கோயிலுக்குக் கீழ்ப்புறம் வேடர்பறி மண்டபம் ஒன்றுள்ளது. தற்போது அம்மண்டபம் பழுதடைந்துள்ளது.

பெரியநாயகிஅம்மன் கோயில் சந்நிதி வீதியில் சைவசமயாச்சாரியார்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெயரால் திருமடம் ஒன்று இருக்கிறது. இம்மடத்தைச் சேர்ந்த சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நித்திய வழிபாடு நடத்தப்படுகிறது. சுக்கிர வாரந்தோறும் இத் திருக்கூட்டத்தினர் தேவாரத் திருமுறைகளை ஓதிக்கொண்டு பெரியநாயகி அம்மன் ஆலயத்தில் ஆராதனைபுரிந்து வாரவழிபாடு நடத்திவருகின்றனர். இது தவிர மடாலயத்தில் நால்வர் திருநட்சத்திரக் குரு பூசை விழாவும் தவறாமல் நடத்தப்பட்டுவருகின்றது. மார்கழி மாதத்தில் திருக்கூட்டத்தினர் ஆரம்பத்தில் வழிபாடு தொடங்கி மாடவீதிகளில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை முதலிய பாசுரங்களைப் பாடிக் கொண்டு நகர் வலம் வந்து வழிபாட்டை முடித்துக்கொள்வது வழக்கம்.

இக்கோயில் இந்து சமய அறநிலை ஆட்சித்துறையின் ஆணைக்குட்பட்டது. ஆரணி வட்டத்தைச் சேர்ந்த நிருவாக அதிகாரியின் மேற்பார்வையில் இக்கோயில் இருந்துவருகிறது. இக்கோயிலுக்கு 1. 62 ஏக்கர் 62 செண்ட் நன்செய் நிலம் மட்டும் இருக்கிறது. கோயிலையடுத்துத் தென்புறம் வாகனங்கள் வைப்பதற்காக சிமெண்ட் கூரைக் கட்டடம் ஒன்று இருக்கிறது. சத்திரம் ஒன்றுமுள்ளது.

இக்கோயிலில் அதிகாரநந்தி, பூதம், மயில், நாகம், இடபம், அன்னம், பெருச்சாளி, குதிரை, இராவணேசுவரன் ஆகிய வாகனங்களும் சூரிய, சந்திர பிரபைகளும் தெருவடிச்சான் மூன்றும் இந்திரவிமானம் ஒன்றும் (கந்தருவ பதுமைகளுடன்) உள்ளன.

திருத்தேர் மிகவும் பழுதடைந்து சீர்கேடான நிலையில் இருப்பதால் அது புதுப்பிக்கப்பட வேண்டும்.

இக்கோயிலுக்கு நிரந்தரமான நிலபுலங்களின் வருமானம் யாதொன்றும் கிடையாது. இக்கோயிலைச் சுற்றியுள்ள கோயில் புறம்போக்கு இடங்களில் கடைகள் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்பவர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொகை தரை வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இத்தொகை மாதமொன்றுக்கு ஏறத்தாழ 1,000/- உருபாயாகும். இதைக் கொண்டு கோயிலின் அனைத்துச் செலவுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

---

(1. 351/1912; 2. 352/1912; 3. 353/1912; 4. 354/1912; 5. 355/1912; 6. 356/1912; 7. 357/1912; 8. 358/1912; 9. 359/1912; 10. 360/1912; 11. 361/1912; 12. 362/1912; 13. 363/1912; 14. 364/1912; 15. 365/1912; 16.

366/1912; 17. 367/1912; 18. 368/1912; 19. 369/1912; 20. 370/1912; 21. 371/1912; 22. 372/1912; 23. 373/1912; 24. 374/1912; 25. 375/1912; 26. 376/1912; 27. 377/1912; 28. 378/1912; 29. 379/1912; 30. 380/1912; 31. 381/1912; 32. 382/1912; 33. 383/1912; 34. 384/1912; 35. 385/1912; 36. 386/1912; 37. 387/1912; 38. 388/1912; 39. 389/1912; 40. 390/1912; 41. 391/1912; 42. 392/1912; 43. 393/1912; 44. 394/1912; 45. 395/1912; 46. 396/1912; 47. 397/1912; 48. 398/1912; 49. 399/1912; 50. 400/1912; 51. 401/1912; 52. 402/1912; 53. 403/1912; 54. 404/1912; 55. 405/1912; 56. 406/1912).

## தோட்டப்பாளையம்

# அபயாம்பிகை, தாரகேசுவரர் கோயில்

இக்கோயில் வேலூருக்கு வடபுறத்திலுள்ள தோட்டப்பாளையம் அருகந்தம்பூண்டி பெரிய தெருவில் அமைந்துள்ளது.

இங்கு ஆறுமுகங்களுடன் வீற்றிருக்கும் கந்தர் கோயில் இருந்தது என்றும் ஆறுகந்தம் பூண்டி என்பது அருகந்தம் பூண்டி என வழங்கி வரலாயிற்று என்றும் கூறுவர்.

ஆறுமுககந்தர் கோயில், அருச்சகர் பரம்பரையைச் சார்ந்த சுப்பிரமணிய குருக்கள் என்ற சிவாச்சாரியார் 300 ஆண்டுகளுக்கு முன்னர்த் தலயாத்திரையாக வடநாடு சென்றார். சிவாச்சாரியார் நேபாளம் அரித்துவார், காசி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து காசியில் சிலகாலம் தங்கினார்.

ஒருநாள் கங்கையில் நீராடிக் காசிவிசுவநாதரை வழிபடச்சென்றபோது துறவி ஒருவர் இவரிடம் ஓர் இலிங்கத்தைக் கொடுத்து 'இதைப் பூசை செய்து வருவாயாக' என்று சொல்லி மறைந்தார். சிவ வழிபாட்டில் திளைத்த இச்சிவாச்சாரியார் இதை இறைவன் அருள் எனவே மதித்து அதைக் கொண்டு வந்து தமதுவீட்டில் தமது சிவபூசையில் வைத்து வழிபட்டுவந்தார். ஒருநாள் அவரது கனவில் முதியவர் ஒருவர் தோன்றி "பலரும் கண்டு வழிபாடு செய்யாதவாறு உம் வீட்டில் இச்சிவலிங்கத்தை வைத்திருப்பதென்ன?" என்று வினவி மறைந்தார். அதே நாள் விடியற்காலை ஆறுமுகர் கோயில் அறங்காவலர் திரு. சொக்கலிங்க முதலியாரின் பாட்டனார், அருச்சகரின் வீட்டிற்கு வந்து தன் கனவில் முதியவர் ஒருவர் தோன்றிக் கோயில் ஒன்று அமைப்பாயாக என்று சொன்னதாகக் கூறினார். இருவரின் கனவிலும் நேர்ந்த ஒற்றுமையைக் கண்டு அவர்கள் இருவரும் வியப்புற்றார்கள். பிறகு அருகந்தம்பூண்டி மக்களின் விருப்பிற்கேற்ப அவர்களது ஒத்துழைப்பைக் கொண்டு காசியிலிருந்து இங்குக் கொண்டுவந்த சிவலிங்கம் நிறுவப்பட்டுப் பூசையும் சிறப்பாகத் தொடங்கப்பட்டது.

இங்குள்ள மூலவர் தாரகேசுவரர் என்ற பெயருடன் விளங்குகிறார். 'தாரக்' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'நீந்த வல்லான்' என்பது பொருள். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரைசேர அன்பர்களுக்கு உறுதுணையாக இருப்பவர் தாரகேசுவரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. அபயம் என்று சரணடைபவர்களை அன்புடன் காத்தருள்வார் என்னும் பொருள் கொண்ட அபயாம்பிகை என்ற பெயருடன் அம்பாள் பாசாங்குசம், அபயவரத கரத்துடன் விளங்குகிறார். பாதங்களில் சதங்கையையும் கழுத்தில் பல ஆபரணங்களையும் அணிந்து அம்பாள் பலருக்குக் காட்சியளித்ததாகச் சொல்லப்படுகிறது. இவ் வட்டாரத்தில் தாரகேசுவரர் கோயில் சிறப்புற்று விளங்கி வருகிறது.

கோயிலில் பேட்டைவாசிகளால் 1916ஆம் ஆண்டில் திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. பிறகு இராசகோபுரம் கட்டப்பட்டுக் கும்பாபிடேகம் நடத்தப்பட்டது. இக்கோயிலுக்கு நவாப்புகள் ஆட்சிக் காலத்திலிருந்து தஸ்திக் என்னும் மான்யம் வழங்கப்பட்டுவருவது, இது புராதனக்கோயில் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இக்கோயிலுக்குத் தென்புறத்தில் தற்போது ஒரு வாயில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி உள்ளே சென்றதும் வலப்பக்கம் விநாயகரும் இடப்பக்கம் ஆறுமுகரும் காட்சி அளிக்கிறார்கள். அடுத்து நந்திதேவர் சந்நிதியும் கொடிமரமும் உள்ளன. மூலத்தானத்தில் கிழக்கு நோக்கியவாறு தாரகேசுவரர் சிவலிங்க வடிவிலும் தெற்கு நோக்கியவாறு அபயாம்பிகையும் காட்சியளிக்கின்றனர்.

கோட்டங்களில் முறையே நிருத்த கணபதி, தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. துர்க்கைக்கு எதிரில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. நால்வர் பத்ம பீடம், சப்தமாதர், நாககணபதி, சிவலிங்கம், தண்டபாணி, வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், சரசுவதி, வயிரவர், சூரியன், அகோரவீரபத்திரர், ஆட்டுத்தலையுடன் தக்கன் ஆகியோர் திருவுருவங்கள் உட்பிராகாரத்தில் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.

வெளிப் பிராகாரத்தில் உற்சவர் சந்நிதியும், அதனெதிரில் மேற்கு நோக்கியவாறு மிகவும் அழகான வேலைப்பாடுகளுடன் சீனிவாசப் பெருமாள் நின்ற வடிவிலுள்ள சந்நிதியும் சுவேத லிங்கம், நவக்கிரகம், நடராசர், சிவகாமசுந்தரி, சனிபகவான் ஆகியோர் சந்நிதிகளும் அமைக்கப்பெற்றுள்ளன. உற்சவர் சந்நிதியில் அனைத்து உற்சவமூர்த்திகளும் உள்ளனர்.

இக்கோயிலில் நந்தவனமும் அதில் தீர்த்தக்கிணறும் இருக்கின்றன. இங்கு இருகாலப்பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் சித்திரைப் பௌர்ணமியை முன்னிட்டுப் பத்து நாள்கள் பிரமோற்சவம் தீர்த்தவாரியும் பௌர்ணமி அன்று பூப்பல்லக்கு விழாவும் நடைபெறுகின்றன. தவிர பஞ்சபருவ உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இக்கோயிலுக்கு இரண்டு வீடுகளும் ஐந்து கடைகளும் மூன்று கட்டடங்களும்

உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலரிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 69, 283 உருபாயாகும்.

இக்கோயிலுக்கு உற்சவங்களுக்கென அழகிய பல்லக்கு, கேடயம், யானை முதலிய வாகனங்கள் அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் உள்ளன.

## நத்தம்

# சுரகரேசுவரர் திருக்கோயில்

இக்கோயில் திருப்பத்தூர் வட்டம் காக்கங்கரை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர்த் தொலைவில் 3 ஏக்கர்ப் பரப்பில் 18 மீட்டர் நீளமும் 15 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கியவாறு கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளது.

தெற்குப்பக்கம் உள்ள நுழைவாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், நேர்கிழக்காக மதிற்சுவரையொட்டினாற்போல் சூரியனுக்குத் தனிக்கோயில் இருப்பதைக் காணலாம். சுற்றுப் பிராகாரத்தின் வலப்புறம் விநாயகர் சந்நிதியும் இடப்புறம் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. கருவறையின் முன் வாயிலில் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் இலிங்க வடிவமாய்ச் சுரகரேசுவரர் அருள்பாலிக்கிறார். சுவாமிக்கு இடப்புறமாகப் பிரமதேவர், துர்க்கை சண்டேசுவரர் ஆகியோர்களுக்குத் தனிச் சந்நிதிகளும் அடுத்து நவக்கிரகச் சந்நிதியும் உள்ளன.

சுரகரேசுவரர், கன்னிகாசௌந்திரி அம்மன், விநாயகர், அத்திரதேவர் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை ஆகியோர்தம் பஞ்சலோகத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலிலுள்ள தீர்த்தக் கிணற்றிலிருந்து தீர்த்தம் எடுக்கப்பட்டுப் பூசைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இக்கோயிலுக்கு இருகாலப்பூசை நிகழ்த்தப்பெறுகிறது. ஆடிக்கிருத்திகை, விசயதசமி, சிவராத்திரி, சங்கராந்தி, பங்குனிஉத்திரம், சித்திரைப்பௌர்ணமி ஆகிய சிறப்பு நாள்கள் கொண்டாடப்படுகின்றன. பங்குனியில் பிரமோற்சவம் செய்யப்பட்டு வருகிறது.

இக்கோயிலுக்கு 40.02 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன. பனைமரங்கள், தென்னை மரங்கள் உள்ளன. கோயில் அருச்சகருக்குக் குடியிருக்க வீடு ஒன்று உள்ளது. அரசு தஸ்திக் தொகையாக 73.50 ரூபாய் அளித்துவருகிறது. ஆண்டொன்றுக்கு இக்கோயிலின் வருமானம் 6,320/- ரூபாயாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலர், அறங்காவலர் தலைமையில் செயலாற்றி வருகிறார். இடப வாகனம் நல்ல நிலையில் உள்ளது. சப்பரமும் உள்ளது.

## நமத்தோடு

# பொன்னியம்மன் கோயில்

இக்கோயில் ஆரணி நகரத்திலிருந்து சேத்துப்பட்டு செல்லும் வழியில் பெரிய கொழப்பலூர் மற்றும் ஆலணியாபுரம் ஆகிய கிராமங்களுக்கு இடையிலுள்ள நமத்தோடு என்னும் கிராமத்தில் 8 மீட்டர் நீளமும் 3மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

இது கிராமக் கோயிலாகும். இங்குப் பொன்னியம்மன் திருவுருவம் மட்டும் உள்ளது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை தம்பிரான் ஒருவரால் செய்யப்படுகிறது. ஆண்டுக்கொருமுறை கிராம மக்கள் உற்சவம் நடத்துகிறார்கள். இக்கோயிலுக்கு 28 செண்ட் நன்செய் நிலம் உள்ளது.

## நீப்பத்துறை

# பிரசன்ன வெங்கட்ரமணப் பெருமாள் கோயில், சென்னியம்மன் கோயில்

செங்கம் நகரிலிருந்து ஏறத்தாழ 28 கிலோமீட்டர்த் தொலைவில் தென்பெண்ணை ஆற்றங்கரையில் வெங்கட்ரமணப் பெருமாள் கோயிலும் இதற்கு அருகில் சென்னியம்மன் கோயிலும் அமைந்துள்ளன. இதன் பரப்பு 37 மீட்டர் நீளமும் 22 மீட்டர் அகலமும் ஆகும்.

இந்த இடம் நீர்ப் பெருந்துறையாக இருப்பதால், நீர்ப்பெருந்துறை என்னும் பெயர் முதலில் வழங்கிவந்தது. பின்னர் அப்பெயர் நீப்பத்துறை என மருவிற்று. இவ்வூரில் 16 வயது நிரம்பிய வெங்கடேசப்பிள்ளை என்பவர் பாம்பு கடியுண்டதால், இறந்தார். அப்போது சித்தர் வெள்ளையப்பர் திருநீற்றில் மந்திரம் ஓதி, வெங்கடேசப் பிள்ளையைக் கடித்த பாம்பை வரவழைத்து, தான் கடித்துச் செலுத்திய நஞ்சை வெளியில் எடுத்துவிடுமாறு செய்தார். வெங்கடேசப்பிள்ளை உயிர்பெற்று எழுந்தார். உயிர் பெற்று எழுந்த வெங்கடேசப் பிள்ளையை வெள்ளையப்பர் தம் சீடனாக வைத்துக்கொண்டார். வெளியில் வந்த பாம்பின் நஞ்சு அங்கிருந்த கல்லில் இறக்கப்பட்டது. இன்றும் அக்கல்லில் எண்ணெயை ஊற்றி வழித்து எடுத்துப் பாம்பு கடித்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

தருமபுரி மாவட்டம் ஓசூர் கிராமத்தில் ஏகாலியர் வகுப்பினைச் சேர்ந்த குடும்பத்தில் சென்னியம்மன் என்ற ஏழு வயதுப் பெண் பிறந்து வளர்ந்து வந்த சமயத்தில், இம்மாவட்டத்தில் சாகீர்தார் சாய்பு தமக்குக் குழந்தை இல்லாத காரணத்தால், சென்னியம்மனை விலைக்குப் பேசிவிட்டு, மறுநாள் பணத்துடன் வருவதாகக் கூறிச் சென்றார். இதனையறிந்த அப்பெண், "என்னை யாராலும் விற்க முடியாது; என்னைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுங்கள்" என்று தன் தந்தையிடம் சொல்லியதற்கேற்ப, அப்பெண்ணை அவள் பெற்றோர்கள் ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டார்கள். பின்னர் சாகீர்தார் சாய்பு பணத்துடன் அங்கு வந்தபோது, ஆற்றின் இரு கரைகளிலும் தண்ணீர் புரண்டு வந்தது. வெள்ளையப்ப சித்தர் இந்நிலையைத் தமது தியானத்தில் அறிந்து, அப்பெட்டியைப்பற்றி அதிலிருந்த சென்னியம்மனை எடுத்து ஆசி வழங்கினார். சென்னியம்மன் சில காலம் அங்கு வாழ்ந்து, ஆற்றின் நடுவே உள்ள பாறையில் வீடுபேறு அடைந்தார். அப்பாறைக்குச் சென்னியம்மன் பாறை என்று இன்றும் பெயர் விளங்கிவருகிறது.

வெள்ளையப்ப சித்தர் தாம் பூசைசெய்து வந்த பிரசன்ன வெங்கட்ரமணப் பெருமாளுக்குப் பூசை செய்து வருமாறு அன்பர்களிடம் சொல்லிவிட்டு அவர் சென்று விட்டார். அன்னார் சமாதி பெருமாளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் நுழைவாயிலில் 9 மீட்டர் உயரமுள்ள கொடிமரம் ஒன்று செப்புத்தகட்டால் வேயப்பட்டுள்ளது. அருகில் பலிபீடமும் உள்ளது. இக்கோயிலின் வடபுறம் ஆஞ்சநேயர் சந்நிதியும் எதிரில் கருடன் சந்நிதியும் தெற்கில் மடைப்பள்ளியும் உள்ளன.

கோயிலின் பின்புறம் தென்பெண்ணை ஆறு ஓடுகிறது.

இக்கோயிலின் கிரகக்கோபுரம் 3 கலசங்களுடன் 13மீட்டர் உயரம் உடையதாக அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு ஒரு பிராகாரம் உள்ளது. இக்கோயிலில் சத்திரம் ஒன்றும் மண்டபம் ஒன்றும் உள்ளன.

தினசரி மூன்றுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும்

ஆடிமாதம் 13-ஆம் நாள் முதல் 10 நாள்கள் பிரம்மோற்சவம் நடைபெற்று வருகிறது. ஆடி 18-ஆம் நாள் ஆடிப்பெருக்கு விழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவின்போது ஏறத்தாழ ஓர் இலட்சம்பேர்கள் கலந்து கொள்கிறார்கள். நவராத்திரி, உறியடித் திருவிழா, கிருட்டின செயந்தி, சிவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, கருடசேவை முதலிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மக்கள் ஆண்டுதோறும் ஆடிப் பதினெட்டிலும் ஆடிப்பெருக்கு விழாவின் போதும் தென்பெண்ணை ஆற்றில் நீராடிவிட்டு வெங்கட்ரமணப் பெருமாளை வழிபடுகிறார்கள். முடிக்காணிக்கை செலுத்தி, சென்னியம்மன் கோயிலில் வழிபடுகின்றனர்.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ளது. இக்கோயில், பரம்பரை அறங்காவலர் திரு என்.எஸ்.வெங்கட்ராம பிள்ளையால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலுக்கு 5.57 ஏக்கர் புன்செய் நிலமும் 0.87 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 54,350 உருபாயாகும்.

## நெடுங்குணம்

# இராமச்சந்திரப் பெருமாள் கோயில்

இக்கோயில் சென்னையிலிருந்து போளூர் செல்லும் பேருந்து வழியில் போளூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 25 கிலோமீட்டர்த் தொலைவில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இவ்வூருக்குக் கிழக்கே வானளாவ உயர்ந்து நிற்கும் நெடிய குன்றத்தின் காரணமாக இவ்வூருக்கு நெடுங்குன்றம் என்னும் பெயர்முதலில் அமைந்தது. இப்பெயர் நாளடைவில் நெடுங்குணம் என்று திரிபெய்திற்று. இம்மலையில் சுகர் மாமுனிவர் வாழ்ந்துவந்தார் என்பதால் இம்மலைக்குச் சுகர்மலை என்னும் பெயரும் கிளிமலை என்னும் பெயரும் அமைந்தன என்பர்.

இக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயில் வழியாக இக்கோயிலின் பிராகாரத்தை வலம்வந்து பலிபீடம், கருடாழ்வார் சந்நிதி ஆகியவற்றைக் கடந்து கருவறையில் இராமச்சந்திரமூர்த்தி சந்நிதியை அடையலாம். இராமர் தம் வலக்கையில் ஞான முத்திரையுடன் இடக்காலை கீழே தொங்கவிட்டு வலக்காலை மடக்கி வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இராமருக்கு வலப்புறத்தில் இலக்குமணர் தம் இரு கைகளையும் கூப்பி வணங்கும் நிலையிலும் இடப்புறத்தில் சீதாப் பிராட்டி

அமர்ந்த நிலையிலும் எதிரில் ஆஞ்சநேயர் அடக்கத்துடனும் உள்ளனர்.

நெடுங்குன்ற மலையிலிருந்து தோன்றுகின்ற மலையருவி, கிளியாறு என்னும் சிற்றாறாகப் பெருக்கெடுத்து வந்தவாசி வழியாக மதுராந்தகம் செல்கிறது. இக்கோயிலுக்கு இந்த ஆறு ஒரு தீர்த்தமாகும். இக்கோயிலில் தீர்த்தக்கிணறும் உள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம் ஏழு நிலைகளைக் கொண்டுள்ளது. அடுத்து உட்புறத்தில் கிளிக்கோபுரம் இருக்கிறது.

இக்கோயிலில் நூற்றுக்கால் மண்டபமும் திருமண மண்டபமும் இருக்கின்றன.

இக்கோயிலின் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கது வராக மூர்த்தி சிற்பமாகும். வராக மூர்த்தி தம் இடப்புறத்துத் தொடைமீது தம் தேவியை அழகுற அமர்த்திக் கொண்டிருக்கிறார். இடக்கை செங்கோல் ஏந்திய நிலையிலும் வலக்கை அபய மளிக்கும் நிலையிலும் திருமங்கையாழ்வார் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலின் முதற் பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ள வீரப்பிரதாப வீர அச்சுததேவ மகாராயர் சகம் 1460 குரோதி ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயிலுக்கு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[1]

இக்கோயில் முதன்மைக் கோபுரத்து வாயிலின் உட்புறத்தில் பொறிக்கப்பட்ட இராட்சச ஆண்டுக் கல்வெட்டு, இரகுநாத நாயக்கரின் முகவரான சோனாத்திரி அய்யனைக் குறிக்கிறது.[2]

இதே இடத்திலுள்ள இராட்சச ஆண்டுக் கல்வெட்டு, தனிப்பட்டவர் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.[3]

இதே இடத்திலுள்ள குரோதி ஆண்டுக் கல்வெட்டு, அச்சுத விசய ராகவ நாயக்க அய்யனின் முகவர் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.[4]

கோயிலின் மையச்சந்நிதியின் வடக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு கிருட்டினதேவராயர் சகம் 1454-ஆம் ஆண்டு (சர்வசித்) நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[5]

இதே கோயிலின் வாயிலுக்கு வலப்புறத்திலுள்ள கல்வெட்டு, தீட்சித அய்யன் நன்மைக்காக அச்சுத அய்யன் முகவர் நிலம் அளித்ததைக் குறிக்கிறது.[6]

இதே சுவரிலுள்ள வாயிலுக்கு இடப்புறத்தில் விசயநகர வீரப்பிரதாப விருபாட்ச வீரவேங்கடபதிதேவர் சகம் 1178-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, தீட்சிதன் நன்மைக்காகப் பணம் அளித்ததைக் குறிக்கிறது.[7]

இக்கோயிலில் இரு காலப்பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்திரம், ஸ்ரீராமநவமி ஆகிய திருவிழாக்களும் பிரமோற்சவமும் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 8.17 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அறங்காவலர்களிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,500/- உருபாயாகும்.

---

(1. 704/1904; 2. 705/1904; 3. 706/1904; 4. 707/1904; 5. 708/1904; 6. 709/1904; 7. 710/1904).

## பரிதிபுரம்

# கங்கையம்மன் கோயில்

இக்கோயில் செய்யாறு நகரச் சந்தைப்பகுதியில் 6 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இருக்கின்றது.

கங்கையம்மன் திருவுருவம் மட்டும் இங்குள்ளது. இதிலிருந்து ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு முள்கம்பு வேலி சுற்றிலும் இடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை, பூசாரி ஒருவரால் செய்யப்படுகிறது. இக்கோயில் நிருவாகம் சலவைத் தொழிலாளர்களிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 890 உருபாயாகும்.

## பழங்கோயில்

# பலக்கிருதீசுவரர் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலைக்கு வடக்கில் பூண்டிக்குத் தென்மேற்கில் சேயாற்றின் தென்கரையில் உள்ள பழங்கோயில் கிராமத்தின் வடகிழக்கில் 50 சென்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இப்பகுதியில் இக்கோயில் மிகப் பழமையான கோயிலாக விளங்கியதால் பழங்கோயில் என அழைக்கப்பட்டு, பின்னர் அப்பெயரே ஊரின் பெயராக அமைந்தது.

பலக்கிருதீசுவரர் என்பவர் வலிமையை வளர்ப்பவர் (பலம் - வலிமை; கிருதம் - வளர்த்தல்) என்னும் பொருளில் இப்பெயர் அமைந்துள்ளது. இதுபோன்றே தபோபலம், ஞானபலம் ஆகியவற்றையும் இவர் வளர்ப்பதால் இவருக்கு இப்பெயர் வழங்கிவருகிறது என்றும் கூறலாம். ஈசுவரர் என்னும் சொல் எல்லாச் செல்வங்களையும் கொண்டுள்ளவர் என்பதைக் குறிக்கிறது.

கிழக்கு வாயிலின் வழியாகப் பிராகாரத்தில் வலம் வரும்போது தெற்குப் பிராகாரத்தில் நால்வர் சந்நிதி வடக்கு நோக்கியவாறு இருப்பதைக் காணலாம். தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் அடுத்து உருக்குமணி, சத்தியபாமை, வேணுகோபாலர் ஆகியோர் சந்நிதிகளும் அடுத்து வடமேற்குக் கோடியில் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. இம்மூன்று சந்நிதிகளும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. வடக்குப் பிராகாரத்தில் அம்பிகை பாலாம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. கோயிலினுள் தென்கிழக்கில் காளியின் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. கருவறையின் முன் தென்புறமுள்ள துவாரபாலகருக்குத் தெற்கில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்துத் துவாரபாலகருக்கு வடக்கில் சுப்பிரமணியர் திருவுருவமும் அடுத்து வள்ளலார் திருவுருவமும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. வடக்குப் பகுதியில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இங்குச் சிவகாமசுந்தரி திருவுருவமும் உள்ளது. தெற்குப் பிராகாரத்திலுள்ள உற்சவர் சந்நிதியில் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானை, ஆறுமுகர், சண்டேசுவரர், அத்திரதேவர், நால்வர், சந்திரசேகரர், சுக்கிரவார அம்மன், வீரவாகுதேவர் ஆகியோர் உற்சவத்திருமேனிகள் உள்ளன. இங்குள்ள சோமாசுகந்தர் வலக்கையை அபயம் அளிக்கும் நிலையிலும் இடக்கையை சின்முத்திரை காட்டும் நிலையிலும் கொண்டுள்ளார்.

குருக்களால் இருவேளைப்பூசை நடைபெற்றுவருகின்றது. வசந்த உற்சவம், கந்தர்சஷ்டி, கிருத்திகை, நடராசர் அபிடேகம், நவராத்திரி ஆகியவை சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. முறையாக வேதபாராயணம் நடைபெறுகிறது. தேவாரங்களோடு பஞ்சபுராணமும் ஓதப்படுகிறது.

இக்கோயில் நிருவாகம் செங்குந்த மரபினரிடம் உள்ளது. இக்கோயிலுக்கு 3 ஏக்கர்நிலம் உள்ளது. இடபம், மயில், பெருச்சாளி ஆகிய வாகனங்கள் உள்ளன. இறைவழிபாட்டில் ஈடுபாடுடைய மக்கள் பலர் மாலையில் கோயிலுக்கு வருகின்றனர்.

இவ்வூரில் குளத்தைத் தோண்டியபோது திருமால், சீதேவி, பூதேவி ஆகியோரின் சிறியதும் பெரியதுமான இரண்டு செப்புப் படிமங்கள் கிடைத்துள்ளன. இவை பிற்காலச் சோழர் கலைப்பாணியில் அமைந்தவை. இப்படிமங்கள் இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளன. புரட்டாசிச்

சனிக்கிழமைகள், வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீசெயந்தி ஆகிய நாள்கள் கொண்டாடப்படுகின்றன.

## பள்ளிகொண்டா

# உத்தரரங்கநாதர் கோயில்

இக்கோயில் குடியாத்தம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து தெற்கே 4 கிலோமீட்டர்த் தொலைவில் பாலாற்றின் கரையில் பள்ளிகொண்டா என்னும் ஊரில் 85 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

திருமால் பல தலங்களில் பள்ளி கொண்டிருப்பினும் இத்தலம் ஒன்றே பள்ளிகொண்டா என்னும் தனது பெயரைக் கொண்டே திருமால் பள்ளி கொண்டுள்ளதைத் தெரிவிக்கிறது. பள்ளிகொண்டான் என்னும் பெயர் பள்ளிகொண்டா என வழங்கி வருகிறது.

இக்கோயில் எவ்வாறு தோன்றியது என்பதை உத்தரரங்க மகாத்மியம் தெரிவிக்கிறது. திருமகள், சரசுவதி ஆகிய இருவருள் எவர் பெரியவர் என்னும் வாதம் எழுந்தது. இதில் தீர்ப்புக் கூறுமாறு இவ்விருவரும் பிரமதேவரிடம் சென்றனர். இவ்விருவருள் திருமகள் பெரியவர் எனப் பிரமதேவர் தெரிவிக்க, அத்தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத சரசுவதி சீற்றம் கொண்டு பூவுலகையடைந்து சாசிய மலையில் வாழத் தொடங்கினாள். இந்நிலையில் பிரமதேவர் காஞ்சியில் ஒரு வேள்வி இயற்றத் தொடங்கியபோது அதனை அழிக்கும் நோக்கில் சரசுவதி பேராற்று வடிவில் வெள்ளப் பெருக்கெடுத்துப் பிரமதேவர் வேள்வியை அழிக்கத் தொடங்கினாள். பிரமதேவர் திருமாலின் உதவியை நாட அவர் விரைந்து வந்து ஆற்றின் குறுக்கே ஆதிசேடன் மீது பள்ளிகொண்டார்; இவ்வகையில் சரசுவதி விளைவித்த வெள்ளப்பெருக்கைத் தடுத்து நிறுத்தினார். இவ்வாறு இவர் உதவியதால் பிரமதேவர் தமது வேள்வியை இனிது செய்துமுடித்தார். திருமால் ஆற்றின் பெருக்கைத் தடுத்து நிறுத்தியது மூன்று இடங்களில் ஆகும். இவற்றுள் முதல் இடம் பள்ளிகொண்டா.

மனநிறைவு அளிக்கத்தக்க முறையில் வேள்வியைச் செய்துமுடித்த பின் பிரமதேவர் இங்குத் திருமாலுக்குக்கோயில் அமைத்துப் பத்துநாள்கள் பிரமோற்சவம் செய்தார். இவ்வாறு இங்குப் பள்ளிகொண்ட பெருமாளுக்குக்கோயில் அமைந்தது.

இக்கோயிலின் தலவிருட்சம் பாதிரி மரமாகும். இது வடக்குப் பிராகாரத்தில் உள்ளது.



உத்தரரங்கநாதர் கோயில், பள்ளிகொண்டா



விமானம், உத்தரரங்கநாதர் கோயில்
பள்ளிகொண்டா

இக்கோயிலின் கிழக்கிலுள்ள கோபுர வாயிலின் வழியாக வலம்வரத் தொடங்கும்போது பிராகாரத்தின் தென்கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு இராமானுசர் சந்நிதியையும் இதற்கு நேரொத்தவாறு தெற்கு நோக்கியமுறையில் வடகிழக்குக் கோடியில் மணவாள மாமுனிவர் சந்நிதியையும் காணலாம். பின்னர்த் தெற்குப் பிராகாரத்தின் வழியாக மேற்கு நோக்கிச் செல்வோமெனில், முதலில் அரங்கநாயகித் தாயார் சந்நிதியையும் தென்மேற்குக் கோடியில் இராமர் சந்நிதி கிழக்கு நோக்கியிருப்பதையும் காணலாம். இங்கு இராமர், இலட்சுமணர், சீதை, ஆஞ்சநேயர் ஆகியோரின் மூலவர் திருவுருவங்களும் உற்சவத் திருமேனிகளும் உள்ளன. இத்திருவுருவங்கள் ஒரு மீட்டர் உயரத்தில் மிக அழகிய தோற்றம் கொண்டுள்ளன. இங்கு இராமர் மீது பேரன்புகொண்ட குலசேகராழ்வார் திருவுருவம் உள்ளது.

அடுத்து மேற்குப் பிராகாரத்தின் மையத்தில் கண்ணன் தம் இருகைகளிலும் வெண்ணெய் உருண்டைகளை ஏந்தி நடனமாடும் கோலத்தில் கிழக்கு நோக்கியவாறுள்ளார். இவரது உற்சவர் திருமேனியும் இங்குள்ளது. வடமேற்குக் கோடியில் ஆண்டாள் சந்நிதி, கிழக்கு நோக்கியவாறுள்ளது. ஆண்டாள் சந்நிதிக்குக் கிழக்கில் திருமாலின் பாதங்களின் உருவங்கள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் ஆஞ்சநேயர் சந்நிதி தெற்கு நோக்கியவாறு இருக்கின்றது. இங்கு ஆஞ்சநேயர் வீரத்தைக் காட்டும் திருவுருவமும் அவரது அடக்கத்தைக் காட்டும் மற்றொரு திருவுருவமும் உள்ளன. இத்திருவுருவங்கள் கி.பி.1046-ஆம் ஆண்டில் அனந்த தீர்த்தரால் நிறுவப்பட்டன என்பர். உட்கோயிலினுள் முதலில் பலிபீடமும் இதனையடுத்துக் கொடிமரமும் அதனையடுத்து மேற்கு நோக்கியவாறு கருடாழ்வார் சந்நிதியும் உள்ளன.

கருடாழ்வார் சந்நிதி முன்மண்டபத்தின் மீது மணிக்கதவுள்ளது. இக்கதவின் இரு புறங்களிலும் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. துவாரபாலகர் திருவுருவங்களுக்கு மேல் விநாயகர் திருவுருவம் உள்ளது. உட்பிராகாரத்தை வலம்வந்தால் கருவறையின் இடப்புறம் கஸ்தூரிரங்க நாதர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்கு எதிரில் தென்புறத்தில் உற்சவர் திருமேனிகள் இருக்கின்றன. இங்குக் கருவறையில் அவரது கொப்பூழில் மலர்ந்த தாமரையில் பிரமதேவர் அமர்ந்தநிலையிலும் சீதேவி அவரது கைப்புறத்திலும் பூதேவி அவருடைய திருவடிகளைப் பிடித்த நிலையிலும் உள்ளார்கள். முன்புறத்தில் சீதேவி பூதேவியுடன் அரங்கநாதர் உற்சவத் திருமேனியைக் காணலாம். கஸ்தூரி ரங்கநாதர் மேற்கே தலை வைத்துக் கால்களைக் கிழக்கே நீட்டிச் சயனம் கொண்டுள்ளார்.

அரங்கநாதரை வழிபட்டுத் திரும்பும்போது வடபகுதியில் உள்ள ஆழ்வார் சந்நிதியை அடையலாம். இங்குக் குலசேகராழ்வார் திருவுருவமும் நம்மாழ்வார் திருவுருவமும் தெற்கு நோக்கியவாறுள்ளன.

இக்கோயிலுக்குத் தெற்கே 1 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் பீஜாசலம் என்னும் வித்துமலைக் குன்று உள்ளது. இந்தக் குன்றின் மீது செல்லியம்மனுக்குச் சிறிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குன்றில் பல சுனைகள் உள்ளன.

அவற்றுள் சம்பாதி தீர்த்தமும் அப்பாரிச தீர்த்தமும் குறிப்பிடத்தக்கன. கோயிலுக்கு அருகில் வியாச புட்கரணிக்குளம் இருக்கிறது.

இக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் தீர்த்தக்கிணறு இருக்கின்றது.

இக்கோயிலுக்குக் கிழக்கில் இராசகோபுரமும் மேற்கில் ஒரு சிறு கோபுரமும் உள்ளன. மேற்கிலுள்ள கோபுர வாயில் பயன்படுத்தப்படுவதில்லை. கிழக்கிலுள்ள கோபுரம் ஐந்து நிலைகளையும் ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. அரங்கநாதர் சந்நிதி மீது ஒரு கலசத்துடன் விளங்கும் நீள்வட்ட விமானம் எடுப்பாக விளங்குகிறது.

கோயிலுக்கு வெளியில் இராசகோபுரத்திற்குக் கிழக்கில் நாற்கால் மண்டபமும் கருடாழ்வார் சந்நிதிக்கு முன்புறத்தில் மகாமண்டபமும் மகாமண்டபத்தை அடுத்து மேற்கில் உள்மண்டபமும் இருக்கின்றன. இவை தவிர அரங்கநாயகி சந்நிதி, இராமர் சந்நிதி. நவநாதக்கண்ணன் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி ஆகியவற்றின் முன்புறம் அவற்றின் அளவுகளுக்கேற்ற சிறு மண்டபங்கள் உள்ளன. தெற்குப் பிராகாரத்தில் மடைப்பள்ளியும் பள்ளியறையும் அமைந்துள்ளன.

இக்கோயிலின் மையச்சந்நிதியில் பொறிக்கப்பட்ட சக்கரவர்த்தி விக்கிரமசோழர் ஆட்சிக் கல்வெட்டு, இக்கோயிலில் மேசுமிச தேவனார் வழிபாடாற்றி வரவேண்டும் என்னும் நிபந்தனையின்பேரில் கோயில் நிலங்களின் வரிகளை அவருக்கு அளிக்கும் வகையில் குலசேகர சம்புவராயர் பிறப்பித்த ஆணையைக் குறிக்கிறது.[1]

இதே சுவரில் உள்ள கல்வெட்டு, மேலே குறிப்பிடப்பட்ட குலசேகர சம்புவராயர் கீழவிச்சூர் குடிமக்களுக்குப் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் வழிபாடாற்றுவதற்காகக் கோயில் நிலங்கள்[2] தவிர பிற நிலங்களின் வரிகளைத் தள்ளுபடி செய்யப்பட்டதை இது குறிப்பிடுகிறது.

இதே இடத்தில் பொறிக்கப்பட்ட 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இத்தலைவர் வேப்பூர்க் குடிகளுக்குப் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது. இக்கோயிலுக்கு 10 வேலி நிலங்கள் அளிக்கப்பட்டன என்பதையும்[3] அவற்றின் வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பதையும் தெரிவிக்கிறது.

இதே இடத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, சற்றுச் 'சேதமடைந்துள்ளது. இத்தலைவர் தகடூர் நாடாழ்வான்பட்டுக் குடிமக்களுக்குப் பிறப்பித்த ஆணையைக் குறிப்பிடுகிறது; கோயிலில் பூசை[4] செய்யப்படுவதற்குச் சிலவரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இதே சந்நிதியின் மேற்குச்சுவரின் அடிப்பகுதியிலும் தெற்குச்சுவரின் அடிப்பகுதியிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இத்தலைவர் கீழவிச்சூர் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலின் தானத்தாருக்குப் பிறப்பித்த ஆணையைக்

குறிப்பிடுகிறது. இந்த ஆணை இக்கோயிலில் வழிபாடாற்றும் உரிமையும் ஒரு வீட்டில் வாடகையின்றிக் குடியிருப்பதற்கான உரிமையும் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[5]

இதே சந்நிதியின் தெற்குச்சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இத்தலைவர் குலசேகர சம்புவராயர் தகடூர் நாடாழ்வான்பட்டுக் கிராமத்தை இக்கோயிலில் வழிபாடுகள் நடத்துவதற்காக அளித்ததைக் குறிக்கிறது.[6]

இதே சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இத்தலைவர் தகடூர் நாடாழ்வான்பட்டுக் குடிமக்களுக்குப் பிறப்பித்த ஆணை, தேவதானம் நிலங்கள் தவிர வேறு சில நிலங்களின் வரிகளை, கோயில் வழிபாட்டை முன்னிட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[7]

இதே இடத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, முடிவடையாமல் உள்ளது. இது வழிபாட்டிற்காகவும் இறைவி தூசய்யன் நன்மைக்காகவும் பலவரிகள் கோயிலுக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[8]

இதே சந்நிதியின் தாழ்வாரத்தில் தெற்குப்பக்கத்திலுள்ள தூணில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, ஈசுவர காளிங்கன் நன்மைக்காக வழிபாட்டிற்கு நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[9]

இதே தாழ்வாரத்தின் மேற்குப் பக்கத்திலுள்ள தூணில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, ஒரு தூண், பெரும்பொன்னைக் கோவிஞ்சயன் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[10]

இதே இடத்திலுள்ள கல்வெட்டு, ஒரு தூண், சேதுரலன் திருப்போகிபட்டன் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[11]

இதே தாழ்வாரத்தின் 3-ஆவது தூணில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இத்தூண் நகராழ்வான் என்கிற கோவிந்தனால் அமைக்கப்பட்டது என்பதைக் குறிக்கிறது. இதில் இரு கைகளையும் கூப்பியவாறு ஒருவரது உருவம் காணப்படுகிறது. இஃது இதன் நன்கொடையாளர் உருவமாகத் தோன்றுகிறது. இக்கல்வெட்டு கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரியவருகிறது.[12]

இதே சந்நிதியில் உள்ள மண்டபத்தின் நுழைவாயிலின் கிழக்குச்சுவரின் வலப்பக்கத்தில் பொறிக்கப்பட்ட விசயநகரமன்னர் கல்வெட்டு, விளக்கு வைப்பதற்காகவும் வழிபாடுகளுக்காகவும் வீரராக்கிய நல்லூரிலுள்ள மூன்றுவேலி நிலங்களை வரிகளின்றி இக்கோயிலுக்கு மன்னர் புக்கராயர் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[13]

இக்கோயில் முற்காலத்தில் ஒரு கோட்டைக்குள் இருந்திருக்க வேண்டும் என்பதை இக்கோயிலைச் சுற்றியுள்ள பழைய சுவர்கள் காட்டுகின்றன. வைணவ

சமயக் கோட்பாடுகளையும் இராமர், கண்ணன் ஆகியோர் அவதாரப் பெருமைகளையும் இத்திருக்கோயில் விளக்குகிறது. இக்கோயில் பிரார்த்தனைத் தலமாக விளங்கி வருகிறது. இங்கே திருமணங்கள் பல நடைபெற்றுவருகின்றன.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை பட்டாச்சாரியார் செய்து வருகிறார். வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கருடசேவை, உறியடி, ஆடிப்பூரம், நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, இராமநவமி போன்ற விழாக்களும் பங்குனி உத்திரத்தில் தாயார் திருக்கலியாண விழாவும் நடைபெறுகின்றன. சித்திரைப் பௌர்ணமி நாளில் பெருமாள் ஆற்றிற்கு எழுந்தருள்கிறார். நவராத்திரி, வெள்ளிக்கிழமைகளில் தாயார் · உள் புறப்பாடும் நிகழ்கிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் பெருந்திரளாகக்கூடி ஆஞ்சநேயரை வழிபடுகின்றனர்.

வைகுந்தத்திலிருந்து இந்நிலவுலகிற்கு விமானத்தில் எழுந்தருளிய அரங்கநாதரை வழிபட்டவர்களுள் இராமர் சிறப்பிடம் பெறுகிறார். ஆதலினால், இராமருக்கு சிறந்தமுறையில் விழா கொண்டாடப்பெறுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தைப்பூச நாளில் இராமர் அருகிலுள்ள பீசாசல மலையைச் சுற்றி உலா வருகிறார். அங்கு அப்போது அவருக்கு 60 உருபாய் காணிக்கை செலுத்தப்படுகிறது. இராம நவமி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. கண்ணனுக்கும் விழா சிறப்பாக நடத்தப்படுகிறது. கிருட்டின செயந்தி நாளில் கண்ணனுக்கு அபிடேக ஆராதனை நடைபெறுகிறது. அடுத்த நாளில் வீதிகளில் அவர் திருவுருவம் உலாவருகிறது. இங்குக் குறிப்பிடத்தக்கது கண்ணன் வடிவமாகும். இங்குள்ள கண்ணன் வடிவம் மிகச்சிறப்பானதொன்றாகும்.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடமும் இத்துறையைச் சார்ந்த நிருவாக அலுவலரிடமும் உள்ளது. இக்கோயிலின ஆண்டு வருமானம் 19,061 உருபாயாகும்.

இக்கோயிலுக்குச் சிங்கம், அன்னம், கருடன், நாகம், யானை, குதிரை ஆகிய வாகனங்களும் பல்லக்கும் உள்ளன.

---

(1. 456/1925; 2. 457/1925; 3. 458/1925; 4. 459/1925; 5. 460/1925; 6. 461/1925; 7. 462/1925; 8. 463/1925; 9. 464/1925; 10. 465/1925; 11. 466/1925; 12. 467/1925; 13. 468/1925).

## பனப்பாக்கம்

# இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில்

செங்கற்பட்டு அரக்கோணம் இருப்புப்பாதையிலுள்ள திருமாற்பேறு இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 11 கிலோமீட்டர்த் தொலைவிலும் காஞ்சிபுரத்திற்கு வடமேற்கில் 14 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள பனப்பாக்கம் என்னும் ஊரின் மேற்குக் கோடியில் கிழக்கு நோக்கியவாறு இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில் 75 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கிழக்குக் கோபுரவாயிலின் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில் கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியிருப்பதைக் காணலாம். கருவறையில் நாராயணர் இலட்சுமியைத் தம்முடன் அணைத்துக்கொண்டவாறு காட்சியளிக்கிறார்.

கோயில் பிராகாரத்தில் தென்கிழக்குக் கோடியில் இராமர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இங்குச் சீதை, இலக்குவன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. இங்குள்ள இராமரை ஆழ்ந்து வழிபடும் முறையில் ஆஞ்சநேயர் திருவுருவம் அமைந்துள்ளது. இது சிற்பியின் கைவண்ணத்தை எடுத்துக்காட்டுகிறது.

இக்கோயிலின் கோபுரம், விசயநகரக் கலைமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. இலட்சுமி நாராயணப்பெருமாள் கருவறை விமானம் ஐந்து நிலைகளுடனும் ஒரு கலசத்துடனும் விளங்குகிறது.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. இக்கோயிலுக்கு 2 செண்ட் நன்செய் நிலமும் 4.35 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,000/- உருபாயாகும்.

# பனப்பாக்கம்

# காளத்தீசர் கோயில்

பனப்பாக்கத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் வடகோடியில் காளத்தீசர் கோயில் உள்ளது.

இக்கோயில் தோன்றியதற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது. சொரூபாகாரன் என்னும் அந்தணன் மகப்பேறின்மையைப் போக்கிக்கொள்ளப் பல தலங்களுக்கும் சென்று ஆங்காங்கு வழிபாடாற்றிப் பனப்பாக்கம் வந்து சேர்ந்தான். அங்கு அவன் இல்லாள் ஆண்குழவியொன்றை ஈன்றாள். அன்று சிவராத்திரிநாள். சிவராத்திரி நாளில் காளத்தி செல்லமுடியவில்லையே என அவன் தவித்தபோது திருக்காளத்திநாதரே சிவனடியார் கோலம் பூண்டு இத்தலத்திலே காளத்திநாதருக்கும் தேவி ஞானப்பூங்கோதைக்கும் கோயில் அமைக்குமாறு கூறி மறைந்தார். இவ்வறிவுரைக்கேற்ப, அவ்வந்தணன் இக்கோயிலை ஒருவாறு அமைத்தான்.

இக்கோயிலின் மூர்த்தங்கள் காளத்தி கோயில் அமைப்பில் காணப் பெறுகின்றன. நந்திதேவர், விநாயகர், சுப்பிரமணியர், ஞானப்பூங்கோதை ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. கோயிலின் முகப்பு மண்டபம் விசயநகர மண்டபக்கலையை எடுத்துக்காட்டுகிறது. தூண்களில் எழில்மிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒரு தூணில் சொரூபாகாரன் அவன் மனைவி ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் பூசை முறையாக நடத்தப்பெறாமல் சிவராத்திரி நாளில் மட்டும் செய்யப்படுகிறது. காளத்திமலையின் பெருமையை இங்கு உணர்ந்து கொள்ளவேண்டும். சிலந்தி (ஸ்ரீ), பாம்பு (காளம்), யானை(ஹஸ்தி) ஆகிய மூன்றும் பூசித்து முத்தியடைந்த தலம்; மலைமேல் உச்சியிலிருந்த குடுமித்தெவர் வழிபாடே கண்ணப்ப நாயனார் செய்ததென்பதும் மலைமேலேறியே தேவார முதலிகள் மூவரும் வழிபட்டனர் என்பதும் பெரியபுராணத்தாலறியப்படும். ஆனால், நாம் இப்போது பொன்முகலியாற்றங்கரையில் ஊர்த் தரைமட்டத்திலுள்ள கோயிலுக்குள் இருக்கும் மூர்த்தியையே வணங்குகிறோம். ஆற்றிலிருந்து சில படிகளேறி ஆலயம் செல்வதால், இப்போதுள்ள ஆலயம் மலைமீதுள்ள ஆலயமே ஆகும் என்பாருமுளர். பஞ்சபூதத் தலங்களுள் இது வாயுத்தலம். மூலத்தானத்துள் இருக்கும் விளக்குகள் எப்போதும் காற்றில் அசைந்து கொண்டேயிருக்கும். மூலத்தானத்துள்ள சிவலிங்க மூர்த்தியின் திருவுருவில் சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றுமுள்ளன. சுயம்புலிங்கம் நீண்ட பல செங்குத்தான உட்குழிந்த குடைவுகள் நிரம்பிய திருமேனி.

**பச்சைக் கருப்பூரம்** சேர்ந்த நீரே அபிடேகம். திருநீற்றோடு இவ்வபிடேக தீர்த்தமும் **வழங்கப்படும்.** கருப்பக்கிரக வாயிற்படிக்கருகில் கண்ணப்ப நாயனார் காட்சி **யளிக்கிறார்.** நக்கீரரால் பாடப்பெற்று 11ஆம் திருமுறையிலுள்ள கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியும் திருக்கண்ணப்பதேவர் திருமறமும் இத்தலத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. தென்கயிலாயம் எனக் கூறப்படும் தலங்களுள் இத்தலமும் ஒன்று. சிவராத்திரியை ஐந்தாம் நாளாகக் கொண்ட திருவிழா மாசி மாதத்தில் நடைபெறுகிறது.

இக்கோயிலுள்ள நிலப்பரப்பு தற்போது ஆந்திர மாநிலத்தில் சேர்ந்துள்ளது. இச்சீரிய கோயிலின் நினைவாகப் பனப்பாக்கம் போன்ற ஊர்களிலுள்ள காளத்தீசர் கோயில்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெற, தக்க நடவடிக்கைகள் பல முனைகளிலும் எடுக்கப்பட வேண்டும்.

### பனப்பாக்கம்

## மயூரநாதர் கோயில்

இக்கோயில் செங்கற்பட்டு-அரக்கோணம் இருப்புப்பாதையிலுள்ள திருமாற்பேறு இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர்த் தொலைவில் அரக்கோணம் வட்டத்தில் கிழக்கு நோக்கியவாறு ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இத்தலத்தில் நந்திதேவர், பிரமதேவர், இந்திரன், அகத்தியர் ஆகியோர் சிவபெருமானுக்குப் பூசைசெய்து பேறுபெற்றுள்ளார்கள். இத்தலத்திற்குத் திருத்தாலபுரி, மயூரபுரி, புலியூர், இந்திரபுரி, பிரமபுரி, தக்கமாபுரி, கலியாணமாவூர் முதலிய பெயர்கள் இவ்வூர்த் தலபுராணமாகிய பனசைப் புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு சமயம் சிவபெருமானும் உமையம்மையும் விடையேறி உத்தியாவனம் சென்று அங்கு அலங்கார மண்டபத்தில் வீற்றிருந்தார்கள். அப்போது எழில்மிக்க சூழ்நிலையில் உயிரினங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து விளையாடின. தோகை விரித்தாடும் மயில்களும் படம் விரித்தாடும் பாம்புகளும் ஒருமிக்க விளையாடின. சிறும் புலிகளும் அமைதியாக விளையாடின. உமையம்மை மயிலின் அழகிலும் நந்திதேவர் புலியின் ஆற்றலிலும் தோய்ந்து மயங்கி நின்றார்கள். சிவபெருமானை அச்சமயத்தில் மறந்தநிலையில் இருந்தார்கள். யோகநிலையிலிருந்த சிவபெருமான் நோக்கில் உமையம்மையும் நந்திதேவரும் காணப்படாதவர்களாக அமைந்தார்கள். சிவபெருமான் அவர்களின்றிக் கயிலைக்குத் திரும்பினார். சிறிதுநேரம் கழிந்த பின்னர் அங்கு வந்த உமையம்மையும் நந்திதேவரும் சிவபெருமானைக்

காணாதவர்களாய் வருந்திக் கயிலாயம் சென்று சிவபெருமானைக் கண்டு அவரது கருணையை எதிர்பார்த்து நின்றார்கள்.

அப்போது சிவபெருமான் அவர்களை நோக்கி "எதை எதைக் கண்டு மயங்கி நின்றீர்களோ அதன் அதன் உருவோடு பூவுலகில் வாழ்ந்து வரக்கடவீர்" என ஆணையிட்டார். தாங்கள் செய்த பிழையைப்பொறுத்தருள வேண்டுமென அவர்கள் இருவரும் வேண்ட சிவபெருமான் அவர்கள் காஞ்சியை அடுத்துள்ள பனசைத்தலத்தில் தம்மைப் பூசைசெய்து அதன் பயனாக விடுதலை பெறவேண்டும் என அருளினார். இவ்வாணைக்கேற்ப உமையம்மை மயில் வடிவிலும் நந்திதேவர் புலி உருவிலும் இங்கு வந்து வழிபட்டுப் பேறு எய்தினார்கள்.

இக்கோயிலின் தலமரம் பனைமரமாகும். இப்பனைமரத்தின் பெயர் அடிப்படையில் இவ்வூரின்பெயர் அமைந்துள்ளது. உமையம்மை மயில் வடிவில் இங்கு வழிபாடாற்றியபோது அவர் வழிபாட்டுக்குகந்து அருள்புரிந்த சிவபெருமானுக்கு மயூரநாதர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. கல்வெட்டுகளில் இவ்விறைவரின் பெயர் புலியப்பர் எனக் காணப்படுகிறது.

கிழக்கு நோக்கியுள்ள கோபுரவாயிலின் வழியாக இக்கோயிலினுள் செல்வோமெனில், முதலில் பலிபீடத்தை அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியிருப்பதைக் காணலாம். இங்கு விநாயகர் சந்நிதியும் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது.

மயூரநாதர் சுயம்புலிங்க வடிவில் அருள்புரிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ளார்.

இக்கோயிலின் நுழைவாயிலில் கோபுரம் எழிலுற ஐந்து நிலைகளுடன் அமைந்துள்ளது. நந்திதேவர், விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை ஆகியோர் சந்நிதிகளுக்கு விமானங்கள் உள்ளன. முதன்மை நுழைவாயிலுக்கு எதிரில் மண்டபம் உள்ளது.

சிற்பங்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது சிவபெருமான் அம்பிகைக்கு அருள்புரியும் காட்சியாகும். அம்பிகை அவர்தம் மடியில் அமர்ந்துள்ள நிலையை நுழைவாயிலின் எதிர்மண்டபத்தின் முகப்பிலுள்ள சிற்பம் காட்டுகிறது.

பனப்பாக்கம் மயூரநாதசுவாமி கோயிலின் மையச் சந்நிதியின் வடக்குச் சுவரிலும் மேற்குச் சுவரிலுமுள்ள விசய நகர வெங்கடபதி தேவராய மகாராயர் சகம் 1585 மீனம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை உத்திராட நட்சத்திரம் நாள் கல்வெட்டு சேதமடைந்துள்ளது. இது, பனப்பாக்கம் திருப்புலியப்பருக்கு ஒரு நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. இது சேஷகிரி அய்யப்ப அய்யர் மகன் சேஷகிரி அய்யரைப் பற்றியும் கூறுகிறது.[1]

இதே கோயிலின் சௌந்தரிய நாயகி சந்நிதியின் வடக்குச்சுவரிலுள்ள சோழ இராசராசதேவர் கல்வெட்டுத் துண்டுப்பகுதி[1] காந்தளூர்ச் சாலை என்னும் சொற்களுடன் தொடங்குகிறது. இது கோயிலுக்கு [2] எருமைகளும் பசுக்களும் நன்கொடையாக அளிக்கப்பட்டதைப் பதிவுசெய்துள்ளது.

இக்கோயிலில் மூன்றுகாலப் பூசை நடைபெறுகிறது. பிரமோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. சித்திரைத் திங்களில் மகநட்சத்திரத்தில் சிவபெருமான் அம்பிகையை மணம்புரியும் திருவிழா இங்கு நடைபெறும்போது பலர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கோயிலுக்கு 2.34 ஏக்கர் நன்செய் நிலமும் 5.02 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1113/-உருபாயாகும்.

---

(1. 389/1928-29; 2. 390/1928-29.)

### பாதூர்

## திருவந்தீசுவரர் கோயில்

இக்கோயில் வந்தவாசி வட்டம் சோத்துப்பாக்கம்-வந்தவாசிச் சாலையில் மணிமங்கலம் சந்திச் சாலையிலிருந்து தெற்கே 5கிலோமீட்டர்த் தொலைவில் 25 சென்ட் நிலப்பரப்பில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

பாதீடு என்னும் பெயர் பங்கீடு என்பதன் அடிப்படையில் அமைந்தது. பங்கீடு செய்த ஊர் பாதீட்டூர். இது மருவி பாதூர் என ஆயிற்று.

இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவர் திருவந்தீசுவரர். திருவாரூர்ப் பெருமானுக்கு அந்திக்காப்பழகர் என்பது பெயராகும். சிவபெருமான் அந்தியுள் உகந்து ஆடும் கருத்துடையவர்; இதன் அடிப்படையில் திருஅந்தீசுவரர் என்ற பெயர் வழங்குவதாயிற்று.

வடக்கு வாயிலின் வழியாக உட்செல்வோமெனில் வெளிப் பிராகாரத்தைக் காணலாம். கிழக்குப் பிராகாரத்தில் நந்தி சந்நிதி, பலிபீடம் ஆகியன உள்ளன. உள்ளே வாயிலின் இருமருங்கும் துவாரபாலகர் உள்ளனர். கருவறையுள் சிவலிங்க

வடிவில் திருவந்தீசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கின்றார். இங்குள்ள மண்டபத்தை ஒட்டிய சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு விசாலாட்சி அம்பிகை சந்நிதி அமைந்துள்ளது. இங்கு அம்பிகை 4 கரங்களுடன் நின்றவண்ணம் காட்சியளிக்கின்றார். வலம்வரும்போது தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு விநாயகர் சந்நிதி, அம்பிகை சந்நிதி, பின்புறம் வள்ளி தெய்வயானையோடு முருகன் சந்நிதி ஆகியவற்றைக் காண்கிறோம். கோட்டச் சுவர்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால் பிரமதேவர், துர்க்கை கோமுகிக்கருகில் சண்டேசுவரர் ஆகியோர் உள்ளனர். இக்கோயிலின் உற்சவர் திருவுருவங்கள் பாதுகாப்பிற்காக வந்தவாசிக் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு வாயிலின் மீது 3 நிலைகளும் 5 கலசங்களும் கொண்ட கோபுரம் உள்ளது. கருவறை, அம்பிகை சந்நிதி, விநாயகர் சந்நிதி ஆகியவை ஒற்றைக் கலசங்கள் கொண்ட வட்டவடிவ விமானங்களைத் தாங்கியுள்ளன. இக்கலசங்கள் யாவும் செம்பால் செய்யப்பெற்றவை.

கருவறை முன் மகாமண்டபம், அதற்குத் தெற்கில் உற்சவர் சபாமண்டபம் ஆகியன உள்ளன. வடமேற்கு முனையில் முருகன் கோயில் ஒன்று பாதியளவில் கட்டப்பட்டுக் குறைவுற்று நிற்கின்றது. இங்குள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப் படவில்லை. பல்லவர் காலச் சிம்மத் தூண் ஒன்றும் இங்கு உள்ளது.

குருக்கள் இருவேளை பூசை செய்து வருகின்றார். இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் பொறுப்பில் உள்ளது.

## பிரம்மதேசம்

# கன்னிகேசுவரர் கோயில்

காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 25 கிலோமீட்டர்த் தொலைவிலும் செய்யாறு நகரத்திலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் பாலாங்கரையில் 50 மீட்டர் நீளமும் 27 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இக்கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இவ்வூர் வேதம் ஓதுவோருக்கு நன்கொடையாகப் பிரமதேயம் என்னும் பெயரில் வழங்கப்பட்டது. இச்சொல் திரிந்து பிரம்மதேசம் என மாறிற்று.

கோயிலின் உட்புறம் சிதைவுற்ற நிலையில் நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும்

உள்ளன. கோயிலின் வாயில் பழுதடைந்துள்ளது. ஒரு பிராகாரம் மட்டும் உள்ளது. கோயிலின் வடபுறத்தில் ஒரு மண்டபம் காணப்படுகிறது.

மண்டபத்தூண்களில் புடைப்புச்சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒரு காலப்பூசை குருக்கள் ஒருவரால் செய்யப்படுகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலரிடம் நிருவாகம் உள்ளது. இக்கோயிலுக்கு 1.60 ஏக்கர்ப் புன்செய் நிலமுள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 800 உருபாயாகும்.

## பில்லூர்

# அமிர்தேசுவரர் கோயில்

இக்கோயில் கலசப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து மூன்று கிலோமீட்டர்த் தொலைவில் பில்லூரில் 1 1/2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

ஒருமுறை திருமால் தேவலோகத்திலிருந்து ஓர் அமுத குடத்தைக் கொண்டுவந்து அதனைச் சிவலிங்கமாகக் கருதி அதற்குப் பூசை செய்தார். அப்போது அதன் மீது கூர்ச்சம் எனப்படும் புல் தங்கின ஊர் பில்லூர் எனவும் கலசம் தங்கிய இடம் கலசப்பாக்கம் எனவும் அதற்கு அணிவித்த நூல் தங்கிய இடம் பூண்டி எனவும் அமைந்தனவென்பர். மாவிலைகள் விழுந்த ஊர் மாம்பாக்கம் என்னும் பெயரில் வழங்குவதாயிற்று என்பர். அமுதம் புற்களில் தங்கியிருந்தது. அவ்வாறு தங்கியிருந்த அமுதம் திரண்டு ஓர் அமுதலிங்கமாக மாறிற்று. இவ்வகையில் இறைவன் அமுதீசர் என்னும் பெயரில் விளங்கிவருகிறார். அம்பிகைக்கு அபிராமி என்னும் பெயரும் அமைந்தது.

தெற்கு வாயிலின் வழியாகக் கோயிலினுள் வலம் வரும் வழியில் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் சோமாசுகந்தர், தனியம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சண்டேசுவரர், சந்திரசேகரர், அத்திரதேவர் ஆகியோர் உலாத்திருமேனிகளும் அடுத்து மேற்குப் பிராகாரத்தின் மையப்பகுதியில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்து வடமேற்குக் கோடியில் அபிராமி அம்மை சந்நிதியும் உள்ளன. பிரகாரத்தின் வடகிழக்கு முனையில் நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளன.

மூலவர் அமிர்தீசுவரரை நோக்கியவாறு நந்திதேவர் திருவுருவம் இருக்கிறது. கோயிலினுள் கருவறையில் அமிர்தீசுவரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். அமிர்தீசுவரர் சந்நிதியின் முன்புறத்தில் விநாயகர் திருவுருவமும் தென்புறத்தில்

சிவகாமசுந்தரி நடராசர் சந்நிதியும் உள்ளன. வடகிழக்குக் கோடியில் சூரியன் திருவுருவமும் வயிரவர் திருவுருவமும் மேற்கு நோக்கி உள்ளன.

அமிர்தேசுவரர் சந்நிதியின் மீது 3 நிலைகள் கொண்ட விமானமும் அம்பிகை சந்நிதி மீது 2 நிலைகள் கொண்ட விமானமும் உள்ளன.

இக்கோயிலில் குருக்கள் இரண்டு காலமும் பூசை செய்கிறார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 8063/- உருபாயாகும்.

## பீமகுளம்

# சென்றாயப் பெருமாள் கோயில்

இக்கோயில் வாணியம்பாடி வட்டம், ஆலங்காயத்திற்கு அடுத்துள்ள சவ்வாது மலையில் வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள காவலூர் கிராமத்திற்கு அடுத்துள்ள பீமகுளம் கிராமம் 56 எண் நில அளவைப்புலத்தில் கோயில் புறம்போக்கு 4.47 ஏக்கரில் 10 செண்ட் இடத்தில் இருக்கின்றது. பரம்பரை உரிமை கொண்டாடியவர்களால் நன்கு பராமரிக்கப்படாத காரணத்தால் இக்கோயில் இடிந்து தரைமட்டமாக ஆகியுள்ளது. தற்போது இக்கோயிலில் கூரை போடப்பட்டுப் பொதுமக்கள் வழிபட வசதி செய்யப்பட்டுள்ளது.

கருவறை, பிருந்தாவனம் எனக் குறிக்கப்படுகிறது. இங்கு மண்புற்று உள்ளது. இதில் பாம்பு ஒன்று வசித்து வருகிறது. அஃது அடிக்கடி தன் சட்டை உரித்த தடையத்தை இன்றும் புற்றில் காணலாம். சனிக்கிழமைகளில் அன்பர் பலர் வந்து வழிபடுகிறார்கள். புரட்டாசிச் சனிக்கிழமைகளிலும் தைமாதச் சனிக்கிழமைகளிலும் இங்கு வழிபடத் திரளாக மக்கள் வருகிறார்கள்.

இக்கோயிலுக்கு மொத்தம் 29.60 ஏக்கர் புன்செய் நிலங்கள் இனாமாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் பரம்பரை உரிமை கொண்டாடியவர்கள் வழக்குத் தொடர்ந்து நிலப்பட்டா பெற்றுள்ளனர். இதன் தொடர்பாகத் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினர் அருகிலுள்ள ஆம்பூர் சீனிவாசப்பெருமாள் கோயில் செயல் அலுவலரை இடைக்கால அறங்காவலராக நியமித்து நிருவாகத்தை நடத்திவருகிறார்கள். வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் நடந்து வருவதால், திருப்பணி செய்ய இயலாமல் உள்ளது.

காணிக்கையாக வரும் கன்றுகளை ஏலம் விடுவதன் மூலமும் உண்டியல்

மூலமும் பெறப்படும் வருமானத்தைக் கொண்டு பூசை நடத்தப்படுகின்றது. நிலங்களை மீட்கும் பணி, செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## புதுப்பாடி
## பரத்வாசீசுவரர் கோயில்

இக்கோயில் ஆர்க்காடு-இலுப்பை வழியில் ஆர்க்காட்டிலிருந்து எட்டுக் கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள புதுப்பாடி கிராமத்திற்கு மேற்கே இரண்டு கிலோமீட்டர்த் தொலைவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

பரத்வாசர் புதிய முறையில் இவ்வூரை அமைத்து ஆசிரமம் நிறுவி இங்குத் தவம் இயற்றியதால் இங்குள்ள கோயில் பரத்வாசீசுவரர் கோயில் என்னும் பெயரில் வழங்கிவருகிறது. இம்மாவட்டத்தில் பல இடங்களில் போர்க்களங்கள் இருந்தமையால், இது புதிய பாடி வீடாக அமைந்தது என்பர்.

கிழக்கு நோக்கியவாறுள்ள கோயில் வாயிலின் வழியாகப் பிராகாரத்தில் வலம் வரும் வழியில் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் இதற்கு நேரொத்தவாறு வடமேற்குக் கோடியில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் சந்நிதியும் வடகிழக்குக் கோடியில் வயிரவர் சந்நிதியும் வயிரவரை அடுத்துச் சற்றுக் கிழக்கில் மேற்கு நோக்கி சூரியன் திருவுருவமும் அமைந்துள்ளன.

கருவறைச் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி; மேற்கில் திருமால்; வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் உள்ளனர். துர்க்கை சந்நிதிக்கு அருகில் சண்டேசுவரர் தெற்கு நோக்கியவாறுள்ளார். இவருக்குக் கிழக்கில் நாகர் திருவுருவம் உள்ளது.

மூலவர் சந்நிதியை நோக்கிப் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் அவருக்குப் பின்புறம் கைகூப்பி நிற்கும் வடிவமும் உள்ளன. கருவறையில் பரத்வாசீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். வடக்குப் பகுதியில் காமாட்சியம்மை சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

பரத்வாசீசுவரர் சந்நிதிமீது மூன்று நிலை 1/2 வட்ட விமானமும் காமாட்சி சந்நிதி மீது மூன்று நிலைகள் கொண்ட சாலஹார விமானமும் உள்ளன.

கருவறைக்கும் அம்மன் சந்நிதிக்கும் பொதுவாக ஒரு மண்டபம் அமைந்துள்ளது.

பரத்வாசீசுவரர் கோயிலின் வடக்குச்சுவரிலுள்ள சோழவிக்கிரமன் 2-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சேதமடைந்துள்ளது.[1]

மையச்சந்நிதியின் மேற்குச்சுவரிலுள்ள சோழதேவர் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சேதமடைந்துள்ளது. புதுப்பாடி திருக்குறங்குடி மகாதேவர் கோயிலில் விளக்கு வைக்க நன்கொடை வழங்கப்பட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது.[2]

இதே சந்நிதியின் மேற்கு, தெற்குச் சுவர்களிலுள்ள உடையார் ஸ்ரீஆதிராசேந்திர உடையார் என்கிற சோழமன்னர் பரகேசரிமன்னர் 3-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திருக்குறங்கட்டீசுவரர் கோயிலுக்கு பெரும்பனப்பாடி மாவட்டத்திலுள்ள மக்கள் நிலத்தை விற்பனை செய்ததைக் குறிப்பிடுகிறது. விற்பனை செய்யப்பட்ட நிலம் பாலாற்றின் கரையில் அமைந்திருந்தது. வெள்ளப்பெருக்கு நிலத்தில் நுழைந்தமையால் நிலங்கள் பயிரிடப்படுவதற்குரிய தகுதி இழந்தன.[3]

இங்குக் குருக்கள் ஒரு காலப்பூசை செய்துவருகிறார். திருவாதிரைவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. இக்கோயில் ஆண்டு வருமானம் 600 உருபாயாகும். இக்கோயில் ஊர்ப்பொதுக் கோயிலாக உள்ளது; இந்து சமய அறநிலையத் துறையினர் கட்டுப்பாட்டில் உள்ளது.

---

(1. 426/1905; 2. 427/1905; 3. 428/1905).

## புதுப்பாளையம்

# அகத்தீசுவரர் கோயிலும் ஆதிமூலப்பெருமாள் கோயிலும்

இவ்விரு கோயில்களும் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவிலும் செய்யாற்றிலிருந்து 25 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள புதுப்பாளையத்தில் 1 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளன.

அகத்தீசுவரர் கோயிலில் அகத்தீசுவரரும் அங்கயற்கண்ணியம்மையும் அகத்தீசுவரர் கோயிலின் முதன்மை மூர்த்தங்களாகவும் ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் சீதேவி, பூதேவி, ஆதி மூலப் பெருமாள் முதன்மை மூர்த்தங்களாகவும் உள்ளார்கள். அகத்தீசுவரர் கோயிலிலுள்ள 1/2 மீட்டர் உயரமுள்ள சிவலிங்கம்

அகத்தியரால் நிறுவப் பெற்று வழிபடப் பெற்றதாக மரபு வழிச் செய்தி கூறுகிறது. இக்கோயிலில் விநாயகர் சுப்பிரமணியர் முதலியோரின் பஞ்சலோக உற்சவத்திருமேனிகளும் இருக்கின்றன.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. இங்குத் தமிழ் ஆண்டுப்பிறப்பு, விநாயக சதுர்த்தி, கந்தர்சஷ்டி, கார்த்திகைதீபம், வைகுண்டஏகாதசி, திருவாதிரை, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

அகத்தீசுவரர் கோயிலுக்கு 15 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1000/- உருபாயாகும்.

## புரிசை

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் செய்யாறு நகரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பாதையில் 10 கிலோமீட்டர்த் தொலைவில் 50 மீட்டர் நீளமும் 40 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் மேற்குநோக்கியவாறுள்ளது.

இக்கோயிலில் அகத்தியர் வழிபட்டார் எனக் கருதப்படுகிறது.

கோயிலின் உள்ளே நுழைந்ததும் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றையும் அடுத்து வலப்புறத்தில் விநாயகர் சந்நிதியையும் இடப்புறத்தில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் சந்நிதியையும் காணலாம். கோயிலின் கருவறையில் அகத்தீசுவரர் சிவலிங்க வடிவில் அருள்பாலிக்கிறார். அடுத்து அகிலாண்ட நாயகியம்மன் சந்நிதி முன்னிலையில் சிங்கம், பலிபீடம் ஆகியவை உள்ளன. இடப்புறத்தில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. அடுத்து மேற்குநோக்கியவாறு நவக்கிரகங்கள் சந்நிதியும் வடக்கு நோக்கியவாறு நால்வர் சந்நிதியும் உள்ளன.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது. இக்கோயிலின் கோபுரம் 20 மீட்டர் உயரத்தில் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. இங்கு வெளிப்பிராகாரமும் உட்பிராகாரமும் உள்ளன. கோயிலின் உட்பக்கத்தில் எட்டுக் கால் மண்டபம் இருக்கிறது.

கோயிலின் முன்பக்கத்தில் அகத்தியர் பூசை செய்யும் வடிவில் சிற்பம் இருக்கின்றது. மூலத்தானச் சுவரில் 63 நாயன்மார்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் இருகாலப்பூசை குருக்களால் செய்யப்படுகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலர்களால் நிருவாகம் செய்யப்படுகிறது.

இக்கோயிலுக்கு 1.57 ஏக்கர் நன்செய் நிலமும் 1.32 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,300 உருபாயாகும்.

## புரிசை

# கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

இக்கோயில் செய்யாறு நகரத்திலிருந்து வந்தவாசி செல்லும் வழியில் 10 கிலோமீட்டர்த் தொலைவில் 46 மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கிழக்குநோக்கியவாறுள்ளது.

மதில்களால் சூழப்பெற்ற ஊர் புரிசை என்னும் பெயர்பெறும்.

கோயிலின் கிழக்கு வாயில் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில் 30 மீட்டர் உயரமுள்ள தீபத்தம்பத்தையும் மேற்கு நோக்கியவாறுள்ள கருடாழ்வார் சந்நிதியையும் காணலாம்.

கருவறையின் வாயிலில் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் உள்ளன. மூலவராகக் கரியமாணிக்கப் பெருமாள் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். இடப்பக்கத்தில் தாயார் சந்நிதியும் வலப்பக்கத்தில் ஆண்டாள் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறு உள்ளன. ஆண்டாள் சந்நிதிக்கு அருகில் நம்மாழ்வார், இராமாநுசர், வேதாந்த தேசிகர், அனந்தாழ்வார் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது. இக்கோயிலுக்கு ஒரே பிராகாரம் உள்ளது. இப்பிராகாரத்தில் நன்கு கட்டப்பட்ட ஆறுகால் மண்டபம் ஒன்று இருக்கின்றது.

மூலத்தான விமானத்தில் சிற்பங்கள் உள்ளன. ஆறுகால் மண்டபத்தின்

இருபக்கச் சுவர்களில் ஓவியங்கள் உள்ளன. ஓவியங்களின் விளக்கமாக வடமொழி வாசகங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் வைகானச ஆகமமுறையில் வடகலைப் பட்டாச்சாரியாரால் இரு காலப்பூசை நடத்தப்படுகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற அறங்காவலரிடம் இக்கோயிலின் நிருவாகம் உள்ளது. இக்கோயிலுக்கு 1.60 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,843 உரூபாயாகும்.

## பூண்டி

## கரைகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் போளூர் வட்டத்தில், கலசப்பாக்கம் இருப்புப்பாதையினின்றும் 5 கிலோமீட்டர்த் தொலைவில், திருவண்ணாமலைக்கு வடக்கே சேயாற்றின் வடகரையில் அமைந்துள்ள பூண்டி கிராமத்தின் வடகிழக்கில் தெற்கு நோக்கியவாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்டு 5 செண்ட் நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

சேயாற்று நீர் தேக்கிவைக்கப்பட்டுப் பாசன வாய்க்காலில் திருப்பி விடப்பட்டமையால் நீர் பூண்டிருக்கும் இடமாதலின், இது பூண்டி என்னும் பெயர் பெற்றது.

இங்குள்ள இறைவன் கரைகண்டேசுவரர் ஆவார். முருகப்பெருமான் பூசை செய்த கரைகண்டேசுவரர் தலங்களில் இஃது ஆறாவது தலமாகும்.

தெற்குவாயிலின் வழியாக உட்செல்வோமெனில், திறந்த வெளிப் பிராகாரத்தைக் காண்கிறோம். இதன் கிழக்கில் நந்தி, பலிபீடம் ஆகியவை உள்ளன. பின், வலம் வந்து தெற்கு உள்வாயில் வழியாக மகாமண்டபத்தை அடைகிறோம். இதிலிருந்து உட்பிராகாரத்தை வலம்வரும்போது கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. கோமுகிக்கருகில் சண்டேசுவரர் சந்நிதியும் வடமேற்கில் பெரியநாயகி சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. கோயிலினுள் வடகிழக்குப் பகுதியில் சந்திரசேகரர், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகளும் அடுத்துள்ள அறையில் வள்ளலார் பெருமானின் உருவச்சிலையும் உள்ளன. இதற்குச் சற்றுத் தெற்கில் நவக்கோள் சந்நிதி உள்ளது. கருவறையில் 16 பட்டைகளுடன் சிவலிங்க வடிவில் கரைகண்டேசுவரர்

எழுந்தருளியுள்ளார். இச்சிவலிங்கம் 1 1/2 மீட்டர் உயரமுடையது.

கருவறை மீது 3 நிலை விமானம் அமைந்துள்ளது. குருக்கள் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். சிவராத்திரி, தைப்பூசம் ஆகிய நாள்களில் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

அருட்பிரகாச வள்ளலார் இக்கோயிலுக்குப் பலமுறை வருகைதந்துள்ளார். பூண்டி மகான் போன்ற தவச்சீலர்கள் இங்கு வழிபட்டுப் பேறுபெற்றுள்ளனர்.

கோயில் நிருவாகம் ஊர்ப்பொதுவில் நடைபெற்றுவருகிறது.

## அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் பூண்டி, கரைகண்டீசுவரர் கோயிலின் தென்கிழக்கு மூலையில் மூன்று செண்ட் நிலப்பரப்பில் உள்ளது. கருவறையும் சிவலிங்கமும் மட்டுமே எஞ்சியுள்ளன. முறையான பூசை செய்யப்படுவதில்லை. 1 1/2 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. சிவராத்திரி, தைப்பூசம் ஆகிய நாள்களில் விழா நடைபெறும்.

## பெரிய வெள்ளைக்குட்டை

## சென்னகேசவப் பெருமாள் கோயில்

இக்கோயில் வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடி - ஆலங்காயம் சாலையில் 15 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வெள்ளைக்குட்டை கிராமத்திலிருந்து 1 கிலோமீட்டர்த் தொலைவில் 11 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

வெள்ளை மலை என்னும் நக்கீரனார் மலையை அடுத்து ஏலகிரி மலையும் ஏலகிரி மலையை அடுத்து சவ்வாது மலைத் தொடர்ச்சியில் வெள்ளை மலையும் அதனை அடுத்து இக்கிராமமும் இருப்பதால், இதற்கு வெள்ளைக்குட்டை என்னும் பெயர் வழங்கிவருகிறது எனக் கூறுகின்றனர்.

இக்கோயிலின் **தலவிருட்சம் வில்வ** மரமாகும்.

இக்கோயிலின் **நுழைவாயிலை** அடுத்துக் கருடத்தம்பம் இருக்கின்றது. கருவறையில் **துவாரபாலகர் சுதைத்திருவுருவங்கள் உள்ளன.** கருவறையில் சென்னகேசவப்பெருமாள் **சிதேவி பூதேவியுடன்** கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். இங்குப் **பெருமாள், சிதேவி,** பூதேவி ஆகியோர்தம் உற்சவ திருமேனிகள் **உள்ளன. விமானத்திலுள்ள** பல சுதைச் சிற்பங்கள் பழுதடைந்துள்ளன.

இரு காலப்பூசை நடைபெறுகிறது. பவளமல்லி சாத்துபடி செய்யப்படுகிறது. வைணவர்களால் பூசை செய்யப்படுகிறது. புரட்டாசிச் சனிக்கிழமைகள், மார்கழி 30 நாள்கள் ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இக்கோயிலுக்கு 11.94 ஏக்கர்ப் புன்செய் நிலமும் 2.50 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. இவற்றிலிருந்து ஆண்டு வருமானம் 3,000/- உருபாய் கிடைத்துவருகிறது.

இக்கோயிலின் விமானமும் சுற்றுச்சுவரும் புதுப்பிக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன.

இக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலரால் நிருவாகம் செய்யப்படுகிறது.

கருடவாகனம், அன்ன வாகனம், ஆஞ்சநேயர் வாகனம், குதிரை வாகனம், சங்கு சக்கரம் ஆகியவை உள்ளன. இவை அனைத்தும் உபயதாரர்களால் பராமரிக்கப்படுகின்றன. அவர்களால் வைகாசியில் 10 நாள்கள் பிரமோற்சவம் செய்யப்படுகிறது.

## பெருங்காஞ்சி

## அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் வாலாசா வட்டம், வாலாசா இருப்புப்பாதைச் சந்திப்பு நிலையத்திலிருந்து வடக்கே 10 கிலோமீட்டர்த் தொலைவில் நாற்புறங்களிலும் மதிற்சுவர்களுடன் 92 மீட்டர் நீளமும் 85 மீட்டர் அகலமும் கொண்ட 7,820 சதுரமீட்டரில் ஏறத்தாழ 2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது. மதிற்சுவர்களைச் சுற்றி மூன்று புறங்களிலும் 2 ஏக்கர் அளவில் நிலப்பரப்பும் திருக்குளமும் அமைந்துள்ளன.

கடிகாசலத் தலத்தில் அமைந்துள்ள 108 திவ்வியப் புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றாகிய அகத்திய. தீர்த்தம் என்னும் திருக்குளம் இக்கோயிலின் தெற்கே உள்ளது. இங்குச் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தினை அகத்திய முனிவர் பூசை செய்ததால் சிவபெருமானுக்கு அகத்தீசுவரர் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வ மரமாகும்.

இக்கோயில் நுழைவாயிலின் எதிரே கொடிமரமும் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன. நந்திதேவர் திருவுருவத்தைக் கடந்து இக்கோயிலின் உள்ளே செல்வோமெனில், உட்பிராகாரத்தில் வெளிப்புறத்தின் வலப்பக்கத்தில் வலம்புரி விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு இருப்பதைக் காணலாம். நுழைவாயிலின் கிழக்குப் பகுதியில் காசி விசுவநாதர், விநாயகர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

விநாயகர் சந்நிதிக்கு நேர் வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி, தெற்கு நோக்கிய நிலையில் உள்ளது. இக்கோயிலின் மகாமண்டபத்திற்குச் செல்வதற்குரிய நுழைவாயிலின் இடப்புறத்தில் நவக்கிரக சந்நிதியும் வலப்புறத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதியும் அமைந்துள்ளன. உள்மண்டபத்தின் வலப்பக்கத்தில் விநாயகர், இடப்புறத்தில் ஆறுமுகர், வள்ளி, தெய்வயானை, பிரமதேவர் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. அடுத்து உள்மகாமண்டபத்தில் அகத்தீசுவரர் கிழக்கு நோக்கிச் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். அடுத்து மூலவருக்கு வடபாகத்தில் தேவநாயகியம்பாள் தெற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார்.

இக்கோயிலுக்குத் தீர்த்தம் தெற்கு மதிற்சுவரை ஒட்டியுள்ள திருக்குளமாகும். இத்தீர்த்தம் அகத்தியர் தீர்த்தம் என வழங்கப்பட்டுவருகின்றது. இது 20 மீட்டர்ச் சதுரப் பரப்பில் உள்ளது. இதற்குப் படிகள் உள்ளன. இப்படிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதில் 5 மீட்டர் ஆழம் தண்ணீர் இருக்கும். இதைத் தவிரக் கோயிலின் மேற்குப் பகுதியில் பெருங்காஞ்சி ஏரியும் அமைந்துள்ளது.

இக்கோயிலின் மூலவர் கருவறைக்கு மேலே 8 மீட்டர் உயரத்தில் 5 மீட்டர் சதுரத்தில் விமானம் உள்ளது. இதையடுத்துக் காசி விசுவநாதர் (மூலவர்) சந்நிதிக்கு மேலே 2 மீட்டர் உயரத்தில் 1 1/2 மீட்டர் சதுரத்தில் சிறிய விமானம் உள்ளது.

வெளிப்பிராகாரம் கீழ்மேலாக 92 மீட்டர் அளவிலும் தென்வடலாக 85 மீட்டர் அளவிலும் காணப்படுகிறது.

அகத்தீசுவரர் கருவறைக்குச் செல்லும் வழியில் சந்நிதிக்கு முன் மகாமண்டபம் 13 மீட்டர் நீளத்திலும் 99 மீட்டர் அகலத்திலும் உள்ளது. இம்மண்டபத்தில் 16 தூண்கள் 3 மீட்டர் உயரத்திலுள்ளன. மேற்கு மதிற்சுவரையொட்டித் திருக்கல்யாண மண்டபம் 7 மீட்டர் நீளத்திலும் 3 மீட்டர் அகலத்திலும் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் 8 தூண்கள் 3 மீட்டர் உயரத்தில் உள்ளன.

இக்கோயில் பண்டைக்காலப் பெருமையுடையது. இக்கோயிலில்

காசிவிசுவநாதர் சந்நிதிக்குக் கிழக்கில் அமைந்துள்ள சுவரிலும் தூண்களிலும் தொன்மையான கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் காலை 8 மணிமுதல் 10 மணிக்குள்ளாக காமிக ஆகம முறையில் குருக்களால் ஒரு காலப்பூசை மட்டும் செய்விக்கப்படுகிறது. இக்கோயிலில் தைப்பூசம், நவராத்திரி தசமி, சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரைத் தமிழ் ஆண்டுப்பிறப்பு ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

கோயில் நிருவாகம் தற்போது சோளிங்கர் இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில் நிருவாக அலுவலரின் பொறுப்பில் இருந்து வருகிறது. இக்கோயிலுக்கு 1.05 ஏக்கர் நன்செய் நிலமும் 0.06 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இந்நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் நித்தியபடி, படித்தரச் செலவுகளுக்காகப் பயன் படுத்தப்படுகிறது. அருச்சகருக்கு மான்யம் விடப்பட்டுள்ளது. குருக்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 22.50 கொடுக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் சந்திரசேகரர், அம்பாள், சுக்கிரவார அம்மன், விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, மாணிக்க வாசகர், அத்திர தேவர், பிரதோட விநாயகர், சண்டேசுவரர் ஆகிய பதினோரு உற்சவ மூர்த்திகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஒவ்வோர் ஆண்டும் வழங்கும் 356.50 உரூபாயை நம்பி நிருவாகம் நடைபெற்று வருகிறது.

## பெருங்காட்டூர்

# சார்ந்தாரைக் காத்த ஈசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம்-வேலூர் சாலையில், காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 22 கிலோமீட்டர் தொலைவிலுள்ள பெருங்காட்டூர் கிராமத்தில் 60 மீட்டர் நீளமும் 53 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தில் நிறைய காடுகள் இருக்கின்றன. பெரிய காட்டைச் சார்ந்திருந்ததால் இவ்வூர் பெருங்காட்டூர் என அழைக்கப்பட்டது.

ஈசுவரர் தம்மைச் சார்ந்தவர்களைக் காப்பாற்றும் இயல்புடையவராதலால், இவர் சார்ந்தாரைக் காத்த ஈசுவரர் என்னும் பெயரில் விளங்கிவருகிறார்.

கோபுரவாயில் வழியாகக் கோயிலின் உட்பகுதிக்குச் செல்வோமெனில், நந்திதேவர் சந்நிதியையும் பலிபீடத்தையும் காணலாம். இடப்புறத்தில் விநாயகர் சந்நிதியையும் வலப்புறத்தில் சுப்பிரமணியர் சந்நிதியையும் காணலாம்.

கருவறையில் சார்ந்தாரைக் காத்த ஈசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். வடபுறத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

இக்கோயிலுக்கு 3 நிலைகளும் 7 கலசங்களும் கொண்ட கோபுரம் உள்ளது. இக்கோயிலுக்கு வெளிப்பிராகாரமும் உட்பிராகாரமும் இருக்கின்றன.

இக்கோயிலில் இருகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலுக்கு 0.68 ஏக்கர் நன்செய் நிலமும் 3.04 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரால் செய்யப்படுகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,000 உருபாயாகும்.

## பெலாசூர்

# கனகசபாபதீசுவரர் கோயில்

இவ்வூர் போளூர் வட்டத்தில் போளூருக்குத் தென்கிழக்கில் 7 கிலோமீட்டர்த் தொலைவில் ஊரின் வடமேற்கில் தெற்கு நோக்கியவாறுள்ள நுழைவாயிலுடன் 7 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பலாசை என்னும் மரங்களால் சூழப்பெற்ற ஊராதலின் இவ்வூருக்கு இப்பெயர் வழங்கி வருகிறது என்பர். சிவபெருமான் நடம்புரியும் தில்லையின் நினைவாக இவ்விடத்தில் இக்கோயில் நிறுவப்பெற்றது.

தெற்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், பிராகாரத்தை அடையலாம். தென்மேற்கு முனையில் ஐயப்பன் சந்நிதியையும் அதனையடுத்து விநாயகப்பெருமானின் சந்நிதியையும் அதன் வடக்கில் கிழக்கு நோக்கியவாறு ஆறுமுகப்பெருமானின் சந்நிதியையும் காணலாம். கிழக்குப் பிராகாரத்தில் நந்திதேவர் பலிபீடம் ஆகியவை உள்ளன. தெற்கு நோக்கிய உள் வாயிலின் உட்புறம் கிழக்கு நோக்கியவாறுள்ள கருவறையில் கனகசபாபதீசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். உள்மண்டபத்தில் நந்திதேவர் திருவுருவம் சிறியவடிவில் உள்ளது. மகாமண்டபத்தினையொட்டித் தெற்கு நோக்கிய சந்நிதியில் சிவகாமசுந்தரி நின்றவாறு காட்சியளிக்கின்றார். முன்மண்டபத்தில் நடராசர், சிவகாமி,

சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறைச் சுவர்க்கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை, கோமுகிக்கருகில் சண்டேசுவரர் ஆகியோர் எழுந்தருளியுள்ளார்கள்.

வடகிழக்கு முனையில் நவக்கோள்களின் சந்நிதி அமைந்துள்ளது. வடக்கில் ஒரு வேப்பமரம் தழைத்துள்ளது. அதன் கீழ் ஏழு நாகர் திருவுருவங்கள் உள்ளன.

விநாயகர் சந்நிதி மீது சதுர அடிப்பகுதியும் உருண்டையான விமானமும் உள்ளன.

நாள்தோறும் குருக்கள் இருவேளைப் பூசை செய்துவருகிறார். நிருவாகம் ஊர்மக்களிடம் இருந்து வருகிறது. நவராத்திரி. சிறந்த முறையில் கொண்டாடப்படுகிறது. காணும் பொங்கல், திருவாதிரை போன்ற நாள்களில் வீதியுலாக்கள் நடைபெறுகின்றன.

## பேரிப்பேட்டை

# காசிவிசுவநாதர் கோயில்

இக்கோயில் காட்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 7 கிலோமீட்டர்த் தொலைவில் வேலூர் வேலப்பாடிப் பேரிப்பேட்டையில் 50 செண்ட் நிலப்பரப்பில் 18 மீட்டர் நீளமும் 12 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

வேலமரக் காடுகள் இருந்தமையால் வேலூர் எனப் பெயர் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

காசியிலிருந்து சிவலிங்கத்தை இங்குக் கொண்டுவந்து நிலைப்படுத்தி இக்கோயில் கட்டப்பட்டதால், இக்கோயில் காசி விசுவநாதர்கோயில் என்னும் பெயரில் விளங்கி வருகிறது.

இக்கோயிலில் விநாயகர் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி, காசி விசுவநாதர் சந்நிதி, விசாலாட்சி சந்நிதி ஆகிய நான்கு சந்நிதிகளும் குறிப்பிடத்தக்கவை. மற்றும் நால்வர் சந்நிதியும் நவக்கிரகங்கள் சந்நிதியும் சனீசுவரருக்குத் தனிச் சந்நிதியும் உள்ளன.

காசி விசுவநாதருக்கு ஒரு விமானமும் விசாலாட்சி அம்மை சந்நிதிக்கு ஒரு விமானமும் உள்ளன. உற்சவ அலங்கார மண்டபம் உள்ளது.

நாள்தோறும் இரண்டு காலப்பூசை நடைபெற்றுவருகின்றது. ஆனி மாதத்தில் பிரமோற்சவம் பத்து நாள்கள் நடைபெற்று வருகிறது. ஆருத்திரா உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

இக்கோயில் மிகப் புகழ்பெற்ற சி.எம்.சி. மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ளதால், இம்மருத்துவமனைக்கு வருவோர்களுள் பலரும் தங்கள் குறைகள் தீர இக்கோயிலுக்கு வந்து வழிபடுகின்றனர்.

இக்கோயிலுக்கு ஆறு வீடுகளும் ஆறு கடைகளும் உள்ளன. மேல்மணலூரில் 4.32 ஏக்கர் நன்செய் நிலமும் அம்முண்டியில் 1.35 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலில் குதிரை, யானை, இடபம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டுக்குட்பட்டது. கோயிலின் ஆண்டு வருமானம் 28,000/- உருபாயாகும்.

## பொன்னை

# அனந்த பத்மநாபர் கோயில்

இக்கோயில் திருவலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 16 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள பொன்னைக் கொண்ட ரெட்டிபாளையத்தில் ஊரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு 50 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கோயிலினுட்புறம் மூலவரை நோக்கிக் கருடாழ்வார் மேற்கு நோக்கியவாறுள்ளார். கருவறையில் அனந்த பதுமநாபர் நின்றவாறு உபயநாச்சியார்களுடன் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். உற்சவர் திருமேனிகளும் உள்ளன.

வடகலை பஞ்சராத்திர முறையில் ஒரு காலப் பூசை நிகழ்த்தப்பெறுகிறது. இக்கோயிலில் ஏகாதசி, கார்த்திகை தீபம், நவராத்திரி, கருடசேவை ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தில் தாயார் திருமண விழா நடைபெறும்.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலர் பொறுப்பில் உள்ளது. இக்கோயிலுக்கு 4.54 ஏக்கர் நன்செய் நிலமும் 7.41 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

## பொன்னை

# மகாதேவசுவாமி கோயில்

திருவலத்திலிருந்து 17 கிலோமீட்டர்த் தொலைவில் பொன்னைக் கொண்டரெட்டி பள்ளியில் பொன்னையாற்றின் கரையில் 4 செண்ட் நிலப்பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

நம்பிராசன் மகப்பேறு வேண்டி வழிபாடாற்றிய மகாதேவர், கோயில் கொண்ட தலம் இதுவேயாகும் என்பர்.

இக்கோயிலின் நேரெதிரில் பலிபீடமும் பலிபீடத்தையடுத்து நந்திதேவர் திருவுருவமும் மேற்கு நோக்கியவாறுள்ளன. உள்பிராகாரத்தைச் சுற்றி வலம் வரும் வழியில் வடகிழக்குக் கோடியில் அம்பிகையின் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இச்சந்நிதி வாயிலின் வலப்புறத்தில் விநாயகர் திருவுருவமும் இடப்புறத்தில் சண்டேசுவரர் திருவுருவமும் தெற்கு நோக்கியுள்ளன. கருவறையில் இடப்புறம் விநாயகர் திருவுருவமும் வலப்புறம் சுப்பிரமணியர் திருவுருவமும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. கருவறையில் மகாதேவசுவாமி சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். சந்திரசேகரர், விநாயகர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

ஒரு நிலைச் சதுரவடிவ விமானம் உள்ளது. குருக்கள் ஒரு காலப் பூசை செய்கின்றார். சிவராத்திரி, திருவாதிரை, கார்த்திகை விளக்கீடு, காணும் பொங்கல், நவராத்திரி, விசயதசமி, பாரிவேட்டை ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு 3.51 ஏக்கர் நன்செய் நிலமும் 7.40 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலில் வள்ளிமலை நிருவாக அலுவலர் செயலாற்றுகிறார். கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 500 உருபாயாகும்.

## போளூர்

# சோமநாதீசுவரர் கோயில்

இக்கோயில் வேலூர் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் போளூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இங்கு அமைந்துள்ள இறைவன் தன்னை வழிபட்டவர்களுக்கு அவர் வேண்டும் பொருளை வழங்கி வந்ததால், இவ்வூர் பொருளூர் எனப்பட்டது; அப்பெயர் நாளடைவில் போளூர் என்று மருவி வழங்குவதாயிற்று.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வ மரமாகும்.

இக்கோயிலின் பிராகாரத்தில் செந்தூர விநாயகர், காசி விசுவநாதர், பெருமாள், சீதேவி, பூதேவி, வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், பாலசவுந்தரி, நவக்கிரகங்கள் நிருத்த கணபதி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், சண்டேசுவரர், வயிரவர், சூரியன் ஆகியோர் சந்நிதிகள் அமைந்துள்ளன. சண்டேசுவரர் சந்நிதி துர்க்கைக்கு எதிரில் தெற்கு நோக்கியவாறு உள்ளது.

செந்தூர விநாயகர், காசி விசுவநாதர், பெருமாள், சுப்பிரமணியர், சோமநாதீசுவரர், அம்பாள், நடராசர், சோமாசுகந்தர், நந்திதேவர் ஆகியோர் சந்நிதிகளுக்கு விமானங்கள் அமைந்துள்ளன.

இங்கு 16 கால் மண்டபம் உள்ளது.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. சிவராத்திரி, ஆருத்திரா, திருவூடல், நவராத்திரி ஆகிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் இருந்து வருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3,350/- உருபாயாகும்.

## போளூர் சம்பத்கிரி

# இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில்

இக்கோயில் போளூரில் சவ்வாது மலைத்தொடரின் அடிவாரத்தில் சேயாற்றங்கரையில் சம்பத்கிரி என்னும் குன்றின்மீது 75 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

பொருளூர் என்பது போளூர் எனத் திரிபு எய்திற்று என்பர். பொருள் அடையப் பெறுதல் "சம்பத்து" என்பர். இம்முறையில் சம்பத்கிரி என்னும் பெயர் அமைந்துள்ளது. புலத்திய முனிவர் இங்குத் தவம் செய்ததால் இதற்குப் புலத்தியபுரம் என்னும் பெயரும் வழங்கி வருகிறது.

இம்மலைக்குச் செல்வதாயின் ஏறத்தாழ 800 படிகளில் ஏறிச் செல்லவேண்டும். மலைமீது எழுந்தருளியுள்ள இலட்சுமி நரசிம்மரை எதிர்நோக்கி அவரை வணங்கும் முறையில் தம் கைகள் கூப்பியவண்ணம் மலையின் அடிவாரத்தில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. மலைமீதுள்ள இலட்சுமி நரசிம்மர் சுயம்புவாகத் தோன்றியவர். இச்சுயம்பு வடிவத்திற்கு அருகில் இலட்சுமி நரசிம்மரின் சிலைத் திருவுருவம் இருக்கின்றது. மலைமீது கனகவல்லித் தாயாருக்குத் தனிச்சந்நிதி இருக்கின்றது. இத்தாயார் பொற்கொடியம்மை எனப்போற்றப் பெறுகிறார்.

மலையின் படிகளில் ஏறிச்செல்லும்போது வழியில் பல சுனைகள் இருப்பதைக் காணலாம். இலட்சுமி நரசிம்மருக்கும் கனகவல்லித் தாயாருக்கும் திருவாராதனம், திருமஞ்சனம் ஆகியவற்றிற்குச் சுனைகளிலுள்ள தீர்த்தம் உதவுகிறது.

வழியில் யானைக் குகை என்னும் பெயரில் ஒரு குகை உள்ளது. இங்குத் திருக்கோவிலூர் ஞானானந்த சுவாமிகள் தவம் செய்தார் எனக் கூறுகின்றனர்.

இலட்சுமி நரசிம்மர் கருவறைச் சந்நிதி மீதும் தாயார் சந்நிதி மீதும் விமானங்கள் உள்ளன. மலை மீது கோயிலைச் சுற்றிவர இடம் உள்ளது. இஃது ஒரு வகையில் வெளிப்பிராகாரமாக அமைகிறது. இக்கோயிலின் கருவறையை அடுத்து உள்மண்டபமும் மகாமண்டபமும் உள்ளன. கோயிலின் சுவரில் வண்ணச் சித்திரங்கள் பல வரையப்பெற்றுள்ளன.

போளூர், தொன்மைக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளது. எடுத்துக் காட்டாகப் போளூர் வட்டத்திலுள்ள திருமலை என்னும் தலத்துச் சிகாமணி நாதர் கோயிலிலுள்ள மலை, வைகை மலை எனப்படுகிறது. இங்கு முதலாம்

இராசராசன்-I (கி.பி. 985-1013) காலத்துக் கல்வெட்டுகளும் முதலாம் இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டுகளும் (கி.பி. 1013-40) காணப்படுகின்றன (80/1887; 81/1887; 82/1887) படைவீட்டு அம்மையப்பேசுவரர் கோயிலில் விசயநகரமன்னர் தேவராசர் (சகம் 1356) ஆண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது (93/1887). இக்காலங்களில் சம்பத்கிரி கோயிலும் இம்மன்னர்களின் ஆதரவு பெற்றிருக்கும் என நம்பலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயில் இடைக்காலத்தில் போதுமான வகையில் கவனிக்கப்படாமல் இருந்துவந்துள்ளது.

மலையுச்சியிலுள்ள சம்பத்கிரி இலட்சுமிநரசிம்மர் கோயிலுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர்த் திருப்பணிகள் பல மேற்கொள்ளப்பெற்றுக் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் தற்போது புதிய பொலிவுடன் விளங்குகிறது. இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்பெறுகிறது.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவருகிறது. இக்கோயிலுக்கு 91 செண்ட் புன்செய் நிலம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1000 உருபாயாகும்.

## மடம்

# தடாகபுரீசுவரர் கோயில்

இக்கோயில் சென்னை-விழுப்புரம் இருப்புப்பாதை வழியிலுள்ள திண்டிவனம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 36.8 கிலோமீட்டர்த் தொலைவில் வந்தவாசி வட்டம் மடம் கிராம நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

முன்பு இங்கு ஆட்சிபுரிந்த மன்னர் ஒருவருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. அதன் காரணமாக அம்மன்னர் தம்குறை நீங்கச் சிவபெருமானை வழிபட்டு வந்தார். அவ்வூரில் மக்களுக்கும் கால்நடைகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய குளம் ஒன்று வெட்ட ஏற்பாடு செய்யுமாறு சிவபெருமான் அம்மன்னன் கனவில் தெரிவிக்க அம்மன்னனும் அவ்வாறே சிறந்ததொரு குளம் தோண்ட ஆவன செய்தான். தோண்டப்பட்ட குளத்தில் சிவலிங்கம் ஒன்று இருந்தது. அச்சிவலிங்கம் அம்மன்னன் ஆணைக்கேற்ப நிறுவப்பெற்றது. அதற்குக் கோயில் அமைக்கப்பட்டது. குளத்தைத் தடாகம் எனக் குறிப்பதுண்டு. தடாகத்தில் தோன்றிய சிவலிங்கம் தடாகபுரீசுவரர்

என்னும் பெயரில் பூசைகள் அபிடேகங்கள் முதலியவற்றை ஏற்றுக் கொண்டார்.

கிழக்கு நோக்கியவாறுள்ள கோபுர வாயிலைக் கடந்து கோயிலினுள் சென்றால் அகன்ற வெளிப்பிராகாரத்திற்கு வரலாம். அங்கிருந்து தெற்கு நோக்கியவாறு கிழக்குப் பிராகாரத்தில் செல்வோமெனில், தென்கிழக்கு முனையில் நவக்கிரகங்கள் சந்நிதியை அடையலாம். அங்கிருந்து வலமாகச் செல்லும்போது கருவறையின் தெற்குச்சுவர் மாடத்தின் வெளிப்புறத்தில் நர்த்தனகணபதி, தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களைக் காணலாம். சற்று மேற்கில் சப்தமாதர் சந்நிதி உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியும் விநாயகர் சந்நிதியை அடுத்து வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. அடுத்துச் சகஸ்ர லிங்கமும் அடுத்து நூற்றெட்டுச் சிவலிங்கங்களும் உள்ளன. கருவறையின் வடக்குச்சுவர் மாடத்தில் பிரமதேவர் திருவுருவமும் துர்க்கையின் திருவுருவமும் உள்ளன. துர்க்கையின் திருவுருவத்திற்கு எதிரில் வடக்கு வெளிப்பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

தென்கிழக்கு முனையில் வயிரவர் சந்நிதியும் வயிரவர் சந்நிதிக்குத் தெற்கில் சிவசூரியர் சந்நிதியும் உள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் மூலவர் சந்நிதிக்கு எதிரில் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியவை மேற்கு நோக்கியவாறுள்ளன. நந்திதேவரை வணங்கிய பின்னர்க் கோயிலின் உட்பிராகாரத்தை அடைகிறோம். இங்குத் தென்கிழக்கு முனையில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. வலம் வந்து சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கிய தடாகபுரீசுவரரை வழிபடுகிறோம். அம்மன் பிரகன் நாயகி என்னும் பெயரிலும் பெரியநாயகி என்னும் பெயரிலும் விளங்குகிறார்.

கிழக்கிலுள்ள கோபுரம் ஐந்து நிலைகளுடன் 18 மீட்டர் உயரமுடையது. தெற்குப் பிராகாரத்தின் மையத்தில் நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. தென்மேற்குக் கோடியில் திருமண மண்டபமும் உள்ளது. கருவறைச் சந்நிதி முன்புறம் உள்மண்டபமும் அதனையடுத்து மகாமண்டபமும் உள்ளன.

மேற்குப் பிராகாரத்தில் தனிக்கோயிலிலுள்ள சகஸ்ரலிங்கம் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகிய தோற்றத்துடன் உள்ளது.

கோயில் நுழைவாயிலின் அருகில் சித்திர அமைப்புடன் வள்ளி தெய்வயானையுடன் அழகு மயில் மீது ஆறுமுகர் அமர்ந்துள்ள சிற்பம் காணப்படுகிறது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை பரம்பரைக் குருக்கள் செய்து வருகிறார். விநாயக சதுர்த்தி, அன்னாபிடேகம், நவராத்திரி, கார்த்திகை தீபம், திருவாதிரைத் திருநாள் ஆகியவை கொண்டாடப்பெறுகின்றன. மாசி மகத்திருவிழா ஐந்து நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. ஐந்தாம் நாள் விழா இக்கோயிலிலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள திருக்குளத்தின் கரையில் ஊர்ப்பொதுமக்கள் சாதி வேறுபாடின்றித் திரளாகக் கூடிக் கொண்டாடி

வருகிறார்கள்.

இக்கோயிலுக்கு 6.60 ஏக்கர் நன்செய் நிலமும் 12.87 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,300/- உரூபாயாகும்.

## மடவளாகம்

# அங்கநாதீசுவரர் கோயில்

இக்கோயில் திருப்பத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர்த் தொலைவில், திருப்பத்தூர் - ஆலங்காயம் சாலையிலுள்ள மடவளாகம் என்னும் ஊரில் 1/2 ஏக்கர்நிலப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இவ்வூர் முன்பு நீர்வளமும் நிலவளமும் சிறந்து விளங்கிச் செழிப்பாக இருந்ததால் இது மடைவளம் என்னும் பெயரில் விளங்கிவந்தது. மடைவளம் என்னும் பெயர் தற்போது மடவளாகம் எனத் திரிபு எய்தியுள்ளது. இப்போதும் இவ்வூரின் அருகில் இரண்டு பெரிய நீர்ப்பாசன ஏரிகள் உள்ளன. இவை இவ்வூரின் செழிப்புக்குக் காரணமாக உள்ளன.

உட்பிராகாரத்தில் வலப்புறம் விநாயகர் சந்நிதி உள்ளது. இக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் தட்சிணாமூர்த்தி, வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், வடதிசையில் அம்மன், நவக்கிரகங்கள், சண்டேசுவரர், வயிரவர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. மூலவர் அங்கநாதீசுவரர் வாயிலில் துவாரபாலகர்கள் உள்ளனர். அங்கமாகக் கொண்ட அங்கநாதீசுவரர் கிழக்கு நோக்கிக் கருவறையில் எழுந்தருளியுள்ளார். கருவறையின் வலப்புறம் உற்சவமூர்த்திகள், மேடையில் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அங்கநாதீசுவரர், சுப்ரசனனி தாயார், பால சுப்பிரமணியர், சந்திரசேகரர், அம்மன், பிரதோட நாயகர், பிரதோடநாயகி, தனியம்மன், சண்டேசுவரர், நடராசர், சிவகாமசுந்தரி, மாணிக்கவாசகர், அத்திரதேவர் ஆகியோர் உள்ளனர். அருகில் நாகாபரணமும் உள்ளது.

கருவறைக்கு அருகில் வாயிற்படியில் ஒரு சுரங்கப்பாதை உள்ளது. இது தற்போது மூடிவைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம், கருவறை விமானம், அம்மன் சந்நிதி விமானம் ஆகியவை பல ஆண்டுகளுக்கு முன்பு சுண்ணாம்பால் கட்டப்பட்டவை. இவை

காலப்போக்கில் திருப்பணி நடைபெறாததால் சுதைச் சிற்பங்கள் பழுதடைந்துள்ளன. முன்மண்டபத்தில் உற்சவமூர்த்திகளுக்கு அலங்காரம் செய்யப்படுகிறது. வெளிப்பிராகாரத்தில் திருமால் மண்டபம் உள்ளது.

இக்கோயில் தளங்களிலும் வடக்குச்சுவரிலும் தெற்குச்சுவரிலும் உள்ள இரண்டாம் புக்கர் சகம் 1319 ஈசுவர சிம்மம் புனர்பூசம் ஞாயிறு 1397 ஆகஸ்டு 19 நாள் கல்வெட்டு, அங்கநாதீசுவரமுடைய நாயனார் கோயிலை அஞ்சின புகலிடமாகக் கொண்ட அறங்காவலர்கள், வித்துவான்கள், கைக்கோலர்கள், கோயில் பணியாளர்கள், மற்றவர்கள் வரிகளைச் செலுத்த விதி விலக்கு அளிக்கப்பட்டார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.[1]

இதே இடத்திலுள்ள பூபதி சகம் 1337, விக்கிருதி கன்னி கல்வெட்டு, மன்னன் கட்டளைக்கேற்ப பேட்டை, மகாநல்லூர் ஆகிய இரண்டு கிராமங்களும் திருவிடையாட்டமாக அங்கநாதீசுவரருக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.[2]

காமிக ஆகமமுறையில் இங்கு இரு காலப் பூசை நிகழ்த்தப்பெறுகிறது. சித்திரைப் பௌர்ணமியின்போது 15 நாள்கள் பிரமோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழ் ஆண்டுப்பிறப்பு, சங்கராந்தி, சிவராத்திரி, கார்த்திகை தீபம், அன்னாபிடேகம், மார்கழித் திருநாள்கள் ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு மன்னர்கள் காலத்தில் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. சில மான்யங்களைத் தற்போது அரசினர் எடுத்துக்கொண்டு ஆண்டொன்றுக்கு 23.50 உருபாய் தஸ்திக் தொகையாக அளிக்கின்றனர் (மடவார் வளாகம் என்பது ஆடற்பெண்டிர் வாழ்ந்த பகுதி என்னும் பொருள்படும். இது மருவி மடைவாளம் என மாறிற்று).

மாடப்பள்ளி, பள்ளவள்ளி, காளத்தியூர், செவந்தம்பள்ளி ஆகிய கிராமங்களில் கொடைகளாக 27.25 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. கோயிலுக்குச் சந்தையின் மூலமும் மாமரக் குத்தகை, நிலக் குத்தகை மூலமும் வருமானம் கிடைக்கிறது. இக்கோயிலுக்கு ஆண்டுதோறும் 16,383 உருபாய் கிடைத்துவருகிறது.

இக்கோயில் கும்பாபிடேகம் 1963-ஆம் ஆண்டில் நடைபெற்றது. திருக்கோயிலின் திருப்பணி ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் விரைவில் நடைபெறவுள்ளது.

பெரிய தேர் நல்ல நிலையிலுள்ளது. இடப வாகனம், பெருச்சாளி வாகனம், மயில் வாகனம் முதலியவை உள்ளன. சப்பரம் ஒன்றும் உள்ளது.

---

(1. 129/1956-57; 2. 130/1956-57).

## மண்மலை

# பாலசுப்பிரமணியசுவாமி கோயில்

திருவண்ணாமலை - செங்கம் பாதையில் இக்கோயில் திருவண்ணாமலையிலிருந்து 24 மீட்டர்த் தொலைவில் சாலையோரத்தில் 15 மீட்டர் உயரமுள்ள மணற் குன்றின் மீது 7 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. மண்ணாலாகிய 15 மீட்டர் உயரமுள்ள குன்றின் மீது இக்கோயில் அமைந்துள்ளதால் மண்மலை என்னும் பெயர் இத்தலத்திற்கு வழங்கிவருகிறது.

தொடக்கத்தில் தனியாக நவக்கோள் சந்நிதி அமைந்துள்ளது. மலைப்படியின் வடக்குநோக்கியவாறு இடும்பன் சந்நிதி இருக்கின்றது. இதில் இடும்பன் உருவச்சிலை உள்ளது. ஏறத்தாழ 50 படிகள் ஏறி வடக்கு வாயிலின் வழியாக உட்சென்றால் திறந்த வெளிப்பிராகாரத்தை அடையலாம். கிழக்குப்பகுதியில் ஓலைக் கொட்டகை ஒன்றுள்ளது. இங்கு இறைவனை நோக்கியவண்ணம் மயிலும் பலிபீடமும் உள்ளன.

கருவறை வாயிலின் தென்புறம் விநாயகரும் வடபுறம் காசிவிசுவநாதரும் விசாலாட்சியும் உள்ளனர். கருவறையுள் நான்கு திருக்கரங்களில் சக்தி, குலிசம், அபயவரத முத்திரையுடன் குமரக்கடவுள் நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார். கருவறைக் கோட்டத்தில் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு வெள்ளிக்கவசமும் மரத்தாலான மயில் வாகனமும் உள்ளன. திருமணம் நடத்த இடமும் ஐயருக்குக் குடியிருப்பும் உள்ளன. இக்கோயிலுக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. வருமானம் உண்டியல் வருமானமாகும். மிகுதியான வருமானம் 10,000/- உரூபாயாகும். இக்கோயிலின் சுப்பிரமணியர் வள்ளி, தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகள் பாதுகாப்பை முன்னிட்டுச் செங்கம் இடபேசுவரர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

குருக்கள் இரண்டுவேளைப் பூசை செய்துவருகிறார். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலரின் துணைக்கோயிலாக இது விளங்கிவருகின்றது. சிறந்த பிரார்த்தனைத் தலம் இதுவாகும். தை, கார்த்திகை, ஆடி மாதக் கிருத்திகைகளில் மக்கள் பெருந்திரளாகக் கூடி வழிபாடாற்றுகின்றனர். சஷ்டி, கிருத்திகை, விசாகம் ஆகிய நாள்களில் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

## மருதாடு

# ஆதிமூலப் பெருமாள் கோயில்

இக்கோயில் சென்னை - விழுப்புரம் இருப்புப்பாதை வழியில் உள்ள சோத்துப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வந்தவாசி செல்லும் வழியில் 20 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள மருதாடு கிராமத்தில் 20 செண்ட் நிலப்பரப்பில் 2 மீட்டர் உயரமுள்ள மேட்டில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

மருதநாடு என்பதே மருதாடு என மருவி வழங்குவதாகக் கூறுகின்றனர். இப்பெயருக்கேற்ப, இவ்வூர் நன்செய் நிலங்கள் சூழ்ந்துள்ள நிலையில் காணப்படுகிறது. மருதம் - வயலும் வயலைச் சார்ந்த இடங்களும்.

உஜ்ஜைனியை ஆண்ட விக்கிரமாதித்த மன்னனுக்கு மருத மரத்தின் வேரிலிருந்து தோன்றிக் காட்சியளித்ததால், மருத மூலப்பெருமாள் என்னும் பெயர் முதலில் வழங்கிப் பின்னர் இப்பெயர் ஆதிமூலப் பெருமாள் என மாறிற்று எனக் கூறுவர். முதலையின் வாயில் சிக்குண்ட யானை கஜேந்திரன் "ஆதி மூலமே" என அலறி அழைத்தபோது இறைவன் தோன்றி அருளினார். இதன் நினைவாக இது கட்டப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

தெற்கில் அமைந்துள்ள பெரிய வாயிலின் வழியாக உட்சென்று, பிராகாரத்தில் வலம்வரும்போது கிழக்கு நோக்கிய பெருமாள் சந்நிதியைக் காணலாம். இச்சந்நிதியை நோக்கி அனுமார் சந்நிதி உள்ளது. இரு சந்நிதிகளுக்கும் பொதுவாக ஒரு மண்டபம் உள்ளது. பெருமாள் கருவறையில் ஆதிமூலப்பெருமாள் உபய நாச்சிமார்களுடன் நின்றவண்ணம் சேவை சாதிக்கின்றார். உள்மண்டபத்தின் வலப்பக்கமுள்ள கிழக்கு நோக்கிய அறையில் அமிர்தவல்லித் தாயாரும் இடப்பக்கமுள்ள கிழக்கு நோக்கிய அறையில் ஆண்டாளும் எழுந்தருளியுள்ளனர். மகாமண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். இக்கோயிலில் உபயநாச்சிமார்களுடன் ஆதிமூலப் பெருமாளின் உற்சவத் திருவுருவமும் அதற்கு இணைந்தாற்போல் இதைப் போன்றதொரு மற்றொரு உற்சவத் திருவுருவமும் உள்ளன. இவ்வுற்சவத் திருமேனிகளைத் தவிர அமிர்தவல்லித்தாயார், ஆண்டாள், அனுமன் ஆகியோர் உற்சவர்களாக எழுந்தருளியுள்ளனர். ஆஞ்சநேயரின் உற்சவத்திருமேனியில் அவர் மேலிரண்டு கைகளில் சங்கு, சக்கரம் கொண்டு கீழிரண்டு கைகளை அஞ்சலி செய்து கொண்டும் உள்ளார்.

மூலவர் எதிரில் மேற்கு நோக்கிய சந்நிதியில் ஆஞ்சநேயர் இருகரங்களுடன் உள்ளார். இடையில் ஆஞ்சநேயரை அடுத்துக் கருடாழ்வார் மூலவரை நோக்கி

நின்றவண்ணம் அஞ்சலி செய்தவாறுள்ளார்.

வாயிலுக்கு வெளியே 1 1/2 மீட்டர் உயரமுள்ள பல்லவர் காலத் திருமாலின் சிற்பம் பாழ்பட்டுக் கிடக்கின்றது. கருவறை மீது சதுர வடிவமும் வட்டச் சிகரமும் உடைய விமானம் அமைந்துள்ளது. இதேபோன்று சற்றுச் சிறிய அளவில் ஆஞ்சநேயர் சந்நிதி மீதும் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானங்களில் நாற்புறமும் கருடன், கோபுரம் தாங்கிகள் ஆகியோர் உருவங்கள் காணப்படுகின்றன. அவற்றின் மீது ஒரு செப்புக் கலசம் உள்ளது.

நாள்தோறும் ஒரு காலப்பூசை தென்கலைப் பாஞ்சராத்திர முறையில் நடைபெறுகின்றது.

இக்கோயிலுக்கு 7 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. வைகுண்ட ஏகாதசி, கார்த்திகை தீபம் ஆகியவை போன்ற விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. இக்கோயிலுக்கு அழகிய கருட வாகனம் உள்ளது.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது.

### மருதாடு

## படையாத்தம்மன் கோயில்

### (பொன்னியம்மன்)

இவ்வூர் ஆதிமூலப் பெருமாள் கோயிலுக்கு வடக்கில் கிழக்கு நோக்கியவாறு 20 செண்ட் நிலப்பரப்பில் இவ்வம்மன் கோயில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இப்பகுதியைச் சிலகாலம் ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னர்களுக்கு இவ்வம்மன் அருள்புரிந்து அவர்கள் படைகளைக் காத்தாள் என்பதற்காக இவ்வம்மனுக்குப் படைகாத்த அம்மன் என்னும் பெயர் சூட்டி அவர்கள் வழிபட்டனர் என்று கூறுவர்.

கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாக இக்கோயிலின் உட்பகுதிக் கருவறையில்

படைகாத்தம்மன் எட்டுக்கரங்களுடன் அமர்ந்த , லையில் எழுந்தருளியுள்ளாள்.

இக்கோயில் தென்கிழக்கு முனையில் வடக்கு நோக்கியவாறு சிறு சந்நிதியில் முத்தாலம்மன் எழுந்தருளியுள்ளார்.

நாள்தோறும் ஒருவேளைப் பூசை நடைபெறுகிறது. ஊர்ப் பொதுவில் நிருவாகம் இயங்கிவருகிறது. ஆடி, தை மாதங்களில் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் மக்கள் இங்கு மிகுதியான எண்ணிக்கையில் கூடி வழிபடுகின்றனர்.

## மருதாடு

# புரந்தரபுரீசுவரர் கோயில்

இவ்வூர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகில் இக்கோயில் மேற்கு நோக்கியவாறு 35 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இந்திரன் தன் பகைவனாகிய விருத்திராசுரனை வெல்வதற்காக வச்சிராயுதமாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ததீசிமுனிவர் தம் முதுகெலும்பை இந்திரனுக்குத் தந்தார். இவ்வகையில் ததீசிமுனிவர் உயிர் நீத்தார். இதன் காரணமாக இந்திரனுக்குப் பாவம் நேர்ந்தது. இதைப் போக்கிக்கொள்ள இந்திரன் இவ்விடத்தில் தன் பெயரில் பூஞ்சோலை ஒன்றையும் நகரத்தையும் அமைத்து அதற்குப் புரந்தரபுரி என்னும் பெயரிட்டு அங்கு ஒருகோயில் அமைத்துச் சிவபூசை செய்துவந்தான். அவன் செய்த பூசை மனநிறைவு இன்மை காரணமாகப் பரமேசுவரனும் அவனுக்கு வரம் தாராது காலம் தாழ்த்தி வந்தார். தேவேந்திரனுக்கு மனமிரங்கிய பார்வதி, அவனுக்கு அருளுமாறு சிவபெருமானிடம் வேண்டினாள். அதற்கேற்பச் சிவனாரும் இந்திரனுக்கு அருள்புரிந்தார்.

இந்திரன் வழிபட்டதால் இங்குள்ள பெருமானுக்குப் புரந்தரபுரீசுவர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இந்திரனுடைய பூசைப் பயனை (பிரசாதத்தை) அளித்ததால் இங்குள்ள அம்பிகைக்கு இந்திரப்பிரசாதவல்லி என்ற பெயரும் வழங்கிற்று.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வம் ஆகும். இது பட்டுப்போனபடியால் தென்கிழக்கு முனையில் புதிதாக ஒரு வில்வமரம் வளர்க்கப்படுகிறது.

மேற்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், பெரிய வெளிப்

பிராகாரத்தை அடைகிறோம் இப்பிராகாரத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு சிறு சந்நிதியில் சண்டேசுவரர் உள்ளார். வடகிழக்கு முனையில் தெற்கு நோக்கியவாறு வயிரவர் நின்றவாறு உள்ளார். அவருக்குத் தெற்கில் நவக்கோள் சந்நிதி அமைந்துள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் கருவறையை நோக்கியவாறு கொடிமரம், பலிபீடம், நந்தி சந்நிதி, தீபத்தூண் ஆகியவை உள்ளன. இங்குள்ள நந்தி புன்னகை புரியும் வகையில் அருள்புரியும் நிலையில் காட்சியளிக்கிறார்.

நந்திதேவர் சந்நிதிக்கு வடக்கில் தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பிகை இந்திரப்பிரசாதவல்லி நான்கு கரங்களுடன் மேற்கரங்களில் தாமரை நீலோற்பலமும் கீழ்க்கரங்களில் அபய வரதமுத்திரைகளைக் கொண்டும் விளங்குகின்றாள். இச்சந்நிதிக்கு எதிரே சிங்கம், பலிபீடம் ஆகியன உள்ளன.

மூலவர் கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய இருபிரிவுகளைக் கொண்டுள்ளது. கருவறையில் கிழக்கு நோக்கிய சதுரவடிவச் சிவலிங்கவடிவில் புரந்தரபுரீசுவரர் எழுந்தருளியுள்ளார். உள்மண்டபத்தில் சிறு நந்தியும் வெளிமண்டபத்தில் படிக லிங்கமும் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தின் வடக்குச் சுவரை ஒட்டிய மேடையில் உலாத்திருமேனிகள் உள்ளன. சோமாசுகந்தர், அம்பிகை, நடராசர், சிவகாமி, சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானை, சண்டேசுவரர், வெள்ளிக்கிழமை அம்மன், சந்திரசேகரர், பாலாம்பிகை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறைக் கோட்டச் சுவர்களுள் விநாயகர், தென்முகக்கடவுள், திருமால், பிரமதேவர், சிறுதுர்க்கை ஆகியோர் உள்ளனர். கருவறைக்கு மேற்கில் அதனையொட்டிக் கிழக்கு நோக்கியவாறு வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகப்பெருமான் சந்நிதி அமைந்துள்ளது. இதற்குத் தெற்கில் கிழக்கு நோக்கியவாறு விநாயகப் பெருமானின் சந்நிதி உள்ளது. இக்கோயிலுக்கு வடக்கில் இந்திர தீர்த்தம் என்னும் குளம் இருக்கிறது. இது சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

நுழைவாயிலின் மீது 3 நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்ட கோபுரம் இருக்கின்றது. கருவறைமீது இரண்டு நிலைகளையுடைய விமானமும் அம்பிகை முருகர், விநாயகர் ஆகியோர் சந்நிதிகள் மீது 3 நிலைகளைக் கொண்ட விமானங்களும் அமைந்துள்ளன. இவற்றில் பூதகணங்கள், கோபுரந்தாங்கிகள், நாசிகள், இடபங்கள் ஆகியவை அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மீது செம்பினாலாகிய கலசங்கள் உள்ளன.

கருவறைச்சுவர்களும் கோபுரத்தின் அடிப்பகுதியும் உபபீடம், பட்டிகை, குமுதல் ஆகியவற்றால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. கபோதங்களில் யாளிவரிசைகள் அமைந்துள்ளன.

இக்கருவறைச் சுவரில் முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள்

காணப்படுகின்றன. ஒன்றில் இவ்வூர் செயங்கொண்ட சோழமண்டலத்துள் மருதாடு என்னும் விக்கிரமசோழ நல்லூர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் இறைவர் அவனிமுழுதுடைய நாயனார் எனக் குறிக்கப்பெற்றுள்ளார். அவனி முழுதுடையாள் என்பது சோழ அரசியர் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுள் ஒருவர் இப்பெருமானை எழுந்தருளிவித்திருக்கலாம் என்பது தெரியவருகிறது.

இக்கோயில் மகாமண்டபத்தில் நிலைப்படுத்தப்படாத நிலையில் நாகப்பிணைவு ஒன்று காணப்படுகிறது. நான்கு நாகங்கள் ஒன்றோடு ஒன்று பலமுறை பின்னிக் கோலம் போல அமைந்துள்ளன. இவை வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைக் குறிப்பனவாகவும் அவற்றிடையே காணப்படும் சிறுமலர்கள் உலக இன்பங்களைக் குறிக்கின்றன என்றும் பாம்பின் தலைகளுக்கு இடையில் காணப்படும் கண்ணன் திருவுருவம் வீடுபேற்றையும் அருளையும் குறிப்பதாகவும் கூறுவர்.

இக்கோயிலுக்கு 6 ஏக்கர்ப் புன்செய் நிலமும் 7 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. ஒரு காலப் பூசை நடைபெற்று வருகின்றது. தற்போது தெலுங்குப் பிராமணர் ஒருவர் பூசை செய்துவருகிறார். காணும் பொங்கல், ஆடிக்கிருத்திகை, கார்த்திகை விளக்கீடு ஆகிய நாள்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பட்ட அறங்காவலர் நிருவாகம் செய்து வருகின்றார்.

இக்கோயிலுக்கும் இவ்வூர் ஆதிகேசவப்பெருமாள் கோயிலுக்கும் சேர்ந்து ஆண்டு வருமானம் 2,300/- உருபாயாகும்.

### மாங்காடு

## பச்சையம்மன் கோயில்

இக்கோயில் ஆர்க்காடு - இலுப்பை வழியில் ஆர்க்காட்டிலிருந்து ஆறு கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள மாங்காட்டில் 20 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில் இருபிரிவுகளாக உள்ளது. கிழக்கு நோக்கியவாறு தென்வடலாகவுள்ளது. மண்டபங்களையொட்டிப் பச்சையம்மன் கோயிலும் படவேட்டம்மன் கோயிலும் உள்ளன.

பச்சையம்மன் சந்நிதிக்கு உள்ளே சுவர் ஓரத்தில் கிழக்கு நோக்கியவாறு நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் சுதை உருவம் உள்ளது. இதன் முன்புறம் கற்சிலைகளாக மன்னாதீசுவரர், பச்சையம்மன், பூங்குறத்தி ஆகியோர் உள்ளனர். தெற்குச் சுவரில் வடக்கு நோக்கியவாறு முனிகள் மூவர் உள்ளார்கள். இச்சந்நிதிக்கு வடக்கில் படவேட்டம்மன் சந்நிதியும் கருவறையுள் படவேட்டம்மனின் சுதையுருவமும் முன்புறம் கற்சிலையும் உள்ளன.

பரந்த வெளியில் மேற்கு நோக்கியவாறு தனித்தனிச் சந்நிதிகளில் வேதமுனி, சிங்கமுனி, நாதமுனி ஆகிய மூவரும் வடக்குநோக்கியவாறும் வாழ்முனி, செம்முனி ஆகியோர் கிழக்கு நோக்கியவாறும் அவ்வாறே தவமுனியும் உள்ளனர்.

பூசாரி ஒருவர் இங்கு ஒரு காலப்பூசை செய்து வருகிறார். ஆடி மாதம் விழா நடைபெறுகிறது.

குதிரை, மாடுகள் முதலியன சுடுமண்ணால் செய்யப்பட்டுப் பிரார்த்தனை முறையில் கோயிலில் வைக்கப்படுகின்றன. மக்கள் திரளாக வந்து வழிபட்டுச் செல்கின்றனர். ஊர்மக்கள் இக்கோயிலைப் பாதுகாத்து வருகிறார்கள்.

### மாமண்டூர்

## இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில் செய்யாற்றிலிருந்து 19 கிலோமீட்டர்த் தொலைவில் மாமண்டூரில் 14 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் ஒரு பிராகாரமும் ஒரு கருவறையும் கொண்டதாக உள்ளது.

இக்கோயிலில் மூலவர் இலட்சுமி நாராயணப் பெருமாள் தம் இடக்கையால் இலட்சுமியை அணைத்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளார். இலட்சுமி நாராயணர் தம் இருபக்கங்களில் உபய நாச்சியார்களுடன் இணைந்த நிலையில் காட்சியளிக்கும் திருவுருவமும் உள்ளது. பெருமாள் திருவுருவம் ஒரு மீட்டர் உயரம் கொண்டும் மற்றவர் திருவுருவங்கள் 0.9 மீட்டர் உயரம் கொண்டும் உள்ளன. இங்குக் கிருட்டினன் திருவுருவமும் உள்ளது. இத்திருவுருவம் நாங்குநேரி வானமாமலை மடத்திலிருந்து 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பல்லக்கில் எடுத்துக் கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இக்கோயிலில் பட்டாச்சாரியாரால் இருகாலப்பூசை வைகானச ஆகம

முறையில் நடத்தப்பெறுகிறது. இக்கோயிலில் தமிழ் ஆண்டுப் பிறப்பு, ஆடிப்பூரம் கார்த்திகை தீபம், போகி, பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 2.64 ஏக்கர்ப் புன்செய் நிலமும் 8.85 ஏக்கர் நன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், அறங்காவலர் ஒருவரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4,393/- உருபாயாகும்.

## முள்ளண்டிரம்

# சுயம்பு நாதீசுவரர் கோயில்

இக்கோயில் வேலூர் - ஆரணி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சேவூர் என்னும் இடத்திலிருந்து 11 கிலோமீட்டர்த் தொலைவில் 50 செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு உள்ளது.

முள்ளாண்டம் - முட்செடிகளால் சூழப்பட்ட ஊர் - இதனைக் கல்வெட்டு பிரபுட தேவராயபுரம் என்று குறிப்பிடுகிறது.

அத்தியூர், புத்தூர், அருமந்தபாடி ஆகிய மூன்று கிராமங்களும் சேர்ந்து மும்மண்டலம் எனப் பெயர் பெற்றது. பின்னர் இப்பெயர் முள்ளண்டிரம் என்று வழங்கி வருகிறது. சுவாமி தாமாகவே தோன்றி அருள்பாலித்து வருவதால், சுயம்புநாதர் என்று இவர் அழைக்கப்படுகிறார். அம்பாள் சமசுகண்டேசுவரி என்று அழைக்கப்படுகிறார்.

இக்கோயில் அருணகிரிநாதரோடு தொடர்புடையது என்பதைக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

இங்குத் தலவிருட்சம் உள்ளது. இது 20 மீட்டர் உயரத்தில் வளர்ந்து செழிப்பாக உள்ளது.

கோயில் நுழைவாயிலின் வழியாக உள்ளே செல்வோமெனில், முதலில் நந்தியம்பெருமான் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளதைக் காணலாம். இக்கோயிலின் மூர்த்தங்கள் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கின்றன. கோயிலின் பிராகாரத்தில் அருணாசலேசுவரர், விநாயகர் ஆகியோர் சந்நிதிகள் இருக்கின்றன.

கருவறைக் கோட்டத்தில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் துர்க்கை திருவுருவத்திற்குச் சற்று வடக்கில் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன.

அம்பிகை சமசுகண்டேசுவரி என்னும் பெயரில் தெற்கு நோக்கியவாறு அருள்பாலித்து வருகிறார்.

தீர்த்தக்குளம் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது. கருவறை மீது விமானம் காணப்படுகிறது. மதிற்சுவருக்கும் கோயிலுக்கும் இடையே 12 மீட்டர் அகலமுள்ள பிராகாரம் இருக்கின்றது. 12 கால் கொண்ட மண்டபம் ஒன்று உள்ளது. இதில் சிற்பங்கள் சில காணப்படுகின்றன.

இக்கோயிலின் தெற்குச்சுவரில் ரௌத்திரி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, அகரம் முள்ளாண்டம் என்கிற பிரபுட தேவராயபுரம் மகராசநாதகவிஞர் திண்டிமக்கவி உட்படக் கம்மாளத் தெரு கொத்தர் சிலருக்கு மனை நிலங்கள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்தச் சாசனம்[1] தான்தோன்றீசுவரர் கோயிலில் (சுயம்புநாதீசுவரர் கோயிலில்) பொறிக்கப்பட்டது. (இக்கிராமம் தமது பெயரில் விளங்குமாறு செய்துகொண்ட பிரபுட தேவர் திண்டிமர் உட்பட எட்டுப் பிராமணர் குடும்பங்களுக்கு இதை உள்ளூர் வெளியீடாகிய விவேகவிபகப் பத்திரிகை கூறுகிறதைக் கொண்டு, சோமவல்லி பிரஹரசனரும் சங்கரர் சௌந்தர்ய லகரிக்கு விளக்கவுரை இயற்றியவருமாக இருந்தவர், இந்த திண்டிமராக இருக்கக்கூடும் என கிருட்டிணசாத்திரி யூகிக்கிறார். ஆனால், உண்மையில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் இலக்கிய உலகில் திண்டிமர் பலர் தோன்றியிருக்கிறார்கள்)

இக்கோயிலிலுள்ள அருணாசலேசுவரர் சந்நிதியின் தெற்குச்சுவரில் 1472 சக சித்தார்த்த ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, தமது நன்மைக்காகவும் தம் கணவர், குமாரர் - திண்டிமர் அண்ணாமலைநாதர் நன்மைக்காகவும் பிராமணப் பெண்மணி நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.[2]

தெற்கு வாயிலிலுள்ள கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு குரோதன ஆண்டில் பொறிக்கப்பட்டது. இது "ராஜ கோசாரணம் பண்டதே வாவில்" உள்ள ஒரு வீட்டுமனை, கிராமத்தின் திண்டிமக் கவிக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இக்கோயிலில் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கோயிலுக்கு 1.64 ஏக்கர் நன்செய் நிலமும் 7.92 ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 700 உருபாயாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இக்கோயில் கருவறை விமானம் சாய்ந்து விழும் நிலையில் உள்ளது. சுவர்கள் இடிப்பாடுகளுடன் காணப்படுகின்றன. இக்கோயிலுக்குத் திருப்பணி தேவைப்படுகிறது.

---

1. 396/1911; 2. 397/1911

## முள்ளண்டிரம்

# பால வரதராசர் கோயில்

இத்திருத்தலம் வேலூர் - ஆரணி நெடுஞ்சாலையில் சேவூர் என்னும் கிராமத்திலிருந்து 11 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள கண்ணமங்கலம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவில் 25 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியுள்ளது.

அத்தியூர், புத்தூர், அருமந்தபாடி ஆகிய மூன்று ஊர்களும் சேர்ந்த நிலையில் இவை மும்மண்டலம் என்னும் பெயரில் குறிப்பிடப்பெற்று வந்தன. மும்மண்டலம் என்னும் பெயர் காலப்போக்கில் முள்ளண்டிரம் என்னும் பெயரைக் கொண்டது.

இக்கோயிலில் பாலவரதர், சீதேவி, பூதேவி ஆகியோர்களுடன் அருள்பாலித்து வருகிறார். கருவறையின் விமானம் நன்னிலைமையில் இருக்கின்றது. இக்கோயிலின் உட்பகுதியில் முன்புறம் ஒரு மண்டபம் இருக்கின்றது.

இங்கு ஒருகாலப்பூசை மட்டும் நடைபெறுகிறது.

இக்கோயிலுக்கு 1.23 ஏக்கர்ப் புன்செய் நிலம் இருக்கின்றது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 500 உருபாயாகும். இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவருகிறது.

## மேல்பாடி
# சோமநாதீசுவரர் கோயில்

இவ்வூர் திருவலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலும் வள்ளிமலை அடிவாரத்திலிருந்து 1 கிலோமீட்டர்த் தொலைவிலும் நீவா நதிக்கரையின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கியவாறு 1 1/2 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

இவ்வாற்றுக்குப் பொன்னை என்னும் பெயரும் வழங்கிவருகிறது.

சோமன் என்னும் பெயர் சந்திரனைக் குறிக்கிறது. சிவபெருமான் சோமனைக் காப்பாற்றியதோடு அவனைத் தம் தலையில் சூடிக் கொண்டார். இவ்வகையில் அவர் சோமநாதீசுவரர் என்னும் பெயரைக் கொண்டுள்ளார்.

தெற்கு நோக்கியவாறுள்ள வாயிலின் வழியாக இக்கோயிலை வலம் வரும்போது வடமேற்குக் கோடியில் கிழக்கு நோக்கியவாறுள்ள தபசுகிருதாம்பாள் சந்நிதியைக் காணலாம். அம்பிகை சந்நிதிக்கு எதிரில் வெளியில் சிங்கத்தின் உருவமும் பலிபீடமும் உள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் பலிபீடம், கொடிமரம், நந்தி உருவம் ஆகியவை உள்ளன. அடுத்துத் தெற்கு நோக்கிய வாயிலினுள் நுழைந்தால் உள்ளே நந்திதேவர் திருவுருவத்தையும் பலிபீடத்தையும் காணலாம். கருவறையின் வாயிலில் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் கிழக்கு நோக்கியவாறு சோமநாதீசுவரர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறையின் கோட்டச் சுவர் மாடங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோரும் மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் உள்ளார்கள். துர்க்கையின் எதிரில் சண்டேசுவரர் உள்ளார்.

இக்கோயிலில் சந்திரசேகரர் உற்சவர் திருவுருவம் மட்டும் உள்ளது. இது தற்போது உள்ளூர்க் கோயில் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இக்கோயிலைப் புதுப்பிக்கும்போது மூன்று சிலைகள் கண்டெடுக்கப்பட்டன எனவும் தூய்மை செய்ய அவை தொல்பொருள் துறையினரிடம் ஒப்புவிக்கப்பட்டன எனவும் சொல்லப்படுகிறது.

கருவறை மீது சதுரமாகத் தொடங்கி வட்டமாக முடியும் கல்லாலான விமானம் உள்ளது. இக்கோயிலில் முகமண்டபம், ஊஞ்சல் மண்டபம், கல்யாண மண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன. மண்டபங்கள் யாவும் ஒரு மீட்டர் உயரமுள்ள மேடைமீது உள்ளன.

கங்காளர், உமாசகிதர், இடபாந்திகர், வடநாட்டுவிநாயகர், ஐயனார், சப்தமாதர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. வெளியில் உயர்ந்த மதில் உள்ளது. இதன் நடுவில் ஒரே நேர்க்கோட்டில் காமதேனு, இடபம், பன்றி போன்ற இலச்சினைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

குருக்கள் ஒருவர் ஒரு காலப்பூசை செய்துவருகிறார். விழாக்கள் எதுவும் நடைபெறுவதில்லை. இக்கோயில் இந்தியத் தொல்பொருள் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இக்கோயில் கல்வெட்டுகளில் 'சோளேந்திர சிங்க ஈசுவரமுடைய மகாதேவர் கோயில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் இராசராசனுடைய 14-ஆம் ஆண்டில் அரசியல் அதிகாரி ஒருவர் ஒரு நந்தாவிளக்கெரிப்பதற்காக இக்கோயிலுக்கு 15 கழஞ்சுப் பொன் நன்கொடை அளித்தார். ஆனால், அதே ஆண்டிலுள்ள மற்றொரு கல்வெட்டில் அரசனுடைய பெயர் கோநேரின்மை கொண்டான் என்று வழங்குவதோடு மேல்பாடி வீரநாராயணபுரம், இராசசிராயபுரம் என்று பெயர் மாற்றப்பட்டது என்றும் அவ்வூரில் அவன் அமைத்த கோளேந்திரசிம்மேசுவரர் கோயில் மகாதேவருக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன என்றும் அறிகிறோம். கோநேரின்மை கொண்டான், இராசாசிராயன் என்னும் பெயர்கள் முதல் இராசராசனுடைய விருதுப் பெயர்களே. இவற்றை நோக்க முதற் பராந்தகன் காலத்தில் மேல்பாடி, சோழர்கள் கைவசம் வந்துவிட்டது என்பதும் அதற்கு முதற்பராந்தகன் விருதுப் பெயரால் வீரநாராயணபுரம் என்ற பெயர் வழங்கப்பட்டது என்பதும் அவ்வூரில் இராசராசன் ஒரு கற்றளி கட்டினான் என்பதும் உறுதியாகின்றன.

## மேல்பாடி
# சோழீசுவரர் கோயில்

திருவலம் இருப்புப்பாதை நிலையத்திற்கு மேற்கில் 9.6 கிலோமீட்டர்த் தொலைவில் நீவாநதியின் மேற்குக் கரையில் 5 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது.

இதனையொட்டிய நிலப்பரப்புகள் பாணர், கங்கர், வைதும்பர் ஆகியோர்களால் ஆளப்பட்டு வந்துள்ளன. இவ்வூர் சோழநாட்டிலிருந்து இராட்டிரகூடப் பெருவழி செல்லும் வழியில் அமைந்திருந்தது. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டினன் இங்குப் படைவீடு அமைத்து அதில் தங்கியிருந்ததைக் கார்காடு செப்பேடுகள் கூறுகின்றன.

இவ்வூருக்கும் இங்கு எழுந்தருளியிருக்கும் ஈசுவரருக்கும் வரலாற்றுச் சிறப்பு உண்டு. இந்நிலப்பரப்பின் ஆட்சியை இழந்திருந்த சோழர்கள் தங்கள் ஆதிக்கத்தை முதலாம் ஆதித்தன் காலத்திலும் அம்மன்னன் மகன் முதலாம் பராந்தகன் காலத்திலும் தொண்டைமண்டலத்தில் ஆதிக்கத்தை மீட்கத் தொடங்கினர். ஆனால், இதற்கு இடையூறாக இருபேரிடர்கள் நேர்ந்தன. அவற்றுள் ஒன்று பராந்தகன் மகன் இராசாதித்தன் கி.பி.949-ஆம் ஆண்டில் தக்கோலப் போரில் இறக்க, தொண்டைமண்டலம் இராட்டிரக் கூட மன்னன் மூன்றாம் கிருட்டினன் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியதாகும். அடுத்தது, பின்னர்த் தொண்டை மண்டலத்தை இராட்டிரகூட மன்னரிடமிருந்து மீட்கப் பராந்தகனின் மகன் அரிஞ்சயன் அவர்களை எதிர்த்துத் தொடங்கிய போரில் இறந்ததாகும்.

இவ்வூரில் தற்போதுள்ள சோமநாதீசுவரர் கோயிலுக்கு வடக்கில் அரிஞ்சயன் உடலைப் பள்ளிப்படுத்தி அதன்மீது சோழீசுவரர் கோயில் எனப்படும் அரிஞ்சிகை ஈசுவரன் என்னும் பள்ளிப்படைக்கோயில் அமைக்கப்பட்டது. இக்கோயில் கல்வெட்டில் "இறைவன் ஸ்ரீகோவிராசராசகேசரிவர்மரான ஸ்ரீராசராசதேவர்க்கு யாண்டு 29-ஆம் ஆண்டு ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணாடி நாட்டு மேற்பாடியான ராசஸ்ரீபுரத்து ஆற்றூர்த் துஞ்சிய தேவர்க்குப் பள்ளிப்படையான உடையார் ஸ்ரீராசராசதேவர் எடுப்பித்தருளின திரு அரிஞ்சிகை ஈச்சுரத்து மகாதேவர்க்கு" என்பது குறிப்பிடப்படுகிறது. இக்கோயில் முதலாம் இராசராசனால் கட்டப்பட்டு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. முதலாம் இராசேந்திரன் காலத்தில் இக்கோயில் சைவ சமயத்தின் ஒரு பிரிவான பாசுபதத்தின் மடத்துத் தலைவரான இலகுளீசுவர பண்டிதர் மேற்பார்வையில் இயங்கி வந்துள்ளது.

இக்கோயில் 4.17 மீட்டர் நீளமும் அகலமும் உடையது. உள்மண்டபம் 1.88 மீட்டர் முன்னோக்கியுள்ளது. சிறிய சுற்றுப்பிராகாரம் மண்டபத்துடன் அமைந்துள்ளது. கருவறையைச் சுற்றிலும் ஐந்து கோட்டங்கள் அமைந்துள்ளன. கோட்டத்தின் மேல் பகுதிகள் மகரதோரணங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பிட்சாடனர், சிவலிங்கத்தை வழிபடும் பெண் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. கோட்டங்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் உள்ளனர். விமானத்தில் கிரீவமும் சிகரமும் வட்டவடிவில் அமைந்துள்ளன. கிரீவகோட்டங்களில் கிழக்கில் யானை மீது முருகன், தெற்கில் வீணா தட்சிணாமூர்த்தி, வடக்கில் பிரமதேவர் ஆகியோர் உள்ளனர். மேற்கில் வெற்றிடமாகவுள்ளது.

இதில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. அவை முதலாம் இராசராசனின் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளாகும். ஒன்று 5136 1/2 குழி நிலத்தைக் கோயிலுக்கும் நந்தவனத்துக்கும் திருச்சுற்றாலைக்கும் மடவளாகத்திற்கும் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. மற்றொன்று புலிக்குன்றம் என்னும் பகுதியை ஊராக ஏற்படுத்தக் கொடுத்ததைக் குறிக்கிறது.

குருக்கள் ஒருவர் இங்கு ஒரு காலப்பூசை செய்து வருகிறார். கோயிலுக்கு நிலம்

உள்ளது. அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிருவாகமும், கட்டடப் பொறுப்புகள் இந்தியத் தொல்பொருள் பாதுகாப்புத்துறையின் பார்வையிலும் உள்ளன.

## மேல்மா

# கல்யாண வெங்கடேசப் பெருமாள் கோயில்

காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 36 கிலோமீட்டர்த் தொலைவில் செய்யாறு - உத்திரமேரூர் செல்லும் வழியில் 25-ஆவது கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள மேல்மா கிராமத்தில் 58 மீட்டர் நீளமும் 41 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் இக்கோயில் உள்ளது.

இவ்வூரில் மேல்ராசன் கோயில் என்னும் சிவன் கோயில் உள்ளது. இக்கோயில் சிவலிங்கத்தின் மீது பாம்புவடு இருப்பதாகவும் இதன் காரணமாக இவ்வூர், மேல்ராசனூர் என வழங்கி வந்ததாகவும் பின்னர் இப்பெயர் மேல்மா என்னும் திரிபு எய்தியதாகவும் கூறுகிறார்கள். மற்றொரு சாரார் இவ்வூரில் தாமரையில் வீற்றிருந்தவாறு ஒரு திருவுருவம் கிடைக்கப் பெற்றதாகவும் மேல் என்னும் சொல் தாமரையையும் மா என்னும் சொல் திருமகளையும் குறிப்பதால் இவ்வூருக்கு மேல்மா என்னும் பெயர் அமைந்தது எனவும் கூறுகிறார்கள்.

இக்கோயிலின் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே செல்லும்போது முதலில் பலிபீடம் இருப்பதைக் காணலாம். வாயிலில் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் கல்யாண வெங்கடேசப் பெருமாள் கிழக்கு நோக்கியவாறு நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். மேற்குப் பகுதியில் தாயார் சந்நிதியும் ஆஞ்சநேயர் சந்நிதியும் உள்ளன. வலப்பக்கத்தில், கிருட்டினன் திருவுருவம் தெற்கு நோக்கியவாறுள்ளது. வேதாந்த தேசிகர் திருவுருவமும் ஆழ்வார்கள் திருவுருவங்களும் உள்ளன.

கல்யாண வெங்கடேசப் பெருமாள் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் விமானங்கள் உள்ளன. இக்கோயிலுக்கு ஒரே பிராகாரம் உள்ளது.

கோபுரவாயிலின் இடப்பக்கத்தில் அழிந்த நிலையிலுள்ள மடைப்பள்ளி தற்போது வாகனமேடையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இக்கோயிலின் மேற்குப் பகுதியில் கல்மேடை ஒன்றுள்ளது. இது சிறந்த அமைப்பாக விளங்குகிறது. மூலத்தான விமானத்தில் தசாவதாரத்தைக் குறிக்கும் பிரபை ஒன்று சிறப்பாக அமைந்துள்ளது.

வடகலை பட்டாச்சாரியரால் இருவேளைப் பூசை நடைபெறுகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்ற நிருவாக அலுவலர் செயலாற்றி வருகிறார். இக்கோயிலுக்கு 9.67 ஏக்கர் நன்செய் நிலமும் 32.71 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

## மேல்முடியனூர்
# ஆதிகேசவப் பெருமாள் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலை - செங்கம் பாதையில் அம்மாபாளையம் கூட்டுச் சாலைக்கு வடக்கே மூன்று கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள மேல்முடியனூர் நடுவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

முடியன் என்பது அதியர்களின் (குறுநில மன்னன்) பெயர்களில் ஒன்று. திருமுடிக்காரி, முடியன் என்ற பெயர்களும் அவர்களுக்குரியன. அதனையொட்டி இவ்வட்டத்தில் முடியனூர் என்னும் பெயரில் பல ஊர்கள் உள்ளன. அவ்வகையில் மேல் என்னும் காரண ஒட்டுப் பெயரோடு மேல்முடியனூர் என்னும் பெயர் இதற்கு அமைந்துள்ளது.

கிழக்கு வாயிலின் வழியாக உட்செல்வோமெனில் திறந்த வெளிப்பிராகாரத்தின் தென்மேற்குச் சந்நிதியாகத் தாயார் மரகதவல்லி சந்நிதியைக் காணலாம். இதனை ஒட்டி, வடக்கிலுள்ள மண்டபத்தில் 1 1/2 மீட்டர் உயரமுள்ள ஆஞ்சநேயர் சந்நிதி அமைந்துள்ளது. வலம் வந்து முகப்புமண்டபத்தை அடையலாம். இது கருவறைச் சந்நிதியையும் வாயிலையும் இணைக்கும் வகையில் 16 கால்களைக் கொண்டுள்ளது. இம்மண்டபத்தில் கருடாழ்வார், மூலவர் கருவறையை நோக்கியுள்ளார். இம் மண்டபத்தில் வாயிலின் இருபுறத்தும் 2 மீட்டர் உயரமுள்ள துவாரபாலகர் உள்ளனர்.

கருவறையுள் ஆதிகேசவப்பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் உள்ளார். இங்கு உற்சவர் பெருமாள் உபயநாச்சிமார்களுடன் உள்ளார்.

பூசைகள் முறையாக நடைபெறுவதில்லை. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பெற்ற அறங்காவலர் பொறுப்பில் உள்ளது.

கோயிலின் வடகிழக்கில் ஆழ்வார்கள் சந்நிதி சிதைந்துள்ளது. கருடர்

பின்புறம் ஒரு கல்வெட்டு, தரையில் அமைந்துள்ளது. இங்கிருந்த கற்களைச் சிலர் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3,956/- உரூபாயாகும்.

## மேலப்பழந்தை

## பிரசன்ன வரதராசப்பெருமாள் கோயில்

இக்கோயில் ஆரணி சாலை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 21 கிலோமீட்டர்த் தொலைவில் ஆர்க்காடு வட்டம் மேலப்பழந்தை கிராமத்தில் பத்து செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இவ்வூர்ச் செய்யாற்றின் மேற்கில் உள்ளதால், இதற்கு மேலப்பழந்தை என்னும் பெயர் வழங்கிவருகிறது.

கிழக்கு வாயில் வழியாக கோயிலின் உள்ளே செல்வோமெனில் பலிபீடம், கொடிமரம் கருடாழ்வார் சந்நிதி ஆகியவற்றைக் காணலாம். கருவறையில் பிரசன்ன வரதராசப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோர்களுடன் கிழக்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். பெருமாள் உபயநாச்சியார் உற்சவத்திருமேனியும் உள்ளது.

மூலவர் சந்நிதி மீது விமானம் உள்ளது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை செய்யப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி, சங்கராந்தித் திருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 2.36 ஏக்கர் நன்செய் நிலமும் 4.47 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இங்குத் தண்டிகை, கருட வாகனம், பிரபை ஆகியவை உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4,174/- உரூபாயாகும்.

### ரங்காபுரம்

## கோதண்டராமசாமி கோயில்

வடஆற்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலிருந்து ஆறு கிலோமீட்டர்த் தொலைவில் சத்துவாச்சேரி கிராமம் ரங்காபுரம் என்னும் சிற்றூரில் கோதண்டராமர் கோயில் 50 மீட்டர் நீளமும் 38 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இங்கு வில்லேந்திய கோதண்டராமர் சீதேவி, பூதேவியுடன் காட்சியளித்து அருள்பாலித்து வருகிறார். தாயார் சந்நிதியும் ஆண்டாள் சந்நிதியும் உள்ளன. இராமர், இலட்சுமணர் சீதாப் பிராட்டியார், அனுமார் ஆகியோர் இங்குச் சிறப்பாக வழிபடப் பெறுகிறார்கள்.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. இராமநவமி, கார்த்திகைத் தீபம், வைகுண்ட ஏகாதசி, ஆண்டாள் திருவிழா போன்ற திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு ஐந்து ஏக்கர் நன்செய் நிலமும் பத்து ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலரிடம் உள்ளது.

### வந்தவாசி

## சலகண்டேசுவரர், அரங்கநாதசுவாமி கோயில்கள்

இக்கோயில்கள் இரண்டும் அடுத்தடுத்து ஒவ்வொன்றும் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் வந்தவாசி வட்டத்தின் தலைநகராகிய வந்தவாசியில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளன.

முன்பு இவ்விரு கோயில்களும் ஒரே பகுதியில் இருந்தன என்பதையும் நூறு

ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்விரு கோயில்களுக்கும் இடையே சுவர்கள் எழுப்பப்பட்டன என்பதையும் அன்று முதல் இவ்விரு கோயில்களும் பிரிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றன என்பதையும் அரங்கநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

பாண்டிய மன்னன் செயகாந்தன் பல ஆண்டுகளாகக் கடும் வயிற்று வலி நோயினால் பெரிதும் துன்புற்று வந்ததாகவும் இறுதியில், இதற்குத் தீர்வு காண்பதற்கு இத்தலத்திலிருந்த எறும்புப்புற்று ஒன்றிடம் இவன் செல்லவேண்டும் என இவனுக்குக் கனவில் திருவருள் உணர்த்தியதாகவும் இதற்கேற்ப அவன் எறும்புப்புற்றைத் தோண்டியபோது அதில் புனித சிவலிங்கம் இருந்ததாகவும் அதற்கு அவன் தற்போதுள்ள கோயிலை அமைத்தான் எனவும் அங்கு அவன் வழிபாடாற்றியதன் பயனாகத் தனது வயிற்றுவலி நீங்கப் பெற்றான் எனவும் அவன் இங்கு வந்து வாசி (நன்மை) அடைந்ததால் அவ்வூருக்கு வந்தவாசி என்னும் பெயர் அமைந்தது என்றும் சிலர் கூறுகிறார்கள். இத்தமிழ்ப்பெயர் ஆங்கிலத்தில் வந்தவாஷ் எனத் திரிபு எய்திற்று.

தெற்கில் சலகண்டீசுவரர் கோயில் உள்ளது. இதன் கோபுர வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், கிழக்கு வெளிப்பிராகாரத்தின் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றையும் அடுத்து நந்திதேவரின் மேற்கு சந்நிதியையும் காணலாம். இப்பிராகாரத்தின் வடமேற்குக் கோடியில் ஆறுமுகசாமி சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. கருவறையின் உட்புறத்தின் தென்பகுதியில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது.

கருவறையில் சலகண்டேசுவரர் ஒரு மீட்டர் உயரத்தில், தோண்டி எடுக்கப்பட்டபோது கடப்பாறையால் வெட்டுண்ட சிவலிங்க வடிவில், அருள்பாலிக்கிறார். சிவராத்திரி நாளில் சூரியன் இச்சிவலிங்கத்தை வழிபடுகிறான் எனத்தோன்றுமாறு அந்நாளில் சூரியன் ஒளி சிவலிங்கத்தின் மீது வீழ்கிறது. 1/2 மீட்டர் உயரமுள்ள உற்சவத் திருமேனி பஞ்சலோகத்தினால் செய்யப்பட்டதாகும். அம்மன் சந்நிதி, சுவாமி சந்நிதி ஆகியவற்றின் வடகிழக்குப் பகுதியில் தெற்கு நோக்கியவாறுள்ள அம்மன் சந்நிதியை அடுத்துக் கிழக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு உள்ளது.

இக்கோயிலில் விநாயகர், அம்மன், நவக்கிரகங்கள் ஆகியோர் சந்நிதிகள் இருக்கும் பகுதி முன்மண்டபமாக உள்ளது. அடுத்து உள்மண்டபம் இருக்கின்றது. சலகண்டீசுவரர் கோயிலுக்கு வெளியில் வெளிமண்டபம் ஒன்றுள்ளது.

சலகண்டீசுவரர் கோயிலை அடுத்து வடக்கில் அரங்கநாதர் கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. இதற்குத் தனிக் கோபுரவாயில் கிழக்கில் இருக்கின்றது. பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை அடுத்துக் கருடாழ்வார் நின்ற கோலத்தில் மூலவர் அரங்கநாதரை நோக்கி வழிபடும் நிலையிலுள்ளார். கருவறை முன்மண்டபத்தின்

தென்பகுதியில் கருடாழ்வார் திருவுருவமும் வடபகுதியில் ஆஞ்சநேயர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ளார்.

இவ்விரு கோயில்களுள் சலகண்டீசுவரர் கோயிலில் குருக்களும் அரங்கநாதர் கோயிலில் பட்டாச்சாரியர் ஒருவரும் இருகாலப்பூசை செய்துவருகிறார்கள். மாசி மாதத்தில் சலகண்டீசுவரர் கோயிலிலும் பங்குனி மாதத்தில் அரங்கநாதர் கோயிலிலும் பிரமோற்சவம் நடைபெறுகின்றது.

சலகண்டீசுவரர் கோயிலுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலமும் 4 ஏக்கர் புன்செய் நிலமும் அரங்கநாதர் கோயிலுக்கு 15 ஏக்கர் நன்செய் நிலமும் 3 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில்களில் மரத்தேர்கள் இரண்டும் பத்து வாகனங்களும் உள்ளன.

இவ்விரு கோயில்களின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப் பெற்றுள்ள அறங்காவலர் குழுவினரிடம் உள்ளது. இக்கோயில்களின் ஆண்டு வருமானம் 3,900/- உருபாயாகும்.

## வல்லண்டராமம்

# பொற்கொடியம்மன் கோயில்

இக்கோயில் வேலூர் - பெங்களூர் நெடுஞ்சாலையின் மையத்திலுள்ள திரு விரிஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர்த் தொலைவில் வல்லண்டராமம் என்னும் ஊரில் 24 மீட்டர் நீளமும் 12 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பொன் போன்ற நிறத்துடன் கூடிய கொடி போன்ற உருவம் உடையவள் என்னும் பொருளில் பொற்கொடியம்மன் என்னும் பெயர் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சமாக வேப்பமரம் ஒன்றுள்ளது.

இக்கோயிலின் கருவறைக்கு விமானம் உள்ளது. மகாமண்டபம் ஒன்றும் உள்ளது. இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. சித்திரை மாதம் கடைசி புதன்கிழமை நாளில் பெரிய திருவிழா நடைபெறுகிறது. அதுசமயம் ஆண்களும் பெண்களும் பிரார்த்தனை செய்ய வேலங்காடு என்னும் பெரிய ஏரியில் கூடி மகிழ்வது வழக்கம். இத்திருவிழாவிற்குப் புட்பரதத் திருவிழா என்று பெயர்.

இக்கோயிலுக்கு 1.50 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மரத்தாலான குதிரை வாகனம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 32,100/- உருபாயாகும்.

### வல்லம்

## அம்மச்சார் கோயில்

இக்கோயில் வந்தவாசி வட்டத்தில் வல்லம் என்ற ஊரில் ஒரு செண்டு இடத்தில் இருக்கின்றது.

இங்கு அம்மன் சந்நிதி மட்டுமே இருக்கின்றது. வழிபடுவோர்கள் தங்கி வழிபடுவதற்காக இக்கோயிலில் முன்மண்டபம் உள்ளது.

இக்கோயிலில் * ஒரு காலப்பூசையைப் பூசாரி ஒருவர் செய்துகொண்டு வருகிறார்.

இந்து சமய அறநிலையத் துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் இக்கோயில் நிருவாகம் உள்ளது. இக்கோயிலுக்கு 48 செண்ட் நன்செய் நிலம் உள்ளது. கோயிலின் ஆண்டு வருமானம் 500 உருபாயாகும்.

### வல்லம்

## கரிவரதராசப் பெருமாள் கோயில்

இக்கோயில் வந்தவாசி வட்டம், வல்லம் கிராமத்தில் 50 செண்ட் நிலப்பரப்பில் உள்ளது.

கரிவரதராசப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் அருள்பாலிக்கிறார்.

பெருமாள் சந்நிதிக்கு வலப்புறத்தில் தாயார் சந்நிதி உள்ளது.

பெருமாள் சந்நிதி விமானம் நன்னிலைமையில் உள்ளது. இக்கோயிலுக்கு ஒரே பிராகாரம் உள்ளது.

எட்டுக்கால்களைக் கொண்ட மகாமண்டபம் இருக்கின்றது.

ஒரு காலப்பூசை வைகானச ஆகமமுறையில் பட்டாச்சாரியார் செய்து வருகிறார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர்களிடம் இக்கோயில் நிருவாகம் உள்ளது. இக்கோயிலுக்கு 5.72 ஏக்கர் நன்செய் நிலமும் 4.29 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 1850 உருபாயாகும். கருடவாகனம் மட்டும் உள்ளது.

## வல்லம்

# வளர்புரீசுவரர் கோயில்

இக்கோயில் ஆரணி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து நாற்பது கிலோமீட்டர்த் தொலைவில் வந்தவாசி வட்டத்திலுள்ள வல்லம் என்ற ஊரில் 3 ஏக்கர்ப் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய கோபுர வாயிலுடன் அமைந்துள்ளது.

கோபுரவாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், முதலில் நந்திதேவர் சந்நிதியையும் பலிபீடத்தையும் காணலாம். அடுத்துக் கருவறையில் வளர்புரீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். கருவறையின் வாயிலில் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன.

கருவறைக் கோட்டத்தில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கை, துர்க்கைக்கு எதிரில் சண்டேசுவரர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. சுற்றுப் பிராகாரத்தில் சுவாமி சந்நிதிக்கு அருகில் அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது.

தீர்த்தக்கிணறு உள்ளது. தெற்கில் இராசகோபுரம் மூன்று நிலைகளுடன் இருக்கின்றது. மூலவர் சந்நிதி மீது விமானம் உள்ளது. இக்கோயிலில் வெளிப்பிராகாரமும் உட்பிராகாரமும் உள்ளன.

முன்மண்டபம், மகாமண்டபம், உள்மண்டபம் ஆகியவை உள்ளன. மண்டபத்தின் கல்தூண்களிலும் விமானத்திலும் தெய்வச் சுதைச் சிற்பங்கள் சில காணப்படுகின்றன.

இக்கோயிலின் மையச்சந்நிதியின் தெற்குச்சுவரிலுள்ள பாண்டிய மன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவரின் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு,[1] ஐந்து விளக்குகள் எரிக்க நன்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

இதே கோயிலின் வடக்குச்சுவரிலுள்ள விசயநகர நரசிங்கார தேவரின் சகம் 1391 விரோதி ஆண்டுக் கல்வெட்டு,[2] நிலம் நன்கொடை அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை காமிக ஆகமமுறையில் செய்து வரப்படுகிறது. இக்கோயிலுக்கு 8.88 ஏக்கர் நன்செய் நிலமும் 2.03 புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,751/ உருபாயாகும்.

இக்கோயிலில் இடபம், மயில், சந்திரப்பிரபை ஆகிய வாகனங்கள் உள்ளன.

---

(1. 74/1900; 2. 75/1900).

## வழுவூர்

# பிரம்மபுரீசுவரர் கோயில்

இக்கோயில் சோத்துப்பாக்கம் - வந்தவாசி வழியிலுள்ள மருதநாட்டிற்கு வடக்கே 1 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் ஊருக்கு நடுவில் 50 செண்ட் பரப்பில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது

இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் பிரமதேவனால் வழிபாடு செய்யப் பெற்றதால், இவருக்குப் பிரம்மபுரீசுவரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறு பிரமதேவன் இங்கு வழிபட்டுத் தமது படைப்புத் தொழிலில் ஏற்பட்ட வழுக்களை நீக்கிக் கொண்டதால், இவ்வூர் வழுவூர் என்னும் பெயர் பெற்றதென்பர்.

தெற்கு வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், தெற்குப் பிராகாரத்தில்

கற்பக விநாயகர் / சந்நிதியை அடையலாம். இது கருவறை, உள்மண்டபம், பதினாறுகால் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இக்கோயிலில் விநாயகர் திருவுருவம் களவாடப்பட்டுவிட்டதால், வேலைப்பாடுள்ள விநாயகர் பீடம், கல்லாலான திருவாசி, நுண்ணிய வேலைப்பாடுடன் கூடிய பெருச்சாளி உருவம் ஆகியவை மட்டுமே இப்போது உள்ளன.

வலமாக வரும்போது வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கியவாறு அம்பிகை சந்நிதியைக் காணலாம். இச்சந்நிதியில் அம்பிகை நான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றார். மேற்கரங்களில் பாசம் அங்குசம் ஆகியவையும் கீழ்க்கரங்களில் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளையும் கொண்டு விளங்குகின்றார். இங்குள்ள முன்மண்டப வாயிலின் இருமருங்கும் கல்லாலான துவாரபாலிகைகள் உள்ளனர். அம்பாள் கருவறையைச் சுற்றி உட்பிராகாரம் அமைந்துள்ளது.

கிழக்குப் பிராகாரத்தில் சுவாமியை நோக்கியவாறு பலிபீடம், நந்தி சந்நிதி ஆகியவை உள்ளன. இதன் மேற்கில் அமைந்த வாயிலின் வழியாக சுவாமி கோயில் உட்பிரா்காரத்தை அடையலாம். இங்குள்ள கிழக்கு வாயிலின் இருமருங்கும் துவாரபாலகர் இருவர் உள்ளனர். (இவர்களுள் ஒருவர் சிவன் கோயில் துவார பாலகர் மற்றவர் முருகன் கோயில் துவாரபாலகர். பழுதுபட்ட சிவன் கோயில் துவாரபா்லகரை இங்குக் கொண்டுவந்து இணையாக வைத்துள்ளனர் போலும்). தெற்குப் பகுதியில் ஒரு மீட்டர் உயரமுள்ள நர்த்தன கணபதியின் கவின்மிகு சிலை உள்ளது. வடக்குப் பகுதியில் சாதாரண விநாயகர் உள்ளார். இவ்வுட்பிராகாரத்தின் தெற்கில் தொடங்கி மேற்குப் பிராகாரத்தில் பாதிவரை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், சப்தமாதர்கள் ஆகியோரும் அடுத்து கிழக்கு நோக்கிய சந்நிதியொன்றில் வள்ளிதெய்வயானையுடன் ஆறுமுகப் பெருமானும் வீற்றிருக்கிறார்கள்.

கருவறைப் புறச்சுவர்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை, கோமுகிக்கருகில் சண்டேசுவரர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. இப்பிராகார வடகிழக்கு முனையில் உற்சவர் மண்டபம் உள்ளது. இங்குச் சோமாசுகந்தர், தனியம்பிகை, சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானை, சண்டேசுவரர், விநாயகர், பிடாரி ஆகியோர் உலாத் திருமேனிகள் உள்ளன.

வலம் வந்து கருவறையை அடைகிறோம். இம்மண்டபத்திற்குக் கிழக்கிலும் தெற்கிலும் வாயில் இருப்பினும் தெற்கு வாயிலே பயன்படுத்தப்படுகிறது. கருவறையுள் சதுரமான பீடத்தின் மீது சிவலிங்க மூர்த்தி, பிரம்மபுரீசுவரர் என்னும் பெயரில் அருள்பாலிக்கின்றார். கல்வெட்டுகள் இவரை அயனீச்சரமுடையார் எனக் குறிக்கின்றன.

நுழைவாயில் முழுமைபெறாமல் உள்ளது. கற்பக விநாயகர், சுவாமி, அம்பிகை, முருகன் சந்நிதிகள் மீது சதுர அடிப்படையும் உருண்டையான மேல்பாகமும் உச்சியில் ஒற்றைச் செப்புக்கலசமும் கொண்ட விமானங்கள் அமைந்துள்ளன.

சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும் தனித்தனியாக மண்டபத்துடன் கூடிய உட்பிராகாரமும் அவற்றிற்குப் பொதுவான திறந்த வெளிப் பிராகாரமும் அமைந்துள்ளன. சுவாமி, அம்பிகை ஆகிய சந்நிதிகள் முன் உள்மண்டபம், மகாமண்டபம், சுற்றிலும் பிராகார மண்டபம், அலங்கார மண்டபம், சுவாமி அம்பிகை சந்நிதிக்குப் பொதுவான சித்திரமண்டபமும் உள்ளன.

கருவறைப் புறச்சுவர் உபபீடம், பீடம், பட்டிகை, கும்பம், கோட்டம், யாளிவரிசை ஆகியவற்றால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இதில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இப்பெருமான் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து வேன்குறைக் கோட்டத்து வழுவூரு உடையார் அயனீச்சுரமுடைய நாயனார் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளார். ஒரு கல்வெட்டு படவேடு சம்புவராயராகிய சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராயன் அளித்த பல கொடைகளைக் கூறுகிறது.

சித்திர மண்டபத்துத் தூண்களில் மகேசுவர மூர்த்தங்கள் அழகியமுறையில் செதுக்கப்பட்டுள்ளன. காமதகனர், அண்ணாமலையார், சலந்தரர், அருச்சுனனோடு போர்புரிந்த கிராதர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. இரண்டு தூண்களில் விநாயகப் பெருமானின் 16 வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு தூண்களில் வள்ளி திருமணத் தொடர் சிற்பங்கள் உள்ளன. முதல் சிற்பத்தில் மான் வள்ளிக்கொடியில் பெண் குழந்தையைப் பெறுதல்; அதை நம்பிராசன் கண்டெடுத்தல்; அடுத்து நம்பிராசன் மனைவி அக்குழந்தைக்குப் பாலூட்டுதல்; அதற்கடுத்து, நன்கு வளர்ந்த தினைப்புனம்; அங்குப் பரண் மீது நின்று ஆயலோட்டும் வள்ளி; அவ்வள்ளியைச் சந்நிதிக்கும் குமரன்; முருகன் கிழவனாகி வள்ளியிடம் வருதல்; யானையைக் கொண்டு வள்ளியை முருகன் வெருட்டல் ஆகிய காட்சிகளும் பின் திருமணத் தலைப்பில் பதினைந்து புடைப்புத் தூண் சிற்பங்களும் உள்ளன.

குருக்கள் ஒருவர் ஒரு காலப்பூசை செய்கிறார். ஆடிக்கிருத்திகை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திரளான மக்கள் கலந்து கொண்டு காவடி எடுக்கின்றனர். கார்த்திகை விளக்கீடு, காணும் பொங்கல் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக்கோயிலுக்கு 4 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலுக்குக் கிழக்கில் நந்தவனம் உள்ளது. இடபம், மயில், குதிரை ஆகிய வாகனங்கள் உள்ளன.

## வள்ளிமலை

# திருமாலீசுவரர் கோயில்

இக்கோயில் வள்ளிமலை ஊரின் வடக்குப் பகுதியில் பத்து செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கிய மூலத்தானமும் தெற்கு நோக்கிய வாயிலும்

கொண்டு அமைந்துள்ளது.

வள்ளியம்மை வாழ்ந்து தவமியற்றிய மலையாதலின் இம்மலை இப்பெயர் பெற்றது. திருமால் வள்ளியம்மையைத் தம் திருமகளாகவும் முருகப்பெருமானைத் தம் மருமகனாகவும் அடையவேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து நிறுவிய சிவலிங்கம் இங்குத் திருமாலீசுவரர் என்னும் பெயரில் விளங்கி வருகிறது.

தெற்கு நோக்கியவாறுள்ள வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் சப்தமாதர் சந்நிதி வடக்கு நோக்கியவாறு உள்ளதைக் காணலாம். சப்தமாதர் சந்நிதிக்கு ஒருபுறம் யோகசிவன் திருவுருவமும் மறுபுறம் விநாயகர் திருவுருவமும் உள்ளன. அடுத்து மேற்புறம் காசி விசுவநாதர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இதனுள் விநாயகர், விசாலாட்சி, சண்டேசுவரர், நந்திதேவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. அடுத்து மேற்புறம் விநாயகர் சந்நிதியும் இதனையடுத்துச் சுப்பிரமணியர் சந்நிதியும் வடமேற்குக் கோடியில் திரிபுரசுந்தரி சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறு உள்ளன. இவ்வம்பிகை சந்நிதியின் முன் வைணவி, ஜேஷ்டாதேவி ஆகியோர் திருமேனிகள் உள்ளன.

வடகிழக்குக் கோடியில் வள்ளியம்மை சந்நிதியும் அடுத்து முருகர் வள்ளியை மணக்கத் துணைநின்ற விநாயகர் சந்நிதியும் தெற்கு நோக்கியவாறுள்ளன. தென்கிழக்குக் கோடியில் சங்கு சக்கரம் ஏந்திப் பதுமாசனத்தில் வீற்றிருக்கும் திருமால் வள்ளியம்மையாரை நோக்கியவாறு அமர்ந்துள்ளார். இவர் தாம் தவம் செய்து எய்திய தம் திருமகளை நோக்கி மகிழும் வண்ணம் உள்ளார்.

கிழக்குப் பிராகாரத்தில் கருவறையை நோக்கியவாறு பலிபீடத்தையடுத்து நந்திதேவர் திருவுருவம் உள்ளது. அடுத்து உட்புறமண்டபத்தின் வடக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. கருவறை நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர் சுதைச் சிற்பங்கள் உள்ளன. கருவறையில் திருமாலீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறைக் கோட்டச் சுவர்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் திருவுருவங்களும் மேற்கில் திருமாலின் திருவுருவமும் வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. அருகில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. திருமால் தவக்கோலத்தில் இருப்பது சிறப்பாகும்.

இக்கோயிலில் குருக்கள் ஒருவேளைப் பூசை செய்து வருகிறார்.

வள்ளிமலைக் கோயில் நிருவாக அலுவலரின் துணைக் கோயிலாக இஃது இயங்கி வருகின்றது. இக்கோயிலுக்கு ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது. இதிலிருந்து யாதொரு வருமானமும் கிடைப்பதில்லை. ஆண்டு வருமானம் 105 உருபாயாகும்.

## வள்ளிமலை

# முருகன் கோயில்

இக்கோயில் திருவலம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வடக்கில் 14 கிலோமீட்டர்த் தொலைவிலும் வேலூரிலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவிலும் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

முதலில் தாழக் கோயிலைத் தரிசிக்கலாம்.

இக்கோயிலின் உள்ளே செல்வோமெனில், பலிபீடம், கொடிமரம், மயில் திருவுருவம் ஆகியவற்றை அடுத்துக் கருவறையை வலம் வரும்போது வலப்புறம் விநாயகர் சந்நிதி உள்ளதைக் காணலாம். கருவறையில் ஆறுமுகசுவாமி காட்சியளிக்கிறார். இங்கு வள்ளி, தெய்வயானை, அருணகிரிநாதர், சூலம், திருமுருகன் வள்ளி, தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. இக்கோயிலின் முகப்பினை 5 நிலைகள் கொண்ட கோபுரம் அணி செய்கின்றது. கருவறை மீது 3 நிலைகள் கொண்ட சதுர விமானம் அமைந்துள்ளது. உள்ளே மண்டப முகப்பில் வள்ளி திருமணக் காட்சி சுதை வடிவில் அமைந்துள்ளது.

இங்குக் குருக்கள் நான்கு காலப் பூசை செய்துவருகிறார். இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அலுவலரிடம் உள்ளது.

இரண்டாவது கட்டம் இக்கோயிலுக்குத் தெற்கில் அமைந்துள்ள மலைப்பாதையும் கோயில்களும் ஆகும். இதன் தொடக்கத்தில் இருபுறமும் திருமுருகக் கிருபானந்த வாரியார், அருணாசல ரெட்டியார் ஆகியோர் உருவச்சிலைகள் உள்ளன. இதனையடுத்து சரவணப் பொய்கை இருக்கின்றது. அதன் கரையில் ஆயலோட்டும் வள்ளியின் உருவச்சிலையமைந்த கோயில் இருக்கின்றது. இதனருகில் ஆறு வேலாயுதங்கள் அமைந்த மண்டபமும் அதனையடுத்து மயில் வாகனமும் உள்ளன. இவற்றையடுத்து விநாயக மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தையடுத்து முனிவர் சிலர் உருவங்களும் மான் உருவமும் பொறிக்கப்பட்ட முகப்புடைய மண்டபம் உள்ளது. மேலும் 50 படிகள் கடந்தால், சண்முகர் முகப்பு அமைந்த மண்டபம் இருப்பதைக் காணலாம். மேலும் கடந்தால், பழைமையான மண்டபம் ஒன்று இருப்பதைக் காணலாம். தவமுனிவர்கள் இங்கு அருவ நிலையில் இருந்து தவம்புரிகின்றனர் என்றும் இதனைப் பிரிக்க முயன்ற தொழிலாளிகள் மயக்கமுற்றதால் இதனைப் புதுப்பிக்கும் முயற்சி கைவிடப்பட்டது என்றும் கூறுகிறார்கள்.

மூன்றாம் பகுதி மலைக்கோயிலாகும். இது முறையாகக் கட்டப்பட்ட கோயில் அன்று. பெரும்பாறைகள் இடையில் அமைந்த இடைவெளிக்குத் தேவைப்பட்ட இடங்களில் சுவர் எழுப்பி அச்சுவர்களால் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு முகப்பில் ஒரு மண்டபம் உள்ளது. இதனையொட்டிக் கொடிமரம், பலிபீடம், மயில் மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் உட்பகுதியில் அமைந்த பாறைப் பகுதியில் ஒரு மீட்டர் உயரத்தில் ஆயலோட்டும் வள்ளியின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைக் கடந்தால் எதிரில் தெரிவது அருணகிரிநாதர், வீரபத்திரர், நவவீரர்கள் ஆகியோர்களின் திருவுருவங்களாகும். இத்திருவுருவங்களை அடுத்து விநாயகர் திருவுருவமும் சிவலிங்கம், அம்பிகை ஆகியோர் திருவுருவங்களும் சண்டேசுவரர் திருவுருவமும் இருப்பதைக் காணலாம். அடுத்துச் சில படிகளின் மீது கருவறை அமைந்துள்ளது. கருவறையுள் திருமுருகன், வள்ளி, தெய்வயானை ஆகிய மூவரும் எழுந்தருளியுள்ளனர். இங்கு உருத்திராட்சப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய பாறையின் அடிப்பகுதியாக இருப்பதால், இப்பாறை மீது விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்குக் குருக்கள் நான்கு காலப்பூசை செய்துவருகிறார். இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையினரால் நியமனம் செய்யப்பெற்றுள்ள நிருவாக அலுவலரிடம் உள்ளது. குகைப்பகுதிகள் இந்தியத் தொல்பொருள் துறையினர் பாதுகாப்பிலும் வனப்பகுதிகள் வனத்துறையின் கட்டுப்பாட்டிலும் இருந்துவருகின்றன.

இங்கு அருளாளர் வாழ்ந்த இடங்கள் குறிப்பிடத்தக்கன. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழைப் பரப்பிப் புகழ் எய்திய வள்ளிமலை சுவாமிகள் சமாதி ஒரு குகையில் இருக்கிறது. இங்குக் குடியேறிய வள்ளிமலை சுவாமிகள் அக்குகையைத் தூய்மை செய்தபோது மூன்று தவசிகளின் எலும்புக்கூடுகள் கிடைத்தன. அவற்றைப் புதைத்து அவற்றின் மீது அரசு, வில்வம், வேம்பு ஆகிய மரங்கள் நடப்பட்டுள்ளன. அவை தற்போது செழித்து வளர்ந்துள்ளன.

வள்ளிமலை சுவாமி வளர்த்த சுந்தரவல்லி என்னும் பசு இறந்தபோது அதற்கு இங்குச் சமாதி கட்டினார்கள். அஃது இன்றும் காணத்தக்கதாக உள்ளது. இங்குப் பல பரண்கள், மண்டபங்கள் ஆகியவை உள்ளன.

விநாயகர் யானை வடிவில் வள்ளியை அச்சுறுத்திய பின்னர், யானை உடல் கல்லாகிவிட்டது. அது கணேசகிரி என்று தற்போது குறிப்பிடப்படுகிறது. அதன்மீது வேற்குறி காணப்படுகிறது. வள்ளியை முருகனுக்கு நம்பிராசன் தாரை வார்க்கும் காட்சியைப்போல நீர்த்தாரைச் சுவடுகள் காணப்படுகின்றன. இப்பாறை அடியில் விநாயகரின் உருவங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

தாமரைக்குளம், கருமான் ஓடை ஆகியவை போன்ற பல சுனைகள் உள்ளன. இங்குப் பல குகைகள் உள்ளன.

சமண சமயத்தினைச் சார்ந்த பல சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு

சதுர மீட்டர்ப் பரப்பில் உள்ளது. பத்மாவதி, வர்த்தமானர், பார்சுவநாதர் ஆகியோரின் பெரிய உருவங்கள் மூன்றுள்ளன.

நம்பிராசன் வாழ்ந்த மலை பர்வதராசன் குன்று எனப்படுகிறது. அதன் உச்சியில் சிவலிங்கம் காணப்படுகிறது. வள்ளி, குமரனை அடையவேண்டிச் சிவனை நோக்கி வழிபட்ட இடம் இஃது எனக் கூறுகின்றனர். இன்றும் நம்பிராசன் பரம்பரையினர் வேடர்பரி உற்சவம் நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து ஏற்படும் தடைகள் நீங்க 108 தேங்காய்கள் கணேசகிரியில் உடைக்கப்படுகின்றன. நீளமான மாலை சாத்தி வழிபட்டால் தடைபட்ட திருமணம் கூடும் என்னும் நம்பிக்கை இருந்துவருகிறது. குழந்தைகள் வேண்டுவோர் இங்குத் தொட்டில் கட்டுகின்றனர்.

வள்ளியும் முருகனும் மனித வடிவந்தாங்கி, தமிழர் கண்ட களவு வாழ்க்கையும் கற்பு வாழ்க்கையும் கண்ட இடம் இதுவாகும்.

திருப்புகழ் கந்தர் அலங்காரத்துள் போற்றப்பெற்ற இடம் இதுவாகும். கலையழகு மிக்க திருத்தேர் ஒன்றும் வாகனங்களும் உள்ளன. இவ்வூரில் தவத்திரு வாரியார் சுவாமிகள், வள்ளியம்மை தவபீடம் ஒன்று நிறுவியுள்ளார்.

## வளர்புரம் கிராமம்

# சுந்தரராசப் பெருமாள் கோயில்

இக்கோயில் இச்சிபுத்தூர் இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகில் 100 மீட்டர் நீளமும் 43 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் முன்புறத்தில் பலிபீடமும் பலிபீடத்தையடுத்துக் கருடாழ்வார் சந்நிதியும் உள்ளன. கருவறை வாயிலில் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் உள்ளன. சுந்தரராசப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் அருள் பாலிக்கிறார். இராமர், இலக்குவன், பரதன், அனுமன், விசுவசேனர், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், மதுரகவி, திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், பெரியாழ்வார் ஆகியோர் கற்சிலைத் திருவுருவங்கள் இங்கு உள்ளன. கருவறைக்கு எதிர்புறம் தாயார் சந்நிதியும் ஆண்டாள் சந்நிதியும் உள்ளன.

சுந்தரராசப்பெருமாள், சீதேவி, பூதேவி, சுந்தரவல்லித் தாயார், ஆண்டாள்,

திருமங்கையாழ்வார், சக்கரத்தாழ்வார், இராமர், இலட்சுமனர் ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

மூன்று தளங்களையுடைய இராசகோபுரம் உள்ளது. கருடாழ்வார் சந்நிதிக்கும் கருவறைக்கும் விமானங்கள் உள்ளன.

வெளிப்பிராகாரம் 89 மீட்டர் நீளமும் 29 மீட்டர் அகலமும் கொண்டவாறு உள்ளது. இக்கோயிலில் வெளிமண்டபம், உள்மண்டபம், மகாமண்டபம், கலியாண மண்டபம் ஆகிய மண்டபங்கள் உள்ளன. மடைப்பள்ளி, கோயிலின் உட்புறம் தென்கிழக்கிலும் வாகனமண்டபம் வடகிழக்கிலும் உள்ளன.

இக்கோயிலின் மையத்திலுள்ள சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு எல்லா நாடுகளையும் வென்ற விசயநகர மன்னர் வீரப்பிரதாப அச்சுத தேவமகாராயர் காலத்திற்குரியது. இது முடிக்கப்படாத கல்வெட்டு. இது சயங்கொண்ட சோழமண்டலத்தின் சந்திரகிரி குன்றவாரிட்டானக் கோட்டதது வாலைக்குளத்திலுள்ள அழகிய மணவாளப் பெருமாள் கோயிலில் பூசகர் சிலருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளைப் பதிவு செய்கிறது.

வைகானச ஆகமமுறையில் இருகாலப்பூசை பட்டாச்சாரியரால் செய்யப்படுகிறது. தை மாதத்தில் காணும் பொங்கல், வைகாசியில் கருடசேவை, ஆவணியில் கோகுலாட்டமி, புரட்டாசியில் நவராத்திரி, கார்த்திகையில் தீபம் முதலிய திருவிழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

இக்கோயிலின் நிருவாகம் வேலூர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலுக்கு 4.08 ஏக்கர் நன்செய் நிலமும் 25.39 ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன. வீடு ஒன்றும் இக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ளது. கோயிலின் ஆண்டு வருமானம் 2,200 உருபாயாகும்.

மரத்தினால் செய்யப்பட்ட கருட வாகனமும் குதிரை வாகனமும் உள்ளன.

---

27/1911).

## வளர்புரம்

# திருநாகேசுவரர் கோயில்

அரக்கோணம் - திருத்தணிகை முதன்மைச் சாலையில் தணிகைப்போளூரிலிருந்து வடகிழக்கில் 6 கிலோமீட்டர்த் தொலைவில் இச்சிபுத்தூர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து வளைகுளம் என்னும் வளர்புரம் கிராமத்தில் தென்வடலாக 25 மீட்டர் அளவும் கீழ்மேலாக 35 மீட்டர் அளவும் கொண்டு கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது.

கோயிலின் நுழைவாயில் உட்புறத்தில் நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன. தெற்கே நவக்கிரகம், நால்வர், மேற்கே விநாயகர், விசுவநாதர், விசாலாட்சி, ஆறுமுகசுவாமி வள்ளி தெய்வயானை, சுப்பிரமணியர், வடக்கில் சண்டேசுவரர், மகாலட்சுமி, ஈசானியத்தில் (வடகிழக்கில்) காலவயிரவர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. மகாமண்டபத்தில் சூரியன், சந்திரன், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. கோட்டங்களில் விநாயகர், திருமால், தட்சிணாமூர்த்தி, பிரமதேவர், துர்க்கை, எதிரில் சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

கோயிலின் வடகிழக்குப்பகுதியில் சுவாமிக்கு இடப்புறம் தெற்கு நோக்கி அம்பாள் சந்நிதி உள்ளது. சுவாமி சுயம்புமூர்த்தி, இலிங்க வடிவத்தில் ஆவுடையார் சதுரமாக ஒரு மீட்டர் உயரத்தில் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியிருக்கிறார். அம்பாள் தெற்குநோக்கி 1 1/2 மீட்டர் உயரத்தில் இருக்கிறார். கோயிலின் முன்புறம் சித்தி விநாயகருக்குத் தனிச்சந்நிதியும் மூலத்தானச் சுற்றுப்பிராகாரத்தில் யோக தட்சிணாமூர்த்தி சின்முத்திரையுடன் தனி மண்டபத்துடனும் மேற்கில் ஆறுமுக சுவாமி மயில் வாகனத்தின் மீதும் வீற்றிருக்கிறார்கள்.

கோயிலின் மேற்கே திருக்குளம் ஓர் ஏக்கர்ப் பரப்பில் படிகளுடன் உள்ளது. ஆனால், இது தற்போது ஊராட்சி மன்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. வெளியில் பிராகாரத்தின் கிழக்கே தீர்த்தக்கிணறு உள்ளது.

வாயிற்படியில் ரிஷிகோபுரம் மூன்று அடுக்குகளுடனும் மூன்று கலசங்களுடனும் உள்ளது. இது சுவாமிக்குத் தென்புறம் வாயிற்படியில் உள்ளது. இதன் பரப்பு தென்வடலாக 2 மீட்டர் கீழ்மேலாக 3 மீட்டர். உயரம் ஏறத்தாழ 5 மீட்டராகும்.

வெளிப் பிராகாரத்திலுள்ள விநாயகர் தனிச் சந்நிதி விமானம் மூன்று மீட்டர்

உயரத்திலும் உட்பிராகாரத்தில் விநாயகர் விமானம் இரண்டு மீட்டர் உயரத்திலும் சுப்பிரமணியர் விமானம் 2 மீட்டர் உயரத்திலும், அம்மன் விமானம் 3 மீட்டர் உயரத்திலும் சுவாமி விமானம் 3 மீட்டர் உயரத்திலும் உள்ளன.

வெளிப்பிராகாரம் ஒவ்வொரு பக்கமும் 54 மீட்டர் அளவும் நான்கு பக்கமும் சம அளவாக 13 மீட்டரும் கொண்டுள்ளது. சுவர்கள் ஆங்காங்குச் சில இடங்களில் சேதமடைந்துள்ளது. உட்பிராகாரம் தென்வடலாக 24 1/2 மீட்டர் அளவும் கீழ்மேலாக 36 மீட்டர் அளவும் கொண்டுள்ளது.

மகாமண்டபம் 8 மீட்டர் நீளத்திலும் 6 மீட்டர் அகலத்திலும் உள்மண்டபம் 3 1/2 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்டுள்ளன. கருவறை 2 1/2 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்டு அமைந்துள்ளது.

தூண்களில் அனுமார், சிவலிங்கம், யானை, முனிவர்கள், யாளி, அடியார்கள், வாலி, சுக்கிரீவன், நாகம், சூரியன், சந்திரன், நந்தி, வயிரவர், விநாயகர் முதலியோர் சிற்பங்கள் உள்ளன.

தொண்டீசுவரர் கோயிலின் மையத்தில் வாயிலுக்கு வடபுறத்திலுள்ள மண்டபத்தின் கிழக்குச்சுவரில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முடிவு பெறாமல் உள்ளது. இது பாண்டிய மன்னன் சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் சுந்தர பாண்டியதேவன் 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும். இது, செயங்கொண்ட சோழமண்டலத்தின் பிரிவாகிய மேலூர்க் கோட்டத்தின் உட்பிரிவாகிய மேலூர் நாட்டின் பட்டார சுரவல்லி சங்காம ராம சதுர்வேதி மங்கலம் என்கிற வாளைக் குளத்திலுள்ள நாகேசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு நிலம் அளிக்கப்பட்டதைப் பதிவு செய்கிறது.* (இப்பாண்டிய மன்னன் யார் என்பது தெரியவில்லை).

காமிக ஆகம முறையில் இரண்டு காலப் பூசைகள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் பிரமோற்சவம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம், திருவாதிரை ஆகிய சிறப்பு நாள்கள் யாவும் உபயதாரர்கள் மூலம் நடத்தப்படுகின்றன. பஞ்ச பருவங்கள், வெள்ளிக்கிழமை, மாதக் கிருத்திகை, திருநட்சத்திரங்கள் சிவராத்திரி ஆகிய திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு 14.86 ஏக்கர் நன்செய் நிலமும் 18.24 ஏக்கர்ப் புன்செய் நிலமும் உள்ளன.

இக்கோயில் வேலூர் அற நிலையத்துறை உதவி ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

---

(* 26/1911).

## வாசுதேவம்பட்டு
# ஆட்கொண்டீசுவரர் கோயில்

இக்கோயில் செங்கம் நகரிலிருந்து 21 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வாசுதேவம்பட்டுக் கிராமத்தில் 46 மீட்டர் நீளமும் 37 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

முல்லை நில ஊராதலின் பட்டி என்னும் ஒட்டுப்பெயரை உடையது. வாசுதேவன் என்னும் பெயரால் அமைந்த பட்டி ஆனதால் வாசுதேவன் பட்டு என அழைக்கப்படுகிறது.

ஆட்கொண்டீசுவரர் மூலக் கடவுளாவார். இவர் கிழக்கு நோக்கியவாறு அமர்ந்துள்ளார். சந்நிதியின் எதிரில் 2மீட்டர் உயரத்தில் துவாரபாலகர் சிலை உள்ளது. எட்டு நாயன்மார்கள் திருவுருவங்களும் நவக்கிரகங்கள் சந்நிதியும் சித்ரர், புத்திரர் ஆகியோர் கல் சிலைகளும் உள்ளன.

இக்கோயிலில் பிள்ளையார், முருகர், வள்ளி, தெய்வயானை, சௌந்தர்ய நாயகி ஆகியோர்களின் சந்நிதிகள் உள்ளன.

மூலவர் சந்நிதிக்கு 9மீட்டர் உயரமுள்ள விமானம் உள்ளது. இக்கோயிலின் தலவிருட்சம் வில்வமரமாகும். இது செழிப்பாக வளர்ந்துள்ளது.

ஒருகாலப்பூசை நடைபெற்றுவருகிறது. பொங்கல், திருவூடல், ஐப்பசி அன்னாபிடேகம், பங்குனி உத்திரம் ஆகியவை நடைபெறுகின்றன.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் பார்வையின் கீழ் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4, 100 உருபாயாகும்.

## வாசுதேவம்பட்டு

# வீரநாராயணப் பெருமாள் கோயில்

இக்கோயில், செங்கம் நகரிலிருந்து 21 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வாசுதேவம்பட்டு என்னும் கிராமத்தில் செய்யாற்றங்கரையில் அமைந்துள்ளது. இது 45மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் இருக்கின்றது

வாசுதேவமகாராசன் என்பவர் அரசாட்சி செய்து வந்த காலத்கில, பெருமான் தோன்றி அருள்புரிந்ததால், இக்கோயில் அவர் நினைவாக அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

கோயிலின் நுழைவாயிலில் பலிபீடம் காணப்படுகிறது. வீரநாராயணப்பெருமாள் சந்நிதியை நோக்கிக் கருடாழ்வார் சந்நிதியுள்ளது. கருவறையில் துவாரபாலகர்கள் உள்ளனர். வீரநாராயணப் பெருமாள் சீதேவி, பூதேவி ஆகியோருடன் அருள்பாலிக்கிறார். சீனிவாசப் பெருமாள் சந்நிதியும் கனக வல்லித் தாயார் சந்நிதியும் ஆண்டாள் சந்நிதியும் ஆஞ்சநேயர் சந்நிதியும் இக்கோயிலில் உள்ளன.

இக்கோயிலில் பண்டைக்காலத்துப் பெருமையுடன் விளங்கும் தீர்த்தக்கிணறு ஒன்று உள்ளது.

இக்கோயிலுக்கு 10 மீட்டர் உயரமுள்ள கோபுரம் உள்ளது.

பெருமாள், இராதா உருக்குமணி, கனக வல்லித்தாயார், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உலாத் திருமேனிகள் உள்ளன.

ஒரு காலப்பூசை நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் ஆவணி அவிட்டம், உறியடித் திருவிழா, வைகுண்ட ஏகாதசி, பொங்கல் திருவிழா ஆகியவை நடைபெறுகின்றன.

இக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் பார்வையில் உள்ளது.

## வாணியம்பாடி நகர்

# அதிதீசுவரர் கோயில்

இக்கோயில் திருப்பத்தூரிலிருந்து 22கிலோமீட்டர் தொலைவிலும் வாணியம்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர்த் தொலைவிலும் 5 செண்ட் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தின் எல்லையிலுள்ள கன்னடநாட்டில் மிளகு விளைவுக்கு மிகுதியான வாய்ப்பு இருந்தது. இதனை யவனம் (கிரேக்கம்) முதலான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வணிகர்கள் கூட்டம் மிகுதியாக வாழ்ந்துவந்தார்கள். இதனை விரிஞ்சிபுரம், குடியாத்தம் முதலிய தலபுராணங்கள் வாயிலாகவும் அறியலாம். அவ்வகையில் வணிகர் சேர்ந்து வாழும் முல்லைநில ஊர், வணிகன் பாடி எனப் பெயர்பெற்றது. அது நாளடைவில் வாணியம்பாடி என மருவி வழங்கிவருகிறது. இவ்வூர், கல்வெட்டுகளில் பெரும்பாணப்பாடி வணிகன்பாடி எனக் குறிப்பிடப்படுகிறது.

கோயிலின் நுழைவாயில் இடப்பக்கம் விநாயகர் சந்நிதியும் வலப்புறம் சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்து நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன. வெளித் தாழ்வாரத்தில் பிரமநாயகி அம்மன் சந்நிதி உள்ளது. பிராகாரத்தில் முதலில் காட்சியளிப்பது துர்க்கை சந்நிதியாகும். அதிதீசுவரர் கருவறையில் உள்ளார். வாயிலில் துவார பாலகர் திருவுருவங்கள் 2 மீட்டர் உயர அளவில் உள்ளன. இங்குச் சண்டேசுவரர், ஐயப்பசுவாமி ஆகியோர் சந்நிதிகளும் கருமாரியம்மன், சப்தமாதர், காலவயிரவர், நால்வர் ஆகியோர் சந்நிதிகளும் உள்ளன. நவக்கிரகங்கள் சந்நிதி தனியாக உள்ளது.

விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சோமாசுகந்தர், தனிஅம்மன், பாலசுப்பிரமணியர், சந்திரசேகரர், அம்மன், சண்டேசுவரர், அத்திரதேவர், உமாமகேசுவரர் (அம்மனுடன்), நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகியோர் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வ மரமாகும்.

இக்கோயிலின் இராசகோபுரமும் பின்வாயில் கோபுரமும் மிகவும் அழகிய தோற்றமுடையவை.

இக்கோயிலில் உள்மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகியவை

உள்ளன.

வாணி ஈசுவரனைப் பாடியதால் ஈசுவரன் அதிதியாக (விருந்தினராக) வந்து விருந்துகண்ட தலமாக வாணியம்பாடியைப் புராணம் கூறுகிறது. வாணியம்பாடிக்குச் சாசனப்பெயர் நரசிம்ம சதுர்வேதி மங்கலம் என்பதாகும். இக்கோயிலின் நுழைவாயிலில் நுழைந்தால் நரசிம்மர் தூண்கள் தாங்கும் முகமண்டபம் இரண்டாம் நரசிம்ம வர்மனை நினைவு கூர்கிறது. இங்குத் தட்சிணாமூர்த்தியும் காட்சி அளிக்கிறார்.

ஒற்றைத் தூபி கொண்ட விமானம் கருங்கல்லால் ஆனது. நரசிம்மர், தட்சிணாமூர்த்தி, கஜானனர் விமான தேவதைகளாக விளங்க மாமன்னன் ஒருவன் தன் பட்டத்தரசியுடன் இடையில் பல்லவர் கால உடையுடன் இடம்பெற்றிருப்பது சிறப்பாகும்.

"சம்புகளூர் நாட்டு, மதுராந்தக சதுர்வேதி மங்கல பெரும்பாணப்பாடி என்ற வணிகன்பாடி சபையர்" என்பது முதலாம் குலோத்துங்கன் ( கி. பி. 1075-1120), மூன்றாம் இராசராசன் (கி. பி. 1216-1246) சாசனங்களின் வாக்கியம். பெரும்பாணப்பாடி என்னும் பெயரே வாணியம்பாடி என்பதாகத் திரிபு எய்திற்று என்பது ஆராய்ச்சியாளர் கொண்ட முடிவு.

பல்லவர்களின் காலத்தவர்களான பாணர்கள் வடக்கே கோலாரிலிருந்து தெற்கே பாலாற்றங்கரை வரை பாணாவரம், பொதத்தூர், திருவல்லம் போன்ற ஊர்களை நிறுவி ஆண்டனர். இந்த வாணியம்பாடியான வாணகப்பாடியும் பாணர் நிறுவியதேயாகும். பல்லவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பாணர் குலம் சோழராட்சியில் முடிவடையவில்லை. முதல் பராந்தகன் மகன் அரிஞ்சய சோழன் (கி. பி. 956-957) தன்மகள் அரிஞ்சனைப் பிராட்டியைப் பாணனுக்கு மணம் முடித்து வைத்தான்.

பார்த்திபவேந்திர வர்மன் காலத்துக் (கி. பி. 970) கல்வெட்டு உள்ளது. போசர் அரசன் "சார்வபௌம" என்ற விருதுடன் வாணியம்பாடி மகாதேவனுக்கு சர்வமான்ய நிலம் ஆராதனைக்காக அளித்தது கிழக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.

இக்கோயிலில் காமிக ஆகம முறையில் இரு காலப் பூசை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. 7-ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். பிரமோற்சவம் கடந்த 73 ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. மார்கழி 30 நாள்களும் சிறப்புப் பூசைகள் நிகழ்த்தப்பெறுகின்றன.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பட்ட அறங்காவலரால் நிருவகிக்கப்படுகிறது. திருப்பணி செய்து கும்பாபிடேகம் செய்யப்பட வேண்டிய கோயிலாக இஃது உள்ளது.

இக்கோயிலுக்குத் து:ப்பேரி கிராமத்தில் நில அளவை 249/2 எண் புலத்தில் 0.94 செண்ட் நன்செய் நிலமும் தேவத்தானக் கிராமத்தில் நிலஅளவை 251/ அ, 266 எண் புலத்தில் 0.30 செண்ட் நன்செய் நிலமும் வாணியம்பாடி நகர் அம்பூர்பேட் அரசமாவீதி நகர் 580 எண் நிலத்தில் 2,867 சதுர அடி காலி மனையும் அப்துல்சலாம் சாயபுவீதி 329 எண்புலத்தில் 5 செண்ட்டில் தட்டோடிடப்பட்ட வீடும் உள்ளன. கோயில் தேவத்தானம் கிராமநத்தம் 7.04 எண் நிலத்தில் 1 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் கோயில் அமைநதுள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 6,100/- உருபாயாகும். இக்கோயிலுக்கு தஸ்தித் தொகையாக 142.62 உருபாயும் அரசினர் அளித்து வருகின்றனர். சொற்பமான உண்டியல் மற்றும் திருமணக் கட்டண வருமானத்தினைக் கொண்டு நிருவாகம் நடத்தப்படுகிறது.

## வாணியம்பாடி நகர்

# அழகுப்பெருமாள் கோயில்

இக்கோயில் வாணியம்பாடி நகரில், வாணியம்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர்த் தொலைவில் வாணியம்பாடி பெரியபேட்டையில் பாலாற்றங்கரையில் மேற்கு நோக்கியவாறு 1/2 ஏக்கர்ப் பரப்பில் அமைந்துள்ளது.

அழகுப்பெருமாள் கோயிலில் தலவிருட்சமாக வில்வமரம் இருந்துவருகின்றது.

இக்கோயிலின் மேற்குப்புற நுழைவாயிலின் வலப்புறம் ஆஞ்சநேயர் சந்நிதியும் இடப்புறத்தில் இலட்சுமி நாராயணர் என்கிற பரமபதநாராயணன் சந்நிதியும் இருக்கின்றன. கருவறையின் முன்புறம் 2 மீட்டர் உயரம் கொண்ட துவாரபாலகர் இருவர் உள்ளனர். கருவறையில் அழகுப்பெருமாள் மிகவும் உன்னதமான நிலையில் 2 1/4 மீட்டர் உயர அளவில் காட்சி அளிக்கிறார். அழகுப்பெருமாள் சந்நிதிக்கு வலப்புறம் தாயார் சௌந்தர நாயகி கிழக்கு நோக்கியவாறு தனிச் சந்நிதியில் அருள் பாலிக்கிறார். தாயார் சந்நிதிக்குப் பின்புறம் நாககன்னிகளின் திருவுருவங்கள் உள்ளன. அழகுப்பெருமாள் என்னும் சௌந்தரராசர், சௌந்தர வல்லித்தாயார், இலட்சுமி நரசிம்ம மூர்த்தி ஆகியோர் உற்சவத்திருமேனிகள் 1/2 மீட்டர் உயரம் கொண்டமைந்துள்ளன. சிறிய அளவிலுள்ள சௌந்தர வரதராசப்பெருமாள் சீதேவி, பூதேவி ஆகிய உற்சவமூர்த்திகளும் உள்ளனர்.

ஆஞ்சநேயர் சந்நிதிக்கு எதிரில் தீர்த்தக்கிணறு உள்ளது. பூசைக்கு இத்தீர்த்த நீர் பயன்படுத்தப்படுகிறது.

இக்கோயிலின் இராசகோபுரம் முதல் நிலையிலேயே நின்றுவிட்டது. இக்கோயிலுக்கு வெளிப் பிராகாரமும் உட்பிராகாரமும் உள்ளன.

இக்கோயிலில் முன்மண்டபமும் அலங்கார மண்டபமும் உள்ளன. அலங்கார மண்டபத்தில் உன்னதமான தசாவதாரச் சிற்பங்கள் தெளிவாக உள்ளன. கல்தூண்களில் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்கள் அக்காலக் கலையின் உயர்நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

இது விசய நகர சதாசிவராயர் காலத்தில் திருத்தியமைக்கப்பட்டமைக்குக் கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயிலுக்குத் திருமாஞ்சோலை என்னும் நந்தவனம் தானமாக விடப்பட்டதற்கு ஒரு கல்வெட்டும் நாராயணபுரம் என்னும் கிராமத்தையே இக்கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டதைக் கூறும் ஒரு கல்வெட்டும் வடக்குப்பட்டுக் கிராமம் தானமாக அளிக்கப்பட்டதற்கு ஒரு கல்வெட்டும் உள்ளன. தற்போது இக்கோயிலுக்கு இந்நிலங்கள் சொந்தமாக இல்லை. ஆனால், அரசு இதற்காக தஸ்தித் தொகையாக ஆண்டொன்றுக்கு 336 உருபாய் அளித்து வருகிறது.

வைகானச ஆகமமுறையில் நாள்தோறும் இருகாலப்பூசைகள் நடைபெற்று வருகின்றன. வைகுண்ட ஏகாதசியில் இராப்பத்து உற்சவமும் துவாதசி அன்று கருட உற்சவமும் மிகச் சிறப்பாக நடத்தப்படுகின்றன. நவராத்திரி உற்சவமும் விசயதசமியன்று சுவாமி புறப்பாடும் நிகழ்த்தப்பெறும். கார்த்திகை தீபம், சித்திரை மாதப்பிறப்பு ஆகிய நாள்களிலும் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கோயிலை ஒட்டினாற்போல் 1.80 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இதில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. அவை பலன் தரும் நிலையில் உள்ளன. நைவேத்தியத்திற்காக ஈச்சங்கால் என்னும் இடத்தில் 1. 10 ஏக்கர் நன்செய் நிலம் அளிக்கப்பட்டுள்ளது. திருமதி சகதாம்பாள் என்பவர் கொத்தக்கொட்டில் என்னும் கிராமத்தில் 1. 46 ஏக்கர் புன்செய் நிலத்தைத் தானமாக எழுதி வைத்துள்ளார்.

இக்கோயிலுக்குக் கருடவாகனமும் சப்பரமும் உள்ளன.

இக்கோயில் நிருவாகம் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலரிடம் இருந்து வருகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 800/- உருபாயாகும்.

## வாணியம்பாடி நகர்

# பொன்னியம்மன் கோயில்

வாணியம்பாடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சற்று வடக்குத் திசையில் ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் நகரத்தின் நடுமையத்தில் ஐந்து செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது.

இவ்வூர்ப் பாலாற்றங்கரையின் கீழ்த்திசையில் பொன்னித்தாய் எழுந்தருளியுள்ளாள்.

பொன்னியம்மன் கிழக்குத் திசையை நோக்கியவாறு அருள்புரிகிறார். வெளிமண்டபத்தின் முன்புறம் மாரியம்மன் சந்நிதி தனியாக உள்ளது.

கருவறை உள்மண்டபமும் இராசகோபுரத்தின் முன் வெளி மண்டபமும் உள்ளன.

நாள்தோறும் ஒருகாலப்பூசையும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகளும் நிகழ்த்தப்பெறுகின்றன. ஆடி மாதத்தில் திருவிழா சிறப்பாக நடைபெறும். இக்கோயிலின் கரகம் கோவிந்தபுரம் கொல்லத் தெருக் கரகக் கோயிலில் வைக்கப்பட்டுப்பூசை செய்யப்படுகிறது. அங்கிருந்து பெருமாள் பேட்டைத் தோட்டத்தில் உள்ள எட்டி மரத்தினிடம் வந்து சேர்ந்தபின் அக்கரகத்தை அங்கிருந்து அழைத்துவருவார்கள். 15–ஆம் நாள் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடையில் இப்பெருவிழா நடத்தப்பட்டுவருகிறது. வாணியம்பாடி நகரில் மிகப் பெரிய திருவிழாவாக இது கருதப்படுகின்றது.

குள்ளகந்த ஏகாம்பர செட்டியார் சத்திரத்திலிருந்து மண்டகப்படித் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 4,128/– உருபாயாகும்.

பொன்னியம்மன் சுதைச் சிற்பம் சுவரில் உள்ளது. இதற்குக் கவசங்கள் அணிவிக்கப்பட்டு அழகாக அலங்காரம் செய்யப்படுகிறது.

இக்கோயிலில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமிக்கப்பெறும் அறங்காவலரிருவரால் நிருவகிக்கப்படுகிறது.

## வாலாசாப்பேட்டை

# ஏகாம்பரநாதர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்திற்கு மேற்கே 25 கிலோமீட்டர்த் தொலைவில் உள்ள வாலாசாப்பேட்டை நகரில் 40 செண்ட் நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலுடன் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் நினைவாக இக்கோயில் தோன்றியுள்ளது.

தெற்கு நோக்கிய வாயிலின் வழியாகக் கோயிலினுள் சென்றால் வட மேற்குப் பிராகாரத்தில் முதலில் ஆஞ்சநேயர்சந்நிதியும் அதனையடுத்து விநாயகர் சந்நிதியும் அடுத்து ஐயப்பன் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறு அமைந்திருப்பதைக் காணலாம். வடக்குப் பிராகாரத்தில் அறுபத்து மூவர் திருவுருவங்கள் தெற்கு நோக்கியவாறுள்ளன. வடகிழக்குக் கோடியில் சனீசுவரர் சந்நிதி மேற்கு நோக்கியவாறு உள்ளது. தென்மேற்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதியும் அதனையடுத்துச் சூரியன் சந்நிதியும் உள்ளன.

கிழக்குப் பிராகாரத்தில் பலிபீடம் கொடிமரம் ஆகியவற்றை அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. கருவறையின் தென்கிழக்குக்கோடியில் சூரியன் திருவுருவமும் சுவாமி சந்நிதிக்கு எதிரில் நந்திதேவர் திருவுருவமும் கருவறை வாயிலுக்குத் தென்புறம் விநாயகர் திருவுருவமும் வடபுறம் நாகர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் ஏகாம்பரநாதர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். இங்கு வடக்கில் சுப்பிரமணியர் சந்நிதியும் அடுத்துக் காமாட்சியம்மன் சந்நிதியும் தெற்கு நோக்கியுள்ளன. தென்கிழக்கில் நவக்கிரகங்கள் சந்நிதி இருக்கின்றது.

மார்பில் புலிப்பல், பன்றிக்கொம்பு ஆமையோடு ஆகியவற்றைக் கொண்ட சோமாசுகந்தர், தனியம்மன், சந்திரசேகரர்உருவம் உள்ள சூலம், சுப்பிரமணியர், கணபதி, வள்ளி, தெய்வயானை, சண்டேசுவர நாயனார், நடராசர், சிவகாமி, நால்வர் ஆகியோர் உலாத் திருமேனிகள் உள்ளன. பூசையற்ற நிலையில் பள்ளியறைச் சிவன், அம்பிகை, சோமாசுகந்தர், அம்மன், சந்திரசேகரர்ஆகியோர் சிலைகள் உள்ளன.

நந்தி சந்நிதி மீது ஒரு சிறுவிமானமும் சுவாமி கருவறை மீது மூன்று நிலைகள் கொண்ட சதுரவிமானமும் அம்பிகை சந்நிதி மீது இரண்டு நிலைகள் கொண்ட

விமானமும் உள்ளன. முகப்பில் தீப்பிழம்பு போன்ற வடிவமும் அதன் பெருவட்டத்துள் சிவன் குடும்பச் கதைச் சிற்பமும் உள்ளன. இருபுறமும் இரு யானை வடிவங்கள் உள்ளன.

குருக்கள் மரபினரால் இக்கோயிலின் இருகாலப் பூசை நடைபெறுகின்றது. அறங்காவலர் நிருவாகத்தைக் கவனித்துவருகிறார். பிரதோடம், கிருத்திகை, பௌர்ணமி, மார்கழி 30, திருவாதிரை, பொங்கல், கந்தர்சஷ்டி, நவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகளும் உலாக்களும் நடத்தப்பெறுகின்றன.

இக்கோயிலில் பழைமையான இரண்டு ஓவியங்கள் உள்ளன. ஒன்று பஞ்ச மூர்த்திகளுடன் மதுரையில் சிவபெருமான் புரிந்த 64 திருவிளையாடல்களைக் குறிப்பது. அடுத்தது பஞ்சமூர்த்திகளையும் திக்குப்பாலர்களையும் அறுபத்துமூவர் வரலாற்றின் முக்கியமான காட்சிகளையும் குறிப்பது. இவற்றின் மதிப்பை உணராததால், இவை தக்க முறையில் பாதுகாக்கப்படாத நிலையில் உள்ளன.

பெருவாரியான மக்கள் இங்கு வந்து வழிபடுகின்றனர். பலரது நன்கொடைகளால் மண்டபங்களும் பாடல் கல்வெட்டுகளும் எழுந்துள்ளன. பொதுமக்கள் சார்பில் நிருவாகம் நடைபெறுகிறது.

## வாலாசாப்பேட்டை

# சீனிவாசப் பெருமாள் கோயில்

இக்கோயில் வாலாசாப்பேட்டை ஏகாம்பரநாதர் கோயிலுக்கு வடகிழக்கில் ஓர் ஏக்கர் நிலப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இருக்கிறது.

கிழக்கு நோக்கியவாறுள்ள கோயிலின் உள்ளே சென்றால் முதலில் காணப்படுவன பலிபீடம், கொடிமரம் ஆகியவை. அடுத்துக் கருடாழ்வார் சந்நிதி மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. மேற்குப் பிராகாரத்தின் தென்கோடியில் ஐயப்பன், விநாயகர், மீனாட்சி, சுந்தரேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியவாறுள்ளன. வடக்குப் பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. கருவறையின் தென்மேற்குக் கோடியில் அலர்மேல் மங்கைத் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. வாயிலில் கல் பாவை விளக்குகள் உள்ளன. அடுத்துக் கருவறையில் சீனிவாசப் பெருமாள் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். வாயிலில் துவாரபாலகர் இருவர் திருவுருவங்கள் உள்ளன.

பெருமான் சந்நிதியை அடுத்து ஆண்டாள் சந்நிதியும் விசுவசேனர் சந்நிதியும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. அடுத்து வடக்குப் பகுதியில் அரங்கநாதர் சந்நிதியும் ஆழ்வார் சந்நிதியும் தெற்கு நோக்கியவாறுள்ளன. ஆழ்வார்கள் சந்நிதிக்கு எதிரில் மேற்புறம் அஷ்டலட்சுமிகள் சூழ மகாலட்சுமி திருவுருவமும் கிழக்கில் சக்கரத்தாழ்வார் திருவுருவமும் உள்ளன.

தென்கலை வைகானச ஆகமப்படி இரண்டு காலப்பூசை நடைபெறுகின்றது. புரட்டாசி மாதம் பிரமோற்சவம் பத்து நாள்கள் நடைபெறுகின்றது. மார்கழிமாதம் முப்பது நாள்கள் ஏகாதசி, அவதார தினங்கள், ஆழ்வாராதியர் திருநாள்கள் சிறப்பாகக்கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்குச் சிங்கம், யானை, அன்னம், யாளி, சூரியன், சந்திரன், புன்னைவிருட்சம் ஆகிய வாகனங்கள் உள்ளன. கோயிலைச் சுற்றிலும் நந்தவனம் அமைந்துள்ளது. மிக மிகத் தூய்மையாகக் கோயில் பராமரிக்கப்படுகின்றது.

தனியாருக்குச் சொந்தமாக இக்கோயிலுள்ளது. முறையான வைணவ விழாக்கள் யாவும் நடைபெறுகின்றன.

## வாலாசாப்பேட்டை

# சுந்தர விநாயகர் கோயில்

வாலாசாப்பேட்டைப் பேருந்துநிலையத்திற்கு அருகிலுள்ள கோனேரி செட்டித் தெருவின் தொடக்கத்தில் கிழக்கு நோக்கியவாறு 40 செண்ட் நிலப்பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

இவ்விநாயகர்கோயில், மீனாட்சி சுந்தரர் கோயிலுடன் இணைந்துள்ளதால் இவர் சுந்தர விநாயகர் என்னும் பெயரில் வழிபடப் பெறுகிறார்.

கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்ல வேண்டும். உள்ளே தென் மேற்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதி வடக்கு நோக்கியவாறு உள்ளது. அடுத்து இதனுடன் இணைந்து சனீசுவரர் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. மேற்குப் பிராகாரத்தில் விசுவநாதர், விசாலாட்சி, உற்சவர்கள், சித்தி, புத்தி விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் முருகர், ஆஞ்சநேயர், சந்திரசேகரர் ஆகியோர் உள்ளனர். வள்ளி தெய்வயானையுடன் முருகர் தனிச்சந்நிதியும் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆகியோர் சந்நிதிகளும் கிழக்கு நோக்கியுள்ளன. வடக்கில் மீனாட்சி சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. வடகிழக்குக் கோடியில் வீரவாகுதேவர் திருவுருவமும்

சண்டேசுவரர் திருவுருவமும் சண்முகர் திருவுருவமும் தெற்கு நோக்கிய சந்நிதியில் உள்ளன. கருவறையில் கிழக்கு நோக்கியவாறு அருள்புரியும் விநாயகர் வெள்ளிக்கவசம் சாத்தப்பட்டுள்ளார்.

நுழைவாயில் மீது ஐந்து நிலைகள் கொண்ட கோபுரம் உள்ளது. கருவறை மீது இரண்டு நிலைகள் கொண்ட விமானம் உள்ளது.

சண்முகர் சந்நிதியில் கோடி முறை முருகா என்று எழுதப்பெற்ற காகிதங்கள் கோயில் வடிவில் செய்து வைக்கப்பெற்றுள்ளன.

குருக்கள் ஒருவர் இரண்டு காலப் பூசை செய்துவருகிறார். கிருத்திகைகள், கந்தர்சஷ்டி, விநாயகர் சதுர்த்தி, திருவாதிரை, ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

வைசிய வணிகர்களின் இனத்துக்குரிய கோயிலாக இது விளங்குகிறது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலரால் நிருவாகம் இயங்குகின்றது. இதற்கென நிலங்களும் வீடுகளும் உள்ளன. திருமண மண்டபம் ஒன்றும் உள்ளது.

## வாலாசாப்பேட்டை

# வசவேசுவரர் கோயில்

வாலாசாப்பேட்டை சுவர்ணசெட்டிப் பேட்டையில் மேற்கு நோக்கியவாறு வசவேசர் கோயில் அமைந்துள்ளது. வசவராசப்பேட்டை என்பதே வசராசப்பேட்டையாகி ஆங்கிலேயர் ஆட்சியில் வாலாசாப்பேட்டையாகி விட்டதென்பர்.

வசவேச மன்னர் நந்திதேவரின் அவதாரம் என்பர். இவர் இலிங்காயத்தார்களின் ஒரு பிரிவாகிய வசவேச சமயத்தைக் கற்பித்தவர். துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்ற பிரபுலிங்க லீலை இவரைக் குறிப்பிடுகிறது. இலிங்காயத்தார்களின் சிறப்பு வழிபாட்டுத் தலமாக இது விளங்கி வந்துள்ளது. இப்போதும் இருநூற்றுக்கு மேற்பட்ட இலிங்காயத் குடும்பத்தினர் இங்குக் கூடி வாழ்கின்றனர்.

கோயிலின் உள்ளே முகப்பில் விநாயகர், முருகன், இடபாரூடர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. மகாமண்டபத்தில் வடகிழக்கு முனையில் சிவலிங்கம், நந்தி, விநாயகர் ஆகியோர் சிலைத் திருமேனிகள் உள்ளன. தென்கிழக்கு முனையில்

உற்சவர் பார்வதி தேவியின் அவதாரமாகக் கருதப்பெறும் அக்கமாதேவி கையில் சிவலிங்கம் ஏந்தி வழிபடும் வடிவில் உள்ளார்.

கருவறை வாயிலில் இரண்டு துவாரபாலகர் உள்ளனர். கருவறையில் சிறிய (நந்தி) வசவர் உள்ளார். பின்சுவரில் வசவதேவரின் மன்னர்கோலப்படம் இடம்பெற்றுள்ளது. பித்தளைத் தகட்டாலான வசவதேவர்படம் குதிரையில் அமர்ந்துள்ள நிலையைக் காட்டுகிறது.

வசவ ஜெயந்தி, இலிங்காயத்தார்களின் புண்ணிய விழாவாகும். கர்நாடகத்திலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இங்கு வந்து கூடி வழிபடுகின்றனர். மிகப்பெரிய அளவில் விழா நடைபெறுகிறது.

## வாலாசாப்பேட்டை

# வீரபத்திரர் கோயில்

வாலாசாப்பேட்டை சௌகார் தெருவில் கிழக்கு நோக்கிய நுழைவாயிலுடன் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இலிங்காயத்தார்களின் முக்கியமான கடவுள் வீரபத்திரராவார். இவ்வூரில் அதிகமாக இலிங்காயத்தார்கள் வாழ்வதால் இக்கோயில் எழுப்பப்பெற்றுள்ளது.

தக்கனை அடக்கி அவன் வேள்வியை அழித்த வீரபத்திரருக்கு உறுதுணையாக வந்தவர் காளி; இதனை நினைவு கொள்ளும் வகையில் வீரபத்திரருக்கும் காளிக்கும் இங்குக் கோயில்கள் உள்ளன.

சந்நிதிகளில் இலிங்காயத்தார்கள் கூடி வழிபாடாற்றுகின்றனர். கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாக இக்கோயிலினுள் செல்லவேண்டும். கோயிலில் தெற்கு நோக்கியவாறுள்ள வீரபத்திரர் சந்நிதிக்கு நேரெதிரில் இடபதேவர் திருவுருவமும் வீரபத்திரர் சந்நிதியை நோக்கியுள்ள காளிதேவியின் சந்நிதிக்கு எதிரில் சிங்கத்தின் உருவமும் காணப்படுகின்றன. மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது.

## வாலாசாப்பேட்டை

# வேணுகோபாலசுவாமி கோயில்

இக்கோயில், வாலாசாப்பேட்டைப்பெருமாள் கோயில் தெருவில் வடக்குக் கோடியில் தெற்கு நோக்கியவாறு 80 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் தெலுங்கு மக்களால் கட்டப்பட்டதாகும். இதைக் குறிக்கும் வகையில் ஒரு தெலுங்குக் கல்வெட்டு உள்வாயில் நிலைப்படியின் மீது பொறிக்கப்பட்டுள்ளது.

தெற்கு வாயிலை அடுத்துக் கிழக்குப்பிராகாரத்தில் மூலவர் சந்நிதியை நோக்கியவாறு பலிபீடம், கொடிமேடை, கருடாழ்வார் சந்நிதி ஆகியவை உள்ளன. தெற்குப்பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் இராமர், சீதை, இலக்குவன், ஆஞ்சநேயர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ள சந்நிதியும் அச் சந்நிதியையடுத்து மணவாள மாமுனிவர் சந்நிதியும் உள்ளன. இவை யாவும் கிழக்கு நோக்கியவாறுள்ளன. கிழக்குப்பிராகாரத்தின் வடபகுதியில் ஆண்டாள் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. கருவறையின் உட்பிராகாரத்தில் மேற்கில் தாயார் மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. இச்சந்நிதிக்கும் சற்று வடக்கில் ஆழ்வார்கள், சூரியன், தனி வேணுகோபாலர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. கருவறை வாயிலில் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் தெற்கு நோக்கியுள்ளன. கருவறையில் வேணுகோபாலர் உருக்குமணி சத்தியபாமை ஆகியோருடன் எழுந்தருளியுள்ளார். கருவறையின் மேற்புறத்திலும் கிழக்குப் புறத்திலும் சக்கரம், இராமர் சீதை, இலக்குவன், அனுமார், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள், உடையவர், பெரியாழ்வார், தாயார், ஆண்டாள் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

இருநிலைகள் கொண்ட சதுர விமானம் உள்ளது. தென்கலை வைகானச ஆகமமுறையில் இரு காலப்பூசை செய்யப்படுகிறது. வைகாசி மாதத்தில் கருடசேவை, பங்குனி உத்திரத்தில் தாயார் திருக்கல்யாணம், ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள், ஜெயந்தி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

கருடன், அனுமன் ஆகிய இரு வாகனங்கள் உள்ளன. நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்குகின்றது.

## வாழைப்பந்தல்

# பக்தவத்சல ஈசுவரர் கோயில்

இக்கோயில் ஆரணி சாலை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 21 கிலோமீட்டர்த் தொலைவில் 10 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கிழக்குக் கோபுர வாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில் முதலில் கிழக்குப் பிராகாரத்தில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றையும் அடுத்து மேற்கு நோக்கியவாறுள்ள நந்திதேவர் சந்நிதியையும் காணலாம்.

கருவறையில் பக்தவத்சலேசுவரர் சிவலிங்கவடிவில் கிழக்கு நோக்கியவாறும் தர்மசம்வர்த்தினி அம்மன் தெற்குநோக்கியவாறும் அருள்புரிகிறார்கள். கருவறைக்கோட்டச்சுவர்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தி, விநாயகர், திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன. விநாயகர், அருணாசலேசுவரர், வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர், விசுவநாதர் ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியவாறுள்ளன. நால்வர் வடக்கு நோக்கியுள்ளனர். நவக்கிரகங்கள் சந்நிதி கிழக்கு முகமாக இருக்கின்றது.

இக்கோயிலில் தீர்த்தக்கிணறு மட்டும் உள்ளது.

முதல் வாயில் கோபுரம் மூன்று நிலைகளுடனும் ஐந்து கலசங்களுடனும் 15மீட்டர் உயரத்தில் உள்ளது. மூலவர், அம்மன், நந்திதேவர், ஆறுமுகர், சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகளுக்கு விமானங்கள் உள்ளன.

இக்கோயிலில் சபாமண்டபமும் வாகனமண்டபமும் உள.

இங்கு இருகாலப்பூசை குருக்கள் செய்துவருகிறார். சிவராத்திரி, நவராத்திரி, சஷ்டி, திருவாதிரை, மாட்டுப்பொங்கல், திருவூடல், அன்னாபிடேகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிக்கிருத்திகை, பங்குனிஉத்திரம் பிரம்மோற்சவம் ஆகிய திருநாள்கள் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்குச் சொந்தமாக 1. 59 ஏக்கர் நன்செய் நிலமும் 3. 68 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 912/உருபாயாகும்.

# விரிஞ்சிபுரம்

# கயிலாசநாதர் கோயில்

இக்கோயில் விரிஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர்த் தொலைவில் விரிஞ்சிபுரம் கிராமத்தில் 5 செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

சாவித்திரன் சூர்யவர்த்தன வாசிக்குப் பெருமாள் கயிலைக் காட்சியளித்த காரணத்தால், இறைவருக்குக் கயிலாசநாதர் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

அனைத்துச் சாத்திர விற்பன்னராய் விளங்கிய சாவித்திரன் கயிலைக் காட்சியைக் காண்பதற்காக இங்கு வந்து மாமுனிவர் ஆகமதேசிகர் அறிவுரைக்கேற்பச் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து அக்கினிக்குண்டம் வளர்த்துத் தன் உடல் தசையை அறுத்து அதை அவிர்ப்பாகமாக வேள்வியில் இட முற்பட்டபோது, வழித்துணை நாதர் இடப வாகனத்தில் காட்சியளித்தார்.

கிழக்கேயுள்ள சிறு வாயில் வழியே கோயிலினுள் செல்லுமிடத்துப் பலிபீடத்திற்கு அடுத்து நந்திதேவர் சந்நிதி மேற்கு நோக்கியவாறு கிழக்குப் பிராகாரத்தில் உள்ளதைக் காண்கிறோம். மேற்குப் பிராகாரத்தில் விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியுள்ளன.

கருவறை முன்மண்டபத்தின் தென்புறத்தில் சூரியன் திருவுருவமும் வடபுறத்தில் வயிரவர் திருவுருவமும் உள்ளன. கருவறையின் உள்வாயிலுக்கு வடபுறத்தில் விநாயகர் திருவுருவம் இருக்கின்றது. கருவறையில் கயிலாசநாதர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். வடக்குப்பகுதியில் அம்பிகை அபித குசாம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

கோபுரம் 5 நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்டுள்ளது. இதன் உயரம் 15 மீட்டராகும். கயிலாசநாதர் சந்நிதி மீது விமானம் இருக்கின்றது.

ஒரு காலப்பூசை குருக்கள் செய்துவருகிறார். நவராத்திரி, பத்துநாள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. இக்கோயிலுக்கு 4.65 ஏக்கர் நிலம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3859/- உரூபாயாகும். இதன் நிருவாகம் அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாக அலுவலரிடம் உள்ளது.

## விரிஞ்சிபுரம்

# மார்க்கபந்தீசுவரர் கோயில் என வழங்கும் வழித்துணைநாதர் கோயில்

இக்கோயில் வேலூர் - பெங்களூர் நெடுஞ்சாலையில் வேலூரிலிருந்து 14 கிலோமீட்டர்த் தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் விரிஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இக்கோயில் 1,38,700 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது.

விரிஞ்சன் எனும் சொல் பிரமதேவனைக் குறிக்கும். பிரமதேவர் இத்தலத்தின் அருச்சகருக்கு மகனாக அவதரித்துச் சுவாமியை வழிபட்டதால், விரிஞ்சிபுரம் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

மைசூர்க் குந்தளபுரியில் தனபாலன் என்னும் வணிகர் மிளகு வணிகம் செய்துவந்தார். இவர் சிவபக்தராகவும் இருந்து வந்தார். தனபாலன் ஒரு சமயம் காஞ்சிபுரத்திற்கு மிளகு வியாபாரம் செய்யும்பொருட்டு மிளகுப் பொதியை ஏற்றிக்கொண்டுவர, மாலைப் பொழுதானமையால், விரிஞ்சையம் பதியில் தங்க நேரிட்டது. காஞ்சிக்குச் செல்லும் வழியில் வேடர்கள் வழிப்பறி செய்து பொருள்களைக் கவர்ந்து செல்வதைக் கேள்வியுற்றுத் திகைத்த அவர், காஞ்சி செல்வதா? ஊர் திரும்புவதா? என்று பலவாறு சிந்தித்தார். ஊருக்குத் திரும்பினாலும் நட்டம் உண்டாகுமே என்று எண்ணி விரிஞ்சைப் பெருமான் சந்நிதியடைந்து, "பரமமே நீ எனக்கு வழித்துணையாக வந்து காப்பாய் எனில், உனக்கு யான் பத்துப்பொதிகளைக் காணிக்கையாகத் தருவேன்" என்று வேண்டி, அன்றிரவு முழுதும் அங்கே அவர் தங்கியிருக்கவே, பெருமான் அவரது கனவில் தோன்றி, "நாளை நினக்குத் தக்க வழித்துணை அமையும்; நீ யாதொரு அச்சமுமின்றி மிளகுப் பொதிகளை ஏற்றிச்செல்வாய்" என்றருளினார். இவ்வருளுரையை அவ்வணிகர் முழுதும் நம்பிக் காஞ்சியை நோக்கிச் சென்றார். அப்போது வேடுவர் குலத்தலைவர் ஒருவர் வெள்ளைக்குதிரை மீது அமர்ந்தவண்ணம் வந்து வணிகருக்கு வழித்துணையாகச் சென்றார். அவ்வாறு வந்தவர் குதிரை மீதமர்ந்து முன்னே வழிகாட்டிச் செல்லத் தனபாலர் மிளகுப் பொதிகளுடன் பின்னே தொடர்ந்து காஞ்சிக்கு அருகிலுள்ள பருத்திக் குன்றம் என்ற இடத்தை அடைந்தார். தம் அடியார்களைப் பலவாறாகச் சோதிப்பதைப் போன்று சிவபெருமான் தாம் அமர்ந்து வந்த குதிரையை வேறு வழியாகத் திருப்பிக் கொண்டு சென்று மறைந்தார்.



மார்க்கசகாயேசுவரர் கோயில், விரிஞ்சிபுரம்



தீர்த்தத்திற்குச் செல்லும் வழி, விரிஞ்சிபுரம்

இதே சமயத்தில் அங்கிருந்த வேடர்கள் இதுதான் தக்க வாய்ப்பு என்றெண்ணித் தனபாலனைப் பிடித்துப் பலவாறாகத் துன்புறுத்தி மிளகுப் பொதிகளையும் பிற பொருள்களையும் கவர்ந்து சென்றனர். தனபாலர் மனம் நொந்து விரிஞ்சைப் பதிநாதரைச் சந்தித்து முறையிட, இறைவர் முன்போல் தோன்றி மிளகுப்பொதிகளைக் கவர்ந்துசென்ற வேடர்களை மிளகுப் பொதிகளுடன் கைப்பற்றிக் கொண்டு வந்து நிறுத்தினார். அவ்வேடர்களின் நெற்றியில் திருநீற்றைக் கண்டு, தனபாலர் வியப்புற்றுப் பின்னர்ச் சற்றுச் சிந்தித்து அவர்கள் சிவனடியார்கள் என்பதைக் கண்டுகொண்டு அங்கு நடந்தவை யாவும் எம்பெருமானின் திருவிளையாடல் என உறுதி செய்துகொண்டு காஞ்சியை அடைந்தார்.

அதுவரையில் வழித்துணையாக வந்த பிரான், தனபாலரிடம் விடைபெற்றுச் சென்றார். மிளகுப் பொதிகளுக்குச் சிறந்த விலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனால், தனபாலர் விரிஞ்சைப்பெருமானார்க்குச் செலுத்தப்பட வேண்டியதைக் கவனித்துப் பார்க்காமலே காணிக்கையாகக் கொடுப்பதாகக் கருதியிருந்த பத்து மிளகுப் பொதிகளையும் சேர்த்து விற்றுவிட்டார். ஆனால் அடுத்த நாளில், விற்பனை செய்யப்பட்ட மிளகுப்பொதிகள் யாவும் பயற்றுப்பொதிகளாக மாறின. இவற்றை வாங்கிச் சென்ற வணிகர்கள் திரும்பி வந்து தனபாலரைப் பலவாறாக இகழ்ந்து பேசிக் குறைகூறினர். பெருமானுக்குரிய பொதிகளையும் தாம் விற்றதால் இவ்விடர் நேர்ந்தது என்று தமது தவற்றையுணர்ந்து முன் கொடுப்பதாகக் கூறிய பத்துப்பொதிகளுடன் தாம் செய்த தவறுக்கு மேலும் ஒரு பொதி சேர்த்துக் காணிக்கையாகத் தருவதாக இறைவனிடம் தனபாலர் வேண்ட, இறைவன் திருவருளால் பயறுகள் மீண்டும் மிளகுகளாயின. இதனை நேரில் கண்ட தனபாலரும் மற்ற வணிகர்களும் வழித்துணை நாதராகத் தோன்றிய சிவபெருமானின் பெருமையை உணர்ந்து அவரைப் போற்றி மகிழ்ந்தனர்.

தனபாலர் பதினொரு மிளகுப் பொதிகளையும் விரிஞ்சைப் பெருமானிடம் சேர்ப்பித்ததோடல்லாமல், அங்குள்ள பிரமதீர்த்தத்திற்கு அப்பால் தெற்கே விநாயகர் திருவுருவத்தை நிறுவி வழிபாடாற்றினார். இவ்விநாயகர் இன்றும் இம்முறையில் போற்றி வணங்கப் பெறுகிறார்.

முன்னொரு காலத்தில் சாவித்திரன் என்பவர் அனைத்துச் சாத்திர விற்பன்னராய் விளங்கினார். அவர் தீர்த்தயாத்திரை செய்யத் தொடங்கிக் கங்கை, காவிரி, குமரி முதலிய தீர்த்தங்களில் நீராடிப் பல தலங்களுக்கும் சென்று வழிபாடாற்றி இறுதியில் திருவிரிஞ்சைத் தலமடைந்தார். இங்குப் பாலாற்றின் வடகரையில் அப்போதிருந்த மாமுனிவர் ஆகமதேசிகர் தம் மாணவர்களுக்குக் கயிலாய மலையின் அருமை பெருமைகளைப் பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருந்தபோது சாவித்திரனும் இதனைச் செவிமடுத்துக் கயிலையைத் தரிசிக்கத் தான் பேரவாக் கொண்டிருப்பதாகக்கூறி "அது எளிதோ? அரிதோ?" என முனிவரிடம் வினவ, அதற்கு அம்முனிவர், "திருநாவுக்கரசர், கயிலையைக் காண முயன்றும் காண முடியாமல் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார்; காரைக்கால் அம்மையார் தம் தசைகளை நீக்கித் தலையால் நடந்து சென்று கயிலை

அடைந்தார். கயிலை வாசியான சுந்தரரும் எம்பெருமானார் வெள்ளையானையை அனுப்பி அழைத்த பின்னரே கயிலைக்குச் செல்ல முடிந்தது. ஆகவே எளிய மாந்தராகிய நாம் கயிலையைக் காண்பது கடினம்" என்று கூறவே, சாவித்திரன் ஒரே குறிக்கோளுடன் "யான் இப்பிறவியிலே கயிலாயம் அடைவேன்" எனப் புகன்று பாலாற்றில் நீராடிப் பெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து, வடகிழக்குப் பகுதியில் அக்கினிக்குண்டம் வளர்த்துத் தன் உடல் தசையை அறுத்து அதை அவிர்ப்பாகமாக மகா உக்கிர வேள்வியில் இட முற்பட்டபோது, வழித்துணைநாதர் இடபவாகனத்தில் காட்சி அளித்தார். அப்போது பெருமானருளால் விமானம் ஒன்று தோன்ற அதில் சாவித்திரன் ஏறி இடபவாகனம் முன் செல்லப் பின்னே சென்றான்.

சாவித்திரனுக்குப் பெருமான் காட்சியளித்த இடம், இப்போது கயிலாசநாதர் கோயிலாக விளங்குகிறது. இக்கயிலைக்காட்சி உற்சவம் கார்த்திகைக் கடைசி ஞாயிறு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது.

கரன் என்னும் சுராசுரனுக்கு அருள்பாலித்த வரலாற்றையும் தென்கயிலாயக் கிரிப்பிரதட்சிண விழாவில் கரிகாற்சோழ பூபதிக்குத் துக்கம் காட்டிய வரலாற்றையும் தலபுராணம் கூறுகிறது. இத்திருவிரிஞ்சையம்பதிக்குத் தென்கிழக்கே காததூரத்தில் தென் கயிலாயகிரி அமைந்துள்ளது. முன்பு உமாதேவியார் கயிலாயத்தில் நீராடிக் கொண்டிருந்தபோது, வானின் வழிவந்த கந்தவனொருவனின் நிழல் தற்செயலாக அம்மையாரின்பேரில் விழ, அம்மையார் சீற்றங்கொண்டு, அக்கந்தர்வன் கர்த்தப (கழுதை வடிவம்) வடிவம் கொள்ளுமாறு சாபமிட்டார். அக்கந்தர்வன் கழுதைமுகம் எய்தி வருத்தமுற்று, அம்மையார் இட்ட சாபம் நீங்க, மகாமேரு சிகரத்திலிருந்து ஒரு மலையைக் கொணர்ந்து பாலாற்றுக்குத் தெற்கே அமைத்து அதை நாள்தோறும் வழிபட்டான். அங்குக் கௌரி, பிரமதேவர், திருமால் ஆகியோரும் முனிவர்கள் பலரும் பாலாற்றில் மூழ்கி நீராடி மார்க்கபந்தீசுவரரைப் பூசித்து அம்மலையை வலம் வந்தார்கள். இதன் விளைவாகக் கர்த்தப உருவம் நீங்கிய கந்தர்வன் முந்திய உருவை அடைந்தான். இவ்வகையில் இவ்வழித்துணையம்பதி தென்கயிலாயங்கிரி போன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மற்றொரு சமயம் கரிகாற் சோழ பூபதி ஆட்சியின் இறுதிக்காலத்தில் கடும் பஞ்சம் தோன்றிற்று. இதனால் மக்கள் மடிவதைக் காணச் சகியாது, இத்தென் கயிலாயகிரியில் தன் உயிரை விடத்துணிந்து இம்மலை உச்சியிலிருந்து அவன் கீழே விழ முயற்சி செய்தான். அப்போது இருமுறை கருமேகங்கள் வந்து வந்து செல்வதைக் கண்டு திகைத்து மூன்றாம் முறை, மலை உச்சியிலிருந்து, வண்ணான் குளக்கரை அருகில் விழ அவனுக்கு எம்பெருமானார் காட்சி கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆண்டு தோறும் மார்க்கேசர் தைத்திங்கள் புனர்வசு நாள் அக்கினி அடவி படர்ந்த மலைக்கணவாயில் பல்லக்கில் சென்று, "வண்ணாங்குளம்" என்ற தடாகக் கரையினிடையே அமர்வார். அமருமுன், கரிகாற் பூபதிக்குத் துக்கம் காட்ட மௌனமாகச் சென்று தடாகக் கரைக்கு வந்ததும் பரமனுக்கும் கிரிக்கும்

கற்பூரவொளி காட்டப்படுகிறது. வழிபடவருவோரும் அருள் பெறுகிறார்கள்.

கரிகாற் சோழ பூபதிக்கு மார்க்கபந்தீசுவரர் கிரிப்பிரதட்சண விழாவின்போது அருள்புரியும் காட்சி, மாசி மாதம் அருணாசலேசுவரர் திருவண்ணாமலை பள்ளிகொண்டாப்பட்டில் வல்லாள மாமன்னர் காலமானதற்குத் திருக்கருமம் செய்து வருவதைப் போன்றுள்ளது. தென் கயிலாயகிரி முகப்பில் இடபம் இருந்துவருவதும் ஆங்குள்ள மலையாள அன்பர் இடபக்கொடி பறக்கவிட்டு அதிர்வேட்டு வெடித்துத் தென்கயிலாயகிரி பிரதட்சிண விழாவில் மார்க்கபந்துவை வணங்கி, திருவிழா கொண்டாடுவதும் சிறப்பானவையாகும்.

இக்கோயில் பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், சைவஎல்லப்ப நாவலர், அப்பய்ய தீட்சிதர் ஆகியவர்களால் பாடப்பெற்ற பெருமைக்குரியது.

அருணாசல புராணத்தில் 'அயன், அரன்பூசை புரிந்த திருவிரிஞ்சை' என்று இது சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

திருமுடி வளைத்த வரலாறும் திருக்கார்த்திகைக் கடைசி ஞாயிறு விழாவின் தனிச்சிறப்பும் தலவரலாற்றில் இடம்பெற்றுள்ளன. அருணையம்பதியில் முடிகாண்கிலாது ஈசனாரின் திருமுடியில் இருந்து விழுந்த தாழம்பூவை ஆதாரமாகக் கொண்டு ஈசனாரின் முடியைத் தாம் கண்டதாகக் கூறி அதனால் அல்லலுற்ற பிரமதேவர் வேண்ட, தெய்வ வடிவில் காட்சி கொடுத்தல் பொருந்தாது என்பதற்காக, ஈசனார், அச்சதுர்முகன், தொண்டைநாட்டில் திருவிரிஞ்சைப்பதியில் எம்பெருமானார்க்குச் சிவத்தொண்டு செய்யும் ஆதிசைவ மரபினரான குலவத்திரி மகாமுனிவர் குலத்தில் தோன்றிய சிவநாதனென்னும் சிவநேச அன்பருக்கும் நயனா நந்தினி என்னும் உத்தமிக்கும் சிவசர்மன் என்னும் மகனாய்த் தோன்றுமாறு அருள்புரிந்தார். சிவசர்மன் என்னும் பெயர் கொண்ட அப்பாலகனின் தந்தை சிவநேசர் சிறிது காலத்திலேயே சிவ பதவியடைந்தார். தாயார் திக்கற்ற மைந்தனான சிவசர்மனுக்கு உபநயனம், சிவதீட்சை செய்வித்துக் கணவனின் உரிமைமுறையில் திருக்கோயில் பூசை செய்ய உதவுமாறு தம் உறவினர்களிடம் மன்றாடி வேண்டினாள். பாலகனின் தலைப்பூசை உரிமையையும் காணி ஆட்சியையும் கைக்கொள்ள முற்பட்டவர்களை ஆதிசைவர்கள் தடுத்துநிறுத்தவில்லை. அதற்கு மாறாக உறவினர்கள் சிவதீட்சைப் பெறாச் சிறுவனான சிவசர்மனை வழிமறித்து, "உன் தந்தை இறந்தது முதல் நாங்களே ஈசனுக்குப் பூசை செய்து வருகின்றோம். ஆதலின், உன்னுடைய சொத்துகள் யாவும் எங்களுக்கே சேரவேண்டியவை. நாளை உனது பூசை முறை வருவதால் உன் பூசை உரிமைக் கடமையை நீ ஆற்றவேண்டும்; இல்லையெனில், உனக்குரிய பூசைமுறை நிலம் முதலியவற்றை அறவே எங்களுக்கு எழுதித் தருதல் வேண்டும். இது விபரம் உன் அன்னையிடம் தெரிவித்துச் செய்து முடித்திடுக" என்றனர்.

இவ்வகையில் பாலகன் வாயிலாகச் செய்தியாவும் அறிந்து தன்னந்தனியாக ஒடுங்கி நின்ற தாய், மானிடர் யாரும் உதவிபுரிய முன் வாராதது கண்டு மிக வருந்தி, கண்களில் நீர் சோர விரிஞ்சையம்பதி மகேசுவரனிடம் தன்

குறைதீர்க்குமாறு முறையிட்டு வீடு திரும்பினாள். அன்று கார்த்திகை விருச்சிகமதியின் கடைசி ஞாயிற்றுக்கு முதல் நாள் சனி இரவு ஆகும். அன்று தன் மைந்தனைப் பக்கமணைத்துப் பாயில் படுத்துறங்கியபோது, ஈசனார் அவள் கனவில் தோன்றி "ஆதவன் நாளாகிய நாளை நம் கோயில் பிரம தீர்த்தத்தில் உன் மகனை மங்கள நீராட்டுக; அதன்பின் நாம் காட்டுவோம் நன்னெறி" என உறுதி மொழி கூறி மறைந்தார்.

ஈசனாரின் கட்டளைக்கேற்பத் தாய் நயனாநந்தினி, தன் மகனை நீராட்டக் குளத்தின் அருகில் அழைத்துச் செல்ல, உறவினர் பலரும் கூடித், "தீட்சைப் பெறாப் பாலகன் இன்று கோயில் பூசை செய்வது எத்தகையது" என்று கூறிக் கோயிலின் திருவாயிற்கதவினைப் பூட்டி நிற்க, தீர்த்தக்கரையில் பரமனார் ஒரு கிழவர் வடிவில் தோன்றிப் பாலகனுடன் தீர்த்தத்தில் மூழ்கி ஒரு முகூர்த்தக் காலத்திற்குள் பாலகனுக்கு உபநயனம், பிரம்மோபதேசம் சிவதீட்சை ஆகிய யாவும் அருள்பாலித்துப் பாலகனுடன் கரையேறியதும் பிரமதீர்த்தக் கரையில் மகாலிங்கமாகக் காட்சியளித்து மறைந்தார். திருக்குளத்தில் மூழ்கிய சிறுவன் சிவபூசை செய்வதற்குரிய தீட்சை பெற்றவனாகக் கரையேறுதலைக் கண்ட யாவரும் வியப்படைந்தனர். தேவர்கள் யாவரும் பூமாரி பொழிந்தனர். பரமனார் சனிக்கிழமை தத்தம் கனவில் இட்ட கட்டளைக்கேற்பச் சுற்றுப்புற மன்னர்கள், பலரும் வியக்கும் வண்ணம், பாலகனைப் பல்லக்கில் அமர்த்தி, சகலவிருதுகளுடன் யானை மீது திருமஞ்சனக் குடத்துடனும் ஊர்வலமாக அழைத்துவந்து கோயில் முன் நிறுத்த, பூட்டப்பட்டிருந்த திருவாயிற் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற உறவினர்கள் மட்டும் ஐயுற்றுத் "தீர்த்தாபிடேகம் இவன் செய்வானோ, அதையும் கண்டுணர்வோம்" என்று சற்று ஒதுங்கி நிற்க, சிவசர்மனோ கற்றுணர்ந்து பழகியவன்போல் ஆகமவிதிமுறையில் பூசைகளைச் செய்தான். பின் அபிடேகம் செய்ய முயற்சி செய்தபோது, மகாலிங்கம் உயரமாக இருந்ததால், அவனுக்கு ஈசனார் திருமுடி எட்டவில்லை. அதுகண்டு, "எந்தையே எனக்கு எட்டவில்லையே நும்முடி" என்று உருகி நிற்க, சிவனாரும் சிறுவனின் அன்பிற்கு இரங்கி தம் திருமுடியை வளைத்து, சிறுவன் முறைப்படி செய்த பூசைகளை ஏற்றுக்கொண்டார். அதே கோலத்தில் இன்றும் முடிசாய்த்த மகாலிங்கமாக வழித்துணை நாதர் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலுக்குத் தலவிருட்சம் பனைமரமாகும். இஃது இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடபகுதியில் உள்ள அம்மன் கோயில் நுழைவுமண்டபத்திற்கு எதிரில் உள்ளது.

எம்பெருமான் கௌரிதேவியுடன் ஏகாந்தமாகயிருந்தபோது தேவி கருப்பு நிறமுடையவள் என்பது காரணமாகச் சங்கரி என்று ஈசனார் அழைக்க அதைப் பொறுத்துக்கொள்ளாத தேவி பாலிநதியின் வடகரையில் பொற்பனங்காடு அமைத்துப் பஞ்சாக்கினி நடுவில் தவங்கொண்டிருக்க, அங்கிருந்த பனைமரம் மகாலிங்கப் பெருமான் பூசைக்குப் பொற்பனம்பழம் ஈந்தது அம்மையைக்

கவர்ந்திருந்த கருநிறக்கவசம் நீங்க அம்மை மரகதக்கொடி இடையோடு பொன்மேனி கொண்ட மரகதவல்லித் தேவியாகி மார்க்கசகாயரின் இடப்பாகம் கொண்டார். இம்முறையில் இத்தலம் கௌரிபுரி என்னும் பெயர் கொண்டது. பனைமரமே தலவிருட்சமாகியது; தேவி பூசித்திருந்த பொற்பனேசுவரர் கோயில் பாலாற்றின் வடகரையில் சுவாமி தோப்பினுள் பாழடைந்துள்ள நிலையில் இன்றும் காணப்படுகிறது. இஃது ஆதிவிரிஞ்சபுரம் எனவும் குறிக்கப் பெறும்.

இக்கோயிலின் கிழக்கு இராசகோபுரம் வழியாக உள்ளே நுழைந்து இடமிருந்து வலமாக வருவோமெனில், வெளிப்பிராகாரத்தின் மேற்குப்பகுதியில் சிந்தூரகணபதி சந்நிதியையும் அதனருகில் 1008 சிவலிங்கங்கள் கொண்ட சந்நிதியையும் காணலாம். வெளிப்பிராகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் நடராசர் மூலவர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதிக்கு மேற்கில் காலவயிரவர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியைக் கடந்து உள்ளே சென்றால் வழியில் ஏரம்ப விநாயகர் சந்நிதி, தண்டபாணி சந்நிதி ஆகியவற்றைக் காணலாம்.

அடுத்துள்ள சம்புவராயர் நுழைவாயிலுக்கு அருகில் சொர்ணவிநாயகர் சந்நிதி உள்ளது. இதனையடுத்து இரண்டாம் தெற்குப் பிராகாரத்தில் உற்சவமூர்த்திகள் சந்நிதி உள்ளது. இங்குச் சோமாசுகந்தர், தனியம்மன், பிட்சாடனர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சண்டேசுவரர், நால்வர், திரிசூலம், மோகினி, மான், குண்டோதரன், விநாயகர், நடராசர், சிவகாமி, சிவசருமன், சந்திரசேகரர் பிடாரி, பிரதோடமூர்த்தி, பள்ளியறை சொக்கர், அம்பிகை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. இதன் வலப்புறத்தே ஒரு பெரிய சந்நிதியில் ஆங்காளமூர்த்தியும் ஆறு ரிஷிபத்தினிகளும் உள்ளனர். இதனைச்சுற்றி வண்ண ஓவியங்கள் உள்ளன. மேற்குப் பிராகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் சண்முகப்பெருமான் ஒரு தனிச்சந்நிதியில் காட்சியளிக்கிறார். இதே பிராகாரத்தில் 9 சிவலிங்க மூர்த்தங்களும் காரைக்கால் அம்மையார், பஞ்சமுகலிங்கம், நாகதேவதைகள் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் வருணலிங்கம் உள்ள சந்நிதி உள்ளது. இதே பிராகாரத்தில் அம்மன் கோயில் அமைந்துள்ள மகாமண்டபத்தின் முன்புறம் பலிபீடம், கொடிமரம், யாளி ஆகியவை இருக்கின்றன. இடப்புறம் செல்வவிநாயகர் சந்நிதியும் அம்மன் சந்நிதி உள்பிராகாரத்தில் சண்டேசுவரி சந்நிதியும் உள்ளன. வடபாகத்தில் வயிரவரும் உள்ளார்.

அம்மன் சந்நிதியை அடுத்து முன்புறம் நடராசர் சந்நிதி அமைந்துள்ளது. நடராசர் சந்நிதிக்கு எதிர்புறம் சந்திரமௌளீசுவரர் அம்பாளுடன் காட்சியளிக்கிறார். நடராசர் சந்நிதிக்கு அருகில் நவக்கிரகங்களின் சந்நிதியும் உள்ளது.

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் கிழக்குப்பகுதியில் 108 சிவலிங்கம், சூரியன் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. கொடியேற்ற மண்டபத்தின் வலப்புறத்தில் தண்டபாணி சந்நிதி அமைந்துள்ளது.

மகாமண்டபத்தில் சுவாமி சந்நிதி முன் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. கருவறையைச் சுற்றிலும் கோட்டங்களில் தென்புறம் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்குப்புறம் திருமால், வடக்கில் பிரமதேவர், துர்க்கையம்மன் ஆகியோர் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

மார்க்கபந்தீசுவரர் மூலவர் சுயம்புலிங்கமாக வளர்ந்துவருகிறார்.

இக்கோயிலின் வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கே 98 மீட்டர் நீளமும் 90 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் பிரமதீர்த்தக்குளம் உள்ளது. இது நன்னிலையில் பராமரிக்கப்பட்டுவருகிறது. இக்குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் உள்ளது; இதற்குப் படிகளும் உள்ளன. ஆனால் விரைவில் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையில் இது உள்ளது. இத்தீர்த்தக்குளத்தில் ஆதிசைவப் பாலகனுக்குப் பரமன் உபநயனமும் பிரமோபதேசமும் சிவதீட்சையும் செய்ததால் இங்கு மூன்று அக்கினிக் குண்டங்கள் அமைந்துள்ளன. இத்தீர்த்தம் பிரமதேவரால் உண்டாக்கப்பெற்றதால் அவர் பெயரில் விளங்கிவருகிறது. இங்குச் சிவபெருமானே பிரமோபதேசம் செய்வதாக ஐதீகம் உள்ளதால், ஆண்டுதோறும் மாசிமகம் பௌர்ணமி நாளில் தொடங்கி மூன்று நாள்கள் தெப்போற்சவம் இத்தீர்த்தத்தில் நடைபெறுகிறது.

கௌரிதீர்த்தம் என்னும் பெயரில் சிம்மதீர்த்தம் விரிஞ்சைத் தலத்திற்குத் தனிச்சிறப்பை அளித்து வருகிறது. இஃது இக்கோயிலின் முதற்பிராகாரத்தின் தென்கிழக்கே உள்ளது. இஃது ஒரு சிங்கத்தின் வாய்வழியாக நுழைந்து செல்லும் முறையில் அமைக்கப்பெற்ற நடைபாதைக் கிணறாகும்.

திரிசூலத்தால் அமைக்கப்பட்ட தீர்த்தம் சூலிதீர்த்தம். இது கோயிலின் வாயில் அருகிலுள்ளது.

கோயிலினுள் இரண்டாம் பிராகாரத்தில் உள்ள தீர்த்தக்கிணறு சோமதீர்த்தமாகும். கோயிலின் மூர்த்திகள் அபிடேகத்திற்காக இத்தீர்த்தம் சோமனால் (சந்திரனால்) உண்டாக்கப் பெற்றது.

பாலாறும் இக்கோயிலின் தீர்த்தமாகும். பிரமதேவர் காயத்திரி தேவியுடன் எம்பெருமானை வேண்டிச் செய்த வேள்வியால் இந்த நதியில் பால் பெருகிற்று. அந்நாள் முதல் இந்நதிக்கு க்ஷீரநதி அல்லது பாலாறு என்னும் பெயர் ஏற்பட்டது என்பர். இந்நதியில் கரையில் கௌரி, திருமால், பிரமதேவர், கரன் ஆகியோர் எம்பெருமானைப் பூசித்தனர். மற்றத் தீர்த்தங்கள் சிம்ம தீர்த்தம், பிரமதீர்த்தம், கரதீர்த்தம், சந்திரதீர்த்தம் ஆகியவை.

இராசகோபுரம் கிழக்குத் திக்கில் 24 மீட்டர் நீளமும் 16 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் 45 மீட்டர் உயரம் கொண்டு விளங்குகிறது. இது 7 நிலைகளையும் 9 கலசங்களையும் கொண்டது.

இக்கோயிலின் வெளிப்பிராகாரம் 232 மீட்டர் நீளமும் 222 மீட்டர் அகலமும், இரண்டாம் பிராகாரம் 92 மீட்டர் நீளமும் 65 மீட்டர் அகலமும் முதற்பிராகாரம் 58 மீட்டர் நீளமும் 38 மீட்டர் அகலமும் கொண்டுள்ளன.

கங்காளர் (பிட்சாடனர்) உருவத்தைச் சுற்றிப் புராணக் கதைகளின் காட்சிகள் பழங்கால வண்ண அமைப்பில் உள்ளன. சுவாமி சந்நிதியைச் சுற்றித் தலவரலாற்றுக் காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அசுரன் கரன், திருமால், பிரமதேவர் ஆகியோரின் உருவங்கள் மிகவும் அழகியவை. அம்பிகை சந்நிதியைச் சுற்றிலும் அஷ்டலட்சுமிகள், தேவமாதர்கள் ஆகியோர் வடிவங்கள் புதிய வண்ண அமைப்பில் தீட்டப்பட்டுள்ளன. கோயில் உட்கூறையில் முழுவதும் வண்ண மலர்களும் அகன்ற வட்ட வடிவச் சித்திர வேலைப்பாடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் உள்மண்டபம் ஒன்றும் மகா மண்டபங்கள் இரண்டும் கல்யாண மண்டபங்கள் இரண்டும் உள்ளன. பிரகாரத்தின் தென்கிழக்கு முனையில் 16 கால்மண்டபமும் தென்மேற்கில் திருக்கலியாண மண்டபமும் வடமேற்கில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்றும் உள்ளன.

கிழக்குக் கோபுரவாயிலின் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில், சிம்ம முகச் சிற்பம் அழகிய வடிவில் இருப்பதைக் காணலாம். கார்த்திகைக் கடைசி ஞாயிறு பாலக மூர்த்திக்குத் திருமுடி வளைத்த வரலாற்றை இக்கோயில் வெளிப்பிரகார நுழைவாயிலின் தென்மேற்கிலுள்ள திருமண மண்டபத்தின் அடித்தளத்திலுள்ள சிற்பங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். வடமேற்குத் திருமண மண்டபத்தில் பஞ்சமுக விநாயகர் சிம்ம வாகனத்தில் காட்சியளிக்கும் சிற்பம் அழகியதாகும். ஒரு நாகத்தின் முன் பிடாரன் மகுடி ஊதும் சிற்பத்தை இம்மண்டபத்தின் மீது கிழக்குப் பகுதியில் காணலாம். திருமண மண்டபங்களிலுள்ள சிற்பங்கள் இராமர் வரலாற்றையும் திருமாலின் அவதாரங்களையும் காட்டுகின்றன. வடகிழக்கு முனையிலுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் நடராசரின் ஆனந்தத் திருத்தாண்டவத்தையும் கல்லினால் செய்யப்பட்ட மூலத்திருவுருவத்தையும் காணலாம். தென்புறம் சக்தியின் பல அவதாரங்களைச் சிற்பங்களாகக் கொண்ட சக்தி மண்டபத்தில் ஒரு சிங்கத்தின் வாய் வழியாக நுழைந்து செல்லும் சிம்மத் தீர்த்தத்தையும் காணலாம். தனபாலர்க்குப் பெருமாள் வழித்துணையாக வந்த வரலாறு கோயில் சுற்று மதில்களில் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான சிற்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வகையில் ஆங்காங்கே விளக்கக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, கல்வெட்டுகளின் வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இக்கோயிலில் மக்கள் திரளாக வந்து பிரார்த்தனை செய்துவருகிறார்கள். கார்த்திகை மாதத்தின் ஞாயிற்றுக்கிழமைகளில் பெருந்திரளாகப் பெண்கள் வழிபாடாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் அபிடேக ஆராதனைகள் தவிர முடி இறக்குதல்,

காது குத்துதல், தொட்டில் கட்டிவைத்தல், திருமணங்கள் செய்வித்தல் முதலியவை தொடர்ந்து நடைபெறுகின்றன. மிக நெருங்கியமுறையில் இக்கோயில் சமுதாயத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவிவருகிறது.

கல்வெட்டுகளில் செயங்கொண்ட சோழமண்டலத்துத் திருவிரிஞ்சிபுரம் என்று கூறப்படுகிறது. நந்திவிக்கிரம பல்லவன், இராசேந்திர சோழன், பராந்தக சோழன்(1), கோபரகேசரிவர்மன், விசயநகர மன்னர்களான நாராயண சம்புவராயர், அச்சுதராயர், தேவராயர், கிருட்டினதேவராயர், இம்மடி நரசிம்மராயர், வெங்கடபதிதேவன் முதலிய மன்னர்கள் பற்பல திருப்பணிகள் செய்திருப்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சகம் 1418-ஆம் ஆண்டில் விசயநகரமன்னன் இம்மடி நரசிம்மராயர் காலத்தில் எர்ரம நாயக்கரால் ஒரு மண்டபம் கட்டப்பட்டதைக் கொடியேற்ற மண்டபத்திலுள்ள ஏரம்ப விநாயகர் திருவுருவம் குறிப்பிடுகிறது. சகம் 1471-ஆம் ஆண்டில் வேலூர் மச்ச நாயக்கர் குமாரர் பொம்மு நாயக்கரால் கோயிலைச் சுற்றிலும் தளவரிசை இடப்பட்டது தெரிகிறது.

கோயிலின் இறைவனுக்குத் தானம் வழங்கியது, நிலம் அளித்தது, கிராமங்கள் அளித்தது, நந்தவனத்துக்கும் விளக்கெரிப்பதற்கும் நிலம் விடப்பட்டது முதலிய செய்திகளைக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. எல்லா வகுப்பு அந்தணர்களும் கோயில் சந்நிதியில் கூடித் திருமணம் செய்வதற்கு வரதட்சிணை கொடுப்பதோ, வாங்குவதோ கூடாதென முடிவுசெய்து அதை மன்னனும் ஏற்றுக்கொண்டு இதில் தவறினவர்களுக்குத் தண்டனை விதித்ததையும் கல்வெட்டு கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு குருநமசிவாய மூர்த்தியின் மாணவர் ஆனந்த நமசிவாய பண்டாரத்துக்கு மடத்திற்காக ஒரு வீடு கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. குருநமச்சிவாயர் என்பவர் திருவண்ணாமலைக் குகை நமச்சிவாயரின் சீடராவார்.

இத்தலத்தைப் பற்றிய 18 கல்வெட்டுகள் தென்னிந்தியக் கல்வெட்டுப் பகுதிகளில் 597 முதல் 614 எண் வரையில் 1787-ஆம் ஆண்டில் 44-61 எண்களில் அரசினரால் படியெடுக்கப்பட்டுள்ளன.

1. 597 (44-1887) எண் கல்வெட்டு, கோபுரத்தின் உள்ளே இடப்பக்கத்தில் சகம் 1418-ஆம் ஆண்டில் விசயநகரமன்னன் இம்மடி நரசிம்மராயர் காலத்தில் எர்ரம நாயக்கரால் ஒரு மண்டபம் கட்டப்பெற்றதைக் குறிக்கிறது.

2. 598 (45) எண் கல்வெட்டு, அதே இடத்தில் சகம் 1395-ஆம் ஆண்டில் விசயநகர மன்னன் தரணி வரத்நரசிம்மராயர் காலத்தில் வழித்துறை நாதருக்கு நன்கொடை வழங்கியதைக் கூறுகிறது.

3. 599 (46) எண் கல்வெட்டு, மேற்கூறிய இடத்தில் சகலயோக சக்கரவர்த்தி இராசநாராயண மன்னர் காலத்தில் அளிக்கப்பட்ட ஒரு கொடையைப் பற்றியதாகும்.

4. 600 (47) எண் கல்வெட்டு, சகம் 1463-ஆம் ஆண்டில் விசய நகர மன்னன் அச்சுதராயர் காலத்தில் அளிக்கப்பட்ட ஒரு கொடை பற்றிய குறிப்பாகும்.

5. 601 (48) எண் கல்வெட்டு, கோபுரத்தின் உள்பக்க வலப்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இது சகம் 1504-ஆம் ஆண்டில் விசயநகர மன்னன் சாளுவ நரசிம்ம தேவராயர் காலத்தில் எழுதி வைக்கப்பட்ட ஒரு சாசனத்தைக் குறிக்கிறது.

6. 602 (49) எண் கல்வெட்டு, சகம் 1347-ஆம் ஆண்டில் விசயநகர மன்னன் காலத்தில் பிராமணருள் பலர் சேர்ந்து திருமணத்தில் பணபேரம் செய்யக்கூடாதென்பதையும் அவ்வாறு செய்பவர் மன்னரால் தண்டிக்கப் படுவதோடு சாதியிலிருந்து அவர்கள் விலக்கப்படுவர் எனவும் கூறுகிறது.

7. 603 (50) எண் கல்வெட்டு, சகம் 1457-ஆம் ஆண்டில் விசயநகர மன்னன் அச்சுததேவராயர் பிராமணர்களுக்கு நிலங்கள் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

8. 604 (51) எண் கல்வெட்டு, முன் கோபுரத்தின் பின்பக்கத்தில் வலப்புறத்தில் சகம் 1435-ஆம் ஆண்டில் விசயநகர மன்னன் கிருட்டின தேவராயர் காலத்திய சாசனக் குறிப்பாகும்.

9. 605 (52) எண் கல்வெட்டு, மேற்கூறிய அதே இடத்தில் மற்றொரு சாசனமாகும்.

10. 606 (53) எண் கல்வெட்டு, கோபுரத்தின் உள்பக்கத்தில் விசயநகரமன்னன் அச்சுததேவராயர் காலத்தில் சகம் 1454-ஆம் ஆண்டில் கௌதமான் வயா கருணீக வீர்பய்யன் என்பவரிடமிருந்து சில கிராமங்கள் கோயிலுக்குக் கொடையாகப் பெறப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

11. 607 (54) எண் கல்வெட்டு, மேலே குறிப்பிடப்பட்ட அதே இடத்தில் கோவிசயநந்தி விக்ரவர்மனது 9-ஆவது ஆண்டில் கோயிலுக்கு திருப்பணி செய்யப்பட்டதைக் கூறுகிறது.

12. 608 (55) எண் கல்வெட்டு, மேற்கூறிய அதே இடத்தில் கோபரகேசரிவர்மன் 47-ஆவது ஆண்டில் எழுதப்பட்ட குறிப்பாகும்.

13. 609 (56) எண் கல்வெட்டு, மேற்கூறிய இடத்தில் மதுரை கோபரகேசரிவர்மன் உடையார் இராசேந்திர சோழன் காலத்தில் அதிராசேந்திர வளநாடு செயங்கொண்ட சோழமண்டலத்தினைச் சேர்ந்த கங்கை மார்த்தாண்டபுரம் கிராமத்தார் சோமேசுவரப் பெருமானுக்கு நிலம் அளித்ததைக் கூறுகிறது.

14. 610 (57) மேற்கூறிய இடத்தில் மதுரை கோபரகேசரிவர்மன் காலத்தில் எழுதப்பட்ட சாசனமாகும்.

15. 611 (58) எண் கல்வெட்டு, அழகிய சம்புவராய மன்னன் காலத்தில் எழுதப்பட்ட சாசனமாகும்.

16. 612 (59) எண் கல்வெட்டு, சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண சம்புவராய மன்னன் காலத்தில எழுதப்பட்ட ஒரு குறிப்பாகும்.

17. 613 (60) உட்கோயிலில் சகம் 1471-ஆம் ஆண்டில் வேலூர் மச்ச நாயக்கரின் குமாரர் பொம்மு நாயக்கர் என்பவர் தம் தந்தையின் நினைவாகக் கோயிலைச் சுற்றிலும் தளவரிசை அமைத்ததைக் குறிப்பிடுகிறது.

18. 614 (61)எண் கல்வெட்டு தென்புற வாயிலில் ஒரு கல்லில் சகம் 1514-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட சாசனமாகும். முதலாம் வெங்கடாசலபதி மன்னன் காலத்தில் புன்னாற்றூர் பெரிய ஏர்ரம நாயக்கன் என்பவன் ஆனந்த நமசிவாய பண்டாரத்திற்கு ஒரு வீடு கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

இக்கோயிலில் பூசைகள் காமிக ஆகமப்படி நடைபெறுகின்றன. நான்கு வேளைகளில் குருக்கள் பூசை செய்துவருகிறார். ஓதுவாரால் சைவத் திருமுறைகள் ஓதப்படுகின்றன.

கீழ்க்காணும் விழாக்கள் நடைபெறுகின்றன.

சித்திரை மாதம் பௌர்ணமியில் வசந்தவிழா, வைகாசி மாதம் விசாக உற்சவம், ஆனிமாதம் உத்திரத்தில் நடராசர் ஆனித்திருமஞ்சன அபிடேகம், ஆடிமாதம் தேரோட்டத்துடன் ஆடிப்பூரவிழா (பத்துநாள்கள்), ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி, கோகுலாட்டமி கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி மாதம் நவராத்திரி விழா, விசயதசமி, பாரிவேட்டை, ஐப்பசிமாதம் பௌர்ணமியில் அன்னாபிடேகம், கார்த்திகை மாதம் கடைஞாயிற்றுப் பெருவிழா.

வெள்ளி - 108 சங்காபிடேகம், சனி - இடபமூர்ந்து ஈசன் காட்சி, மாலை தெப்போற்சவம் 1 நாள், ஞாயிறு -காலை பிரம தீர்த்தத்தில் தீர்த்தவாரி, காலை 7 மணிக்கு மேல் பாலக பிரம்மாவான சிவசர்மனுக்கு உபநயனமும் சிவதீட்சையும் 9 மணிக்கு மேல் மாடவீதி உலாவும் 12 மணிக்கு மேல் அபிடேகமும். மாலை அபிடேகம் மகா தீபாராதனைகள் இரவு பஞ்சமூர்த்திகள் இடபமூர்ந்து மகாமேரு உற்சவம். திங்கள் -காலை 8 மணிக்கு அபிடேகம், 10 மணிக்கு மாடவீதி உருத்திராட்ச விமான உற்சவம். காலை 11 மணிக்கு மேல் உச்சிக்கால அபிடேகம் மாலை 3 மணிக்கு அபிடேகம். இரவு பஞ்சமூர்த்திகள் இடப வாகன உற்சவம் மார்கழி மாதம் மாணிக்க வாசகர் உற்சவம், திருவாதிரை உற்சவம். தைமாதம் புனர்வசு நாள் தென்கயிலாயங்கிரிப் பிரதட்சணம் பாரிவேட்டையும் பங்குனி பிரம்மோற்சவம் (10 நாள்கள்)

| | பகல் | இரவு |
|---|---|---|
| முதல் நாள் | கொடியேற்றம் | இடபவாகனம் |
| இரண்டாம் நாள் | பல்லக்கு | காமதேனு, அதிகாரநந்தி |
| மூன்றாம் நாள் | " | திருக்கல்யாணம், இடபவாகனம் |
| நான்காம் நாள் | " | " " |
| ஐந்தாம் நாள் | " | " அன்ன வாகனம் |
| ஆறாம் நாள் | " | |
| ஏழாம் நாள் | இரதோற்சவம் | |
| எட்டாம் நாள் | பல்லக்கு | பிட்சாடனர் குதிரைவாகனம் |
| ஒன்பதாம் நாள் | பல்லக்கு நால்வர் | இடபவாகனம் |
| பத்தாம் நாள் | சபாநாதர் தரிசனம் | இராவணேசுவர வாகனம் |
| | தீர்த்தவாரி, பகல் அபிடேகம் | கொடியிறக்கம். |

இக்கோயிலின் நிருவாகம் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலுக்கு நன்செய், புன்செய் நிலங்களாக 120 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 76, 206/_ உருபாயாகும்.

மரத்தேர் ஒன்று உள்ளது. பல்லக்குகள், கேடயம், இடபம், காமதேனு, அதிகாரநந்தி, அன்னம், யானை, மயில், சூரியபிரபை, சந்திரபிரபை முதலிய வாகனங்கள் உள்ளன.

அருணகிரிநாதர் தாம் அருளிய திருப்புகழில், இத்தலத்தில் எழுந்தருளிய முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடியுள்ளார். இத்தலத்தை விருஞ்சி என மூன்று பாடல்களிலும் கரபுரம் என இரண்டு இடங்களிலும் கரபுரி என பத்துப்பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கோயிலின் தலபுராணம் இயற்றியவர் சைவ எல்லப்ப நாவலர். இதன் முதல் சருக்கம் இத்தலத்தின் மேன்மையை எடுத்துரைக்கிறது. இரண்டாம் சருக்கம் தேவி இங்குக் கடுந்தவம் புரிந்து சிவபெருமான் அருளைப் பெற்றதைக் கூறுகிறது. இதன் அடிப்படையில் இத்தலத்திற்குக் கௌரிபுரி என்னும் பெயர் அமைந்தது

என்று குறிப்பிடப்படுகிறது. விண்டுபுரிச் சருக்கம் திருமால் தோன்றிச் சிவனை வழிபட்டதைக் கூறுகிறது. அடுத்துக் கரபுரிச் சருக்கம் அசுரன் கரன் இங்குச் சிவபெருமானுக்கு உளமார வழிபாடாற்றிப் பேறுபெற்றதைக் கூறுகிறது. விரிஞ்சிபுரிச்சருக்கம் சிங்கம் தவமியற்றிச் சிவபெருமான் வழித்துணைநாதராகத் தோன்றிக் குந்தலநாட்டு வணிகருக்குப் பாதுகாப்பு அளித்து அருள்புரிந்ததைக் கூறுகிறது.

சாவித்திரன் இங்கு வழிபாடாற்றிப் பேறுபெற்றதைப் பரலோகச் சருக்கம் கூறுகிறது. சிவபெருமான் தமக்கு இளைஞர் சிவசர்மன் இடரின்றிப் பூசை செய்யுமாறு தமது சிவலிங்கத் திருமுடியைச் சாயத்தருளியதை எட்டாவது சருக்கம் எடுத்துக்கூறுகிறது.

பேரருளாளர் மார்க்கசகாயர் இயற்றிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் மிக உருக்கமான நடையில் அமைந்துள்ளன.

இக்கோயிலில் வீற்றிருக்கும் தண்டபாணியாகிய முருகப்பெருமான் சந்நிதியில் கீழே காணும் திருப்பாடல்களை அன்பர் சிலர் உள்ளம் உருகக் கசிந்து பாடுகிறார்கள்.

உருகா மனமும் சிவஞானம் உணரா அறிவும் உனதுபுகழ்
ஓதா நாவும் ஓதக்கேட் டுவந்தே யினிய நதி போலப்
பெருகா விழியும் உடை யேனைப் பிறவிக் கடலில் வீழாமல்
பேணி யெடுத்திங்கு எனதுஉள்ளம் பிரியா விரிஞ்சைப்பதி வாழும்
முருகா வருக சதுர்வேத முதல்வா வருக வினை தீர்க்கும்
முனைவா வருக மலராறு முகவா வருக திருமாலின்
மருகா வருக மயிலேறு மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே.

கண்ணால் உனது திருவடியைக் கண்டா தரவு பெருகியிரு
கையாற் றொழுதுன் திருக்கோயில் காலால் வலஞ்செய்து உனதுபுகழ்
பண்ணால் உருகிப் புகழ்ந்துகண்ணீர் பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணால் வருக உலகமுழுது ஆண்டாய் வருக கதிதருமெய்
ஐயா வருக ஆறுமுக அப்பாவருக விளங்குகதிர்
வண்ணா வருக மயிலேறு அண்ணா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா மணியேவருக வருகவே.

தேவே வருக திருவிரிஞ்சைச் சேயே வருக தெவிட்டாத
தேனே வருக சுவைஅமுதத் தெளிவே வருக கதிகொடுக்கும்
காவே வருக பெருங்கருணைக் கடலேவருக கலைபொழியும்
காரே வருக மரகதத்தின் கண்ணே வருக விண்ணோர்கள்

கோவே வருக பெரியகுணக் குன்றேவருக உபதேசக்
குருவே வருக சிவஞானக் கொழுந்தே வருக ஒருகரத்தின்
மாவேல் எடுத்த பரப்பிரம வடிவே வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே.

இவை திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் வரும் வருகைப் பருவப் பாடல்களாகும்.

## வில்வாரணி (வில்வராய நல்லூர்)
# ஆவுடையநாதீசுவரர் கோயில்

இக்கோயில் கலசப்பாக்கம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர்த் தொலைவில் செங்கம்-போளூர் வழியிலுள்ள நட்சத்திரக் கோயிலின் மேற்கே 2 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வில்வாரணி ஊரின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

வில்வ மரங்கள் அடர்ந்திருந்த காட்டுப்பகுதியில் அமைந்த தலம் வில்வ ஆரணயம் என்னும் பெயர் பெற்றுள்ளது. வில்வ ஆரண்யம் என்பது வில்வாரணி என வழங்கிவருகிறது. இக்கோயில் கல்வெட்டொன்றில் வில்வராய நல்லூர் என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இது வில்லவன் ராயன் என்பவன் பெயரில் எழுந்த நல்லூர் எனவும் பொருள்படும்.

ஆவுடைய நாதீசுவரர் என்பது இறைவன் பெயர். பசு உயிரினத்தைக் குறிக்கிறது. பசுக்களாகிய உயிர்களை உடையவர் ஆவுடை நாதர். உயிர்களை உடையவர் என்னும் பொருளையும் கொண்டுள்ளது.

கிழக்கு வாயிலை அடுத்துக் கோயிலின் கிழக்குப் பிராகாரத்தில் மூலவர் கருவறையை நோக்கியவாறு பலிபீடம், கொடிமரம், நந்திதேவர்சந்நிதி ஆகியவையுள்ளன. மேற்குப் பிராகாரத்தின் மையத்தில் வள்ளிதெய்வயானையுடன் ஆறுமுகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளது. பிராகாரத்தின் வடமேற்குக் கோடியில் சுந்தரவல்லியம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அம்மன் சந்நிதியில் நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலிகைகள் திருவுருவங்கள் உள்ளன.

சுவாமி சந்நிதி கருவறை வாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் ஆவுடையநாதீசுவரர் கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். நடராசர் சந்நிதி, நந்திதேவர் சந்நிதிகளுக்குச் சற்று வடமேற்குப் பகுதியில் நவக்கிரகம் உள்ளது.

கருவறைச்சுவர் மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. துர்க்கைக்கு எதிரில் சண்டேசுவரர் உள்ளார்.

சேடசெட்டியார்களின் குலதெய்வமான சௌடேசுவரி, அம்பிகை ஆகியோர் உலாத்திருமேனிகள் பாதுகாப்பிற்காக இங்குள்ளன.

சேயாறும் சேயாற்றின் சிற்றாறாகிய மிருகண்டு நதியும் இதன் தீர்த்தங்களாகும்.

சுவாமி சந்நிதிக்கு 3 நிலை விமானமும் நடராசர் சந்நிதிக்கு 3 நிலை விமானமும் அம்பிகை சந்நிதிக்கு 2 நிலை விமானமும் ஆறுமுகர் சந்நிதிக்கு 4 நிலை விமானமும் உள்ளன. விநாயகர் சந்நிதி மீது சிறு விமானம் ஒரு கலசத்துடன் உள்ளது.

சுவாமி சந்நிதியில் முன்மண்டபமும் உள்மண்டபமும் அம்மன் சந்நிதியில் ஒரு மண்டபமும் உள்ளன.

குருக்கள் பரம்பரை முறையில் 2 வேளைகள் பூசை செய்துவருகிறார். பிரமோற்சவம் 10 நாள்கள் நடைபெறுகின்றது. ஆடிக்கிருத்திகை, ஆடிப்பூரம், நவராத்திரி, அன்னாபிடேகம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், மகாகந்தர் சஷ்டி ஆகிய விழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன.

இக்கோயிலுக்கு 5.50 ஏக்கர் நன்செய் நிலங்களும் 4.70 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன. பரம்பரை முதலியார் அறங்காவலராக நிருவாகத்தைக் கவனித்துவருகின்றார். இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3681/- உரூபாயாகும்.

இக்கோயிலில் பெருச்சாளி, பெரிய இடபம், சிறிய இடபம் ஆகிய வாகனங்கள் உள்ளன.

### வில்வாரணி-மோட்டூர்

## பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் (நட்சத்திரக் கோயில்)

இது போளூர் - செங்கம் சாலையில் வில்வாரணிக்கு அருகில் மோட்டூர் எல்லையில் அமைந்துள்ளது.

மேடான இடத்தில் இவ்வூர் அமைந்திருந்ததால் முதலில் மேட்டூர் என்னும் பெயரைக் கொண்டிருந்தது. பின்னர் இப்பெயர் மருவி மோட்டூர் என வழங்கிவருகிறது.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் வில்வாரணி குருக்கள் ஒருவர் தலைமையில் அவ்வூர் மணியக்காரர், மோட்டூர், எலத்தூர் வாசிகள் ஆகியோர் பலரும் தவறாது கிருத்திகை நட்சத்திரத்தில் தணிகேசப் பெருமானை வழிபட்டு வந்தனர். ஒருமுறை, குருக்களுக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டதால் திருத்தணிகைக்குச் செல்ல இயலவில்லை. குருக்கள் மிகவும் மனம் நொந்து அழுது வேண்டினார். பரணியன்று திருமுருகன் குருக்கள் கனவிலும் மற்றவர் கனவிலும் தோன்றி "யான் கார்த்திகைத் திருநாளில் அருகிலுள்ள மலையில் சுயம்புவாகத் தோன்றியுள்ளேன். யான் இருக்கும் இடத்தில் ஐந்து தலைநாகம் குடைபிடிக்கும். இந்த அடையாளத்தைக் காண்பீர்" என்று அருளினார். குருக்கள் கனவில் இம்மலையில் ஒரு நட்சத்திரம் வானிலிருந்து இறங்குவது போல் கண்டார். எல்லோரும் காலையில் எழுந்து ஒருவருக்கொருவர் தாங்கள் கண்ட கனவினைக் கூறிக்கொண்டு குருக்களைப் பார்க்கப் போக அவர் தாம் கண்ட கனவையே இவர்களும் கண்டிருக்கிறார்கள் என்று எண்ணி மகிழ்ந்தார். அவர் அப்போதே நோய் நீங்கப் பெற்றார். அவர் பூசைக்குரிய பொருள்களோடு கூட்டமாகக் கனவில் நட்சத்திரம் இறங்கிய இடம் சென்று பார்க்க ஓரடிப் பட்டைக் கல்லுக்கு ஐந்து தலை நாகமொன்று குடைபிடித்துநின்றது. அப்போது அனைவரும் "அரோகரா" என முழங்கினர். பாம்பு மெல்ல நகர்ந்து மறைந்துவிட்டது. பின்னர் அபிடேக ஆராதனைகள் செய்து பூசை தொடங்கினர். அன்று முதல், கார்த்திகை நட்சத்திரத்தில் தொடங்கிய கோயிலாதலின் நட்சத்திரக் கோயில் என இது வழங்கி வருகிறது.

இம்மலையின் அடிவாரத்தின் தொடக்கத்தில் விநாயகர் திருவுருவம் உள்ளது. அடுத்து மேற்கே நவக்கிரகங்கள் சந்நிதியுள்ளது. மலை உச்சியின் தொடக்கத்தில் விநாயகர் திருவுருவம் உள்ளது. கோயிலினுள் தெற்குப் பிராகாரத்தில் பழனி ஆண்டவர் சந்நிதி மேற்கு நோக்கியவாறுள்ளது. மேற்குப் பிராகாரத்தில் பலிபீடம், கொடி மரம், மயில் திருவுருவம் ஆகியவை உள்ளன. வடக்கு வாயிலின் வழியாகக் கருவறைப் பகுதிக்குள் செல்லலாம். தெற்குப்பகுதியில் உற்சவர்கள் சந்நிதி வடக்கு நோக்கி உள்ளது.

கருவறையில் எடுப்பாகச் சுயம்பு வடிவில் மேற்கு நோக்கியவாறு சுப்பிரமணியர் அருள்புரிகிறார். இத்திருவுருவத்திற்குப் பின்புறம் வள்ளி தெய்வயானை, சுப்பிரமணியர் ஆகியோர் திருவுருவங்கள் நிலைப்படுத்தப் பெற்றுள்ளன.

வடகிழக்குக் கோடியில் காசிவிசுவநாதர், விசாலாட்சி ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியுள்ளன. காசிவிசுவநாதர் சந்நிதிக்குக் கிழக்கில் நால்வர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

சுப்பிரமணியர் திருவுருவத்தின் மீது ஐந்து தலை அரவு குடைபிடித்ததின்

காரணமாக ஐந்து தலை வெள்ளி நாகாபரணம் சார்த்தப்பட்டுள்ளது.

மலைப்படிகளில் ஏறிவரும்போது இடையில் குளம் உள்ளது.

மூன்றுநிலை விமானம் கருவறை மீதும் இரண்டு நிலை விமானம் காசிவிசுவநாதர் சந்நிதி மீதும் உள்ளன. மூன்று நிலைகள் கொண்ட கோபுரம் மேற்கு வாயிலில் உள்ளது.

மேற்குப் பிராகாரத்தில் யாகசாலையும் வடக்குப் பிராகாரத் தெற்குக் கோடியில் மடைப்பள்ளியும் உள்ளன. அடிவாரத்தில் உற்சவமண்டபமும் வாகனமண்டபமும் உள்ளன.

குருக்களால் நான்கு காலப்பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தைக் கடைசிநாளாகக் கொண்டு பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. மகாகந்தர் சஷ்டி, மாதக்கிருத்திகை, பரணி, அன்னாபிடேகம், கார்த்திகை விளக்கீடு ஆகியன சிறப்பு விழாக்களாகும்.

இக்கோயிலில் மயில், இடபம், பெருச்சாளி முதலிய வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 50,000 உருபாயாகும்.

சிதைந்த தேர் ஒன்றும் இங்கு உள்ளது.

### வீரானந்தல்

## இலட்சுமி நாராயணசுவாமி கோயில்

இக்கோயில் புதுப்பாளையம் கிராமத்திற்கு வடக்கில் 1/2 கிலோமீட்டர்த் தொலைவில் உள்ள வீரானந்தல் கிராமத்தில் 32 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இது கிழக்கு மேற்காக 6 மீட்டர் அளவும் வடக்கு தெற்காக 8.84 மீட்டர் அளவும் கொண்ட தட்டோடு வேய்ந்த கட்டடத்தில் அமைந்துள்ளது.

இது "நீர்ப் பரப்பு ஏந்தல்" என அழைக்கப்பட்டது. வீரன் பெயரிலான ஏந்தல் வீரனேந்தல் என வழங்கிப்பின்னர் வீரானந்தல் எனத் திரிபெய்திற்று என்பர்.

இக்கோயிலில் மூலவர் இலட்சுமி நாராயணர் சீதேவி, பூதேவியுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

ஒருகாலப் பூசை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் வைகாசி மாதம் கருடசேவைத் திருவிழா நடக்கிறது.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாகத்தின் கீழுள்ளது. இக்கோயிலுக்குப் புன்செய் நிலம் 3.19 ஏக்கர் உள்ளது. ஆண்டு வருவாய் 9,000/– உரூபாய் கிடைக்கிறது.

## வெங்களத்தூர்

# கயிலாசநாதர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 18 கிலோ மீட்டர்த் தொலைவிலும் செய்யாறு நகரத்திலிருந்து 20 கிலோமீட்டர்த் தொலைவிலும் உள்ள வெண்பாக்கம் ஊருக்கு வடக்கே 5 கிலோமீட்டர்த் தொலைவிலுள்ள வெங்களத்தூரில் 42 மீட்டர் நீளமும் 41 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் தெற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ளது.

இது நெற்களம் சூழ அமைந்த ஊராதலின் களத்தூர் எனப் பெயர்பெற்றது. மிகுதியான எண்ணிக்கையில் களத்தூர் என்னும் பெயரில் பல ஊர்கள் இருப்பதால் அவற்றினின்று பிரித்துக்காட்ட வெண்களத்தூர் எனக் குறிக்கப்பட்டது. இவ்வூர்ப் பகுதியிலுள்ள மண் வெண்மையாக இருத்தலின் இப்பெயர் அமைந்தது.

கோயிலின் நுழைவாயிலை அடுத்து உட்புறத்தில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன. அடுத்து வலப்புறம் விநாயகர் சந்நிதியும் இடப்புறம் சுப்பிரமணியர் சந்நிதியும் அமைந்துள்ளன. கருவறையின் வாயிலில் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் சிவலிங்க வடிவில் கயிலாயநாதர் அருள்பாலிக்கின்றார். அம்பாள் சந்நிதியும் அதன் அருகில் நவக்கிரகங்கள் சந்நிதியும் உள்ளன.

28 மீட்டர் நீளமும் 10 மீட்டர் அகலமும் கொண்ட தீர்த்தக்குளம் கோயிலின் உட்பிராகாரத்தின் இடப்புறம் இருக்கின்றது. இக்குளம் சீர்குலைந்திருக்கிறது.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. முன்பு சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரை முதலிய விழாக்கள் நடைபெற்றுவந்தன. இப்போது இவை நடைபெற வாய்ப்பில்லை. இக்கோயிலுக்கு 7.76 ஏக்கர் நன்செய் நிலமும் 0.68 ஏக்கர் புன்செய் நிலமும் உண்டு. இக்கோயிலின் நிருவாகம் பரம்பரை அறங்காவலரால் செய்யப்படுகிறது.

# வெட்டுவாணம்

# எல்லையம்மன் கோயில்

இக்கோயில் வேலூர் - பெங்களூர் நெடுஞ்சாலையில் பள்ளி கொண்டாவிற்கு மேற்கில் கிழக்கு நோக்கியவாறு 50 செண்ட் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இது குடியாத்தம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர்த் தொலைவில் உள்ளது. வேலூருக்கு மேற்கே 23 கிலோமீட்டர்த் தொலைவில் சவ்வாது மலைச்சாரலில் பாலியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது

இவ்வூருக்கு அருகில் சவ்வாது மலையில் தோன்றிய ஆறு இரு கிளைகளாகப் பிரிகிறது. அவற்றில் ஒன்று படவேடு கிராமத்தின் வழியாகச் சென்று கமண்டலநதி என்னும் பெயர் பெற்றது. மற்றது இவ்வூரின் வழியாகச் சென்று புண்ணிய தீர்த்த நதி என்னும் பெயரில் விளங்குகிறது. இப்புண்ணிய தீர்த்த நதியிலிருந்து நீர்ப்பாசனத்திற்காகக் கால்வாய் ஒன்றை உழவர் ஒருவர் வெட்டினார். அப்போது அவ்வகையில் ஒரு வெட்டு அங்கு நிலத்தில் புதையுண்டிருந்த அம்மனின் கன்னத்தில் விழுந்தது. அதிலிருந்து குருதி பெருகிற்று. அதனைக் கண்ட அவ்வுழவர் மயங்கி விழுந்து பின் எழுந்து தெளிந்து வெட்டுண்டவர் எல்லையம்மன் என்றார். இதையுணர்ந்த மக்கள் இங்கு அம்மனுக்கு ஒரு கோயிலை அமைத்தார்கள். வாணம் என்னும் சொல் அம்மனைக் குறிக்கிறது. அம்மன் இங்கு வெட்டுண்டதால் இதற்கு வெட்டுவாணம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

வெட்டுவாணம் என்னும் இவ்வூர் மேலைவித்தூர், வித்தகபுரி என்னும் பெயர்களிலும் வழங்கி வந்துள்ளது. வெட்டுவாணம், கோவிந்தம்பாடி பேட்டை என்னும் தனித்தனிக் கிராமங்கள் மூன்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஒன்றாக வெட்டுவாணம் என்னும் ஓரே ஊராக அமைக்கப்பட்டதை அரசுக்குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயிலின் கிழக்கேயுள்ள கோபுர நுழைவாயிலின் வழியே உள்ளே செல்வோமெனில், முன்மண்டபத்தில் கருவறையின் இருபுறங்களிலும் விநாயகர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கியவாறுள்ளதைக்காணலாம். கருவறையில் கழுத்து வரையிலுள்ள அம்மன் திருவுருவம் கிழக்கு நோக்கியுள்ளது. வெளிப்பிரகாரத்தின் தென்மேற்குக் கோடியில் உற்சவ அம்மன் திருவுருவம், சூலம், விநாயகர் திருவுருவம் ஆகியவை உள்ளன. வடமேற்குக் கோடியில் புற்றுமேடை ஒன்றுள்ளது.

தென்கிழக்குக் கோடியில் வேப்பமரம் ஒன்று செழித்தோங்கிய நிலையில் இருக்கின்றது. இதுவே தலவிருட்சமாக அமைந்துள்ளது.

இக்கோயில் ஐந்து நிலைகளையுடைய கோபுரத்தையும் அம்மன் சந்நிதி மீது அழகிய விமானம் ஒன்றையும் பெற்றுள்ளது.

மருத்துவர்களால் கைவிடப்பட்ட கண்ணொளி இழந்தவர்கள், உடலுறுப்புக் குறைந்தவர்கள், அம்மை நோயால் அல்லலுறுவோர் போன்ற பலரும் இக்கோயிலில் நாட்கணக்கிலும் மாதக்கணக்கிலும் தங்கியிருந்து தங்கள் குறைகள் நீங்கப்பெற்று, மனமகிழ்வோடு திரும்புகின்ற காட்சியை இன்றும் காணலாம். அம்மனின் அபிடேக மஞ்சள் நீரும் தலவிருட்சமாகிய வேம்பும் அன்னை மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையுமே இப்பெருமைகளுக்குக் காரணங்களாகும். கோயிலிலுள்ள வேப்பமரம் காலத்தால் முற்பட்டதாகும். மனஅமைதியை நாடி வருவோர் இம்மரத்தின் அடியில் அமர்ந்து தெளிவு பெற்றுச் செல்கிறார்கள். இவ்வாறு நலம்பெற்றவர்களுள் ஒருவர் இக்கோயிலில் அலங்கார மண்டபம் அமைத்துள்ளார்; ஆடிமாத வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் செய்து இலட்சதீபம் நடத்திவருகிறார். மற்றவர்கள் இக்கோயில் மலர் விற்பனைக்கூடம், கன்னிகோயில் மண்டபம் ஆகியவற்றைக் கட்டிக்கொடுத்துள்ளார்கள்.

இக்கோயிலில் இரு காலப்பூசை குருக்கள் ஒருவர் செய்துவருகிறார். ஆண்டுதோறும் ஆடிமாதம் நான்காம் வெள்ளியன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் மிகவும் சிறப்பாக வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறுகின்றன. மூன்றாவது ஆடி வெள்ளிக்கு அடுத்த சனிக்கிழமையன்று கொடியேற்றும் விழாவும், அன்று முதல் பத்து நாள்களில் பிரமோற்சவமும், சுமங்கலி திருவிளக்குப் பூசையும் தெப்போற்சவமும் இலட்சதீப வைபவமும் புரட்டாசியில் இலட்சார்ச்சனையும் நவராத்திரி உற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்விழாக் காலங்களில் பல்வேறு இடங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து அம்மனின் அருள் பெற்றுச் செல்கிறார்கள்.

இக்கோயிலுக்கு 1925-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறையினர் அறங்காவலர் ஒருவரை நியமித்தனர். இத்திட்டத்தின் கீழ்த் தற்போது இந்து சமய அறநிலையத்துறை நிருவாக அலுவலர் இக்கோயிலில் செயலாற்றி வருகிறார். இக்கோயிலுக்கு 7 ஏக்கர் நன்செய் நிலமும் 2 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. பூத வாகனம், அன்ன வாகனம், குதிரை வாகனம், சிம்ம வாகனம் ஆகியவை இக்கோயிலுக்குரிய வாகனங்களாகும்.

## வெட்டுவாணம்

# புத்திரகாமேசுவரர் கோயில்

இக்கோயில், ஆரணி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர்த் தொலைவிலும் ஆரணியிலிருந்து 2 கிலோமீட்டர்த் தொலைவிலும் அவ்வூரின் கிழக்குப் பகுதியில் கமண்டல ஆற்றின் தென்கரையில் 40 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இங்குப் புத்திரப்பேறு வேண்டி இக்கோயிலில் மக்கள் சிறப்பு வழிபாடு மேற்கொள்வதால், இக்கோயிலுக்குப் புத்திரகாமேசுவரர் கோயில் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

இக்கோயில் தோன்றியதைப் பற்றி மரபு வழிச் செய்தியொன்று கூறுகிறது. இப்பகுதியைத் தம் ஆட்சியின் கீழ்க்கொண்டிருந்த படவேட்டை நம்பிராசன், மேய்ச்சலுக்காகத் தம்முடைய பசுக்களை அருகிலிருந்த மேய்ச்சல் நிலங்களில் விட்டு வந்ததாகவும் அப்பசுக்களில் ஒன்று மட்டும் பால் சுரக்காமல் இருந்து வந்தது எனவும் இதன் காரணத்தைக் கண்டறிய அவன் ஒருநாள் அப்பசுவின் பின்னே சென்றான் எனவும் அப்பசு அங்கிருந்த எறும்புப்புற்றின் மீது தன் பாலைச் சொரிந்து கொண்டிருந்தது எனவும் அப்புற்றில் சிவலிங்கம் ஒன்று நன்னிலைமையில் இருப்பதை அவன் கண்டான் எனவும் பின்னர் அதற்கு அவன் ஒரு கோயில் கட்டினான் எனவும் கூறப்படுகிறது.

இக்கோயில் கோபுர நுழைவாயில் வழியாக உள்ளே செல்வோமெனில் பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் சந்நிதி ஆகியவற்றைக் கடந்து விநாயகர், சுப்பிரமணியர், அமர்ந்த நிலையில் விநாயகர் ஆகியோர் சந்நிதிகளைக் காணலாம்.

கருவறையில் புத்திரகாமேசுவரர் சிவலிங்க (1மீட்டர் அளவு) வடிவில் அருள்புரிகிறார். அருகில் பிரமநாயகியம்மன் (0.75 மீட்டர் உயரத்தில்) நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். சுவாமி, அம்மன், விநாயகர் ஆகியோர் உலாத் திருமேனிகள் உள்ளன. நடராசர் திருவுருவம் சிறந்தமுறையில் காணப்படுகிறது.

இக்கோயிலின் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டுள்ள கோபுரத்தில் பித்தளையினால் தாமரை வடிவில் செய்யப்பட்ட கலசம் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஒரு பிராகாரமும் திருமண மண்டபம் ஒன்றும் உள்ளன.

இக்கோயிலில் குருக்கள் மூவர் முறையாக இருகாலப்பூசை செய்து வருகிறார்கள். இருவேறு ஊர்களில் உள்ள 2.69 ஏக்கர் நன்செய் நிலமும் 2.48 ஏக்கர் புன்செய் நிலமும் இக்கோயிலின் நில உடைமைகளாகும். இங்குச் சித்திரை மாதத்தில் இலட்சதீபமும் தைமாதத்தில் காணும் பொங்கல் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

## வெண்பாக்கம்

# இராமநாதசுவாமி கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 15 கிலோமீட்டர்த் தொலைவில் காஞ்சிபுரம் - வேலூர் செல்லும் வழியில் 25 கிலோமீட்டர்த் தொலைவில் செய்யாறு வட்டம் வெண்பாக்கம் ஊரில் 25 மீட்டர் அகலமும் 33 மீட்டர் நீளமும் கொண்ட நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் இராமநாதர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறுள்ளார். அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது.

வெளியில் ஒரு கிணறு உள்ளது. இக்கோயிலில் பூசை ஒழுங்காகச் செய்யப்படுவதில்லை. தற்போது ஒரு காலப்பூசை நடைபெறுகிறது.

இக்கோயிலுக்கு 90 செண்ட் நன்செய் நிலமும் 17 செண்ட் புன்செய் நிலமும் இருந்து வந்தன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் பெற்றுள்ள அறங்காவலர் நிருவாகத்தின் கீழ் உள்ளது.

## வேகாமங்கலம்

# காசி விசுவநாதர் கோயில்

இக்கோயில் அரக்கோணம் வட்டத்தில் வாலாசாப்பேட்டைக்குத் தென்கிழக்கில் 7 கிலோமீட்டர்த் தொலைவில் 10 செண்ட் நிலப்பரப்பில் வடக்கு

நோக்கிய வாயிலுடன் கிழக்கு நோக்கியவாறுள்ள மூலவர் சந்நிதியோடு அமைந்துள்ளது.

திரிபுராந்தகர் முப்புரம் எரித்தபோது உலகம் முழுதும் வெந்தழிய, இவ்வூர் வேகாது நின்றதால் இவ்வூருக்கு இப்பெயர் அமைந்தது என்பர்.

இக்கோயிலின் தென்மேற்குக் கோடியில் விநாயகர் கிழக்குநோக்கியவாறும் வடமேற்குக்கோடியில் ஆறுமுகர் கிழக்கு நோக்கியவாறும் காட்சியளிக்கின்றார்கள். கருவறை முன் வலப்புறம் விநாயகரும் இடப்புறம் விசாலாட்சியம்மையார் தெற்கு நோக்கியும் அருகில் காமாட்சியம்மன் தெற்கு நோக்கியும் காட்சியளிக்கிறார்கள். அடுத்து நவக்கிரகங்களும் உள்ளன. கருவறைக் கோட்டங்களில் முறையே விநாயகர், தென்முகக்கடவுள், திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் அமர்ந்துள்ளனர். கருவறையில் காசி விசுவநாதர் கிழக்கு நோக்கியவாறு சிவலிங்க வடிவில் காட்சிதருகிறார்.

சந்திரசேகரர், சுந்தரநாயகி, விநாயகர், காமாட்சி ஆகியோர்தம் உற்சவத் திருமேனிகள் உள்ளன.

இக்கோயில் கருவறைக்கு ஒருநிலை சதுரவிமானம் உள்ளது.

இங்கு ஒரு காலப்பூசை குருக்கள் செய்துவருகிறார். இக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 730 உருபாயாகும்.

## வேகாமங்கலம்

# பச்சையம்மன் கோயில்

இக்கோயில் வேகாமங்கலம் கிராமத்தில் மாமண்டூர் செல்லும் வழியில் 25 செண்ட் நிலப்பரப்பில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

கருவறையில் பச்சையம்மன் நான்கு கரங்களுடன் சுதைவடிவில் கிழக்கு நோக்கியவாறுள்ளார். உள்மண்டபத்தில் பச்சையம்மன், மன்னார்சாமி, வேங்கை மலை நாச்சியார், பூங்குறத்தி, விநாயகர் ஆகியோர்தம் கற்சிலைகள் உள்ளன. மேலும் பிரமன், திருமால், சரசுவதி, சிவபெருமான் ஆகியோரின் நெடிய வடிவங்கள் உள்ளன. இங்குள்ள மன்னார்சாமி நான்கு கரங்களில் மான், மழு, சூலம், கபாலம்

ஆகியவற்றையும் அம்பிகை பாசம், அங்குசம், தாமரை, கபாலம் ஆகியவற்றையும் ஏந்தியுள்ளனர். மூலவரைப் போன்ற இரு உற்சவ மூர்த்திகளும் பாதுகாப்புக் கருதி பரசுராமலிங்கேசுவர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இங்குத் தனித்தனி மண்டபங்களில் சிங்கமுனி தெற்கு நோக்கியும் தவமுனி மேற்கு நோக்கியும் கரிமுனி, முத்துமுனி, ஜடாமுனி, ஆகியோர் வடக்கு நோக்கியும் யோகமுனி வடக்கு நோக்கியும் வாழ்முனி, செம்முனி ஆகியோர் வடக்குநோக்கியும் உள்ளனர்.

குருக்களால் ஒருவேளைப்பூசை செய்யப்படுகிறது, பரம்பரை அறங்காவலர் நிருவாகத்தை மேற்கொண்டுள்ளார். இக்கோயிலின் முன்மண்டபத் தூண்கள் மிக அழகியவை.

இது பிரார்த்தனைத் தலமாகும். ஆடி மாதங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

## வேகாமங்கலம்

# பரசுராமேசுவரர் கோயில்

இக்கோயில் அரக்கோணம் வட்டத்தில் வாலாசாப்பேட்டைக்குத் தென்கிழக்கில் 7 கிலோமீட்டர்த் தொலைவில் 10 செண்ட் நிலப் பரப்பில் வடக்கு நோக்கிய வாயிலுடன் கிழக்கு நோக்கியவாறுள்ள மூலவர் சந்நிதியோடு அமைந்துள்ளது.

திரிபுராந்தகர் முப்புரம் எரித்தபோது உலகம் முழுதும் வெந்தழிய இவ்வூர் வேகாது நின்றதால், இவ்வூருக்கு இப்பெயர் அமைந்தது என்பர். இதுபோன்று திருவதிகை வீரட்டானத்தினையடுத்து வேகாக்கொல்லை என்னும் ஊர் இருப்பதையும் அறிகிறோம்.

திரிபுரம் எரித்த சிவபெருமான் தமது பரசை (மழுவாயுதத்தை) ஊன்ற அதுவே சிவலிங்கமானதால் இவர் பரசுதேவேசுரர் என்னும் பெயர் எய்தினார் எனவும் பின்னர் இப்பெயர் மருவி பரசுராமேசுவரர் என்று திரிபு எய்திற்று எனவும் கூறப்படுகிறது.

பரசுராமர் தம் தாயைக் கொன்ற பாவம் நீங்கப் பூசை செய்த இடம் இதுவாகும். அவர் தம் தந்தை சமதக்கினியைக் கொன்ற கார்த்தவீரியனையும் அம்மன்னன் குடும்பத்தையும் வேரறுக்கும் நோக்கில் புறப்பட்ட போது, உலகம்

அவர் சீற்றத்தால் வெந்து சிவக்க, இவ்விடம் மட்டும் வேகாது இருந்தது.

இதன் காரணமாக இத்தலம் இப்பெயர் பெற்றது என்பர் சிலர். அவர் பூசித்த இலிங்கமே பரசுராமேசுவரர் என்னும் பெயரில் விளங்குகிறது.

தெற்கு வாயில் வழியாகக் கோயிலை வலம் வரும் வழியில் தென் மேற்குக்கோடியில் விநாயகர் சந்நிதியும் வடமேற்குக் கோடியில் சுப்பிரமணியர் சந்நிதியும் வடகிழக்குக்கோடியில் நவக்கிரகங்களின் சந்நிதியும் தென்கிழக்குக் கோடியில் சூரியன் சந்நிதியும் நவக்கிரகங்கள் சந்நிதிக்கு அருகில் வயிரவர் சந்நிதியும் இருக்கின்றன.

தெற்கு வாயில் முகமண்டபத்தையடுத்துள்ள உள்மகாமண்டபத்தின் வலப்புறம் நால்வர் திருவுருவங்களும் விநாயகர் திருவுருவமும் இடப்புறம் கைலாசநாதரின் சிவலிங்க வடிவமும் உள்ளன. அருகில் நடராசர் தெற்கு நோக்கியவாறும் பார்வதியம்மன் தனிச்சந்நிதியில் தெற்கு நோக்கியவாறும் உள்ளனர். கருவறை வெளிப்புறக் கோட்ட மாடங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கருவறையில் பரசுராமலிங்கேசுவரர் கிழக்கு முகமாகக் காட்சியளிக்கிறார்.

அம்பிகை, சோமாசுகந்தர், விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சந்திரசேகரர், அம்பிகை, அத்திரதேவர், சுப்பிரமணியர், நடராசர், சிவகாமி, பிரதோட நாயகர் ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. பாதுகாப்புக் கருதி எல்லையம்மன், அக்கிராமத்தாள், அங்காளம்மன், மன்னார்சாமி, பச்சையம்மன் ஆகியோர் உலாத்திருமேனிகள் இங்கு வைக்கப்பெற்றுள்ளன.

குருக்களால் நாள்தோறும் 2 காலப் பூசை செய்யப்படுகிறது. நால்வர் திருநாள்கள், பிரதோடங்கள், கிருத்திகைகள், வெள்ளிக்கிழமைகள், திருவாதிரை, சிவராத்திரி, காணும்பொங்கல், நவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

சுவாமி சந்நிதி மீது 3 நிலைகளைக் கொண்ட சதுரவடிவ விமானமும் அம்பிகை சந்நிதி மீது 2 நிலைகள் கொண்ட சாலஹார விமானமும் உள்ளன.

இக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரிடம் உள்ளது. இக்கோயிலுக்கு 3. 51 ஏக்கர் நன்செய் நிலமும் 8. 70 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.

இக்கோயிலில் பிரதோட இடபம், பெரிய இடபம், மயில், பெருச்சாளி, ஆகிய வாகனங்கள் உள்ளன.

# வேட்டவலம்

# அகத்தீசுவரர் கோயில்

இக்கோயில் திருவண்ணாமலை - விழுப்புரம் பேருந்து வழியில் திருவண்ணாமலையிலிருந்து 25 கிலோமீட்டர்த் தொலைவில் வேட்டவலம் கிராமத்திற்குத் தென்புறம் ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் தண்டரை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர்த் தொலைவில் சுற்றிலும் வயல்கள் சூழ்ந்த 1 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம் வன்னி மரமாகும்.

இக்கோயிலின் மேற்கு நோக்கிய கோபுரவாயில் வழியாகக் கோயிலினுள் செல்வோமெனில் முதலில் கிழக்கு நோக்கிய விநாயகர் சந்நிதியைக் காணலாம். அடுத்து நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன. கருவறையில் அகத்தீசுவரர் சிவலிங்க வடிவில் மேற்கு நோக்கியவாறு அருள்பாலிக்கிறார். இச்சிவலிங்கம் சுயம்புலிங்கமாகும். இதன் மீது ஒரு வெட்டு காணப்படுகிறது. இதனை அகத்தியர் வழிபட்டாரெனச் சொல்லப்படுகிறது. நிலத்தை உழுது பயிரிடத் தொடங்கிய ஒருவர் நிலத்தின் கீழ்த் தமது கலப்பை தாக்கியபோது அதிலிருந்து குருதி பெருகியதைக்கண்டதாகவும் அந்நிலத்தைத் தோண்டிப் பார்த்த போது அங்குச் சிவலிங்கம் ஒன்று இருந்ததைக்கண்டதாகவும் அதன்பின்னர் அங்குக் கோயில் கட்டப்பட்டதாகவும் மரபு வழிச் செய்தியொன்று கூறுகிறது.

அடுத்து அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளதைக் காணலாம். சுப்பிரமணியர் சந்நிதியும் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன. இருபத்தொரு உற்சவர் திருமேனிகள் உள்ளன.

இக்கோயிலின் கோபுரம் 16 மீட்டர் உயரத்தில் அழகிய கட்டடக்கலை அமைப்புடன் விளங்குகிறது. இரண்டு பிராகாரங்களும் மகாமண்டபங்களும் வாகன மண்டபங்களும் உள்ளன.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில்,

(1) இக்கோயிலில் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ள அறையிலுள்ள பாறையில் பொறிக்கப்பட்ட (எண் 191) கல்வெட்டு, இக்கோயிலை இராமநாதசுவாமி கோயில் எனக் குறிப்பிடுகிறது. அரசு ஆணைக்கேற்ப வேட்டவலம் கிராமம் வேடனாப்பார்

சிங்கமலைப்பற்று மாமடி வல்லாள தேவன் காணிக்கையுட்பட்ட வரி வருமானங்களைக் கோயிலுக்கு அளித்ததைக் கூறுகிறது.

(2) இக்கோயிலின் பிராகாரத்தின் உட்புறம் பாறை மீது பொறிக்கப்பட்ட (கல்வெட்டு எண் 192) பாண்டிமன்னர் மாறவர்மன் குலசேகரன் 16-ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி.1284) கல்வெட்டு, சற்றுச் சிதைந்துள்ளது. இது சிங்கமலையில் மன்னர் தங்கியிருந்தபோது தங்கமலை நாட்டுச் சிங்கமலைப்பற்றிலுள்ள நிலத்தை வரிகளின்றி ஸ்ரீஇராமநாததேவனுக்கு அளித்ததைக் கூறுகிறது.

இக்கோயில் பிராகாரத்தின் கல்பாறை மீது இராசராசசோழன் 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (எண் 193) பெண்ணை ஆற்றின் வடக்குக் கரையிலுள்ள வகைப்பாடியிலுள்ள உத்தம சோழ வளநாட்டின் கிளியூர் என்கிற வேட்டவலத்திலுள்ள திருவகட்டீசுவரமுடையாருக்குக் கிளியூர் மலையமான் கொடை அளித்ததைக் கூறுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பாறையில் பொறிக்கப்பட்ட மற்றுமொரு கல்வெட்டு (எண் 194) வேட்டவலத்தைக் குறிப்பிடுகிறது.

இக்கோயில் மண்டபங்களில் 50 தூண்கள் உள்ளன. அருமையான புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோயில் சமீன்தார் அருணாசல பண்டரியாரால் கட்டப்பட்டது. பின்னர் வேட்டவலம் சமீன்தாரால் புதுப்பிக்கப்பட்டது. தற்போதும் வேட்டவலம் சமீன்தார் வாரிசுகளுக்குரிய முதல் மரியாதையுடன் திருவிழா நடைபெறுகிறது. 1963-ஆம் ஆண்டில் இக்கோயிலுக்குக் கும்பாபிடேகம் நடைபெற்றது. இவ்வூர் மலைகள் சூழ்ந்த ஊராகக் காட்சியளிக்கிறது. இக்கோயில் பசுமையான வயல்களின் மையத்தில் இயற்கைச் சூழ்நிலையில் காட்சியளிக்கிறது; சைவ சமயப் பற்றை வளர்த்து வருகிறது.

இக்கோயிலில் நான்கு காலப்பூசை காமிக ஆகம முறையில் நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் 10 நாள்கள் சிறப்பாக நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு 12 ஏக்கர் நன்செய் நிலமும் 18 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இக்கோயிலைச் சுற்றித் தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

# வேட்டவலம்

# மனோன்மணியம்மன் கோயில் (அருணாசல ஈசுவரர்)

இக்கோயில் வேட்டவலம் கிழக்கிலுள்ள மலைச்சாரலில் சமீன் அரண்மனைத் தோட்டத்துள் 3 மீட்டர் உயரத்தில் கிழக்கு நோக்கியவாறு 3 செண்ட் நிலப் பரப்பில் இருக்கிறது.

வலம் என்பது இங்கு ஓர் ஊரைக் குறிக்கிறது. ஒருமுறை தென்னாட்டினின்று வந்த பண்டாரிகள் என்னும் இனத்தவர் இங்கு ஒரு சமத்தானத்தை நிறுவினர். அவர்கள் ஐவர் கூடி இருந்தபோது முசுலிம் பெண்ணொருத்தியைக் கண்டனர். அவளைத் தொடர்ந்தபோது அவள் இங்கு வந்து மறைந்துவிட்டாள். அவள் அன்று அவர்கள் கனவில் தோன்றித் தனக்கு அங்கு ஒரு கோயில் கட்டி வழிபடுமாறும் அவர்களுடைய குலதெய்வமாகத் தாம் விளங்குவதாகவும் கூறியதற்கேற்ப இக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றனர்.

இக்கோயில் முசுலிம், இந்து கட்டடக்கலையில் கட்டப்பட்டுள்ளது. நடுவில் கருவறையும் வடக்குப்புறம் தவிர ஏனைய முப்புறங்களிலும் வாயில்களும் உள்ளன. நாற்புறங்களிலும் தாழ்வாரம் உள்ளது. கருவறையில் செப்புத்திருமேனியாக மனோன்மணி அம்மன் உள்ளார்.

கிழக்குப்பிராகாரத்தில் விநாயகர் திருவுருவம் தென்கிழக்குக் கோடியில் இருக்கின்றது. இதற்கு மேற்கில் தண்டபாணியின் திருவுருவம் காணப்படுகிறது. மேற்குப் பிராகாரத்தின் தென்மேற்கில் விசுவநாதர், விசாலாட்சி ஆகிய இருவர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அடுத்துச் சோமாசுகந்தர், அம்பிகை, சுப்பிரமணியர் நான்கு கைகள் கொண்ட அம்மன், இருகைகள் கொண்ட அம்மன், நால்வர், அத்திரதேவர், தண்டபாணி, சந்திரசேகரர், கிராமதேவதை ஆகியோர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியுள்ளன. அடுத்து வடமேற்குக் கோடியில் வேறு சமீனிலிருந்து கொண்டுவரப்பெற்ற அம்பிகை திருவுருவம் உள்ளது. நடராசர், சிவகாமி ஆகியோர் சந்நிதி தெற்குப் பிராகாரத்தில் உள்ளது.

கருவறையில் மனோன்மணியம்மன் திருவுருவம் இருக்கின்றது. இங்கு அம்பிகைக்கு முன்புறம் மரகதக்கல்லாலான சிவலிங்கம் உள்ளது. இஃது அண்ணாமலையார் உற்சவருடைய அபிடேகத் திருமேனியாக இருந்ததாகவும் அப்போது ஏற்பட்ட கலகம் காரணமாக உற்சவர் உட்பட இந்த சமீனில்

சிறிதுகாலம் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் இம்மரகதலிங்கம் இங்கேயே தங்கிவிட்டதாகவும் கூறுகிறார்கள்.

இக்கோயிலில் குருக்கள் ஒருவர் இரண்டு காலப்பூசை செய்து வருகிறார். இது வேட்டவலம் சமீனின் கோயிலாகும். ஆடிமாதம் 10 நாள்கள் விழா நடைபெறுகின்றது.

## வேலுப்பாடி

# தருமராசர் திரௌபதை அம்மன் கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலை மாநகரின் தெற்கில் வேலப்பாடியில் 57 மீட்டர் நீளமும் 39 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம், கற்பகவிருட்சம் ஆகும்.

இக்கோயிலில் தருமராசர் திருவுருவமும் திரௌபதையம்மன் திருவுருவமும் மிக எடுப்பாக உள்ளன.

இக்கோயிலில் இருகாலப்பூசை நடைபெறுகிறது. நவராத்திரி திருவிழா சீரிய முறையில் நடைபெற்றுவருகிறது. இக்கோயில் தீமிதி திருவிழா, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, பாரதச் சொற்பொழிவு முடிவுற்றதும் நடைபெறுகின்றது.

தக்காரும் நிருவாக அதிகாரியும் இணைந்து நிருவாகத்தை நடத்திவருகின்றனர். இவர்கள் இந்து சமய அறநிலையத் துறையினரால் நியமனம் செய்யப்பெற்றவர்கள். இக்கோயிலுக்கு நான்கு கடைகள் உள்ளன. இங்குச் சிம்ம வாகனம், கேடயங்கள் ஆகியவை உள்ளன.

# வேலூர்
# கனக துர்க்கையம்மன் கோயில்

இக்கோயில் வேலூரில் வேங்கடப்ப செட்டித் தெருவில் மூன்று செண்ட் நிலப்பரப்பில் உள்ளது.

இங்கு இரண்டு காலப்பூசை நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாதப் பிறப்பன்றும் சிறப்பான முறையில் அபிடேகத்திற்குப் பின் அம்மனை அலங்கரித்து வீதியுலா செய்விக்கின்றனர். ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பாகத் திருவிழா செய்யப்பட்டுவருகிறது. மேலும் நவராத்திரியில் பெரிய அளவில் அபிடேக அலங்காரத்துடன் விழா நடைபெறுகிறது. தை மாதம் இரதசப்தமியில் அம்மனுக்கு அன்பர்களால் இலட்சார்ச்சனை செய்யப்பட்டுவருகிறது.

இங்கு அம்மை கொண்டவர்கள், கண்பார்வை மங்கியவர்கள், திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் ஆகியோர் அம்மனை வழிபட்டு அருள்பெற்று வருகிறார்கள். தங்கி வழிபடத் தனித்தனியாகக் குடில்கள் வசதியாக உள்ளன.

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் மஞ்சள் குங்குமச் சந்தனக்காப்புகளோடு சிறப்புப்பூசை நடைபெறுகிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கு அன்பர்கள் திரளாகக் கூடி வழிபாடாற்றுகிறார்கள். கெட்ட நேரத்தில் மக்களுக்கு வரும் துன்பம் நீங்கவேண்டும் என்பதற்காகக் கெட்ட நேரம் எனக் கருதப்படும் இராகு கால வேளையில் பூசை செய்வது சிறந்தது என்னும் கொள்கையில் இந்நேரங்களில் பலர் இங்குப் பூசை செய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை இராகுகாலம் மாலை நேரத்தில் அமைவதால் ஞாயிற்றுகிழமை இராகுகால நேரத்தில் திரளான மக்கள் இங்குப் பூசை மேற்கொள்ளுகிறார்கள்.

அம்மனுக்கு நிலையான சொத்து எதுவுமில்லை. அன்பர்கள் உண்டியலில் இடும் காணிக்கையிலிருந்து இக்கோயில் நிருவாகம் நடைபெறுகிறது. இப்போது இக்கோயில் செங்கல் சுவரால் கட்டப்பட்டுள்ளது. திருப்பணிக் குழுவினர் மூலம் மண்டபம் கட்டவும் புதிய இராசகோபுரம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிருவாக அலுவலரிடம் உள்ளது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் 14,103 உருபாயாகும்.

## வேலூர்

## சித்தி புத்தி சுந்தர விநாயகர் கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டம் வேலை மாநகர் கடைவீதியின் குறுக்கே உள்ள அகத்தி கிருட்டிணப்ப செட்டித் தெருவின் தலைப்பில் 8 செண்ட் நிலப் பரப்பில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் கற்கூறை வேயப்பட்டது.

கொடிமரத்தையடுத்து மேல் பக்கத்தில் திருமுறை அருளிய நால்வர் திருவுருவங்கள் உள்ளன. வலம் வரும் வழியில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் காட்சியளிக்கிறார். இங்கு நவக்கிரக சந்நிதியும் உள்ளது. சுற்றியுள்ள வியாபாரிகள் அனைவரும் நாள்தோறும் முதலில் இக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்து சித்திபுத்தி விநாயகர் அருள்பெற்றுச் செல்கிறார்கள்.

இங்கு விநாயகர் சித்தி, புத்தி என்னும் இரு சக்திகளையும் தமக்குரிய தேவியராகக் கொண்டிருக்கிறார். அவரை வணங்கினால் சித்தி (நற்பேறு) புத்தி (நல்லறிவு) ஆகியவை வாய்க்கும் என்னும் உண்மை விளங்குகிறது. மேலும், யோகம் சேமம் என்னும் இருவகை நலங்களையும் நிரம்பப்பெறலாம் என்பதிலும் ஐயமில்லை.

இக்கோயிலில் இரண்டு காலப்பூசைகள் நடைபெற்றுவருகின்றன. சஷ்டித்திருவிழா ஆறு நாள்கள் நடைபெற வீடு ஒன்று நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. அதன் வருமானத்தில் திருமுருகனுக்கு சஷ்டித் திருவிழா சிறப்பாக நடத்தப்பெறுகிறது. மேலும் சித்திரைப் பௌர்ணமிக்கு ஒன்பது நாள்கள் முன்னதாக ஆண்டுப் பிரமோற்சவம் நடத்தப்படுகிறது. பத்தாம் நாள் பௌர்ணமியன்று வேலூர் வணிக மக்களால் புட்பப் பல்லக்கில் விநாயகப் பெருமான் அலங்காரம் செய்யப்பட்டு வீதி உலாவாகக் கொண்டுவரப்படுகிறார்.

இக்கோயில் 200 ஆண்டுகளுக்கு முன் இங்குள்ள வணிகப் பெருமக்களால் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. இப்போது மேல்தளம் செப்பனிடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோயிலின் முன்புறம் ஒரு முகப்பு மண்டபம் அருகிலுள்ள வணிக வைசியர் கல்யாணமண்டப நிருவாகிகளால் சிறப்பாகக் கட்டப்பட்டுக் கும்பாபிடேகமும் நடைபெற உள்ளது.

இக்கோயிலுக்கு நான்கு ஏக்கர் நன்செய் நிலமும் ஏழு வீடுகளும் உள்ளன. இக்கோயிலில் பெருச்சாளி வாகனம், இடபவாகனம், கேடயம் ஆகியவை உள்ளன. இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பட்ட நிருவாக அலுவலரிடமும் அறங்காவலரிடமும் உள்ளது. இக்கோயிலின் ஆண்டுவருமானம் 11,300 உருபாயாகும்.

# வேலூர் குயப்பேட்டை
# சிவசுப்பிரமணியசுவாமி கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலைமாநகரின் மையத்தில் 36.89 மீட்டர் நீளமும் 14.93 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம் பலா ஆகும். இதன் இராசகோபுர வாயில் மேற்குத் திசையில் உள்ளது.

இக்கோயிலின் நுழைவாயிலில் விநாயகர் சந்நிதியும் மேற்கில் விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதர் சந்நிதியும் தெற்கில் நவக்கிரகங்களின் சந்நிதியும் உள்ளன. கருவறையில் சிவசுப்பிரமணியர், வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார்.

இக்கோயிலில் இருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. ஆடிக்கிருத்திகை, நவராத்திரி, கந்தர்சஷ்டி, கார்த்திகை தீபம் போன்ற திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மாசிமாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கந்தர் சஷ்டியில் ஏக தின இலட்சார்ச்சனையும் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மாதர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமைதோறும் வாரவழிபாடு நடத்தி வருகின்றனர். இதில் மிகுதியான எண்ணிக்கையில் மகளிர் கலந்து கொள்கிறார்கள். இப்பகுதியில் இத்திருமுருகன் கோயில் சிறந்து விளங்கிவருகிறது.

இக்கோயிலுக்கு 10 ஏக்கர் புன்செய் நிலமும் நான்கு கடைகளும் உள்ளன. வாகனங்களுள் குறிப்பிடத்தக்கவை மயில், இடபம், குதிரை, கேடயம், சூரியபிரபை ஆகியவை. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலர்களிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது.

## வேலூர் குயப்பேட்டை
## சோலாபுரி அம்மன் கோயில்

இக்கோயில் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலைமாநகரின் மையத்தில் 28 மீட்டர் நீளமும் 18 மீட்டர் அகலமும் கொண்ட நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம் மகிழ மரமாகும்.

வேலூரிலிருந்து வடஇந்தியாவிலுள்ள சோலாப்பூருக்கு படைப்பணி ஆற்றச் சென்ற ஒருவர் அங்குக் கோயில் கொண்டிருந்த அம்மனிடம் மனத்தைப் பறிகொடுத்தார். இவர் தமது சொந்த ஊராகிய வேலூரில் இவ்வம்மன் கோயிலைக் கட்டி அமைத்தார். இதுவே இன்று வேலூர் குயப்பேட்டையில் சோலாபுரி அம்மன் கோயில் என்று விளங்கி வருகிறது.

இக்கோயில் ஒரு பிரார்த்தனைத் தலமாக விளங்கிவருகிறது. இக்கோயிலில் ஒரு காலப்பூசை நடைபெறுகிறது. இக்கோயிலில் தெலுங்கு ஆண்டுப் பிறப்பு, தமிழ் ஆண்டுப்பிறப்பு, ஆடி வெள்ளிக் கிழமைகள் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

அம்மை, வயிற்றுவலி, கண்நோய் போன்ற நோய்கள் நீக்கம்பெற மக்கள் இங்குப் பிரார்த்தனை செய்து நலம் பெறுகிறார்கள்.

இக்கோயிலுக்கு சிம்ம வாகனமும் ஒரு கட்டடமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமனம் செய்யப்பெற்ற அறங்காவலரிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது.

# வேலூர் குயப்பேட்டை
# மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்

இக்கோயில் வேலூர் குயப்பேட்டையில் ஐந்து செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலை அமைத்த வேலூர் சுப்பராய முதலியார் என்பவர் 175 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் ஆங்கிலேயர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார். இவ்வாங்கிலேயர் தன்சொந்த நாட்டுக்கு நிலையாகச் சென்றுவிடக் கருதி அக்கருத்தை முதலியாருக்குத் தெரிவித்து அவருக்குரிய நகைகளையும் பணத்தையும் முதலியாரிடம் தந்து தமது சொந்த ஊராகிய வேலூருக்கே சென்றுவிடுமாறு அறிவுறுத்தி அவரை வேலூருக்கு வழி அனுப்பினார். அந்தக் காலத்தில் பேருந்து முதலிய வசதிகள் இல்லாமையால் அவரும் அவர் மனைவியும் கால்நடையாகவே வேலூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வழியில் அவர்களைக் கள்வர்கள் வழிமறித்து அவர்களிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு சிறிது தூரம் சென்றுவிட்டனர். பிறகு அவர்கள் உள்ளத்தில் யாது தோன்றியதோ தெரியவில்லை. அவர்கள் திரும்பி ஓடிவந்து தாங்கள் பறித்துக் கொண்டு சென்ற பொருள்களையும் பணத்தையும் அவர்களிடமே கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அப்பொருள்களோடும் பணத்தோடும் அவர் வேலூர் வந்து சேர்ந்தார்.

வேலூரில் தங்கியபின்னர் அவர் சிறிய துணிக்கடை ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். அவர்களுக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. மீனாட்சி சுந்தரேசுவரரையே நினைந்து நினைந்து மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயிலின் நினைவாக ஒரு கோயிலை வேலூரில் கட்டத் துணிந்தார். தமது சொந்தப் பணத்தைக் கொண்டு இக்கோயிலைக் கட்டினார். எஞ்சிய தொகையைக் கொண்டு பல கட்டடங்களை விலைக்கு வாங்கிப் பின்னர் 1827-ஆம் ஆண்டில் அவற்றைக் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டார். அந்நாள் முதல் இக்கோயில் வேலூரில் ஒரு மையக் கோயிலாக இருந்துவருகிறது.

கோயில் உட்புறத்தில் இடப்பக்கம் பெரிய விநாயகர் திருவுருவமும் வலப்புறம் பழனி ஆண்டவர் திருவுருவமும் நடுவில் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன. வெளிப் பிராகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். தனியாகச் சனீசுவரர் சந்நிதி உள்ளது. நவக்கிரகங்கள் சந்நிதி தனிக் கட்டடத்தில் உள்ளது. வடகிழக்குக் கோடியில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியவாறுள்ளது. சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. வீரபத்திரர் திருவுருவமும் இங்குள்ளது.

கருவறையில் சுந்தரேசுவரர் மதுரையில் உள்ளவர் போன்று கிழக்கு நோக்கியவாறு அருள்புரிகிறார். மூலவர் கருவறைக் கோட்டங்களில் தெற்கில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, வடக்கில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன. மீனாட்சியம்மன் சந்நிதி அருகில் உள்ளது.

கோயிலின் ஒரு மண்டபத்தில் 4 மீட்டர் உயரமுள்ள வேங்கடேசுவரர் சிலை அழகிய முறையில் அமைந்துள்ளது. கோயிலுக்குச் சொந்தமாக விநாயகமூர்த்தி, அத்திரதேவர் (சூலம்), சண்டேசுவரர், சோமாசுகந்தர், அம்மன், கந்தர், தனியம்மன், சுக்கிரவார அம்மன், நடராசர், சிவகாமியம்மன், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், பதஞ்சலியார், வியாக்கிரபாதர், சந்திரசேகரர், அம்மன், பிரதோடநாயகர், நாயகி, பல்லக்குசுவாமி, அம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சிறிய சபாநாயகர் (நடராசர்) சிறிய சிவகாமியம்மன், அன்னபூரணிஅம்மன் (பிரபையுடன்), நாகர், பிட்சாடனர், வல்லப கணபதி, நந்திதேவர் ஆகிய 32 உற்சவர் திருமேனிகள் (ஐம்பொன்) உள்ளன.

கருவறையில் சுவாமி சந்நிதிக்கும் அம்மன் சந்நிதிக்கும் விமானங்கள் உள்ளன.

மண்டபங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது வெங்கடேசப்பெருமாள் எழுந்தருளியுள்ள மண்டபமாகும். சுவாமி சந்நிதியில் ஒரு மண்டபம் இருக்கின்றது. கோயிலுக்கு எதிரே ஒரு நந்தவனம் இருக்கின்றது. இதிலுள்ள மண்டபத்தில் சுவாமியை நோக்கியவண்ணம் நந்திதேவர் திருவுருவம் அமைக்கப்பெற்றுள்ளது. தூணில் ஆஞ்சநேயர் திருவுருவம் புடைப்புச் சிற்பத்தில் காணப்படுகிறது.

இக்கோயிலில் இருகாலப்பூசை ஒழுங்காக நடைபெற்றுவருகிறது. ஆண்டுதோறும் வைகாசி மாதம் 10 நாள்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமை ஆகிய நாள்களில் துர்க்கை அம்மனுக்குச் சிறப்பு அபிடேகப் பூசைகள் நிகழ்கின்றன. ஆனி மாதத்தில் ஆனித் திருமஞ்சனம் சிறப்பாக நடைபெறுகிறது. புரட்டாசி மாதம் நவராத்திரி அம்மனுக்கு அலங்காரம் செய்யப்படுகிறது. ஐப்பசியில் தீபாவளி நோன்பு சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. இம்மாதத்தில் அன்னாபிடேகம் நடத்தப்பட்டு அன்பர்களுக்கு அளிக்கப்படுகிறது. கார்த்திகை தீபத்தன்று சுவாமியும் அம்மனும் இடப வாகனத்தில் வீதியுலா வருகிறார்கள். மார்கழிமாதம் திருவாதிரை அபிடேகம், இரவுமுழுதும் நிகழ்கிறது. மறுநாள் சுவாமி வீதியுலா வருகிறார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகியோர் திருவுருவங்களுக்கு அபிடேகம் சிறப்பாக நடத்தப்பெறுகிறது.

# வேலூர்க் கோட்டை

# சலகண்டேசுவரர் கோயில்

இக்கோயில் வேலூர் நகரிலுள்ள வேலூர்க்கோட்டையின் ஒரு பகுதியில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோட்டையும் இக்கோட்டைப் பகுதியிலுள்ள கோயிலும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு பரகேசரிவர்மன் விசயாலயன் தலைமையில் தோன்றி வளர்ச்சியுற்றது. அம்மன்னன் மகன் பராந்தகன் பரகேசரி வேலூரைச் சுற்றியுள்ள பகுதியைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். பிற்காலத்தில் தொண்டை நாட்டைக் கைக்கொண்ட ஆட்சியாளர்களிடம் வேலூர்க் கோட்டை இருந்து வந்தது.



வேலூர் சலகண்டேசுவரர் கோயிலின்
பிராகாரத் தோற்றம்

வேலூரைப் பற்றிக் குறிப்பிடத்தக்க நிலைமை விசயநகரமன்னர் காலத்தில் தோன்றிற்று. விசயநகர மன்னர் கிருட்டினதேவராயர் காலத்தில் (கி.பி.1509-1529) தென்னிந்தியாவின் பெரும்பகுதி அவரது ஆட்சியின் கீழ் அமைந்தது. இவருக்குப் பின்னர் இவர் உடன்பிறந்தார் அச்சுததேவராயரும் (கி.பி.1530-1542) அவருக்குப் பின் அவர் மகன் சதாசிவராயரும் ஆட்சிபுரிந்தார்கள். முசுலிம் படையினர் தொடுத்த 1565-ஆம் ஆண்டு தலைக்கோட்டைப் போரில் சதாசிவராயர் தோல்வியுற்றார். சதாசிவராயர் அமைச்சர் இராமராயர் கொல்லப்பட்டார். இராமராயரின் உடன்பிறந்தவர் திருமலை நாயக்கர் கி.பி.1569-ஆம் ஆண்டில் விசயநகரமன்னர் நாட்டைக் கைப்பற்றினார். இவர் ஓராண்டு (கி.பி. 1570-71) ஆட்சிபுரிந்தார். இவர்



சலகண்டேசுவரர் கோயில், வேலூர்

விசயநகர நாட்டை மூன்றாகப் பிரித்தார். இவற்றுள் ஆந்திர மண்டலத்திற்கு உதயகிரியைத் தலைநகராக்கி, அதன் பொறுப்பைத் தம் முதல் மகனிடம் ஒப்புவித்தார். மைசூர்ப் பகுதிக்குச் சீரங்கப் பட்டணத்தைத் தலைநகராக்கி, அதன் பொறுப்பைத் தம் இரண்டாம் மகனிடம் ஒப்புவித்தார்.

தமிழ் மண்டலத்திற்குச் சந்திரகிரியைத் தலைநகராக்கி, அதன் பொறுப்பைத் தம் கடைசி மகன் வேங்கடபதியிடம் ஒப்புவித்தார். இவ்வேங்கடபதிமன்னர் (கி.பி.1586-1614) விசயநகர ஆட்சியை நிலைப்படுத்தப் பல முயற்சிகள் மேற்கொண்டார். சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டிருந்த இவர் வேலூரை கி.பி.1606-ஆம் ஆண்டு முதல் இரண்டாம் தலைநகராகக் கொண்டார். வேலூர்க் கோட்டையை அமைத்தார். சூரியகுண்டம் என்னும் குளத்துநீர் இக்கோட்டையின் அகழிக்குப் பாய்ந்தது. இவ்வேங்கடபதி வேலூர் மன்னர் எனப் புகழ்ப்பெற்றார். அக்காலத்தில் வேலூர்க் கோட்டைப் பகுதியில் சலகண்டேசுவரர் கோயில் அமைக்கப்பட்டது. இவர் காலத்தில் பொம்ம நாயக்கர் என்னும் சிற்றரசர் இருந்தார் என்பதைச் சம்பைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இச்சிற்றரசர் சலகண்டேசுவரர் கோயிலை நிறுவியவர். இக்கோயிலின் நுழைவாயிலில் பொம்ம நாயக்கர் தம் துணைவியுடன் சிற்பவடிவில் தம்மை அறிவித்துக் கொண்டிருக்கிறார்.

வேங்கடபதிக்குப் பின்னர்ப் பெத்த வேங்கடப்பா (கி.பி.1630-1642) ஆட்சியை ஏற்றார். அவர்தம் உறவினர் சீரங்கா என்பவரைச் சந்திரகிரிக்கு ஆளுநராக நியமித்துவிட்டு இவர் வேலூரில் வாழத் தொடங்கினார். இதே சமயத்தில் இவர் ஓர் ஏற்பாடு செய்தார். வேங்கடபதி (கி.பி.1586-1614) மன்னரின் படைத்தலைவராக இருந்தவரும் காளத்தி வேலுகோட்டி குடும்பத்தைச் சேர்ந்தவருமாகிய சென்னா என்பவரின் மக்களாகிய தார்மல வேங்கடப்பா, தார்மல அய்யப்பா ஆகிய இருவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தார். வடஆர்க்காடு மாவட்டத்தின் வந்தவாசிப் பகுதியின் பொறுப்பை தார்மலவேங்கட்டப்பா ஏற்றுக் கொண்டார்.

பெத்த வேங்கட்டப்பாவிற்குப் பின்னர் அவர் உறவினர் சீரங்கா சந்திரகிரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கி.பி. 1645-ஆம் ஆண்டில் பீசப்பூர் கோல்கொண்டா படைகள் சீரங்காவின் தலைநகராகிய வேலூரை முற்றுகையிட்டன. இதில் சீரங்கா தோற்றார். வேலூரில் அவர் குடியிருந்த அரண்மனையை முசுலிம் படையினர் கைப்பற்றினர். கோல்கொண்டா சுல்தான் ஆட்சி நிலைப்படுத்தப்பட்டது. கி.பி.1645-ஆம் ஆண்டில் சீரங்கா திருப்பதிக்குச் சென்றுவிட்டார். அதனோடு விசயநகர ஆட்சி இறுதியடைந்தது.

கோல்கொண்டா சுல்தான் அப்துல் குடுப்ஷா இப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கி.பி.1674-ஆம் ஆண்டில் இவருக்குப்பின் இவர் மருமகன் ஹாசன் குடுப்ஷா ஆட்சியை ஏற்றார்.

1686-ஆம் ஆண்டில் சிவாஜி தென்னாடு நோக்கிச் சென்று செஞ்சியை முற்றுகையிட்டார். பின்னர் வேலூரையும் முற்றுகையிட்டார். 1678-ஆம் ஆண்டில்

வேலூரில் பீசப்பூர் படைக்குத் தலைமை தாங்கிய அப்துல்லா, சிவாஜி படைகளிடம் சரண் அடைந்தார். பின்னர் ஔரங்கசீபின் முகலாயப் படைகள் தெற்கே படையெடுத்தன. இதை சிவாஜியின் மகன் எதிர்த்தார். கி.பி. 1689-ஆம் ஆண்டில் சிவாஜியின் மகன் சாம்போசியைப் பிடித்துப் பின்னர்க் கொடுந்துன்பம் விளைவித்தார். இதன் காரணமாக அவர் இறந்தார். சாம்போசியின் உடன்பிறந்தார் மராட்டிய மன்னரானார்.

செஞ்சியைக் கைப்பற்றிய பின்னர்த் தென்னிந்தியாவில் ஔரங்கசீப்பின் சேனைத் தலைவர் சுல்பிகார் கர்நாடகத்தின் தலைவராகப்பெற்றார். அவருக்குப் பின் இவர் கீழ்ப் பணியாற்றிய தாத்கான் பொறுப்பேற்றார். இவர் சிறிதுகாலம் செஞ்சியில் வாழ்ந்து பின்னர் ஆர்க்காட்டில் குடியேறினார். இம்முறையில் ஆர்க்காடு கருநாடகத்தின் தலைநகராயிற்று. இவரது ஆட்சிப்பிரிவைச் சேர்ந்த சையத் முசாபர் ஆர்க்காடு சாதத் உல்லா கான் கி.பி. 1710-ஆம் ஆண்டில் நவாப் ஆயினர். இவர் ஆட்சியிலும் இவர் பின் வந்த தோஸ்த் ஆலி ஆட்சியிலும் 30 ஆண்டுகள் நிருவாகம் ஓரளவு அமைதியாகவும் நன்றாகவும் நடைபெற்றது.

கி.பி. 1724-ஆம் ஆண்டில் மராத்தியர் படையெடுப்பும் கி.பி. 1742-ஆம் ஆண்டில் ஹைதராபாத் நைஜாம் படையெடுப்பும் நேர்ந்தன. இதில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே போர் மூண்டது. ஆங்கிலேயர்கள் கிளைவ் தலைமையில் பாலாற்றிற்கு வடக்கிலிருந்த பகுதியை அக்காலத்துக் கருநாடக நவாப் மகமது அலிகான் சார்பில் கைப்பற்றினர். கி.பி. 1801-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கருநாடக நவாப்பிடம் கருநாடக நாட்டைப் பெற்றுக்கொண்டு அவருக்கு ஓய்வூதியம் அளித்தார்கள். கி.பி. 1806-ஆம் ஆண்டில் இந்தியப் படையினர் வேலூர்க் கோட்டையில் ஆங்கிலேயருக்கு எதிராகப் பூரித்தெழுந்து சுதந்தர உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

விசயநகர மன்னர் வேங்கடபதி ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் பள்ளமான இடத்திலுள்ளது. இதில் நுழைய 10 படிகள் இறங்க வேண்டும். இக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலுக்கு நேர் மேற்கில் ஒரு வாயில் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. இதில் நுழைந்ததும் கிழக்குப் பிராகாரத்தில் உள்ள விநாயகர் சந்நிதியை அடையலாம். இதற்கு வடக்கில் சப்தமாதர் திருவுருவங்களும் அறுபத்துமூவர் திருவுருவங்களும் வீரபத்திரர் திருவுருவமும் தெற்கு நோக்கியுள்ளன. தெற்குப் பிராகாரத்தில் விநாயகர் சந்நிதி, அடுத்துத் திருமால் சீனிவாசப்பெருமாள் ஆகியோர் சந்நிதி, சண்முகர் சந்நிதி ஆகியவை உள்ளன. தென்மேற்குக் கோடியில் இலட்சுமி, சரசுவதி (தனித்தனி) ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. இவை வடக்கு நோக்கியுள்ளன. மேற்குப் பிராகாரத்தில் அகிலாண்டேசுவரி சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. இதற்கு எதிரில் நவசக்தி தீபம் உள்ளது. 9 அண்டம் எரிந்து கொண்டேயிருக்கிறது. வடக்குப் பிராகாரத்தில் வயிரவர் சந்நிதியும் இதனையடுத்துச் சனீசுவரர் சந்நிதியும் தெற்கு நோக்கியவாறுள்ளன.

வடமேற்கில் மூன்றாம் பிராகாரமும் இரண்டாம் பிராகாரமும் சந்திக்கும் இடத்தில் புனிதக் கிணறு உள்ளது. இது தற்போது மூடப்பட்டு யாகசாலையாக

உள்ளது.

இக்கோயிலுக்கு ஏழுநிலைகள் கொண்ட கோபுரம் ஒன்பது கலசங்களுடன் 30 மீட்டர் உயரத்துடன் இருக்கிறது.

மூன்றாம் பிராகாரத்தின் நாற்புறங்களிலும் மண்டபங்களுடன் மேடைகள் உள்ளன. இரண்டாம் பிராகாரம் திறந்தவெளியாக உள்ளது.

இக்கோயிலில் மூன்றாம் பிராகாரமும் இரண்டாம் பிராகாரமும் தென்கிழக்கில் சந்திக்கும் இடத்தில் திருமண மண்டபமும் இதுபோன்று மூன்றாம் பிராகாரமும் இரண்டாம் பிராகாரமும் மேற்கில் சந்திக்குமிடத்தில் ஒரு மண்டபமும் உள்ளன. இதுபோன்று இரண்டாம் பிராகாரமும் மூன்றாம் பிராகாரமும் வடகிழக்குக் கோடியில் சந்திக்குமிடத்தில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது.

கருவறைப்பகுதியில் கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாகக் கோயிலின் கருவறையை வலம்வரும்போது கிழக்கிலுள்ள முதற்பிராகாரத்தில் உற்சவர்கள் சந்நிதியைக் காணலாம். கருவறைக் கோட்டச்சுவர்களில் தெற்கில் விநாயகரும் தட்சிணாமூர்த்தி திருவுருவமும் மேற்கில் திருமால் திருவுருவமும் வடக்குப் பிராகாரத்தில் பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கருவறையின் முன்பகுதியில் வடபுறத்தில் நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. அழகிய சிற்பக்களஞ்சியம் இக்கோயிலின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. கோபுரத்தின் முன்பக்கம் மிக எடுப்பாக இருப்பதுபோன்று ஏனைய பக்கங்களும் அழகிய முறையில் வடிக்கப்பட்டுள்ளன. துவாரபாலகர்கள் சூலமும் பாசமும் கைகளில் ஏந்தி, கதையுதவியால் காலையூன்றி ஒருபுறம் அழகுறச் சாய்ந்து நிற்கும் நிலை கண்களைக் கவர்கின்றது.

கருவறை ஒற்றைத் தூபி விமானத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. பிராகாரத்தின் வடமேற்குக் கோடியிலுள்ள கிணறு நீர் நிறைந்துள்ளதாக இருப்பினும் உள்ளே பக்கவாட்டில் ஒரு ஆயுதசாலையாகவும் கருவூலப் பேழையாகவும் விளங்குகிறது. சுரங்க மண்டபத்திற்குச் செல்வதற்கான வழியும் இதில் உள்ளது. புராணக்காட்சிகளைக் காட்டும் தூண்கள் தாங்க, நான்கு முனைகளிலும் திருமண அரங்குகள் தாழ்வாரங்களில் காணப்படுகின்றன.

திருமண மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் நுண்ணிய வேலைப்பாடுகள் மிக்கவை. சிங்கத்தின் மீது அமர்ந்து செல்லும் வீரனின் ஏற்றமிக்க பார்வையும் முறுக்கேறிய தசைகள் மிளிரத் தாவும் சிங்கத்தின் வடிவமும் எழிலுடன் செதுக்கப்பட்டுள்ளன. துர்க்கையின் வடிவம் குறைந்திருப்பினும் கைகளில் அழகிய கங்கணம் அணிந்து கொடிய ஆயுதங்களை ஏந்தியிருப்பதும் காலில் மிதிபட்டுக் கிடக்கும் எருமை அரக்கன் விழி பிதுங்க வயிறு வீங்கத் தப்பித்துக் கொள்ள அவன் முயலும் காட்சியும் உய்த்துணரத் தக்கவை. பிட்சாடனர், நடேசர், கருடவாகனர், யோகலட்சுமி, கணபதி ஆகியோர்களின் உருவங்களில் கலை நுட்பங்கள் தென்படுகின்றன. கணபதி தம் தேவியைத் தம் முன்பக்கத்து இடப்பக்கத்தில்

அணைத்துக்கொண்டு முன் வலக்கையில் பாசம் ஏந்திக் கொண்டுள்ளார். மற்றும் வலப்புறம் நான்கு கைகளும் இடப்புறம் நான்கு கைகளும் கொண்டுள்ளார். வலப்புறத்து நான்கு கைகளும் தெளிவாகத் தெரிகின்றன. அவற்றில் கீழ்க்கையில் எழுத்தாணி வைத்துள்ளார். பாரதம் இவர் எழுதுகோல் கொண்டு எழுதியதாகத் தெரிவிக்கப்படுவதை இது விளக்குகிறது. இரண்டாவது கையில் சூலம் இருப்பது, தெரிகிறது.

இக்கலைகள் மிக்க திருமண மண்டபத்தை ஆங்கிலேயர்கள் இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்று அதை பிரைட்டன் கண்காட்சிச் சாலையில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இவ்வேற்பாடு தடைபட்டது. இதை ஏற்றிச் செல்லவிருந்த கப்பல் புயலில் சிக்குண்டு தவித்தது. இதன் காரணமாக இக்கல்யாணமண்டபம் இக்கோயிலில் நிலைத்துக் காட்சியளிக்கிறது.

இக்கோயிலுக்குச் சதுப்பேரி, அளப்பாக்கம், முருக்கேரி, சிற்றேரி, அரும்பருத்தி, பெருமுகை, பெருமாள் நல்லூர், சொக்கனூர் ஆகிய கிராமங்கள் அச்சுத தேவராயர் மகன் மன்னராகிய சதாசிவராயராலும் இறுதியாக விசயநகரத்தை ஆண்ட சீரங்க மன்னராலும் அளிக்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றிலிருந்து தெரியவருவது இக்கோயில் சீரியமுறையில் பராமரிக்கப்பட்டுப் போற்றப்பட்டு வந்தது என்பதாகும்.

வேலூரின் இவ்வரலாற்றுச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வேலூர்க் கோட்டை சலகண்டேசுவரர் கோயிலைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

விசயநகரமன்னர் வேங்கடபதி ஆட்சியில் பொம்ம நாயக்கரால் கட்டப்பட்ட கோயில் பல போர்களின் இடையிலும் பல தாக்குதல்களின் இடையிலும் சிக்குண்டது. இக்கோயில் அமைந்திருந்த கோட்டைப்பகுதி, படைகள் தங்குவதற்கும் அரசின் மற்றச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. இக்கோயிலின் சிறந்த கட்டடக்கலையமைப்புகளும் அரிய கலைச் சிற்பங்களும் நன்கு பராமரிக்கப்படும் பொருட்டு ஆங்கிலேயர் ஆட்சியில் இக்கோயில் தொல் பொருள் துறையினரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இதில் வழிபாடு செய்வது தடைப்படுத்தப்பட்டிருந்தது.

இத்தகைய கோயில், வழிபாடின்றித் தொடர்ந்து இருந்து வந்ததற்கு வருத்தமுற்ற இவ்வூர் மக்கள் சட்டத்திற்கேற்பத் தொல்பொருள்துறையினர் விதித்த கட்டுப்பாட்டை மீறி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கோயிலுக்குள் நுழைந்து இக்கோயிலில் வழிபாட்டைத் தொடங்கினார்கள். இதை எதிர்த்துத் தொல்பொருள் துறையினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இப்போது நடைபெறும் வழிபாடு, பூசை முதலியவை அரசினராலோ இந்து சமய அறநிலையத் துறையினராலோ ஏற்றுக் கொள்ளப்பெறாதவை. இதைப்பற்றி யாவரையும் சட்டமுறையில் கட்டுப்படுத்தும் திட்டம் வகுக்கப்படவில்லை.

## வேலூர் லாங்குபசார்

# வேம்புலியம்மன் கோயில்

இக்கோயில் வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலைமாநகரின் மையத்தில் 11 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் தலவிருட்சம் வேப்ப மரமாகும்.

கருவறையில் வேம்புலியம்மன் வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்து அருள்புரிகிறார். இக்கோயில் ஒரு பிரார்த்தனைத் தலமாகும். அம்மை, வயிற்றுவலி ஆகியவை போன்ற நோய்கள் நீங்க மக்கள் இங்குப் பிரார்த்தனை செய்து நலமடைகிறார்கள்.

இக்கோயிலில் ஒரு காலப்பூசை பண்டாரம் செய்துவருகிறார். ஆடிவெள்ளி, நவராத்திரி, தமிழ் ஆண்டுப்பிறப்பு போன்ற நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலுக்கு இரண்டு வீடுகளும் ஒரு கட்டடமும் உள்ளன. இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையினரால் நியமனம் பெற்றுள்ள அறங்காவலர் குழுவினரிடமும் நிருவாக அலுவலரிடமும் உள்ளது.

---

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ.எண்: 856
நாள்: 17/5/02
நூலகம்